Australian Government
Department of Social Services

# ஆஸ்திரேலியாவில் வாழ்க்கையை ஆரம்பித்தல் (Beginning a Life in Australia)

## உங்கள் ஆஸ்திரேலிய வரவு நல்வரவாகுக

DSS1690.12.15



Tamil edition

**வெளியீட்டுத் திகதி**: 2016

**துறவுரை:** இந்தச் சிறிய நூலை வெளியிடும்போது இதிலுள்ள விடயங்கள் எல்லாம் மிகச் சரியாக இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு Department of Social Services மற்றும் அதற்குப் பங்களித்த எழுத்தாளர் முயற்சித்த போதிலும், இந்தச் சிறுநூல் ஒழுங்காக மாற்றம் செய்யப்பட வேண்டிய பல்வேறு விடயங்களைக் கொண்டுள்ளது. இந்தச் சிறு நூலில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களில் நம்பிக்கை வைத்ததால் எவராவது ஒருவர் ஓர் இழப்பு அல்லது சேதத்தால் வருந்தினால், திணைக்களம் அல்லது அதற்குப் பங்களித்த எழுத்தாளர் கவனயீனத்திற்காக அல்லது வேறுவகையில் பொறுப்பாக மாட்டார்கள்.

வாசகர்களின் வசதிக்காக வெளிவாரி இணையத்தளங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் அவை அந்தத் தளங்களில் உள்ள தகவல்களை அல்லது அவற்றுடன் இணைந்துள்ள எந்தவொரு நிறுவனத்தின் உற்பத்திப்பொருட்களை அல்லது சேவைகளை ஆதரிப்பதாக அமையாது. இந்தச் சிறுநூலில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு வெளிவாரி இணையத்தளம் கொண்டுள்ள விடயங்களின் சரியான நிலை, பூரணத்துவம் அல்லது நடைமுறைக்கான எந்தவித பொறுப்பையும் Department of Social Services ஏற்றுக்கொள்ளாது.

ISBN 978-1-925318-13-5

Copyright notice

This document, *Beginning a Life in Australia*, is licensed under the Creative Commons Attribution 4.0 International Licence

Licence URL: creativecommons.org/licenses/by/4.0/legalcode

Please attribute: © Commonwealth of Australia (Department of Social Services) 2016

Notice:

1. If you create a derivative of this document, the Department of Social Services requests that the following notice be placed on your derivative: Based on Commonwealth of Australia (Department of Social Services) data.
2. Inquiries regarding this licence or any other use of this document are welcome. Please contact: Branch Manager, Communication and Media Branch, Department of Social Services. Phone: 1300 653 227. Email: communications@dss.gov.au

Notice identifying other material or rights in this publication:

1. Australian Commonwealth Coat of Arms — not Licensed under Creative Commons, see www.itsanhonour.gov.au/coat-arms/index.cfm
2. Certain images and photographs (as marked) — not licensed under Creative Commons

# முன்னுரை

*'ஆஸ்திரேலியாவில் ஒரு வாழ்க்கையை ஆரம்பித்தல்'* (*Beginning a Life in Australia* (BaLIA)) சிறுநூல் Department of Social Services (DSS) ஆல் தயாரிக்கப்பட்டு நேரடியாக (online) www.dss.gov.au/our-responsibilities/settlement-services/beginning-a-life-in-australia இல் பிரசுரிக்கப்படுகிறது.

பல இணையத்தளங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதால், நீங்கள் இந்தச் சிறு நூலைக் கணினியிலோ அல்லது வேறு சாதனத்திலோ பார்க்க முடியும். நீலக்கோடிடப்பட்ட வாசகத்தில் சொடுக்கினால், அது உங்களைக் குறித்த தளம், அல்லது இணைப்பிற்கு இட்டுச் செல்லும். நீங்கள் BaLIA இனது அச்சிடப்பட்ட ஒரு பதிப்பைப் பாவிப்பதாக இருந்தால், முழு இணைய விலாசமும் தரப்பட்டுள்ளது.

உங்களுக்கு ஓர் உரைபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், 131 450 இல் மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவையை (TIS National) அழையுங்கள். மேலும் தகவல்களுக்காக அத்தியாயம் 3, *ஆங்கில மொழி* இனையும் பாருங்கள். BaLIA இனது மொழிபெயர்ப்புகள் எமது இணையத்தளமான www.dss.gov.au/our-responsibilities/settlement-services/beginning-a-life-in-australia இல் கிடைக்கும்.

பின்வரும் தலையங்கங்களில் இந்தச் சிறுநூல் தகவல்களைத் தருகிறது:


1. வந்து சேர்ந்தவுடன் என்ன செய்யவேண்டும்
2. உதவி பெறுவது
3. ஆங்கில மொழி
4. கல்வியும், பயிற்சியும்
5. தொழில்
6. ஆஸ்திரேலியச் சட்டம்
7. வீட்டுவசதி
8. போக்குவரத்து
9. ஆரோக்கியமும், நலன்புரியும்
10. உங்கள் குடும்பம்
11. பணம்
12. குடிமக்களுடன் ஒன்றுகூடல்


www.dss.gov.au/contact/feedback-compliments-complaints-and-enquiries இல் *'ஆஸ்திரேலியாவில் வாழ்க்கை ஆரம்பம்'* சிறுநூல் பற்றிய கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் 'ஒன்லைன்' பின்னூட்டப் படிவம் ஐப் பூர்த்திசெய்து வழங்கலாம்.

# பொருளடக்க அட்டவணை


முன்னுரை ....3

பொருளடக்க அட்டவணை....4

அறிமுகம் ....14

1 வந்து சேர்ந்தவுடன் என்ன செய்யவேண்டும் ....15

இந்தப் பகுதியில்....15

நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன ....15

ஆஸ்திரேலியாவின் அரசாங்கம்....15

தொலைபேசி - அழைப்புகளை மேற்கொள்ளல்....16

தொலைபேசி விபரக்கொத்துகள் ....17

நேரம் வலையங்கள்....17

சுய சேவை ....18

ஒரு வரிக் கோவை இலக்கத்திற்கு விண்ணப்பித்தல் ....18

வரிக் கோவை இலக்கம் ஒன்றிற்கு எப்படி விண்ணப்பிப்பது ....18

Medicare உடன் பதிவுசெய்தல் ....19

Medicare உடன் எவ்வாறு சேர்ந்துகொள்வது. ....19

Centrelink ஐத் தொடர்புகொள்ளவும்....20

Health Undertaking Service ஐத் தொடர்பு கொள்ளவும்....21

ஆங்கில மொழி வகுப்புகளுக்குப் பதிவுசெய்தல்....22

உங்கள் குழந்தை/குழந்தைகளைப் பாடசாலையிற் சேர்த்தல் ....22

சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பித்தல் ....23

வங்கிக் கணக்கை ஆரம்பித்தல்....24

Family Doctor ஒரு குடும்ப வைத்தியரைக் கண்டுபிடிக்கவும் ....24

முக்கிய தொடர்புகள்....25

செய்யவேண்டியவைக்கான சரிபார்த்தல் அட்டவணை....25

2 உதவி பெறவும்....26

இந்தப் பிரிவில் ....26
அவசரகால சேவைகள் ....26
பொலிஸ் (காவல்துறை) ....27
அம்புலன்ஸ் ....27
தீ அணைக்கும் படை ....28
இயற்கை அனர்த்தங்கள் ....29
ஏனைய அவசரகால எண்கள் ....31
பயங்கரவாத அச்சுறுத்தல் ....31
குடியேற்ற உதவி ....31
Humanitarian Settlement Service ....32
Complex Case Support Program ....33
Settlement Service Grants ....33
கூடிவராத மனிதாபிமான வயதுவராத சிறுவர்களுக்கான ஆதரவு ....34
குடியமர்வு டிவிடி (DVD) க்கள் ....34
மாநில மற்றும் பிரதேசக் குடியமர்வு உதவி ....35
உள்ளூர் அரசாங்க சேவைகள் ....36
இன மற்றும் சமூக நிறுவனங்கள் ....37
நெருக்கடியில் உதவி ....38
தொலைபேசியில் நெருக்கடிகால (மதிவளத்துணை) உளநல ஆலோசனை ....38
3 ஆங்கில மொழி ....40
இந்தப் பிரிவில் ....40
மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவை (TIS National) ....40
உரைபெயர்த்தல் ....40
TIS National க்காகப் பணியாற்றுதல் ....41
உங்கள் முக்கிய ஆவணங்களின் மொழிபெயர்ப்பு ....41
“எனக்கு ஓர் உரைபெயர்ப்பாளர் தேவை” அட்டை ....41

உரைபெயர்ப்பாளர் இலச்சினை ....................42
ஆங்கிலம் கற்றல் ....................42
Adult Migrant English Program (AMEP) ....................42
Skills for Education and Employment (SEE)....................44
4 கல்வியும், பயிற்சியும் ....................45
இந்தப் பகுதியில்....................45
குழந்தைப் பராமரிப்பு....................45
AMEP குழந்தைப் பராமரிப்பு ....................47
குழந்தைப்பராமரிப்பில் வேலைசெய்தல் ....................47
விளையாட்டுக் குழுக்கள்....................48
பாடசாலையும் முன்பள்ளியும்....................48
ஆட்சேர்ப்பு ....................49
ஆங்கிலம் பேசாத பாடசாலைச் சிறுவர்கள் ....................50
பாடசாலையில் உரைபெயர்ப்பாளர்கள்....................50
தொழிற்கல்வியும் பயிற்சியும்....................51
National Training Complaints Hotline....................52
பல்கலைக் கழகங்கள் ....................53
சர்வதேச மாணவர் உதவி ....................54
கல்வி அல்லது பயிற்சி நோக்கங்களுக்காகத் தகைமைகள் மற்றும் திறன்களின் அங்கீகாரம்............54
மாணவர் உதவிப் பணம் ....................54
மாணவர் சலுகை அட்டைகள் ....................55
சமுதாயக் குறுகிய பாடநெறிகள் ....................55
5 வேலைவாய்ப்பு ....................56
இந்தப் பகுதியில்....................56
வேலை தேடுதல் ....................56
Centrelink....................56

jobactive ....57
தகைமைகள், திறமைகளை அங்கீகரித்தல் ....58
முன்னைய கல்வியின் அங்கீகாரம் ....59
திறமைகள் மதிப்பீட்டு அதிகாரிகள் ....60
வர்த்தகங்கள் அங்கீகாரம் ஆஸ்திரேலியா - திறமைகள் அங்கீகாரம் ....60
பட்டதாரித் தகைமைகள் அங்கீகாரம் ....61
வேலை இடத்தில் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு ....62
ஆகக்குறைந்த சம்பளம் ....62
தொழில் நிபந்தனைகள் ....63
பிரதிநிதித்துவத்துக்கான உரிமைகள் ....63
பாகுபாட்டிலிருந்து பாதுகாப்பு ....63
ஏனைய வேலையிட உரிமைகள் ....64
மேலதிகத் தகவல்கள் ....64
வேலை இடத்தில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ....64
வயதுமுதிர்வு ஓய்வூதியம் ....66
6 ஆஸ்திரேலியச் சட்டம் ....67
இந்தப் பகுதியில் ....67
தண்டனைக்குரிய குற்றச்செயல் ....67
வன்செயல் ....68
வீட்டுக்குரிய மற்றும் குடும்ப வன்செயல் மற்றும் பாலியல் பலாத்காரம் ....68
சம்மதம் அளிப்பதற்கான சட்டமுறையான வயது ....72
சிறுவர்களின் உரிமைகள் ....72
சிறுவர் பாதுகாப்பு ....72
பலவந்தமாக மணம் முடித்தல் ....73
பெண் இனவிருத்திச் சுகாதாரம் மற்றும் உரிமைகள் ....75
துப்பாக்கிகள் மற்றும் கத்திகள் ....77

மிருகங்கள் மற்றும் காட்டுமிருகங்கள் ....................77
புகைத்தல், குடித்தல் மற்றும் போதைவஸ்துகள் ....................78
தாவர அல்லது மிருக இறக்குமதிக் கட்டுப்பாடுகள் ....................79
ஏனைய சட்டங்கள் ....................80
அயலவருடன் தகராறு ....................80
சட்ட உதவி ....................81
7 வீட்டு வசதி ....................82
இந்தப் பகுதியில் ....................82
குறுகிய காலத் தங்குமிடவசதி ....................82
தனியார் வீடு அல்லது அடுக்குமாடிவீட்டை வாடகைக்கு எடுத்தல் ....................82
வீட்டுவசதிக்கான உதவி ....................84
அரசாங்க வீட்டுவசதி ....................84
வீடற்றவர்களுக்குத் தங்குமிட உதவி ....................85
வாடகைக்குடியிருப்பாளர்களின் உரிமைகளும், பொறுப்புக்களும் ....................86
வீடு அல்லது அடுக்குமாடி குடியிருப்பு வாங்குதல் ....................87
வீட்டுக்கான அவசிய சேவைகள் ....................88
மின்சாரம், எரிவாயு ....................88
Centrepay ....................89
தொலைபேசி, இணையத்தளம் ....................89
வீட்டுக்குரிய குப்பை சேகரிப்பு மற்றும் மீள்சுழற்சி ....................91
தபால் (அஞ்சல்) ....................91
8 போக்குவரத்து ....................92
இந்தப் பிரிவில் ....................92
பொதுசனப் போக்குவரத்து ....................92
வாடகை வண்டிச் (டாக்ஸி) சேவைகள் ....................93
மிதிவண்டி (சைக்கிள்) ஓட்டம் ....................93

நடத்தல் ....................................................................................................................................94
தனியார் வாகனங்கள் ..................................................................................................................94
வாகன சாரதி அனுமதிப்பத்திரம். ................................................................................................94
வாகன ஓட்டத்துக்குப் பொருந்தக்கூடிய சட்டங்கள் ....................................................................95
ஆசனப்பட்டியும், குழந்தைத் தடுப்புக்காப்பும் ..............................................................................96
கார் வாங்குதல் ..........................................................................................................................97
9 உடல் நலமும் நல்வாழ்வும் .........................................................................................................99
இந்தப் பகுதியில்.........................................................................................................................99
அறிமுகம் ....................................................................................................................................99
Medicare ....................................................................................................................................99
Health Care Card ......................................................................................................................101
தனியார் சுகாதாரக் காப்புறுதி .......................................................................................................101
ஊக்குவிப்புச் சலுகைகள் ...........................................................................................................102
மருத்துவ உதவி ........................................................................................................................103
குடும்ப வைத்தியரைப் பெற்றுக்கொள்ளல் ....................................................................................103
வழக்கமான உடல் நலப் பிரச்சினைகள் ......................................................................................103
சுவாசகாசம் ..............................................................................................................................104
சிறப்பு வைத்தியர்கள் ..................................................................................................................104
வைத்தியர்களின் உரைபெயர்ப்பு முன்னுரிமை தொலைபேசித் தொடர்பு ........................................104
மருத்துவ,அவசரகாலநிலை ........................................................................................................104
தொலைபேசி உடல்நலத் தகவல்களும் ஆலோசனைச் சேவைகளும் .............................................105
அம்புலன்ஸ் செலவுகள்...............................................................................................................105
மருந்துகள் .................................................................................................................................106
மாநில, பிரதேச சுகாதார சேவைகள்..............................................................................................106
சமூக சுகாதார நிலையம். ............................................................................................................107
இளம் குழந்தைகளுடனான குடும்பங்களுக்கான சுகாதாரச் சேவைகள். .........................................107

பெண்கள் சுகாதார சேவைகள் ....107
பல்வேறு பின்புலங்களுடனான மக்களுக்கான சேவைகள் ....107
இயலாமைக்கான சேவைகள் ....108
உளநலச் சேவைகள்....110
சித்திரவதை, உணர்வதிர்ச்சி உளநல ஆலோசனை....110
குழந்தைப் பாதுகாப்பும் விபத்துத் தவிர்ப்பும் ....111
தடுப்புமருந்து....112
பல் சேவைகள் ....112
ஆஸ்திரேலியாவில் முதியோர் பராமரிப்பு சேவைகள் ....113
முதியோர் அல்லது சுகாதாரப் பராமரிப்புச் சேவைகள் பற்றிய முறைப்பாடுகள்....114
ஒரு மரணத்தைத் தொடர்ந்து ....115
10 உங்களது குடும்பம்....117
இந்தப் பகுதியில்....117
திருமணம் மற்றும் ஏனைய உறவுமுறைகள் ....117
இளைஞர்களுக்கான சேவைகள்....118
பெற்றார்....120
குழந்தை ஆதரவு ....121
முதியோர் ....121
உறவினரைக் தேடிக்கண்டுபிடித்தல்....122
உங்கள் குடும்பம் மற்றும் Centrelink ....123
இந்தப் பகுதியில்....123
உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்துதல் ....123
வேறு மொழிகளில் உதவி ....124
வேறு மொழிகளில் தகவல்கள் ....124
பன்மொழித் தொலைபேசிச் சேவை ....124
உரைபெயர்ப்பாளர்கள் ....124

உங்கள் ஆவணங்களை மொழிபெயர்த்தல்....124
பன்மொழிச் சேவை உத்தியோகத்தர் ....124
Centrelink கடிதங்கள்....124
Centrelink உடன் தொடர்பாடலுக்கு உதவி....125
Centrelink காத்திருப்புக் காலம்....125
Newly Arrived Resident's Waiting Period இலிருந்து விலக்களித்தல்....126
வசிப்பிடத் தகைமைபெறத் தேவையானவை ....126
Centrelink கொடுப்பனவுகளைக் கோருதல் ....127
குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள் ....129
நியூஸீலந்து குடிமக்கள் (ஆஸ்திரேலிய குடிமக்கள் அல்லாதோர்) ....131
அகதிகள், மனிதநேய வருகையாளர்களுக்கான Crisis Payment ....132
ஏனைய Centrelink சேவைகள் ....132
குறைந்த வருமானம் பெறுவோருக்குச் சலுகைகள்....133
சந்தர்ப்பசூழல் மாற்றம் ....133
துணைவர் என்பதன் விளக்கம் ....133
மீளாய்வும், மேன்முறையீடும் ....134
உங்கள் தகவல்களின் இரகசியம் ....134
இளைஞர்கள் ....134
ஆதரவுக்கான உத்தரவாதம் ....134
11 பணம்....135
இந்தப் பகுதியில்....135
நிதிச் சேவைகள்....135
பணத்தைப் புரிந்துகொள்ளுதல்....135
வங்கித்தொழில்....136
வரிவிதிப்பு....136
பொருட்கள், சேவைகள் வரி ....137

வரிக் கோவை இலக்கம்........137
வேலை கிடைக்கும்போது ஒரு TFN இல்லாதுபோனால் என்ன நடக்கும்? ........138
வருமான வரி திருப்புதல்........138
வரி உதவி ........139
வெளிநாட்டு ஆதனங்கள், முதலீடுகள், வருமானம்........139
சிறு வியாபாரங்கள்........140
கடன் மற்றும் வரவுவைத்தல் ........142
காப்புறுதி ........142
நிதி ஆலோசனை பெறுதல் ........143
காசுப் பிரச்சினைகளுக்கு உதவி........143
நுகர்வோர் பாதுகாப்பு ........144
12 மக்கள் பங்களிப்பு........146
இந்தப் பகுதியில்........146
ஆஸ்திரேலியா பற்றி ........146
பொறுப்புக்களும் விழுமியங்களும் ........147
சமத்துவம் மற்றும் பாகுபாடின்மை ........148
தன்னார்வத்தொண்டு செய்தல்........150
மக்கள் சந்திப்பு ........151
சாந்தமான நடத்தை ........151
ஆடை அணிதல்........152
பொதுவான ஆஸ்திரேலிய பேச்சு வழக்கம் ........153
வெளிக்களச் செயற்பாடுகளும் பாதுகாப்பும்........153
நீச்சலும் வெளிக்களப் பாதுகாப்பும்........154
வீட்டில் பாதுகாப்பு ........155
வீட்டுப் பாதுகாப்பு ........155
மருந்துகளும் இரசாயனப் பொருட்களும்........156

வீட்டில் தீ பாதுகாப்பு ........ 156
காட்டுத்தீ பாதுகாப்புத் திட்டம் ........ 158
சுற்றாடல் ........ 158
மிருகங்களும், செல்லப்பிராணிகளும் ........ 159
புதினப் பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி ........ 160
சூதாட்டம் ........ 161
இரைச்சல் ........ 162
உள்ளூர் அரசாங்க சேவைகள் ........ 162
நூல் நிலையங்கள் ........ 163
குப்பை சேகரிப்பு மற்றும் மறுபயன்பாடு (மீள்சுழற்சி) ........ 163
பொதுசன கழிப்பறைகள் ........ 164
நீர்ப்பாவனை ........ 164
விசாக்கள் (நுழைவிசைவு) ........ 164
வதிவாளர் திரும்பிவரும் வீசாக்கள் ........ 165
நிரந்தரமாகக் குடியேறுவதற்கான வீசாக்கள் ........ 165
பதிவுசெய்யப்பட்ட புலம்பெயர் முகவர்கள் ........ 166
‘ஒன்லைன்’இல் உங்கள் வீசா விபரங்களைச் சரிபார்த்தல் ........ 166
ஆஸ்திரேலியன் குடியுரிமை ........ 166
எதிர்கால சிறுவர் மற்றும் ஆஸ்திரேலிய குடியுரிமை ........ 167
வாக்களித்தல் ........ 167

# அறிமுகம்

ஆஸ்திரேலியாவுக்கு வருக.

இந்தச் சிறுநூல், ஆஸ்திரேலியாவுக்குப் புதிதாக வந்துசேர்ந்த நிரந்தர மற்றும் தற்காலிகமாகக் குடிபெயர்ந்தோருக்கும், இனிமேல் வரவிருப்போருக்காகவும் ஆகும். அனுசரணை வழங்குவோருக்கும் இந்நூல் பிரயோசனமாகும். Department of Immigration and Border Protection (DIBP) மற்றும் Department of Social Services (DSS) ஆல் குறிப்பாக அகதி மற்றும் மனிதாபிமான அடிப்படையில் வருகைதந்தோருக்காக வெளியிடப்பட்ட இத்தகவல்களை அவர்களும் பார்க்கவேண்டும்.

அரசாங்க மற்றும் சமூக ஸ்தாபனங்கள் ஆஸ்திரேலியக் குடியிருப்பாளருக்குப் பல்வேறு சேவைகளைச் செய்கிறது. பெறக்கூடிய சேவைகள் மற்றும் உதவிகளுக்கான ஒர் அறிமுகத்தையும் அத்துடன் ஆலோசனையைப் பெற எங்கே நீங்கள் போகவேண்டும் என்பதையும் இச் சிறுநூல் உங்களுக்கு வழங்கும்.

இந்தப் புத்தகத்தில் விபரிக்கப்பட்டுள்ள எல்லாவித சேவைகளையும் பெறுவதற்குச் சில நிரந்தரக் குடியேற்றவாசிகள் மற்றும் தற்காலிக வீசா வைத்திருக்கும் அநேகமானவர்கள் தகைமை பெற்றிருக்கமாட்டார்கள் அல்லது அதற்காகப் பணம் செலுத்தவேண்டி ஏற்படும்

தயவுசெய்து இப் புத்தகத்தை கவனமாக வாசியுங்கள். ஆஸ்திரேலியாவில் உங்கள் புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கும்போது இது மிகவும் பயனுள்ளதாக இருப்பதை அறிவீர்கள். www.dss.gov.au/our-responsibilities/settlement-services/beginning-a-life-in-australia இணையத்தளத்தில் 'Settle in Australia' இணையப்பக்கத்தில் பதிப்பை நீங்கள் பாவிக்க வேண்டும்.

ஆஸ்திரேலியாவுக்குப் போனதும் உங்கள் முதல் வாரங்களில் நீங்கள் செய்யவேண்டிய முக்கிய கருமங்களை 1-2 அத்தியாயங்கள் தெரிவிக்கின்றன. குடியேற்றம் வெற்றியளிக்க நீங்கள் செய்யவேண்டிய முக்கிய விடயங்களை - ஆங்கில மொழி, கல்வி, மற்றும் வேலைவாய்ப்பு - எங்கிருந்து பெறுவது என்பது 3-5 அத்தியாயங்களில் இருக்கிறது.

ஆஸ்திரேலியாவில் உங்களது புது வாழ்க்கையை ஆரம்பிக்கும்போது நீங்கள் முகம்கொடுக்க இருக்கும் பிரச்சனைகள் உங்கள் நாட்டில் இருப்பதைவிடவும் வித்தியாசமானவையாகும். எவ்வாறாயினும், நீங்கள் வருவதற்கு முன் ஆஸ்திரேலியாவை வந்தடைந்த கோடிக்கணக்கான மக்களைப்போல நீங்களும் வெற்றிகரமாகக் குடியேறி ஆஸ்திரேலிய சமுதாயத்தில் ஒரு பெறுமதிமிக்க உறுப்பினராக வருவதற்கு உதவுவதற்காகப் பல சேவைகள் உண்டு.

# 1 வந்து சேர்ந்தவுடன் என்ன செய்யவேண்டும்

## இந்தப் பகுதியில்

ஆஸ்திரேலியாவுக்கு வந்துசேர்ந்த பின்னர் கூடிய விரைவில் நீங்கள் செய்யவேண்டிய சில முக்கிய விடயங்களை இந்த அத்தியாயம் குறிப்பிடுகிறது. அவை எல்லாமே உங்களுக்கு ஏற்புடையதாகாது, ஆனால், நீங்கள் அவற்றைப்பற்றி ஆலோசிக்கவேண்டும்.


- நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன
- ஒரு வரிக் கோவை இலக்கத்திற்கு விண்ணப்பித்தல்
- Medicare உடன் பதிவுசெய்தல்
- Centrelink ஐத் தொடர்புகொள்ளவும்
- Health Undertaking Service ஐத் தொடர்பு கொள்ளவும்
- உங்கள் குழந்தை/குழந்தைகளைப் பாடசாலையிற் சேர்த்தல்
- உங்கள் குழந்தை/குழந்தைகளைப் பாடசாலையிற் சேர்த்தல்
- சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பித்தல்
- வங்கிக் கணக்கை ஆரம்பித்தல்
- Family Doctor ஒரு குடும்ப வைத்தியரைக் கண்டுபிடிக்கவும்
- முக்கிய தொடர்புகள்
- செய்யவேண்டியவைக்கான சரிபார்த்தல் அட்டவணை


ஆவணங்களை மொழிபெயர்ப்பிக்க அல்லது ஒரு உரைபெயர்ப்பாளர் தேவையாயின்,
அத்தியாயம் 3, ஆங்கில மொழி

## நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன

### ஆஸ்திரேலியாவின் அரசாங்கம்

ஆஸ்திரேலிய அரசாங்கம் மூன்று படிநிலைகளைக் கொண்டது - பொதுநலம் (அல்லது மத்திய அரசாங்கம்), மாநிலம் அல்லது பிரதேசம் அத்துடன், குடிபெயர்ந்து வந்தோருக்கும், குடியிருப்பாளருக்கும் சேவைகளை வழங்குவது உள்ளூர் அரசாங்கம் ஆகும்.

மாநிலங்களான நியூ சவுத் வேல்ஸ் (New South Wales (NSW)), குயின்ஸ்லாந்து (Queensland (Qld)), தென் ஆஸ்திரேலியா (South Australia (SA)), தஸ்மேனியா (Tasmania (Tas.)), விக்டோரியா (Victoria (Vic.)) மற்றும் மேல் ஆஸ்திரேலியா (Western Australia (WA)), அத்துடன் வட பிரதேசம் (Northern Territory (NT)) போன்றவை பல உள்ளூர் அரசாங்கங்களாகப் பிரிக்கப்பட்டு உள்ளூர் சபைகளால் (கவுன்சில்) பரிபாலனம் செய்யப்படுகின்றன. ஆஸ்திரேலிய தலைநகர் பிரதேசமான (Australian Capital Territory (ACT)) கான்பெராவில், மாநில அரசாங்கங்கள் வழங்குவதுபோன்ற வழமையான பல சேவைகளை வழங்குவதுடன் உள்ளூர் அரசாங்க சேவைகளையும் வழங்குகிறது.

எவ்வாறு அரசாங்கம் இயங்குகிறதென்பதைப் பற்றிய அதிக தகவல்களுக்காகப் பார்க்கவும்: www.australia.gov.au/about-government

## தொலைபேசி - அழைப்புகளை மேற்கொள்ளல்

ஆஸ்திரேலியாவில், தொலைபேசி அழைப்புக்களை பொருத்தப்பட்ட தொலைபேசித் தொடர்பு (வீட்டில் இணைக்கப்பட்ட தொடர்பு), பணம்கொடுத்துப் பேசுதல் அல்லது கைப்பேசியில் பேசலாம். தொலைபேசித் தொடக்க இலக்கங்கள்:

- 13/1300 (உள்ளூர்க் கட்டணம்)
- 1800 (இலவச அழைப்பு)
- 04 (கைத் தொலைபேசி) அல்லது
- 02, 03, 07, 08 (உள்ளூர் அல்லது புவியியல் சார்ந்த பிரதேசக் குறியீடு).

ஒரே பிரதேசக் குறியீட்டுடனான இலக்கத்திலிருந்து அதே பிரதேசத்திலுள்ள இலக்கத்துடன் பேசுவதானால் பிரதேசக் குறியீடு தேவைப்படாது. ஒரு கைப்பேசியிலிருந்து இன்னொன்றிற்குப் பிரதேசக் குறியீடு தேவைப்படாது.

நீங்கள் அழைக்கும் தொலைபேசியின் வகை, நீங்கள் பாவிக்கும் தொலைபேசி நிறுவனம் அத்துடன் நீங்கள் தெரிவுசெய்த அழைப்புத் திட்டத் (call plan)தைப் பொறுத்து தொலைபேசிக் கட்டணங்கள் வேறுபடுகின்றன. அழைப்புக் கட்டணம் குறித்து உங்களுக்கு நிச்சயமாகத் தெரியாவிடின், உங்கள் தொலைபேசி நிறுவனத்துடன் கட்டாயம் சரிபார்க்க வேண்டும்.

ஆஸ்திரேலியாவில் 13/1300 அல்லது 1800 இலக்கங்களுக்கான அழைப்புக் கட்டணங்கள் பற்றிய தகவல்களுக்குப் பாருங்கள் www.acma.gov.au/Citizen/Consumer-info/All-about-numbers/Special-numbers/charges-for-calls-to-13-1300-and-1800-numbers-i-acma

ஓர் அழைப்பை, 13,1300 அல்லது 1800 இலக்கங்களுடன் ஆரம்பிக்காத தொலைபேசி இலக்கத்துடன் பேசுவதற்கு:

- ஆஸ்திரேலியாவுக்குள் இருந்து தொலைபேசியில் பேசுவதானால், பிரதேச குறியீட்டெண்ணைத் தொடங்கிவிட்டுப் பிறகு இலக்கத்தைக் குறிப்பிடவும். உதாரணமாக, மெல்பெர்னிலிருந்து சிட்னிக்கு அழைப்பதற்கு, பிரதேசக் குறியீட்டெண் 02 (சிட்னிக்கு) ஐயும் பின்னர் இலக்கத்தைக் குறிப்பிடுங்கள்.
- ஆஸ்திரேலியாவுக்கு வெளியிலிருந்து அழைப்பதானால்:
    - வீட்டுடனான தொலைபேசியை உபயோகிப்பதானால், நீங்கள் அழைக்கும் அந்த நாட்டுக்கான சர்வதேச தொலைபேசிக் குறியீட்டெண்ணைக் குறிப்பிட்டுவிட்டுத் தொடர்ந்து பிரதேசக் குறியீட்டெண்ணான ஆஸ்திரேலிய முதல் எண்கள் 61 ஐத் தொடர்ந்து, 0 இல்லாமல் பிரதேசக்குறியீடு, அதன் பின்னர் அந்த இலக்கம்.

- கையடக்கத்தொலைபேசியைப் பாவிக்கும்போது, +61 ஐக் குறியுங்கள், அதைத்தொடர்ந்து 0 இல்லாமல் பிரதேசச் குறியீட்டெண், பின்னர் அந்த இலக்கம்.
- ஆஸ்திரேலிய கைப்பேசி இலக்கத்துக்கான அழைப்புகளுக்கு, சர்வதேச தொலைபேசி அழைப்புக்கான குறியீடு தேவைப்படுமா என்பதனை உங்கள் உள்ளூர் வழங்குனோரிடம் சரிபார்த்துவிட்டு +61 ஐக் குறிப்பிடவும். அதைத்தொடர்ந்து, பிரதேசக் குறியீட்டு இலக்கத்தில் 0 இல்லாமல் அழையுங்கள்.

ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு சர்வதேச இலக்கத்தை அழைக்கவேண்டுமாயின், ஆஸ்திரேலியாவின் சர்வதேச அழைப்பிற்கான குறியீட்டு இலக்கமான - 0011 ஐ பாவியுங்கள்.

## தொலைபேசி விபரக்கொத்துகள்

பிரதானமான இரண்டு ஆஸ்திரேலிய தொலைபேசி விபரக்கொத்துகள் உண்டு. சேவைகள் அல்லது உற்பத்திப்பொருட்களின் வகைகளுக்கேற்றபடி கடைகள் மற்றும் வர்த்தகர்கள் போன்றோரின் வியாபார இலக்கங்களை Yellow Pages பட்டியலிடுகின்றன. வியாபாரங்களையும் மற்றும் வதிவாளர்களையும் பெயர் குறிப்பிட்டு White Pages பட்டியலிடுகிறது. உள்ளூர், மாநிலம் அத்துடன் பிரதேசம் மற்றும் ஆஸ்திரேலிய அரசாங்க முகவர்களுக்கான தொடர்பு விபரங்களுடன் ஒரு அரசாங்கப் பிரிவு ஒன்றும் White Pages இல் உண்டு. இந்தச் சிறுநூல் முற்றிலும் அவை குறிப்பிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் இந்தத் தொலைபேசிப் புத்தகங்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. தபால் நிலையங்களிலும், நூல் நிலையங்களிலும் கூட இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். கணினியில் நேரடியாகவும் www.yellowpages.com.au இல் Yellow Pages அத்துடன் www.whitepages.com.au இல் White Pages இலும் பெறலாம், அல்லது 1223 (இலவச அழைப்பு). இல் விபர உதவிக்கு அழைக்கவும்.

## நேரம் வலையங்கள்

மூன்று நேர வலையங்கள் ஆஸ்திரேலியாவில் உள்ளன - ஆஸ்திரேலிய கிழக்கு வரையறை நேரம் (Australian Eastern Standard Time (AEST அல்லது EST)), ஆஸ்திரேலிய மத்திய வரையறை நேரம் (Australian Captial Standard Time (ACST)) மற்றும் ஆஸ்திரேலிய மேற்கத்தைய வரையறை நேரம் (Australian Western Standard Time (AWST)).

அக்டோபரிலிருந்து ஏப்ரல் வரை பகல் பொழுதைச் சேமிக்கும் நேரம் சில மாநிலங்களுக்குப் பொருந்தும். தகவல்களுக்காகப் போய்ப் பாருங்கள் www.australia.gov.au/about-australia/facts-and-figures/time-zones-and-daylight-saving

### சுய சேவை

பல ஸ்தாபனங்கள் விருப்பத்தெரிவுகளைக் கொண்டிருப்பதால் உங்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அல்லது ஒரு சேவைக்காகப் பதிவு செய்வதற்கு நீங்கள் அவர்களது காரியாலயங்களுக்கு வரவேண்டியதில்லை. தொலைபேசி தொடர்புகள் மற்றும் கணினிமூல கணக்குகள் சுயசேவைக்கான தெரிவுகளுக்குள் அடங்கும்.

பின்வருவனவற்றினூடாக உங்களது அநேக Centrelink, Medicare மற்றும் Child Support வேலைகளைப் பின்வருவனவற்றினூடாக நீங்களாகவே செய்யலாம்:

- myGov இல் www.my.gov.au
- Express Plus www.humanservices.gov.au/expressplus இல் கைப்பேசி விண்ணப்பங்கள் (mobile apps)
- நீங்களாகவே செயலாற்ற அழையுங்கள் 136 240 அல்லது
- வருகை தாருங்கள் www.humanservices.gov.au/selfservice

## ஒரு வரிக் கோவை இலக்கத்திற்கு விண்ணப்பித்தல்

ஆஸ்திரேலியர்கள் தங்கள் வருமானத்தில் அரசாங்கத்திற்கு வரி செலுத்துகிறார்கள். ஆஸ்திரேலியாவில் வருமானத்தைப் பெறுவதற்கு உங்களுக்கு ஒரு வரிக் கோவை இலக்கம் தேவை (TFN).

TFN என்பது அரசாங்கம் வரியையும், ஏனைய அரச திட்டங்களையும் நிர்வகிக்க உதவுவதற்காகத் தனிநபர்களுக்கும், வியாபாரங்களுக்கும் விநியோகிக்கப்படும் ஒரு தனிச்சிறப்புவாய்ந்த இலக்கமாகும். அரச திட்டங்கள் மற்றும் பாதைகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்ற சேவைகளுக்கு முதலிடுவதற்கு வரிகளிலிருந்து சேகரிக்கப்படும் பணம் பாவிக்கப்படுகிறது.

உழைப்பூதியம் அல்லது உத்தியோகத்திலிருந்து வரும் சம்பளம், அரசாங்கக் கொடுப்பனவுகள் மற்றும் சேமிப்புக் கணக்குகளிலிருந்து வரும் வட்டி அடங்கலாக முதலீடுகளிலிருந்து பெற்றுக்கொண்ட பணம் வருமானம் ஆகும்.

### வரிக் கோவை இலக்கம் ஒன்றிற்கு எப்படி விண்ணப்பிப்பது

நீங்கள் ஆஸ்திரேலியாவுக்கு இடம்பெயர்ந்து வருவீர்களானால் அல்லது ஆஸ்திரேலியாவில் வேலைசெய்யக்கூடிய தற்காலிக வதிவிட வீசா இருப்பின். Australian Taxation Office (ATO) இணையத்தளத்திற்கு வருகை தந்தும், ATO ஐ தொலைபேசியில் தொடர்புகொண்டும் அல்லது சில ATO சேவை நிலையங்களுக்குப் போயும் ஒரு TFN இலக்கத்திற்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம். TFN ஒன்றைப்பெறுவதற்கான மிக விரைவான வழி, www.ato.gov.au/tfn இல் நேரடிக் கணினிமூலம் நேரடியாக - உங்கள் கடவுச்சீட்டும், ஆஸ்திரேலிய முகவரியும் உங்களுக்குத் தேவைப்படும்.

நீங்கள் ஆங்கிலம் நன்றாகப் பேசுவதில்லையானால், 131 450 இல் மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவை (TIS National) ஐத் தொடர்பு கொள்ளவும்.

| Australian Taxation Office | தொடர்புத் தகவல்கள் |
|---|---|
| தொலைபேசி | 132 861 |
| காரியாலயத்திற்கு வருகை தரவும் | www.ato.gov.au/visitus |
| ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய மொழிகளில் | www.ato.gov.au/General/Other-languages |
| ATO இணையத்தளத்தில் தகவல்கள் | www.ato.gov.au |

மேலும் தகவல்களுக்குப் பார்க்கவும் அத்தியாயம் 11, *பணம்*

## Medicare உடன் பதிவுசெய்தல்

ஆஸ்திரேலியர்களுக்கும், நிரந்தர வதிவாளர்களுக்கும் இலவச அல்லது உதவிநிதியளிக்கப்பட்ட ஆஸ்திரேலியாவின் தேசிய சுகாதாரப் பராமரிப்பு முறைதான் Medicare ஆகும். சில தற்காலிகப் புலம்பெயர்ந்தோரும் Medicare சேவைகளுக்குத் தகுதி பெறலாம்.

Medicare க்கு நீங்கள் தகுதியுடையவரானால், சுகாதாரப் பராமரிப்புச் சேவைகள் மற்றும் திட்டங்களுக்கு உடனடியாக நீங்கள் போகலாம். இலவச பொது வைத்தியசாலைப் பராமரிப்பு, வைத்தியசாலைக்கு வெளியே ஏற்படும் செலவுகளுக்கான உதவி, உதவிநிதியளிக்கப்பட்ட மருந்துகள் என்பவை இதில் அடங்கும்.

Medicare சேவைகள் குறித்த தகவல்களுக்குப் போய்ப் பார்க்கவும்: www.humanservices.gov.au/medicare அல்லது உங்கள் உள்ளூர் Medicare சேவை நிலையத்திற்கு வருகை தரவும்.

### Medicare உடன் எவ்வாறு சேர்ந்துகொள்வது.

Medicare உடன் சேர்வதற்கு, உங்கள் கடவுச்சீட்டு மற்றும் வேறு பிரயாண ஆவணங்களுடன் Medicare சேவை நிலையத்திற்குப் போகவும். அனைத்துத் தகைமைகளும் உங்களுக்கு இருந்தால், ஒரு தற்காலிக Medicare அட்டையொன்று உங்களுக்குக் கொடுக்கப்படும். கிட்டத்தட்ட மூன்று வாரங்களின் பின் உங்களுடைய Medicare அட்டையை நீங்கள் பெறுவீர்கள். உங்கள் வசிப்பிடத்தை அல்லது தபால் முகவரியை மாற்றினால் Medicare க்கு நீங்கள் கட்டாயம் தெரியப்படுத்த வேண்டும்.

பொது வைத்தியசாலை, அவசரகாலப் பிரிவில் நாளொன்றின் 24 மணித்தியாலங்களும் அவசர வைத்திய சிகிச்சை பெறலாம்.

| Medicare | தொடர்புத் தகவல்கள் |
|---|---|
| Medicare ‘மெடிகெயர்’ இணையத்தளம் | www.humanservices.gov.au/medicare |
| குடியேறிகள், அகதிகள் மற்றும் பார்வையாளர்களுக்கான தகவல்கள் | www.humanservices.gov.au/multicultural |

| Medicare | தொடர்புத் தகவல்கள் |
| --- | --- |
| ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய மொழிகளில் தகவல்கள் | www.humanservices.gov.au/yourlanguage |
| தொலைபேசி | 132 011 |
| ஒரு சேவை நிலயத்திற்கு வருகை தரவும் | http://humanservices.gov.au/findus |

Medicare ஆல் பாதுகாக்கப்படாத சேவைகளுக்காகப் பல தனியார் சுகாதாரக் காப்புறுதி நிதியங்கள் காப்பீடுகளை வழங்குகின்றன, உதாரணமாக, அநேகமாக பல் பராமரிப்பு, அநேகமாக கண் பராமரிப்பு மற்றும் பெரும்பாலான மாநிலங்கள், பிராந்தியங்களில் அம்புலன்ஸ் போக்குவரத்து.

மேலதிக தகவல்களுக்காகப் பார்க்கவும்: அத்தியாயம் 9, *'சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு'*

## Centrelink ஐத் தொடர்புகொள்ளவும்

Centrelink ஊடாக சமூக பாதுகாப்பு கொடுப்பனவுகளையும், சேவைகளையும் Department of Human Services வழங்குகிறது. புதிதாக வந்து சேர்ந்த நிரந்தர வதிவாளரது வெளிநாட்டு திறமைகளை அங்கீகரிப்பதற்காகவும் வேலை தேடுவதற்காகவும், பாடப்பிரிவு அல்லது பயிற்சியைக் கண்டறியவும், Centrelink உதவுகிறது. நீங்கள் சமூக பாதுகாப்புக் கொடுப்பனவுக்குத் தகுதியானவராவெனப் பார்ப்பதற்கு Centrelink ஐத் தொடர்பு கொள்ளவும். உங்கள் வீசாவைப் பொறுத்து நீங்கள் பணத்தைப் பெறுவதற்கு முன்னர் ஒரு காத்திருப்புக் காலம் இருக்கலாம்.

நீங்கள் தகுதியுடையவரானால், Centrelink ஐத் தொடர்புகொள்ளும் நாளிலிருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம். நீங்கள் ஆஸ்திரேலியாவை வந்தடைந்த நாளிலிருந்து பணம் செலுத்தப்படுவதற்கு, நீங்கள் அல்லது உங்கள் சார்பாக ஒருவர், உதாரணமாக, உங்கள் Humanitarian Settlement Services (HSS) வழங்குநோர் அல்லது பிரேரித்தவர் நீங்கள் வந்த நாளன்று Centrelink ஐத் தொடர்புகொண்டு 14 நாட்களுக்குள் ஒரு கோரிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

ஏனைய சமூக பாதுகாப்பு கொடுப்பனவுகளுக்கும் மேலாக, மனிதாபிமான வருகையாளர்கள் ஒருவேளை Crisis Payment க்குத் தகுதி உடையவர்களாகலாம். நீங்கள் மனிதாபிமான திட்டத்தின்கீழ் வந்து சேர்ந்திருந்தால், நீங்கள் கட்டாயம்:

- ஆஸ்திரேலியாவில் வந்து சேர்ந்து ஏழு நாட்களுக்குள் கோரவேண்டும், அல்லது
- கோரும் விருப்பத்துடன் வந்து சேர்ந்து ஏழு நாட்களுக்குள் Centrelink உடன் தொடர்பு கொள்ளவும் அத்துடன் தொடர்பு கொண்டு 14 நாட்களுக்குள் உங்கள் கோரிக்கையைச் சமர்ப்பிக்கவும்.

உங்களுக்குக் குழந்தைகள் இருந்தால், அரச பொது நிதியில் குழந்தைகளை வளர்ப்பதற்கான செலவுக்கு (பார்க்கவும் www.humanservices.gov.au/ftb) அல்லது குழந்தை பராமரிப்புக் கட்டணங்களுக்கு (பார்க்கவும்: www.humanservices.gov.au/childcare) நீங்கள் தகைமையுடையவராகலாம்.

| Centrelink சென்ரர்லிங்க் | தொடர்புத் தகவல்கள் |
|---|---|
| Centrelink இணையத்தளம் | www.humanservices.gov.au/centrelink |
| வந்தேறிகள், அகதிகள் மற்றும் சுற்றுலா வருகையாளர்களுக்கான தகவல்கள் | www.humanservices.gov.au/multicultural |
| வேற்று மொழிகளில் தகவல்கள் | www.humanservices.gov.au/yourlanguage |
| தொலைபேசி சுய சேவைகள் | 136 240 |
| வேலை தேடுவோர் | 132 850 |
| இயலாமையுடன் இருப்போர் மற்றும் பராமரிப்பாளர் | 132 717 |
| வயதான ஆஸ்திரேலியர்கள் | 132 300 |
| மாணவர்களும், பயிற்சி பெறுபவர்களும் | 132 490 |
| நேரடி கணக்கு ஆதரவு | 132 307 |
| முறைப்பாடுகளும், பின்னூட்டமும் | 1800 132 468 |
| ஆஸ்திரேலிய வேலை பழகுவோர் | 133 633 |
| குடும்பங்கள் | 136 150 |
| வேறு மொழிகளில் தகவல்களுக்காக | 131 202 |
| சேவை நிலையத்திற்கு வருகை தரவும் | http://humanservices.gov.au/findus |
| வேறு Centrelink தொலைபேசி இலக்கங்களுக்கு | www.humanservices.gov.au |

பார்க்கவும்: அத்தியாயம் 5, *தொழில் மற்றும்* அத்தியாயம் 10, *உங்கள் குடும்பம்*.

## Health Undertaking Service ஐத் தொடர்பு கொள்ளவும்

Department of Immigration and Border Protection இன் வேண்டுகோளின் பிரகாரம் ஒரு Health Undertaking Service (Form 815) இல் கையொப்பமிட்டிருந்தால், நீங்கள் வந்துசேர்ந்து 28 நாட்களுக்குள் உள்நாட்டில் உங்களைத் தொடர்புகொள்ளும் தகவல்களைக் குறிப்பிட நீங்கள் ஒத்துக்கொண்டவர் ஆவீர்கள். மேலும் அதிக தகவல்களுக்காகப் போகவும் www.bupamvs.com.au/faqs

Health Undertaking சேவை வழங்குனரான Bupa Medical Visa Services (BUPA) இல் பதிவுசெய்யவும், உங்களுக்கான முன்பதிவை ஒழுங்குசெய்யவும் நீங்கள் கட்டாயம் 28 நாட்களுக்குள் தொடர்புகொள்ள வேண்டும். தொலைபேசி 1300 794 919 (திங்கள் முதல் வெள்ளிவரை EST காலை 8.00 இலிருந்து மாலை 6.00 வரை) அல்லது மின் அஞ்சல். hus@bupamvs.com.au அவர்கள் மிக அண்மையிலுள்ள Health Authority Clinic க்குச் சிபாரிசு செய்வார்கள். அவர்கள் ஒரு முன்பதிவை ஒழுங்கு செய்ய உங்களுடன் தொடர்பு கொள்வார்கள்.

மனிதாபிமான வீசா ஒன்றில் நீங்கள் வந்து சேர்ந்திருந்தால், நீங்கள் ஒரு Health Undertaking இல் ஒப்பமிட்டுள்ளீர்கள் என்பதை உங்களுடைய Humanitarian Settlement Services க்குச் சொல்லவும். நீங்கள் BUPA வுடன் தொடர்புகொள்ள அவர்கள் உதவுவார்கள்.

### ஆங்கில மொழி வகுப்புகளுக்குப் பதிவுசெய்தல்

உங்கள் குடியேற்றம் வெற்றிகரமாவதற்கு, ஆங்கிலத்தில் தொடர்பாடல் அவசியமாகும். உங்களால் ஆங்கிலம் பேச முடியாவிட்டால், இயலுமானளவு விரைவில் கற்றுக்கொள்ளுமாறு உறுதியாக உற்சாகமூட்டப்படுகிறீர்கள்.

புதிதாக வந்தோருக்கானஆங்கில மொழிக் கற்கை நெறிகளை Adult Migrant English Program (AMEP) வழங்குகிறது. 510 மணித்தியாலங்கள் வரையான இலவச ஆங்கிலமொழி கற்பித்தலைப்பெற்றுக்கொள்ள நீங்கள் தகைமையுடையவராகலாம். உங்களுக்கு வேலை, குடும்பம் அல்லது வேறு கடப்பாடுகளிருப்பினும், இசைந்துகொடுக்கக்கூடிய கற்கைநெறி நேரங்கள் மற்றும் குழந்தைப் பராமரிப்பை AMEP வழங்குவதால், நீங்கள் ஆங்கிலம் கற்கலாம்.

பார்க்கவும் *அத்தியாயம் 3, ஆங்கில மொழி*

## உங்கள் குழந்தை/குழந்தைகளைப் பாடசாலையிற் சேர்த்தல்

சாத்தியப்படக்கூடியளவு விரைவில் நீங்கள் உங்கள் பிள்ளை அல்லது பிள்ளைகளைப் பாடசாலையில் கட்டாயம் சேர்க்கவேண்டும். ஆட்சேர்ப்புப் படிவங்களைப் பெறுவதற்காக, உங்கள் பிள்ளைகளை நீங்கள் சேர்க்க விரும்பும் பாடசாலையுடன் தொடர்புகொள்ளவும்.

உங்கள் பிரயாண ஆவணங்களையும், உங்கள் பிள்ளையின் தடுப்பூசி அறிக்கைகளையும் நீங்கள் காட்ட வேண்டும். பாடசாலைக்குப் போவதானால் தேவைப்படும் தடுப்பூசி போட்டுக்கொள்வது அவசியமாகும். அவர்களது முன்னைய கல்விபற்றிய எந்தவொரு பாடசாலைச் சான்றிதழ்களையும், அறிக்கைகளையும் கொண்டுவரவும்.

ஆஸ்திரேலியாவில், ஐந்து வயதிலிருந்து ஆண்டு 10 ஐ முடிக்கும்வரை பிள்ளைகள் கட்டாயம் பாடசாலைக்குச் சமூகமளிக்கவேண்டும். ஆண்டு 10 ஐ முடித்த இளைஞர்கள் முழுநேரக் கல்விப் பயிற்சி அல்லது தொழில் (ஆகக் குறைந்தது வாரம் ஒன்றிற்கு, 25 மணித்தியாலங்கள்) அல்லது இவை எல்லாம் சேர்ந்த செயற்பாடுகளில் அவர்கள் 17 வயதை அடையும்வரை பங்குபற்றவேண்டும்.

ஆங்கிலம் படிக்க வேண்டிய சிறுவர்களுக்காகத் தீவிர ஆங்கில மொழி உதவி பெற்றுக்கொள்ளலாம்.

பார்க்கவும்: *அத்தியாயம் 4, கல்வியும் பயிற்சியும்*

## சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பித்தல்

ஆஸ்திரேலியாவில் வாகனங்கள் பதிவுசெய்யப்படவேண்டும் அத்துடன் செலுத்துவதற்கு உங்களிடம் சாரதி அனுமதிப்பத்திரம் இருக்கவேண்டும். சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாமல் ஒட்டினால் அல்லது பதிவு செய்யப்படாத வாகனத்தை ஓட்டினால் உங்களுக்கு அபராதம் விதிக்கப்படலாம் அத்துடன் உங்கள் சாரதி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படலாம். மாநில மற்றும் பிராந்திய அரசாங்கங்களால் சாரதி அனுமதிப்பத்திரமும், மோட்டார்காருக்கான பதிவுகளும் வழங்கப்படுகிறது.

நீங்கள் ஒரு நிரந்தர வதிவாளராகவும், ஆங்கிலத்தில் அல்லது உத்தியோகபூர்வமாக மொழிபெயர்க்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் உங்களிடம் இருந்தால் இன்னோர் நாட்டிலிருந்து வந்துசேர்ந்து முதல் மூன்று மாதங்களுக்கு அநேக மாநிலங்கள் மற்றும், பிரதேசங்கள், வாகனம் ஓட்ட உங்களை அனுமதிக்கும். ஆவணங்களை மொழிபெயர்ப்பது பற்றிய தகவல்களுக்கு *அத்தியாயம் 3, ஆங்கிலமொழி* யைப் பார்க்கவும்.

இந்த ஆரம்ப காலகட்டத்திற்குப் பின்னர், நீங்கள் வாகனம் ஓட்ட விரும்பினால் அதற்கான சாரதி அனுமதிப்பத்திரத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அறிவுச் சோதனை, ஓட்டுனர் பயிற்சிச் சோதனை, மற்றும் கண்பரிசோதனையில் நீங்கள் சித்தியடையவேண்டும். ஆஸ்திரேலியாவில் நீங்கள் கட்டாயம் கடைப்பிடிக்கவேண்டிய கடுமையான போக்குவரத்து மற்றும் ஒட்டும்போதிலான மதுபாவனைச் சட்டங்கள் உண்டு.

உங்களது மாநிலம் அல்லது பிரதேசத்தில் உள்ள அதிகாரியுடன் நீங்கள் எப்பொழுதும் சரிபார்த்துக்கொள்ள் வேண்டும்.

| மாநிலம் அல்லது பிரதேசம் | உரிமம் அளித்தல் மற்றும் மோட்டார் வாகனப் பதிவு | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| ACT | Road Transport Authority | 02 6207 7000 | www.rego.act.gov.au |
| NSW | Roads and Maritime Services | 13 2213 | www.rms.nsw.gov.au |
| NT | Department of Transport | 1300 654 628 | https://nt.gov.au/driving |
| Qld | Department of Transport and Main Roads | 13 2380 | http://www.tmr.qld.gov.au/ |
| SA | Transport | 13 1084 | www.transport.sa.gov.au |
| Tas. | Transport Tasmania | 1300 851 225 | www.transport.tas.gov.au |
| Vic. | VicRoads | 13 1171 | www.vicroads.vic.gov.au |
| WA | Department of Transport | 13 1156 | www.transport.wa.gov.au/index.asp |

சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்காக அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு நன்கொடை அல்லது இலஞ்சம் வழங்குவது சட்டவிரோதமானதாகும்.

பார்க்கவும் [அத்தியாயம் 8, *போக்குவரத்து*]

## வங்கிக் கணக்கை ஆரம்பித்தல்

ஆஸ்திரேலியாவில், வங்கி, கட்டிடக் கூட்டுறவுச் சங்கம் அல்லது கடன் வழங்கும் சங்கங்களில் மக்கள் தமது பணத்தை வைப்பிலிடுகிறார்கள். அநேகமாகச் சம்பளம், வேதனம் மற்றும் அரசாங்க சலுகைகள் நேரடியாக உங்கள் பெயரிலுள்ள கணக்கிற்குச் செலுத்தப்படுகிறது. தங்கள் வங்கிக் கணக்குகளிலிருந்து பணத்தை மீளப்பெறவும், பல்வேறு கொள்வனவுகளுக்காகவும் ஆஸ்திரேலியர்கள் தமது பற்று அட்டை (Debit Cards) களைப் பயன்படுத்துகிறார்கள்.

சாத்தியப்படுமானால், நீங்கள் ஆஸ்திரேலியாவைச் சென்றடைந்ததிலிருந்து 6 வாரங்களுக்குள் கட்டிடக் கூட்டுறவுச் சங்கம், அல்லது கடன் வழங்கும் சங்கங்களில் ஒரு கணக்கைத் திறக்கவும். அடையாளம் காணப்படுவதற்காக வழக்கமாக உங்களது கடவுச்சீட்டு மாத்திரம் தேவை. ஆறு வாரங்களின்பின் உங்களுக்கு மேலதிக அடையாளப் பத்திரங்கள் தேவைப்படும். உங்களை அடையாளம் காண்பதற்குப் பல ஆவணங்கள் உங்களிடம் இல்லையானால் இது கடினமாகலாம். நீங்கள் சம்பாதித்த வட்டியில் கூடிய வீத வரி அறவிடப்படுவதைத் தவிர்ப்பதற்கு, வங்கியிடம் உங்கள் வரிக் கோவை இலக்கத்தைக் (TFN) கொடுக்கவும்.

பார்க்கவும்: [அத்தியாயம் 11 *பணம்*]

## Family Doctor ஒரு குடும்ப வைத்தியரைக் கண்டுபிடிக்கவும்

ஒரு ‘குடும்ப வைத்தியர்’ (‘family doctor’) உங்கள் குடும்பத்தையும், அவர்களது சுகாதார தேவைகளையும் தெரிந்து கொள்வதுடன் மருத்துவ விடயங்களுக்காக முதலில் தொடர்பு கொள்ளவேண்டியவராவார். இந்த வைத்தியர்கள் General Practitioners அல்லது GPs மார்கள் என அழைக்கப்படுகிறார்கள். பொதுவான நோய்களுக்கும், வீட்டில் வாழும் தீராத நோய்களுடனான ஆட்களுக்காகவும் பொதுவான மருத்துவ உதவிகளை இவர்கள் கொடுக்கிறார்கள்.

வைத்தியரைப் பார்ப்பதற்கு வைத்தியசாலைக்குப் போவது அவசியமானதாயிருக்கும் சில நாடுகளைப் போலன்றி, புறநகரங்களில், அலுவலகங்கள் அல்லது கிளினிக்குகளிலிருந்து ஆஸ்திரேலிய GPs மார் வழக்கமாக வேலை செய்கிறார்கள்.மக்கள் தமது வசிப்பிடத்திற்கு அருகாமையில் இருக்கும் வைத்தியர்களை வழக்கமாகப் போய்ப்பார்க்கிறார்கள். அவர்கள் தருகின்ற சேவை உங்களுக்கு வசதியாக அல்லது திருப்தியாக இல்லையானால், வைத்தியர்களை நீங்கள் மாற்ற முடியும்.

சுகாதாரமும் நலன்புரியும், [அத்தியாயம் 9 *ஐப் பார்க்கவும்*]

## முக்கிய தொடர்புகள்

| பொருளடக்கம் | இணையத்தளம் |
|---|---|
| TIS National இணையத்தளம் | www.tisnational.gov.au |
| அவசரகாலத் தகவல் | www.triplezero.gov.au |
| அரசாங்கத் தகவல் மற்றும் சேவைகள் | www.australia.gov.au |
| ஆஸ்திரேலிய வரலாறு, கலாச்சாரம், விழுமியங்கள் | www.border.gov.au/Trav/Life/Aust/Life-in-Australia-book |

## செய்யவேண்டியவைக்கான சரிபார்த்தல் அட்டவணை

- ☐ *'ஆஸ்திரேலியாவில் வாழ்க்கையை ஆரம்பித்தல்'* ஐ நான் வாசித்து விட்டேன்
- ☐ நான் ஒரு வரிக் கோவை இலக்கத்திற்கு விண்ணப்பித்து விட்டேன் (TFN)/இது எனக்குப் பொருந்தாது
- ☐ Medicare உடன் நான் இணைந்து விட்டேன்/இது எனக்குப் பொருந்தாது
- ☐ நான் Centrelink ஐத் தொடர்புகொண்டுள்ளேன்/இது எனக்குப் பொருந்தாது
- ☐ நான் Health Undertaking Service ஐத் தொடர்புகொண்டுள்ளேன்/ இது எனக்குப் பொருந்தாது
- ☐ ஆங்கில மொழி வகுப்புகளுக்குப் பதிவு செய்துகொண்டுள்ளேன்/ இது எனக்குப் பொருந்தாது
- ☐ எனது குழந்தை/குழந்தைகளை ஒரு பாடசாலையில் சேர்த்துவிட்டேன்/ இது எனக்குப் பொருந்தாது.
- ☐ நான் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பித்துள்ளேன்/இது எனக்குப் பொருந்தாது
- ☐ நான் ஒரு வங்கிக் கணக்கினை ஆரம்பித்துள்ளேன்
- ☐ நான் ஒரு குடும்ப வைத்தியரைப் பார்த்துள்ளேன்

# 2 உதவி பெறவும்

## இந்தப் பிரிவில்

- அவசரகால சேவைகள்
- குடியேற்ற உதவி
- நெருக்கடியில் உதவி

### அவசரகால சேவைகள்

அவசரகாலத்தில், தொலபேசி 000

- **பொலிஸ்**
- **அம்புலன்ஸ்**
- ***தீ அணைக்கும் படை***

(காட்டுத்தீ, புயல் அல்லது பூமிஅதிர்ச்சி போன்ற) இயற்கை அனர்த்தம் அல்லது இயற்கையல்லாத (இரசாயன சம்பவங்கள், வாகன விபத்துக்கள் அல்லது வன்முறையான பாரிய குற்றச் செயல்கள்) முன் எச்சரிக்கை இல்லாமல் எந்தவொரு சமுதாயத்திலும் இடம்பெறலாம். எவருக்காவது அவசர உதவி தேவைப்படின் **000** ஐ நீங்கள் கட்டாயம் அழைக்கவேண்டும்.

ஆஸ்திரேலியாவில் எந்தவொரு தொலைபேசியிலிருந்தும் **000** (மூன்று பூச்சி யம்) க்கு இலவசமாக நீங்கள் அழைப்பை மேற்கொள்ளலாம். உங்கள் பெயர், நீங்கள் இருக்கும் இடம், அத்துடன் உங்களுக்குத் தேவைப்படும் சேவை ஆகியவற்றைச் சொல்வதற்கு நீங்கள் தயாராக இருக்கவேண்டும்.

உங்களால் ஆங்கிலம் பேசமுடியாவிட்டால், உங்களுக்கு எவ் வகையான உதவி தேவைப்படும் என இயக்குபவரிடம் முதலில் சொல்லவும். உதாரணமாக **"Police"**, **"Ambulance"** அல்லது **"Fire"** பின்னர் உங்கள் மொழியைச் சொல்லவும். ஒரு உரைபெயர்ப்பாளருடன் தொடர்பு படுத்தப்படுவீர்கள், ஆனபடியால் **தொடர்பைத் துண்டிக்கவேண்டாம்.** பொலிசார், அம்புலன்ஸ் அல்லது தீயணைப்புச் சேவையுடன் பேசுவதற்கு உரைபெயர்ப்பாளர் உதவிசெய்வார்.

வீட்டுத் தொலைபேசியை நீங்கள் பாவிப்பதானால், தொலைபேசியில் பேசிக்கொண்டிருக்கும்போது உங்களின் இடத்தை அவசரகாலச் சேவைகளால் கண்டறிய முடியும். ஆனபடியால, தொடர்பைத் துண்டிக்காதீர்.

நீங்கள் ஒரு 'ஸ்மாட்போன்' ஐப் பாவிப்பீர்களானால், https://play.google.com/store/apps/details?id=com.threesixtyentertainment.nesn Google Store இல் கூகுள் களஞ்சியத்திலிருந்து இலவசமாகத் தரவிறக்கம் செய்வதற்கு *Emergency+* app அத்துடன் http://www.triplezero.gov.au/Pages/EmergencySmartphoneApp.aspx இல் Attorney General's Department Website 'அப்பிள் அப் ஸ்ரோ'ரிலும் கிடைக்கும். அவசரகால சேவையினருக்கு உங்கள் வசிப்பிடத் தகவலைக் கொடுக்க இது உதவுகிறது.

000 (மூன்று பூச்சியம்) சேவையினர் பற்றிய தகவல்களுக்காகப் போய்ப் பார்க்கவும் (ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய மொழிகள் அடங்கலாக) www.triplezero.gov.au

### பொலிஸ் (காவல்துறை)

பொலிசாரிடமிருந்து உதவி தேவைப்படும் அவசரவேளையில் தொலைபேசி **000** இல் **"Police"** ஐ பெற்றுத் தரும்படி கேளுங்கள். ஆங்கிலம் பேசமுடியாவிட்டால், தொடர்பைத் துண்டிக்காதீர்- உங்கள் மொழியைக் கூறுங்கள், ஒரு உரைபெயர்ப்பாளர் இணைத்துக்கொள்ளப்படுவார். அவசரமற்ற விடயங்களாயின், 13 1444 இல் அல்லது White Pages இல் 'பொலிஸ் நிலையங்கள்' க்குக் கீழே. பட்டியலிடப்பட்டுள்ள உங்கள் உள்ளூர் பொலிஸ் நிலையத்தைத் தொலைபேசியில் அழையுங்கள்.

சமுதாயத்தில் உயிர்களையும், உடைமைகளையும் பாதுகாக்கவும், குற்றங்களைக் கண்டறிந்து தடுக்கவும் அத்துடன் சமாதானத்தைப் பாதுகாப்பதும்தான் பொலிசாரின் குறிக்கோளாகும். உடல் ரீதியான, பாலியல் அல்லது உளவியல் துஸ்பிரயோகம் போன்ற பிரச்சினைகள் அல்லது கரிசனைகள் குடும்பங்களில் ஏற்படும்போது அதில் பொலிசார் தலையிடக்கூடும். இராணுவப் படைகளில் போலிசார் தொடர்புபடுத்தப்படவில்லை. பொலிசார் அரசியலில் பங்கு கொள்வதில்லை.

மேலதிகத் தகவல்களுக்காக:

| பிராந்தியம் | பொலிஸ் சேவை | இணையத்தளம் |
|---|---|---|
| ACT | ACT Policing | www.police.act.gov.au |
| NSW | New South Wales Police Force | www.police.nsw.gov.au |
| NT | Northern Territory Police | www.pfes.nt.gov.au/police.aspx |
| Qld | Queensland Police | www.police.qld.gov.au |
| SA | South Australia Police | www.sapolice.sa.gov.au |
| Tas. | Tasmania Police | www.police.tas.gov.au |
| Vic. | Victoria Police | www.police.vic.gov.au |
| WA | Western Australia Police | www.police.wa.gov.au |
| தேசிய | Australian Federal Police | www.afp.gov.au |

### அம்புலன்ஸ்

கடுமையான சுகவீனம், அல்லது மருத்துவ உதவி தேவைப்படும் ஒரு காயம் போன்றவை ஏற்படுகின்ற **அவசரமான வேளைகளில்**, **000** ஐ தொலைபேசியில் அழைத்து ஒரு "**Ambulance**" ஐக்கேளுங்கள். வைத்தியசாலைக்கு அவசரப் போக்குவரத்து மற்றும் உடனடியான மருத்துவ கவனிப்பை அம்புலன்ஸ் வழங்குகிறது. ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள், நீங்கள் ஆங்கிலம்

பேசுவதில்லையானால் **தொலைபேசியைத் துண்டித்து விடாதீர்கள்**- உங்கள் மொழியைக் கூறுங்கள், ஒரு மொழிபெயர்ப்பாளர் இணைக்கப்படுவார்.

நீங்கள் எங்கு வசிக்கிறீர்கள், 'அம்புலன்ஸ்' இல் எவ்வளவு தூரம் பயணிக்கிறீர்கள், உங்கள் வருத்தத்தின் தன்மை, சலுகைகளைப் பெறக்கூடிய தகைமை உங்களுக்கு உண்டா என்பவற்றைப் பொறுத்து 'அம்புலன்ஸ்' ஐப் பாவிப்பதற்கான கட்டணத்தைச் செலுத்த வேண்டி ஏற்படலாம். அம்புலனஸ் செலவுகள் Medicare க்குள் அடங்காது ஆனாலும் சில தனியார் அம்புலன்ஸ் காப்புறுதிகள் மற்றும் அங்கத்துவ சேவைகள் கொடுக்கக்கூடும் (பார்க்கவும்: அத்தியாயம் 9, *சுகாதாரமும் நல்வாழ்வும்*)

அவசரமற்ற ஏனைய மருத்துவ விடயங்களுக்கு, அத்தியாயம் 9, *'சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு'* ஐப் பார்க்கவும்.

மேலும் தகவல்களுக்காக:

| மாநிலம் அல்லது பிரதேசம் | அம்புலன்ஸ் சேவை | இணையத்தளம் |
|---|---|---|
| ACT | ACT Ambulance Service | www.ambulance.act.gov.au |
| NSW | Ambulance Service of NSW | www.ambulance.nsw.gov.au |
| NT | St John Ambulance Australia | www.stjohn.org.au |
| Qld | Queensland Ambulance Service | www.ambulance.qld.gov.au |
| SA | SA Ambulance Services | www.saambulance.com.au |
| Tas. | Tasmanian Ambulance Service | www.dhhs.tas.gov.au |
| Vic. | Ambulance Victoria | www.ambulance.vic.gov.au |
| WA | St John Ambulance Australia | www.stjohn.org.au |

### தீ அணைக்கும் படை

வீட்டுத் தீ அபாயம் அல்லது எரிவாயு வெளியேற்றம் போன்ற **அவசர காலத்தில்**, தொலைபேசியில் 000 அழைத்து "Fire brigade" ஐக் கேழுங்கள். ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள், நீங்கள் ஆங்கிலம் பேசுவதில்லையானால் **தொடர்பைத்துண்டித்து விடாதீர்கள்**- உங்கள் மொழியைச் சொல்லுங்கள் ஒர் உரைபெயர்ப்பாளர் இணைக்கப்படுவார்.

தீயணைக்கும் படையினர் தீயை அணைத்துவிடுவார்கள், எரிந்துகொண்டிருக்கும் கட்டடத்திலிருந்து ஆட்களை மீட்டுவிடுவார்கள் அத்துடன், எரிவாயு, அல்லது இரசாயனப் பொருட்கள் ஆபத்தை விளைவிக்கும் நிலமையில் உதவிடுவார்கள்.

தீ அணைக்கும் சேவைகள் இலவசமானவை.

தீயினை எவ்வாறு தடுக்கலாம் அத்துடன் நெருப்பு உண்டாகும்போது என்ன செய்வது என்பது பற்றிய தகவல்களைப் பெற *அத்தியாயம் 12, மக்கள் பங்களிப்பு* அத்துடன் உங்களது மாநில அல்லது பிரதேச சேவை இணையத்தளத்தைப் பாருங்கள்:

| மாநிலம் அல்லது பிரதேசம் | தீ சேவை | இணையத்தளம் |
|---|---|---|
| ACT | ACT Fire & Rescue | www.esa.act.gov.au/actfr |
| NSW | Fire and Rescue NSW | www.fire.nsw.gov.au |
| | NSW Rural Fire Service | www.rfs.nsw.gov.au |
| NT | NT Police, Fire and Emergency Service | http://www.pfes.nt.gov.au/Fire-and-Rescue.aspx |
| Qld | Queensland Fire and Emergency Services | www.fire.qld.gov.au |
| SA | SA Metropolitan Fire Service | http://www.mfs.sa.gov.au/site/home.jsp |
| | SA Country Fire Service | www.cfs.sa.gov.au |
| Tas. | Tasmania Fire Service | www.fire.tas.gov.au |
| Vic. | Metropolitan Fire Board | www.mfb.vic.gov.au |
| | Country Fire Authority | www.cfa.vic.gov.au |
| WA | Department of Fire and Emergency Services | www.fesa.wa.gov.au |

## இயற்கை அனர்த்தங்கள்

காட்டுத்தீ, வெள்ளப்பெருக்கு அல்லது புயல் போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும்போது, மாநில மற்றும் பிராந்திய அரச அதிகாரிகள் அத்தியாவசிய சேவைகளை இணைத்துக்கொள்கிறார்கள். தொண்டர் சேவைகளாகிய, மாநில மற்றும் பிரதேச அவசரகால சேவைகள் (SES) மற்றும் உள்ளூர் தீயணைப்பு சேவைகள், தீயனைப்பு, பொலிஸ் மற்றும் மீட்புச் சேவைகளுக்கு உதவுவார்கள்.

ஆஸ்திரேலிய பாதுகாப்புப் படைகள் உட்பட ஆஸ்திரேலிய அரசாங்க முகவர்கள் இயற்கை அழிவுகள் மற்றும் வேறு அவசரகால நிலையில் உதவி வழங்குவார்கள். ஆஸ்திரேலியாவில், இராணுவப் படைகள் அரசியலில் பங்கு பற்றுவதில்லை.

இயற்கை அழிவிலிருந்து மீழுவதற்கான உதவியை நீங்கள் பெறலாம். மேலும் தகவல்களுக்காகப் போய்ப்பாருங்கள்: www.disasterassist.gov.au

இயற்கை அழிவுகள் அல்லது அத்தியாவசியகாலத்தில் ஆஸ்திரேலியாவிலுள்ள எல்லா மட்டத்திலுமான அரசாங்கங்கள் தயார் நிலையில் உள்ளன. மேலும் தகவல்களுக்காக உங்கள் மாநில, அல்லது பிரதேச வலைத்தளத்தைப் பார்க்கவும்.

| அவசரகால நிலையம் | இணையத்தளம் |
|---|---|
| ACT | http://esa.act.gov.au/emergency-management/emergency-arrangements/ |
| NSW | www.emergency.nsw.gov.au |
| NT | www.pfes.nt.gov.au/Emergency-Service/Publications-and-forms.aspx |
| Qld | www.disaster.qld.gov.au |
| SA | www.safecom.sa.gov.au/site/home.jsp |
| Tas. | www.ses.tas.gov.au |
| Vic. | www.igem.vic.gov.au |
| WA | www.fesa.wa.gov.au |
| National Crisis Co-ordination | www.ag.gov.au/EmergencyManagement/About-us-emergency-management/Australian-Government-Crisis-Coordination-Centre/Pages/default.aspx |
| இயற்கை அழிவு பற்றிய தகவல்கள் | www.australia.gov.au/about-australia/australian-story/natural-disasters |

***காட்டுத்தீ***

காட்டுத்தீயானது, புல், புதர் அல்லது காடு மற்றும் உயிர், ஆதனம் மற்றும் சுற்றுச்சூழலைப் பயமுறுத்தும் ஒரு நெருப்பாகும். ஆண்டொன்றின் எந்தக்காலத்திலும் காட்டுத்தீ நிகழலாமெனினும், புதர்கள், புற்தரைகள் அல்லது செடிகள் வரண்டுபோய் இருக்கும் வெப்பமான மாதங்களில் அபாயம் அதிகமாகும். நெருப்பானது மிகவும் சூடாகவும், அதிகரித்தும், விரைவில் பரவக்கூடியதுமாகும். நெருப்பிலிருந்து வரும் புகை அடர்த்தியாக இருக்கையில், பார்ப்பதையோ, சுவாசிப்பதையோ கடினமாக்கலாம்.

தீ பீடிக்கக்கூடிய பிரதேசத்தில் நீங்கள் வசிப்பதானால், காட்டுத்தீயிலிருந்து தப்புவதற்கான திட்டத்தைத் தீட்டுங்கள். இது தீப்பிடிக்கையில் என்ன செய்யவேண்டும் என்பது பற்றிய முக்கிய முடிவினைச் செய்ய உதவும் - எப்போது விட்டுச் செல்வது, எதை எடுத்துச் செல்வது, கால் நடைகளை என்ன செய்வது போன்றவை.

எவ்வாறு தயார் செய்வது என்பது உட்பட காட்டுத்தீ பற்றிய மேலும் தகவல்களுக்காக மேலேயுள்ள பட்டியலில் அட்டவணையிடப்பட்டுள்ள உங்கள் மாநில அல்லது பிரதேச தீயணைப்பு சேவை யுடன் தொடர்பு கொள்ளவும்.

### ஏனைய அவசரகால எண்கள்

அவசரகால தொலைபேசி இலக்கங்கள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கி White Pages இல் பட்டியலிடப்பட்டுள்ளது:

| அவசரகால சேவை | தொலைபேசி 24 மணித்தியாலங்கள் | இணையத்தளம் |
| --- | --- | --- |
| Poisons Information Centre | 13 1126 | http://www.poisonsinfo.nsw.gov.au |
| Child Abuse Prevention Service | 1800 688 009 | www.childabuseprevention.com.au/reporting-abuse.html |

### பயங்கரவாத அச்சுறுத்தல்

பயங்கரவாதம் தலைதூக்குவதைத் தடுக்க ஆஸ்திரேலியா உறுதிபூண்டுள்ளது. கொள்கை, மதம் அல்லது அரசியல் இலட்சியங்களை அடைவதற்குப் பயங்கரவாதம் பாவிக்கப்படுகிறது. அல்லது உதவுகிறது. பயங்கர, தீவிரவாத அச்சுறுத்தலை விளங்கிக்கொள்வதாலும், எச்சரிக்கையாக இருப்பதாலும் ஒவ்வொருவரும் ஆஸ்திரேலியாவின் பாதுகாப்புக்குப் பங்களிக்கலாம்.

மேலும் அதிகளவில் அறிந்துகொள்ளவும் அல்லது உங்கள் கரிசனைகளை அறியத்தரவும்:

| தேசிய | தொலைபேசி | இணையத்தளம் |
| --- | --- | --- |
| National Security Hotline | 1800 1234 00 | www.nationalsecurity.gov.au/WhatAustraliaisdoing/Pages/TheNationalSecurityHotline.aspx |
| Living Safe Together | | www.livingsafetogether.gov.au/pages/home.aspx |
| Report Online Extremism | | www.reportextremism.livingsafetogether.gov.au |

## குடியேற்ற உதவி

ஆஸ்திரேலியாவினது பல்வேறுபட்ட சமுதாயங்களுக்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் ஆதரவு அளிக்கிறது. www.dss.gov.au/our-responsibilities/settlement-and-multicultural-affairs/programs-policy/a-multicultural-australia ஐப் பார்க்கவும்.

மனிதாபிமான ரீதியில் வந்தோருக்கும், அண்மையில் ஆஸ்திரேலியாவில் குடியேறி ஆஸ்திரேலிய சமூகத்தில் ஒர் அங்கத்தவராகப் பங்கேற்பதற்காக வந்துசேர்ந்த தகைமைபெற்ற குடியேற்றவாசிகளுக்கும் சேவைகளை வழங்குவதற்காக ஆஸ்திரேலிய அரசாங்கம் நிதியுதவியளிக்கிறது.

- Settlement Service Grants
- Adult Migrant English Program (AMEP)
- மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவை (TIS National).

குறிப்பாக மனிதாபிமான அடிப்படையில் வந்து குடியேறியோருக்கான குடியேற்றச் சேவைகளுள் அடங்குபவை:

- Humanitarian Settlement Services
- Complex Case Support Program
- கூடிவராத மனிதாபிமான இளையோருக்கான ஆதரவு.

Humanitarian Settlement Services மற்றும் Complex Case Support வழங்குபவர்களையும் அறிந்துகொள்ளப் போகவும்: www.dss.gov.au/our-responsibilities/settlement-and-multicultural-affairs/programs-policy/settlement-services/settlement-services-locator

www.dss.gov.au/our-responsibilities/settlement-and-multicultural-affairs/programs-policy/taking-the-initiative/resources இல் ஏனைய குடியேறுவதற்கான வழிவகைகளை அறிந்துகொள்ளலாம்.

*அத்தியாயம் 3, ஆங்கில மொழி*, TIS National மற்றும் AMEP ஐ மேலும் தகவல்களுக்காகப் பாருங்கள்.

## Humanitarian Settlement Service

புதிதாக வந்து சேர்ந்த அகதிகள் மற்றும் மனிதநேய குடியேறிகள், அவர்கள் வந்தடைந்ததும் அத்துடன் தொடர்ந்தும் அவர்களது ஆரம்பக் குடியேற்றக் காலத்தில் Humanitarian Settlement Services (HSS) அதிகளவில் குடியேற்ற ஆதரவை வழங்குகிறது.

இளைஞர்களின் குறிப்பிட்ட தேவைகள் உட்பட, தனிப்பட்டவர்களின் தேவைகளுக்காக உருவாக்கப்பட்டதுதான் HSS திட்டமாகும். ஆஸ்திரேலியாவின் பொருளாதார, சமூக வாழ்க்கையில் சேவைபெறுவோர் பங்குகொள்ள HSS உதவுகிறது. எதிர்காலத்தில் தாங்களாகவே சேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய திறமைகளையும், அறிவினையும் அது ஊட்டுகிறது.

HSS திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சேவைகள் பின்வருவனவற்றினைக் கொண்டிருக்கலாம்:

- வந்து சேர்ந்ததும் விமான நிலைய வரவேற்பு மற்றும் குறுகியகால தங்குமிட அறிவுறுத்தல்கள்.
- நீண்டகால வசிப்பிடத்தை அமைப்பதில் உதவி
- முக்கிய முகவர்கள், சமூகத் திட்டங்கள், சுகாதார மற்றும் வேறு குடியேற்ற சேவைகளுக்குச் சிபார்சு செய்வதும் அவைபற்றிய தகவல்களும்.
- நாட்டினுள் செயற்பாட்டுத் திட்டம்.

சேவைபெறுபவர்கள் வழமையாக ஆறிலிருந்து 12 மாதங்களுக்கு HSS இல் தங்கியிருப்பார்கள்.

மேலும் தகவல்களுக்குப் பாருங்கள்:

| Humanitarian Settlement Services தகவல் | இணையத்தளம் |
| --- | --- |
| Humanitarian Settlement Services | www.dss.gov.au/our-responsibilities/settlement-and-multicultural-affairs/programs-policy/settlement-services/humanitarian-settlement-services-hss |
| தற்போதய HSS சேவை வழங்குநர்களின் பட்டியல் | www.dss.gov.au/our-responsibilities/settlement-and-multicultural-affairs/programs-policy/settlement-services/settlement-services-locator |

## Complex Case Support Program

ஏனைய குடியேற்றச் சேவைவழங்குநோரின் வேலைத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட தேவைகளைக் கொண்டுள்ள தகைமைகொண்ட மனிதநேயக் குடியேற்ற வாசிகளுக்கு இந்த Complex Case Support (CCS) திட்டம் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மற்றும் வலுவான விடய முகாமைத்துவ சேவைகளை வழங்குகிறது. வந்து சேர்ந்தபின்னர் ஐந்து ஆண்டுகள் வரை சேவைபெறுவோர் CCS திட்டத்திற்கு தகைமையுடையவர்களாவர். CCS பற்றிய மேலும் தகவல்களுக்குப் பார்க்கவும்: www.dss.gov.au/our-responsibilities/settlement-and-multicultural-affairs/programs-policy/settlement-services/complex-case-support-programme

இந்த வகையான உதவி தேவைப்படுபவர்போல் தோன்றுபவர் அல்லது அப்படிப்பட்டவர் என உங்களுக்குத் தெரிந்தால், Complex Case Support க்குத் தொலைபேசி 1300 855 669 இல் அறிவியுங்கள்.

## Settlement Service Grants

ஆஸ்திரேலியாவுக்கு புதிதாக வந்தவர்கள் குடியேறுவதற்காக உதவும் நிறுவனங்களுக்கு இந்தத் திட்டம் முதலிடுகிறது.

கீழே காணப்படும் கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள்ளே வந்துசேர்ந்த ஒரு நிரந்தர வதிவாளராக நீங்கள் இருப்பீர்களானால், Settlement Grants இன் கீழ் நீங்கள் சேவைகளைப் பெறலாம்:

- மனிதநேயக் குடியேறி
- அடிமட்ட ஆங்கிலத் தேர்ச்சி அறிவுடன் குடும்பம் சார்ந்த குடியேற்றவாசி.
- உள்ளூர் அல்லது பிராந்தியப் பிரதேசத்தில் குடியேறியுள்ள தொழில் திறமையுடைய குடியேற்றவாசியில் தங்கியுள்ள குறைந்தமட்ட ஆங்கிலத் தேர்ச்சியுடையவர்.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் வந்துசேர்ந்த, குறைந்த மட்ட ஆங்கிலத் தேர்ச்சியுடைய உள்ளூர் மற்றும் பிராந்தியப் பிரதேசங்களில் வாழும் தற்காலிக வதிவாளர் சிலரும் (நடக்கவிருக்கும் திருமணம் மற்றும் தற்காலிகத் துணைவர் வீசா வைத்திருப்பவர்களும் அவர்களில் தங்கி வாழ்பவர்களும்) தகைமை பெறக்கூடும். ஏனைய இடைப்பட்ட அல்லது தற்காலிக வீசா வைத்திருப்பவர்கள் இந்த சேவைகளுக்குத் தகைமை பெறமாட்டார்கள்.

ஆரம்பிக்க, திட்டமிட அத்துடன் சேவைகளைப் பெற்றுக்கொள்ளப் பரிந்து பேச உதவி தேவைப்படும் புதிதாக வந்த சமூகத்தவர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையானோரைப் பெறுகின்ற Settlement Grants ஆதரவு வழங்குகிறது.

வீட்டுவசதிகள், குழந்தைப்பராமரிப்பு, தொழில்வாய்ப்பு மற்றும் பாடசாலை போன்ற பிரதான நீரோட்டத்தில் நீங்கள் சேர்ந்து கொள்வதற்கான வாய்ப்புகளைப் பெற சேவை வழங்குநோர் உதவுகிறார்கள். ஆங்கில மொழிப் பயிற்சி, கல்வி மற்றும் தொழில்வாய்ப்புக்கு உதவவுதல் மற்றும் சமூகத்தில் நிலைகொள்ளவதற்கான ஆதரவு வேலைத்திட்டத்தில் உங்களை அவர்களால் இணைத்துக்கொள்ள முடியும்.

மேலும் தகவல்களுக்கு:

| குடியேற்ற சேவைகள் வழங்கும் தகவல்கள் | இணையத்தளம் |
|---|---|
| Settlement Services grants program பற்றியது | www.dss.gov.au/grants-funding/grant-programmes/settlement-services-fact-sheet |
| DSS Grants Service Directory | http://serviceproviders.dss.gov.au |

### கூடிவராத மனிதாபிமான வயதுவராத சிறுவர்களுக்கான ஆதரவு

பராமரிப்பு, மேற்பார்வை மற்றும் ஆதரவினைப் பெறத் தகைமையுள்ள சிறுவர்களுக்கு (அவர்கள் ஒன்றில் ஒரு நிரந்தர வதிவாளருக்குரிய, தற்காலிக மனிதநேய, தற்காலிக பாதுகாப்பு வீசாவை அல்லது அதையொத்த அவசியமான தற்காலிக வீசாவை வைத்திருப்பவர்கள்) இத் திட்டம் உதவுகிறது.

எவருடைய துணையுமற்ற மனிதாபிமான இளம் சிறாருக்கான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள, போய்ப் பார்க்கவும்: www.border.gov.au/about/corporate/information/fact-sheets/uhm-programme

### குடியமர்வு டிவிடி (DVD) க்கள்

ஆபிரிக்கா மற்றும் ஆசியா விலிருந்து புதிதாக வந்து சேர்ந்த அகதிகளுக்காக Department of Immigration and Border Protection *ஆஸ்திரேலியா - ஒரு புதிய வீடு* என அழைக்கப்படும் ஒரு டிவிடி ஐத் தயாரித்துள்ளது. வீட்டுவசதிகள், சுகாதாரம், கல்வி, பணம், வேலை, குடும்பம், ஆஸ்திரேலிய சட்டமும் ஆஸ்திரேலியாவில் வாழ்க்கைமுறையும் பற்றிய தகவல்களை இந்த டிவிடி கொண்டுள்ளது.

ஆபிரிக்க அகதிகளுக்காக, அம்ஹரிக், டின்கா, கிருண்டி, சூடான் அராபிக், சுவாஹிலி மற்றும் ரிகிரினியா மொழிகளில் இந்த டிவிடி யைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிய அகதிகளுக்காக இந்த டிவிடி பர்மிய, சின் (ஹாகா), கரென், நெபாலி மற்றும் ரொஹிங்யா மொழிகளில் கிடைக்கும்.

இவ்விரண்டு டிவிடிக்களும், ஆங்கில மொழித் தெரிவும் அத்துடன் ஆங்கிலத் தலைப்புக்களும் உண்டு. 'Border TV கரையோரம் ரி.வி'யில் சம்பவங்கள் ஆங்கிலத்திலும் கிடைக்கும். போய்ப்பார்க்கவும்: www.youtube.com/user/ImmiTV அத்துடன் 'செயற்பாட்டிற்கான தகவல்கள்' ஐப்பெறத் தேடவும்.

இந்த டிவிடிக்களின் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளக் குடியமர்வுச் சேவை வழங்குவோரிடம் விசாரிக்கவும். மின்அஞ்சல் DVD.Requests@border.gov.au அல்லது Department of Immigration and Border Protection ஐ www.border.gov.au/about/contact/offices-locations/australia இல் தொடர்பு கொள்ளவும்.

## மாநில மற்றும் பிரதேசக் குடியமர்வு உதவி

பல் கலாச்சார, குடியமர்வு அலுவல்களுக்கான அலுவலகங்கள் எல்லா மாநில, பிராந்திய அரசாங்கங்களிலும் உண்டு. புதிய வதிவாளர்களுக்கு உள்ளூர் அரசாங்கங்களும் ஆதரவு வழங்கக்கூடும். *அத்தியாயம் 12, குடியியல் பங்கேற்பைப்* பார்க்கவும்.

மேலதிக தகவல்களைப் பெறப் பாருங்கள்:

| மாநிலம் அல்லது பிரதேசம் | முகவர் | இணையத்தளம் |
|---|---|---|
| ACT | Office of Multicultural Affairs | http://www.communityservices.act.gov.au/multicultural |
| | Multicultural Services | www.communityservices.act.gov.au/multicultural/services |
| NSW | Multicultural NSW language services | www.crc.nsw.gov.au/services |
| | Multicultural NSW Settlement Portal | http://multicultural.nsw.gov.au/communities/new_arrivals_to_nsw/ |
| | NSW Community Organisations | http://multicultural.nsw.gov.au/communities/communities/ |
| NT | Office of Multicultural Affairs | https://dcm.nt.gov.au/strong-community/multicultural-affairs |
| | NT Multicultural Information Directory | https://nt.gov.au/community/multicultural-communities/Contact-a-multicultural-service-or-community-group |
| Qld | Multicultural Affairs Queensland | www.multicultural.qld.gov.au |

| மாநிலம் அல்லது பிரதேசம் | முகவர் | இணையத்தளம் |
| --- | --- | --- |
| | Queensland Multicultural Resource Directory | www.communities.qld.gov.au/multicultural/multicultural-communities/multicultural-resource-directory |
| SA | Multicultural SA | www.multicultural.sa.gov.au/new-migrants |
| | Multicultural Communities Council of SA Directory | www.mccsa.org.au |
| Tas. | Multicultural Tasmania | www.multicultural.tas.gov.au |
| Vic. | Victorian Multicultural Commission | www.multicultural.vic.gov.au |
| | சமூக தகவல் புத்தகம் | www.multicultural.vic.gov.au/resources/community-directory |
| WA | Office of Multicultural Interests | www.omi.wa.gov.au |
| | WA Culturally and Linguistically Diverse (CaLD) community services directory | www.omi.wa.gov.au/omi_db_msd.cfm |

## உள்ளூர் அரசாங்க சேவைகள்

நீங்கள் வசிக்கும் பிரதேசத்தை உங்கள் உள்ளூர் சபை பராமரிப்பதுடன், உள்ளூர் சமூகங்களுக்குப் பல முக்கிய சேவைகளையும் வழங்குகிறது. உள்ளூர் வீட்டு உரிமையாளர்களால் செலுத்தப்படும் கட்டணங்கள் மூலம் சபைகள் நிதியைப் பெறுகின்றன. உள்ளூர் அரச சேவைகளைப் பெற்றுக்கொள்ள நீங்கள் ஒரு வீட்டு உரிமையாளராக இருக்கத் தேவையில்லை.

உள்ளூர் சேவைகள், வசதிகள் (குப்பை சேகரிப்பு நேரங்கள், பொது சுகாதாரம், பொழுதுபோக்கு வசதிகள் உட்பட) அடங்கிய தகவல் சிறுநூல்கள், அல்லது புதிய வதிவாளர் தகவல் பொதிகளைப் பல சபைகள் வெளியிடுகின்றன. நீங்கள் இவற்றைக் கவுன்சிலில் பெற்றுக் கொள்ளலாம் அல்லது தபாலிலும் தருவிக்கலாம்.

மேலும் தகவல்களுக்காக உங்கள் உள்ளூர் கவுன்சில் அல்லது நூல் நிலையத்திற்கு வருகை தாருங்கள். 'கவுன்சில்' இன் தொலைபேசிஇலக்கங்கள் மற்றும் விலாசங்கள் மாவட்டத்தின் பெயர் எனும் தலைப்பின் கீழ் White Pages கீழ் பட்டியலிடப்பட்டுள்ளது.

மேலும் தகவல்களுக்காக:

| பிராந்தியம் | உள்ளூர் அரசாங்கத் தகவல்கள் | இணையத்தளம் |
|---|---|---|
| ACT | ACT Government – Canberra Connect | www.act.gov.au |
| NSW | Office of Local Government | www.olg.nsw.gov.au |
| NT | Department of Local Government and Community Services | www.localgovernment.nt.gov.au/council_information |
| Qld | Department of Infrastructure, Local Government and Planning | http://dilgp.qld.gov.au |
| SA | Department of Planning and Local Government | www.dpti.sa.gov.au/local_govt |
| Tas. | Local Government Division | www.dpac.tas.gov.au/divisions/local_government |
| Vic. | Local Government Victoria | www.delwp.vic.gov.au/local-government/find-your-council |
| WA | Department of Local Government and Communities | www.dlgc.wa.gov.au/Pages/default.aspx |
| National | Australian Local Government Association - இணைப்புகள் | http://alga.asn.au/?ID=275&Menu=56,199,219 |

## இன மற்றும் சமூக நிறுவனங்கள்

ஆஸ்திரேலியாவில், பல்வேறு கலாச்சார, மொழி மற்றும் மதப் பின்னணிகளைக் கொண்ட மக்களின் நலன்களைப் பிரதிநித்துவப்படுத்தவும், அதற்குப் பணியாற்றவும் பல நிறுவனங்கள் இருக்கின்றன. உங்களுக்கு உதவக்கூடிய ஏனையவற்றிற்கு உங்களை வழிநடத்தவும், உதவவும் இவைகளால் இயலக்கூடும். Yellow Pages இல் ‘மன்றங்கள்’ மற்றும் ‘நிறுவனங்கள்’ எனும் தலைப்பின்கீழ், இன மற்றும் சமூக மன்றங்கள், சங்கங்கள், சமய ஸ்தாபனங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

புலம்பெயர்வோர் வாய்ப்பு வள நிலையங்கள் (Migration Resource Centres) உட்பட குடியேற்றச் சேவை வழங்குவோர்கள் பல பிரதேசங்களில் இருக்கின்றனர். இந்த நிறுவனங்கள் அரசாங்கத்தால் நடாத்தப்படுவதில்லை, ஆனால், குடியேற்றச் சேவைகளை வழங்குவதற்காகச் சில நிலையங்கள் பணம் பெறுகின்றன. இவை உங்களுக்கு உதவி யளிக்கலாம் அல்லது உங்கள் தேவைகள் மற்றும் நலன்களுக்குப் பொருந்தக்கூடிய நிறுவனங்களைக் கண்டறிய உதவலாம்.

மேலதிகத் தகவல்களுக்கு:

| பிரதேசம் | முகவர் | இணையத்தளம் |
|---|---|---|
| National | Federation of Ethnic Communities' Councils of Australia (FECCA) | www.fecca.org.au |
| National | Settlement Council of Australia | www.scoa.org.au |
| National | Multicultural Youth Advocacy Network | www.myan.org.au/ |

## நெருக்கடியில் உதவி

உங்களுக்கு உணவு, உடை, உறைவிடம் அல்லது மரத்தளபாடம் அவசியமாகத் தேவைப்பட்டால், அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து நீங்கள் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம். உதவி கேட்பதற்குப் பயப்பட வேண்டாம்.
குறிப்பிட்ட சேவைகளைப் பெற்றுக்கொள்ள நீங்கள் தகைமையை அல்லது குறித்த வேண்டுகோள்களைப் பூர்த்திசெய்ய வேண்டும்.
மேலதிகத் தகவல்களுக்குப் பாருங்கள்:

| தேசிய முகவர்கள் | இணையத்தளம் |
|---|---|
| The Salvation Army | www.salvos.org.au |
| St Vincent de Paul Society | www.vinnies.org.au |
| The Smith Family | www.thesmithfamily.com.au |
| Mission Australia | www.missionaustralia.com.au |
| Anglicare Australia | www.anglicare.asn.au |
| Red Cross | www.redcross.org.au/contact-us.aspx |
| Department of Human Services | www.humanservices.gov.au/crisis |

## தொலைபேசியில் நெருக்கடிகால (மதிவளத்துணை) உளநல ஆலோசனை

நாள் ஒன்றில் 24 மணித்தியாலங்கள், வாரத்தில் ஏழு நாட்கள் இலவச நெருக்கடிகால உளநல ஆலோசனை வழங்கும் தொலைபேசி உளநல ஆலோசனைச் சேவைகள் உண்டு.

நீங்கள் நம்பிக்கையற்ற நிலையை உணர்ந்தால், பேசிக்கொள்வதற்கு யாராவது ஒருவர் அல்லது அவரது சிறப்புத்தேர்ச்சி ஆலோசனைச் சேவையைப் பெறுவதற்காக அழையுங்கள். உதவி கேட்பதைப்பற்றிப் பிரச்சினையே இல்லை.

| தேசிய முகவர்கள் | தொலைபேசி<br>24 மணித்தியாலங்கள் | இணையத்தளம் |
|---|---|---|
| Lifeline Helpline | 13 1114 | www.lifeline.org.au |
| Kids Helpline | 1800 551 800 | www.kidshelp.com.au |
| Child Abuse Prevention Service | 1800 688 009 | www.childabuseprevention.com.au |
| Relationships Australia Crisis Line | 1300 364 277 | www.relationships.org.au |
| 1800 RESPECT | 1800 737 732 | www.1800respect.org.au |

# 3 ஆங்கில மொழி

## இந்தப் பிரிவில்

- [மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவை (TIS National)]
- [ஆங்கிலம் கற்றல்]

## மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவை (TIS National)

### உரைபெயர்த்தல்

மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவை (TIS National) உடனடி தொலைபேசி உரைபெயர்ப்பு சேவையை வழங்குகிறது. 160 மொழிகளுக்கும் மேலான மொழிகள், பேச்சு வழக்குகளுக்கான உரைபெயர்ப்பாளர்கள் இருக்கின்றார்கள்.உங்கள் மொழியைப் பேசாத ஒருவருடன் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டுமானால், TIS National உங்களுக்கு உதவக்கூடும்.

ஒரு நாளில் 24 மணித்தியால நேரமும், வாரத்தில் ஏழு நாட்களும் தொலைபேசி உரைபெயர்ப்பாளர்களைப் பெற்றுக்கொள்ளலாம் அத்துடன், அவசரகால நிலையில் அவர்களால் உங்களுக்கு உதவ முடியும். அரச முகவர்கள், சமூகக் குழுக்கள் மற்றும் வியாபார நிலையங்களுடன் தொடர்புகொள்வதற்கு நீங்கள் TIS National ஐப் பாவித்துக்கொள்ளலாம்.

பொதுவாக, ஆங்கிலம் பேச முடியாதோருக்கு TIS National இலவசமாகும். நீங்கள் ஒரு அரசாங்கத் திணைக்கழத்துடன் தொடர்பு கொள்வீர்களானால், உரைபெயர்ப்பாளருக்குக் கொடுக்கவேண்டிய பணத்திற்கு அந்த நிறுவனமே பொறுப்பாகும். சில தொழில் நிறுவனங்கள், சமூகசேவை நிலையங்களும் இலவச உரைபெயர்ப்புச் சேவையை வழங்கக்கூடும்.

ஒரு TIS National உரைபெயர்ப்பாளரைப் பாவிப்பதற்கு 131 450 ஐ அழைத்து நீங்கள் பேசும் மொழி எதுவெனத் தொலைபேசி இயக்குநருக்குச் சொல்லவும். அந்த இயக்குநர் ஒரு உரைபெயர்ப்பாளரைத் தொடர்புகொள்வார். உரைபெயர்ப்பாளருடன் தொடர்புபடுத்தப்பட்டதும், நீங்கள் தொடர்பு கொள்ள விரும்பும் நிறுவனத்தின் பெயரையும், தொலைபேசி இலக்கத்தையும் கொடுங்கள்.

நீங்கள் தொடர்பு கொள்ள விரும்பும் நிறுவனத்தை வேலை நேரங்களில் அழைக்க வேண்டும்.

உங்கள் வைத்தியரைப் பார்க்க ஒரு உரைபெயர்ப்பாளர் உங்களுடன் தேவைப்பட்டால், வைத்தியர்களுடைய முன்னுரிமைத் தொடர்பில் (Doctor's Priority Line) ஒரு தொலைபேசி உரைபெயர்ப்பாளரை ஒழுங்குபடுத்துவதற்காக TIS National ஐத்தொடர்பு கொள்ளுமாறு உங்கள் வைத்தியரிடம் கேளுங்கள். நேரடியாக வரக்கூடிய உரைபெயர்பாளரையும் ஒரு வைத்தியர் ஒழுங்குபடுத்தலாம். மருந்துகளைப்பற்றி உங்களுடன் பேசுவதற்கு மருந்தகங்கள் தொலைபேசி உரைபெயர்ப்பாளர்களைப் பாவிக்கலாம். இது அரசாங்கத்தால் வழங்கப்படும் ஒரு இலவச சேவையாகும்.

பின்வரும் குழுக்களுடன் தொடர்புகொள்ள இலவசத் தொலைபேசி உரைபெயர்ப்பு சேவைகள் கிடைக்கக்கூடும்:

- இலாபமீட்டாத, அரச சார்பற்ற, சமூகத்தைத் தழுவிய நிறுவனங்கள்
- பாராளுமன்ற உறுப்பினர்கள்
- உள்ளூர் அரசாங்க அதிகாரிகள் (கட்டணங்கள், குப்பை சேகரிப்புப் போன்ற மற்றும் நகரத்திற்கான சேவைகள் தொடர்பிலான பிரச்சினைகள்)
- வர்த்தக சங்கங்கள்
- ஆதன முகவர்கள்.

## TIS National க்காகப் பணியாற்றுதல்

ஒப்பந்த உரைபெயர்ப்பாளராக ஆக வேலைசெய்ய விரும்பும் ஆஸ்திரேலிய நிரந்தர வதிவாளர் மற்றும் குடிமக்களிடமிருந்து விசாரணைகளை TIS National வரவேற்கிறது.
மேலதிக தகவல்களுக்காகத் www.tisnational.gov.au/en/Interpreters இல் TIS National இணையத்தளத்திற்குத் தயவுசெய்து வருகைதரவும்.

### உங்கள் முக்கிய ஆவணங்களின் மொழிபெயர்ப்பு

தகைமையுள்ள குடிவரவாளர்கள் தமது குடியேற்றம் தொடர்பான சொந்த ஆவணங்களை (உதாரணமாக, பிறப்பு அல்லது திருமணச் சான்றிதழ், சாரதி அனுமதிப்பத்திரங்கள் மற்றும் கல்வி, தொழில் பத்திரங்கள்) ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்பிக்கலாம். ஆஸ்திரேலியாவுக்கு வந்து அல்லது நிரந்தர வதிவிடம் கிடைத்து முதல் இரண்டு ஆண்டுகளுக்கு இது இலவசமாகும். மேலதிக தகவல்களுக்குப் பாருங்கள்:

| TIS National சேவைகள் | தொடர்புத் தகவல்கள் |
|---|---|
| மொழிபெயர்ப்பு, உரைபெயர்ப்பு சேவை (TIS National) 24 மணித்தியால சேவை | 131 450 |
| TIS National இணையத்தளம் | www.tisnational.gov.au/en/Non-English-speakers |
| ஆவணங்கள் பொழிபெயர்ப்பது பற்றிய தகவல்கள் | www.dss.gov.au/our-responsibilities/settlement-and-multicultural-affairs/programs-policy/settle-in-australia/help-with-english/free-translating-service |


### “எனக்கு ஓர் உரைபெயர்ப்பாளர் தேவை” அட்டை

ஆங்கிலம் பேசாதவர்கள், அரசாங்க முகவர்கள், சமூகக் குழுக்கள் மற்றும் வியாபார நிலையங்களுடன் தொடர்புகொள்ளத் தமக்கு ஓர் உரைபெயர்பாளர் தேவைப்படும் போது ‘எனக்கு ஓர் உரைபெயர்ப்பாளர் தேவை’ அட்டையைப் பாவிக்கலாம். அந்த அட்டையிலே TIS National உடைய தொடர்புத் தகவல்களும், உங்களுடைய விருப்புக்குரிய மொழியை எழுதுவதற்கான இடமும் இருக்கும்.

தமது சேவைபெறுவோருக்குக் கொடுப்பதற்காக TIS National இந்த அட்டைகளை அரசாங்க முகவர்கள், சமூக குழுக்கள் மற்றும் இலாபமீட்டாத முகவர்களுக்குக் கொடுக்கும்.

நீங்கள் ஓர் அட்டையை தபாலில் பெற விரும்பினால், tispromo@border.gov.au இல் TIS National க்கு மின் அஞ்சல் செய்யவும் அல்லது 1300 655 820 இல் தொலைபேசியில் அழைக்கவும்.

### உரைபெயர்ப்பாளர் இலச்சினை



உரைபெயர்ப்பாளர் சின்னம், (இந்தச் சிறிய புத்தகத்தின் முன்னாலும் ஒவ்வொரு பக்கத்திலும், அரசாங்க சேவைகளைப் பாவிக்கும்போது ஆங்கிலம் நன்றாகத் தெரியாதவர்கள் மொழி உதவி கேட்கலாம் எனத் தெரிந்துகொள்ள இடமளிக்கிறது.

பொது வைத்தியசாலைகள், பொலிஸ் நிலையங்கள், அரச பாடசாலைகள், சமூக நிலையங்கள், வீட்டுவசதி மற்றும் தொழில் அலுவலகங்கள், உள்ளூர்க் கவுன்சில்கள் மற்றும் குடிவரவு வாய்ப்புவளச் சேவை (Migrant Resource Centre) போன்ற குடியேற்றச் சேவை வழங்குவோரிடம் இந்தச் சின்னத்தைக் நீங்கள் காண்பீர்கள்.

## ஆங்கிலம் கற்றல்

## Adult Migrant English Program (AMEP)

ஆங்கிலம், ஆஸ்திரேலியாவின் தேசிய மொழி. ஆஸ்திரேலியாவில் மக்கள் பல மொழிகளைப் பேசுகிறார்கள், ஆனால் ஆஸ்திரேலிய வாழ்க்கையில் முற்றாக நீங்கள் இணைந்துகொள்ள நீங்கள் ஆங்கிலத்தைப் பேசவும், விளங்கிக்கொள்ளவும் தெரிந்துகொள்ளவும் வேண்டும். ஆங்கிலம் இல்லாமல், முக்கிய சேவைகளைப் பெற்றுக்கொள்வது அல்லது பிறர் ஆதரவின்றி வாழ்வது கடினமாகும். ஆஸ்திரேலியாவில் நீங்கள் வேலை செய்ய விரும்பினால் ஆங்கிலத் தேர்ச்சியும் மிக அவசியமாகும்.
நீங்கள் ஒர் ஆஸ்திரேலிய பிரஜையாக வர விரும்பினால், எவ்வாறு ஆங்கிலத்தைப் பேசுவது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

தகைமைபெற்ற குடிவரவாளர் மற்றும் மனித நேயத்தில் வந்திருப்பவர்களுக்கு 510 மணித்தியால்ங்கள்வரையான இலவச ஆங்கில வகுப்புக்களை Adult Migrant English Program (AMEP) வழங்குவதற்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் நிதி முதலீடு செய்துள்ளது.

ஒரு நிரந்தர வீசா அல்லது செல்லுபடியான தற்காலிக வீசா உங்களுக்கு வழங்கப்பட்டிருந்தால், சிறியளவு பேசக்கூடியவராக அல்லது முற்றாக ஆங்கிலம் பேசமுடியாதவரானால், நீங்கள்

ஆஸ்திரேலியாவில் குடியேறும் வயதான குடியேற்றவாசி அல்லது மனிதநேயத்தில் வந்திருப்பவரானால் AMEPக்கு ஒருவேளை நீங்கள் தகுதியுடையவராவீர்கள். மேலும் அதிகளவில் அறியத்தரும் ஒரு தகவல் தாள் http://docs.education.gov.au/node/37165 இல் உண்டு.

AMEP வகுப்பில் ஆங்கில மொழித்திறனையும், ஆஸ்திரேலிய சமூகத்தைப்பற்றிய தகவல்களையும் நீங்கள் கற்றுக்கொள்வீர்கள். உங்களைப்போல் அதே பின்புலங்கள், அநுபவங்கள் மற்றும் இலட்சியங்களுடன் புதிதாக வந்த ஏனையோரை நீங்கள் சந்திப்பீர்கள், புதிய நண்பர்களாக்கிக் கொள்வீர்கள்.

ஆஸ்திரேலிய அரசாங்க அங்கீகாரம் பெற்ற சேவை வழங்குவோர் ஊடாக AMEP வழங்கப்படுகிறது. வேற்று மொழி பேசுவோருக்கு ஆங்கிலம் போதிக்கப் பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியர்களால் வகுப்புக்களில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

நீங்கள் இயலக்கூடிய சிறந்த பலன் அடைவதை உறுதிப்படுத்தக்கூடிய, உங்கள் தேவைகளுக்கு நன்கு பொருத்தமான வகுப்பைத் தெரிவுசெய்ய உங்கள் சேவை வழங்குவோர் உங்களுக்கு உதவியளிப்பார். உங்களுக்குப் பொருத்தமான நேரத்திலும், இடத்திலும் நீங்கள் படிக்கக்கூடியதாக வெவ்வேறு நேரங்களிலும் (நாட்கள், மாலை நேரங்கள், வாரஇறுதி நாட்கள்) வெவ்வேறு இடங்களிலும் முழுநேர, பகுதிநேர வகுப்புக்கள் இருக்கின்றன.

உங்களுக்குக் குழந்தைகள் இருந்தால் AMEP child care ஐயும் பாருங்கள்.

### *AMEP க்கான முக்கிய நேரக் கட்டமைப்பு*

AMEP க்கூடாக ஆங்கில மொழி கல்வியைப் பெற்றுக்கொள்ள, ஆஸ்திரேலியாவுக்கு நீங்கள் வந்துசேர்ந்த திகதியிலிருந்து, அல்லது நீங்கள் ஏற்கனவே ஆஸ்திரேலியாவில் இருப்பீர்களானால் உங்கள் வீசா ஆரம்பித்த திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் ஒரு அங்கீகரிக்கப்பட்ட AMEP இல் நீங்கள் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும். ஆஸ்திரேலியாவிற்கு வந்துசேர்ந்து அல்லது உங்கள் வீசா ஆரம்பித்து ஓர் ஆண்டுக்குள் நீங்கள் ஆங்கில வகுப்புக்களை ஆரம்பிக்க வேண்டும்.

AMEP ஊடாக ஆங்கிலம் கற்பதற்கு நீங்கள் வந்துசேர்ந்த திகதியிலிருந்து அல்லது வீசா ஆரம்பித்த திகதியிலிருந்து உங்களுக்கு ஐந்து ஆண்டுகளுண்டு. உங்களுக்கு விஷேட தேவைகள், குறைந்த கல்வி குடிவரவுக்கு முன்னரான அல்லது கடினமான குடியேறுவதற்கு முன்னரான அனுபவங்கள் இருந்தால், மேலதிக பாடங்களுக்கு நீங்கள் தகுதியுடையவராகலாம். மேலதிகத் தகவல்களுக்கு:

| AMEP ஏஎம்ஈபி | தொடர்பு தகவல்கள் |
|---|---|
| தொலைபேசி | 13 38 73 |
| AMEP இணையத்தளம் | www.education.gov.au/amep |
| மின்அஞ்சல் | skilling@education.gov.au |
| ஆங்கிலம் தவிர்ந்த மொழிகளில் தகவல்கள் | www.education.gov.au/amep-information-other-languages |
| எங்கே நான் ஆங்கிலம் படிக்கலாம்? வழங்குபவர்கள் மற்றும் படிக்கும் நிலையங்கள் AMEP கணனியில் நேரடியாக | www.education.gov.au/adult-migrant-english-program-service-providers |
| AMEP ஒன்லைன் | http://amepdl.net.au |

AMEP ஐ முடித்தபின்னர் உங்கள் மேற்படிப்புக்குத் திட்டமிட உங்கள் சேவை வழங்குபவர் உங்களுக்கு உதவலாம்.

## Skills for Education and Employment (SEE)

நீங்கள் வேலை தேடுகிறீர்களானால், Skills for Education and Employment (SEE) இந்தத் திட்டம் உதவலாம். இலவச மொழி, எழுத்தறிவு, மற்றும் எண்ணறிவுப் பயிற்சி மற்றும் தொழிற் பயிற்சியை 800 மணித்தியாலங்கள் வரையில், படிப்பறிவு அல்லது குறைவான ஆங்கில மொழித்தேர்ச்சி காரணமாக வேலை தேடச் சிரமப்படும் வேலை செய்யும் வயதடைந்த வேலை தேடுவோருக்குப் SEE பெற்றுக்கொடுக்கிறது. இரண்டு ஆண்டுகள் வரை இந்தத்திட்டம் உங்களுக்கு உதவும்.

ஊக்கத்துடன் வேலை தேடிக்கொண்டிருப்போர் மற்றும் வருமான ஆதரவுக் கொடுப்பனவு அல்லது உதவித்தொகையைப் பெறும் தகுதியுடையோர் SEE க்கும் தகுதியுடையவராவர். Adult Migrant English Program (AMEP) ஐப் பூர்த்திசெய்த பின்னர் அல்லது AMEP க்குத் தகுதி பெறாத சிலர் SEE ஐ அணுகுகிறார்கள்.

மேலதிக தகவல்களுக்காக, Centrelink ஐ அழையுங்கள் அல்லது போய்ப்பாருங்கள், வேலைவாய்ப்புச் சேவை வழங்குனருடன் உரையாடுங்கள் அல்லது www.education.gov.au/skills-education-and-employment இல் SEE இணையப் பக்கத்திற்குப் போகவும்.

*அத்தியாயம் 5, வேலைவாய்ப்பையும்* பாருங்கள்.

# 4 கல்வியும், பயிற்சியும்

## இந்தப் பகுதியில்


- குழந்தைப் பராமரிப்பு
- விளையாட்டுக் குழுக்கள்
- பாடசாலையும் முன்பள்ளியும்
- தொழிற்கல்வியும் பயிற்சியும்
- National Training Complaints Hotline
- பல்கலைக் கழகங்கள்
- கல்வி அல்லது பயிற்சி நோக்கங்களுக்காகத் தகைமைகள் மற்றும் திறன்களின் அங்கீகாரம்
- மாணவர் உதவிப் பணம்
- மாணவர் சலுகை அட்டைகள்
- சமுதாயக் குறுகிய பாடநெறிகள்


ஆங்கிலம் கற்பதில் தகவல்கள் தேவைப்பட்டால், பார்க்கவும்: அத்தியாயம் 3, *ஆங்கில மொழி*.

## குழந்தைப் பராமரிப்பு

உங்களுக்கு வேலை, படிப்பு, அல்லது வேறு கடப்பாடுகள் இருந்தால், பொருத்தமான, இன்னொருவருடைய பராமரிப்பில்- அதாவது குழந்தைப் பராமரிப்பு - உங்கள் குழந்தையை விடவேண்டிவரலாம். சரியான குழந்தைப்பராமரிப்பு மற்றும் ஆரம்பக் கல்விச் சேவையைத் தெரிவுசெய்தல் குடும்பங்களுக்குரிய ஒரு கடினமான தீர்மானமாகும். இது, உங்களுடைய குடும்பத்தின் தேவைகளையும், நீங்களும், உங்கள் குழந்தையும் மிகவும் சௌகரியமாக உணரக்கூடிய சூழலையும் பொறுத்ததாகும். குழந்தைப் பராமரிப்பு வழங்குவோர் எல்லோரும் கட்டாயமாகத் தகைமையுடையவராக அல்லது அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகைமை மற்றும் பராமரிப்பைப் பெற உழைப்பவர்களாக இருக்கவேண்டும்.

புதிதாக வந்துசேர்ந்த குழந்தைகள் மற்றும் பெற்றோருக்குக் குழந்தைப் பராமரிப்புப் பல நன்மைகளை வழங்குகிறது. இந்தச் சேவைகளைப் பல ஆஸ்திரேலியக் குடும்பங்கள் பாவிக்கின்றன.

சமூக, உணர்வுபூர்வ மற்றும் கற்கும் ஆற்றல்களை மேம்படுத்த, குழந்தைப் பராமரிப்பு மற்றும் ஆரம்பக் கல்வி சிறுவர்களுக்கு உதவுகிறது. வேறுபட்ட பின்புலங்களுடன் கூடிய சிறுவர்கள் ஆங்கிலத்தைக் கற்று, தமது புதிய சுற்றாடலுக்குப் பழக்கப்பட்டவர்களாக வருவார்கள். உயர்தர குழந்தைப்பருவ ஆரம்பகல்வி மற்றும் குழந்தைப் பராமரிப்பு திட்டங்கள் ஒரு குழந்தையின் முற்றுமுழுதான அபிவிருத்தி, கல்வி மற்றும் பிற்காலத்தில் தொழிற் பலாபலன்களை மேலோங்கச் செய்யும்.

குழந்தைப் பராமரிப்பு வைத்திருத்தல் என்பதன் அர்த்தம் நீங்கள் பயிற்சிக்குப் போகலாம், படிக்க அல்லது வேலைக்குப் போகலாம், அதுதான் உங்கள் குடும்பத்திற்குப் பக்கபலமாக இருக்கப்போவதுடன் குடியேற்றம் வெற்றிகரமாவதற்கான சந்தர்ப்பத்தையும் அதிகரிக்கும். பல்வேறுபட்ட குழந்தைப் பராமரிப்புச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம். ஆரம்பப்பள்ளி வயதையடைந்த சிறுவர்களுக்கான இந்தச் சேவைகள், நீண்ட நாள் கவனிப்பு, குடும்பநாள் கவனிப்பு, எப்போதாவது கவனிப்பு அத்துடன் வீட்டுக்கு வந்து கவனித்தல் அதைப்போல் விடுமுறைகாலக் கவனிப்பு மற்றும் பாடசாலை நேரத்திற்கப்பாற்பட்ட கவனிப்புகளை உள்ளடக்கும்.

- நீண்ட நாள் கவனிப்பு (Long Day Care) என்பது சிலவேளைகளில் நிலையத்தை அடிப்படையாகக் கொண்ட கவனிப்பைக் குறிப்பிடுகிறது. இது பொதுவாகக் குழந்தைப் பராமரிப்பு நிலையம் போலப் பாவிப்பதற்காக விசேடமாக உருவாக்கப்பட்ட ஒரு கட்டிடத்திலோ அல்லது ஒரு கட்டடத்தின் ஒரு பகுதியிலோ வழங்கப்படுகிறது.
- ஒரு பதிவுசெய்யப்பட்ட பயிற்றுவிப்பாளர் தமது வீட்டில் ஏனைய ஆட்களின் பிள்ளைகளுக்குப் பராமரிப்பை வழங்குவது குடும்ப நாள் கவனிப்பாகும் (Family day care).
- ஒழுங்கான முறையில் குழந்தைப் பராமரிப்புத் (Occasional care) தேவைப்படாத குடும்பங்களுக்குத் தற்காலிகப் பராமரிப்புப் பொருத்தமானதாகும்.
- குழந்தைப் பராமரிப்புக்கான இசைந்து கொடுக்கக்கூடிய ஒரு முறை (In-home care), வீட்டுப்பராமரிப்பாகும். ஒரு அங்கீகரிக்கப்பட்ட பேணிப் பயிற்றுவிப்பாளர் ஒருவர் குழந்தையின் வீட்டிலே பராமரிப்பை வழங்குகிறார். குறிப்பிடக்கூடிய சூழ் நிலையில் உள்ள பிள்ளைகளுக்கு மட்டுமே இது கிடைக்கும்.
- பிள்ளைகளைப் பாடசாலைக்குத் தயார்படுத்துகின்ற குழந்தைப் பராமரிப்பு நிலையத்திலேயே முன்பள்ளி அல்லது பாலர் பாடசாலைத் திட்டங்களுக்கும் பிள்ளைகள் சமூகமளிக்கலாம். White Pages தகவல் சுவடியில் இவை பட்டியலிடப்பட்டுள்ளன.

தொலைபேசி 1800 670 305 இல் National Child Care Access Hotline ஐ அழையுங்கள் அல்லது MyChild இணையத்தளம் www.mychild.gov.au இல் பின்வருவன பற்றிக் காணவும்:

- உங்கள் பிரதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட குழந்தைப் பராமரிப்பாளர் சேவைகள்
- கிடைக்கக்கூடிய குழந்தைப் பராமரிப்பு வகைகளும் ஏற்படக்கூடிய வெற்றிடங்களும்
- அங்கீகரிக்கப்பட்ட குழந்தைப்பராமரிப்புச் செலவுடனான அரசாங்க உதவி
- விசேட வசதிகள் தேவைப்படும் சிறுவர்களுக்கான சேவைகள்
- பல்வேறு கலாச்சாரப்பின்னணிகளிலிருந்து வரும் சிறுவர்களுக்கான சேவைகள்

| தேசிய குழந்தைப் பராமரிப்புத் தகவல்கள் | இணையத்தளம் |
| --- | --- |
| உங்களுக்கு அண்மையில் உள்ள குழந்தை பராமரிப்பு நிலையத்தைக் கண்டறியுங்கள் | www.mychild.gov.au |

| தேசிய குழந்தைப் பராமரிப்புத் தகவல்கள் | இணையத்தளம் |
| --- | --- |
| உங்களுக்கு அருகாமையில் உள்ள குழந்தைப் பராமரிப்பு | www.humanservices.gov.au/childcare |
| மாற்றங்களுக்கு அரச உதவி | www.education.gov.au/jobsforfamilies |
| Department of Education and Training, ஆரம்ப குழந்தைப்பருவ மற்றும் பிள்ளைப் பராமரிப்பு | www.education.gov.au/early-childhood-and-child-care |
| உங்கள் குடும்பத்திற்குப் பொருத்தமான குழந்தையப் பாராமரிப்பு | http://docs.education.gov.au/node/29716 |

## AMEP குழந்தைப் பராமரிப்பு

பெற்றோர் AMEP வகுப்பிற்குச் சமூகமளிக்கும் வேளையில் மட்டும் பாடசாலை வயதிற்குக் குறைந்த வயதுடைய சிறுவர்களுக்கான குழந்தைப்பராமரிப்பை Adult Migrant English Program (AMEP) வழங்குகிறது. ஏனைய திட்டங்கள் இந்தச் செலவை ஏற்காதபடியால், நீங்கள் AMEP ஐ பூர்த்திசெய்த பின்னர் உங்கள் குழந்தைப் பராமரிப்புக்கான ஏற்பாடுகளை மீளாய்வு செய்யவேண்டும்.

## குழந்தைப்பராமரிப்பில் வேலைசெய்தல்

குழந்தைகள் சாத்தியப்படக்கூடிய சிறந்த பராமரிப்பைப் பெறுவதனை உறுதிப்படுத்த ஆஸ்திரேலியாவில் குழந்தைப் பராமரிப்பு நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. குழந்தைப்பராமரிப்புக்கு, ஆஸ்திரேலிய மத்திய அரசாங்கம், மாநில மற்றும் பிரதேச அரசாங்கங்கள் கூட்டாகப் பொறுப்பாகும்.

குழந்தைப் பராமரிப்பு சேவை நிலையங்களும், அங்கு கடைமையாற்றும் பயிற்றுவிப்பாளர்களும், குழந்தையின் கல்வி, பாதுகாப்பு, நல்வாழ்வு அத்துடன் குழந்தைப் பராமரிப்புக் கொடுப்பனவுகள் போன்றவை தொடர்பான பல்வேறு சட்ட திட்டங்களுக்குக் கட்டாயமாகக் கட்டுப்பட வேண்டும்.

வழமையான குழந்தைப்பராமரிப்பு செயற்பாடுகளில் உங்களைப் பங்குகொள்ளக் கேட்டால், இவற்றைப்பற்றியும், ஏனைய கடப்பாடுகளைப் பற்றியும் தெரிந்து கொள்ளுங்கள். அத்துடன் Technical and Further Education (TAFE) நிலையங்கள் போன்ற Registered Training Organisation நிறுவனங்களூடாக ஒரு Certificate III in Children's Services ஐ ஒத்த கல்வி மற்றும் பராமரிப்பில் அங்கீகரிக்கப்பட்ட தகைமையையும் கொண்டிருக்கவேண்டும் அல்லது அதற்கான அலுவல்களைச் செய்துகொண்டிருக்க வேண்டும்.

நீங்கள் Centrelink மற்றும் Australian Taxation Office க்கு உங்கள் வருமானத்தைக் கட்டாயம் வெளியிட வேண்டும். வழமையான எல்லாவித குழந்தைப் பராமரிப்புக்கும் இந்த கோரிக்கைகள் பொருந்தும்.

தமது கடப்பாடுகளுக்குப் பணியாத குழந்தைப் பராமரிப்புச் சேவைகள் மற்றும் பேணிப் பயிற்றுவிப்பவர்களுக்குப் பணரீதியான அபராதத்திலிருந்து குற்றமுறையான விசாரணை மற்றும் வழக்குத்தொடரல் வரை பாரதூரமான தண்டனைகளுண்டு.

ஒரு குழந்தைப் பராமரிப்புப் பயிற்றுவிப்பாளர் பற்றிய மேலதிக தகவலைப்பெற, மாநில அல்லது பிரதேச அரசாங்க கல்வித் திணைக்கள இணையத்தளத்துகு விஜயம் செய்யுங்கள்.

## விளையாட்டுக் குழுக்கள்

ஓய்வான ஒரு சுற்றாடலில் அம்மாக்கள், அப்பாக்கள், பாட்டன் பாட்டிகள், பராமரிப்பாளர்கள், சிறுவர்கள் மற்றும் குழந்தைகள் சந்திக்கும் ஒரு சம்பிரதாயமற்ற ஒரு கூட்டம்தான் விளையாட்டுக் குழு எனப்படும்.

ஏனைய சிறுவர்களுடன் சேர்ந்து புதிய அனுபவங்கள் மற்றும் தொடர்பாடலில் தாமும் பங்குபற்றுவதன் மூலம் சிறுவர்களின் படிப்பிலும், அபிவிருத்தியிலும் விளையாட்டுக் குழுக்கள் உதவலாம். குடும்பத்திலிருந்து தனிமைப்படுத்தப்படல் விளையாட்டுக் குழுக்களில் பங்குபற்றுவதன் மூலம் குறைகிறது. ஏனெனில், உள்ளூர் சமூகத்துடன் இணைந்து கொள்ள ஒழுங்கான சமூகச் செயற்பாடுகளையும், வாய்ப்புக்களையும் விளையாட்டுக் குழுக்கள் வழங்குகின்றன.

பல்வேறு இடங்களில் விளையாட்டுக் குழுக்கள் சந்திக்கின்றன அத்துடன் பெற் ரோராலும், பராமரிப்போராலும் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. வழக்கமாக, நீங்கள் இணைந்துகொள்வதற்கு முன்னர் இலவசமாகப் போய்ப் பார்க்கலாம். ஒவ்வொரு தனிப்பட்ட விளையாட்டுக் குழுக்களையும் பொறுத்து அடுத்தடுத்த வருகையின்போது சிற்றுண்டி அல்லது ஓவியம் வரைதலுக்கான உபகரணச் செலவுகளைச் செலுத்த ஒரு சிறிதளவு கட்டணம் அறவிடப்படக் கூடும்.

Playgroup Australia வை 1800 171 882 இல் தொடர்பு கொள்ளவும் அல்லது ஒரு விளையாட்டுக்குழுவைக் கண்டறிய www.playgroupaustralia.com.au/ க்கு விஜயம் செய்யுங்கள்.

## பாடசாலையும் முன்பள்ளியும்

பாடசாலைக்கு முந்திய ஆண்டில் எல்லாச் சிறுவர்களுக்கும் ஆரம்பப் பள்ளி அல்லது பாலர் பாடசாலை கிடைக்கும். சிறுவர்கள் பாடசாலைக்குப் போக முன்னர் உடல், உள்ளம் மற்றும் சமூக ரீதியாக அபிவிருத்தியடைய ஆரம்பப் பள்ளி உதவுகிறது.

சிறுவர்கள் ஐந்து வயதிலிருந்து ஆண்டு 10 ஐ அவர்கள் முடிக்கும் வரை கட்டாயமாகப் பாடசாலைக்குச் சமூகமளிக்கவேண்டும். ஆண்டு 10 க்குப் பின்னர், 17 வயதுவரை அவர்கள் முழுநேரக் கல்வி, பயிற்சி அல்லது தொழில் அல்லது இந்தச் செய்ற்பாடுகள் கலந்த ஒன்றில் கட்டாயமாகப் பங்குகொள்ள வேண்டும்.

பொதுவாக, சிறுவர்கள் 12 அல்லது 13 வயது வரை ஆரம்பப் பாடசாலைக்கும், பின்னர் 17 அல்லது 18 வயது வரை உயர் பாடசாலை (அல்லது 'இரண்டாந்தரப் பாடசாலை) க்கும் சமூகமளிக்கிறார்கள். இறுதிஆண்டு உயர் பாடசாலை பரீட்சைக்குத் தயார்படுத்தும் 11ம் 12ம் ஆண்டு மாணவர்களுக்காக மாத்திரம் சில கல்லூரிகள் (உயர்நிலை இரண்டாந்தரப் பாடசாலைகள்) இருக்கின்றன.

நீங்கள் உங்கள் பிள்ளைகளை ஒரு அரசாங்க அல்லது அரச சார்பற்ற பாடசாலைக்கு அனுப்பலாம். White Pages இல் பாடசாலைகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

அரச பாடசாலைகள் இலவசக் கல்வியை வழங்குகின்றன. எவ்வாறாயினும், கல்விக்காவும், விளையாட்டு நிகழ்வுகளுக்காகவும் ஒரு சிறிய ஆண்டுக்கட்டணத்தை அநேகமான பாடசாலைகள் வேண்டுகின்றன. பென்சில், பேனா, பாடப்புத்தகங்கள் மற்றும் பாடசாலைச் சீருடைகள் அடங்கலாக மேலதிக பொருட்களைப் பெற்றார் வழங்க வேண்டி ஏற்படலாம்.

தற்காலிக வீசாவை வைத்திருக்கும் மாணவர்கள் முழுப் பாடசாலைக் கட்டணத்தையும் செலுத்துமாறு கேட்கப்படலாம்- பாடசாலையுடன் சரிபார்க்கவும்.

அரச சார்பற்ற பாடசாலைகள் கட்டணம் அறவிடுகின்றன, அத்துடன் அவைகள் ஒரு மத ஈடுபாடு அல்லது ஒரு குறிப்பிட்ட கல்விக்கொள்கையைக் கொண்டவைகளாக இருக்கலாம். தனியார் கல்வியைப் பற்றி அறிந்துகொள்ளத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைத் தகவல் புத்தகத்தைப் பாருங்கள் அல்லது அரச சார்பற்ற கல்வி அதிகாரியைச் சந்திப்பதற்கான ஒரு முன்பதிவைச் செய்யுங்கள்.

பாடசாலைக்கு முன்னரான அல்லது பின்னரான பராமரிப்பு அல்லது பாடசாலை விடுமுறையின்போது பராமரிப்பு உங்களுக்குத் தேவையானால், பாடசாலையைக் கேட்கவும்.

## ஆட்சேர்ப்பு

குழந்தையை ஒரு பாடசாலையில் சேர்ப்பதற்கு, தொலைபேசியில் பேசவும் அல்லது பாடசாலைக்குப் போகவும். உங்களது வீசா அல்லது ஆஸ்திரேலிய நுழைவு ஆவணங்கள், உங்கள் பிள்ளையின் பிறந்த தேதிக்குரிய ஆதாரம், பாடசாலை அறிக்கை உட்பட, அவர்களின் முன்னைய கல்வி தொடர்பான ஏதாவது ஆவணங்களை நீங்கள் எடுத்துச் செல்ல வேண்டும். தடுப்பூசி போட்ட ஆவணங்களையும் நீங்கள் காண்பிக்க வேண்டும்.
பாருங்கள்: அத்தியாயம் 9, *சுகாதாரமும், நல்வாழ்வும்*.

பாடசாலையைத் தெரிவுசெய்வது ஒரு கடினமான தீர்மானமாகும். www.myschool.edu.au/ இல் 'MySchool' இணையத்தளத்திலிருந்து நீங்கள் உள்ளூர் பாடசாலைகள் பற்றி அதிகளவில் அறிந்து கொள்ளலாம்.

## ஆங்கிலம் பேசாத பாடசாலைச் சிறுவர்கள்

ஆஸ்திரேலியவுக்குள் ஆங்கிலம் படிக்க ஆதரவளிக்கும் சேவைகள் வேறுபடுகின்றன. மேலதிக தகவல்களுக்கு, உங்கள் மாநில அல்லது பிரதேசக் கல்வி அதிகாரி அல்லது உங்கள் குழந்தையின் பாடசாலையைத் தொடர்பு கொள்ளவும்.

| மாநிலம் அல்லது பிரதேசம் | தகவல்கள் | இணையத்தளம் |
|---|---|---|
| ACT | Education and Training Directorate | www.det.act.gov.au/teaching_and_learning/english-as-an-additional-language-or-dialect |
| NSW | Department of Education | www.schools.nsw.edu.au/gotoschool/a-z/esl.php |
| NT | Department of Education | https://nt.gov.au/learning/international-students-and-migrants/english-as-a-second-language-students |
| Qld | Department of Education and Training | http://education.qld.gov.au/schools/about/support.html |
| SA | Department for Education and Child Development | www.sa.gov.au/topics/education-skills-and-learning/schools/curriculum-and-learning/student-support-programs/english-as-a-second-language |
| Tas. | Multicultural Access Point | www.multicultural.tas.gov.au/education_and_english |
| Vic. | Department of Education and Training | www.education.vic.gov.au/school/teachers/teachingresources/diversity/eal/Pages/ealnewstudent.aspx |
| WA | Department of Education | http://det.wa.edu.au/curriculumsupport/eald/detcms/navigation/program-information/eal-d-school-programs/ |

## பாடசாலையில் உரைபெயர்ப்பாளர்கள்

குறைந்தளவு அல்லது முற்றாக ஆங்கில அறிவில்லாத பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர் தமது பிள்ளைகள் சம்பந்தப்பட்ட விடயங்களைப் பாடசாலையில் கலந்துரையாடும்போது, ஓர் உரைபெயர்ப்பாளரைத் தம்முடன் வைத்திருக்கலாம். பாடசாலையைச் சந்திக்க முதல், 131 450 இல் TIS National ஐத் தொடர்புகொள்ளவும் (24 மணித்தியாலங்கள், வாரத்தில் ஏழு நாட்கள்) அல்லது www.tisnational.gov.au க்குப் போய்ப்பார்க்கவும்.

## தொழிற்கல்வியும் பயிற்சியும்

ஒரு குறிப்பான வேலைக்காகத் தொழில்நுட்ப அல்லது வியாபாரத் திறமைகள் தேவைப்படுபவர்களுக்காக Vocational Education and Training (VET) இருக்கிறது. தகவல் தொழில்நுட்பம், வியாபார சேவைகள், கலை மற்றும் ஊடகம், சுற்றுலா மற்றும் உபசரிப்பு, பிள்ளைப் பராமரிப்பு, போக்குவரத்து மற்றும் திட்டமிடல் , கட்டுமானம், சுரங்கத்தொழில், உற்பத்தி, கிராமியக் கைத்தொழில் போன்ற பகுதிகளில் பலவித தொழில் பயிற்சி பாடநெறிகள் உண்டு.

VET கல்வியை ஆரம்பிக்கமுன்னர், நீங்கள் செய்ய விரும்பும் கற்கை நெறியை ஆராய்ந்து ஆஸ்திரேலியாவில் தற்சமயம் வேலைக்குத் தேவைப்படும் திறமைகள் என்னவெனப் பார்ப்பது அவசியம். www.myskills.gov.au இல் MySkills இணையத் தளம் இந்த ஆராய்ச்சிக்கு உதவுவதற்கான தகவல்களைத் தருகிறது.

ஆஸ்திரேலியாவில் VET கற்கை நெறிகளைப் போதிக்கும் பயிற்சி நிறுவனங்கள் பற்றிய தகவல்களை MySkills இணையத்தளம் வழங்குகிறது. Technical and Further Education (TAFE) நிறுவனம், Adult and Community Education (ACE) ஸ்தாபனங்கள், மற்றும் Private Registered Training Organisations (RTOs) இவற்றுள் அடங்கும்.

பாடசாலையில் இரண்டாந்தரப் பாடசாலை மாணவர்கள் தமது இறுதியாண்டில் VET பாட நெறிகளை எடுக்கக் கூடும். VET கற்கை நெறிக்கான கட்டணங்கள் அறவிடப்படுகின்றன அத்துடன் சில பாட நெறிகளில் தகைமையடைய, மாணவர்கள் தமக்குரிய புத்தகங்கள், பொருட்கள் அல்லது உபகரணங்களை வாங்க வேண்டும். சில கற்கை நெறிகளுக்குத் தகுதிபெற மாணவர்கள் இரண்டாந்தரப் பாடசாலையைக் கட்டாயம் முடிக்க வேண்டும்.

டிப்புளோமா தரத்தில் சேர்க்கப்படும் தகுதியுடைய மாணவர்களுக்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் VET FEE-HELP கடன் திட்டத்தை வழங்குகிறது. VET FEE-HELP மாணவர்களுக்கு நிதிஉதவி அளிப்பதால் தமது கட்டணத்தை முன்கூட்டியே செலுத்த வேண்டியதில்லை. VET FEE-HELP கடனைப் பெறும் மாணவர்கள் தமது வருமானம் ஆகக்குறைந்த திருப்பிச் செலுத்தவேண்டிய தொடக்கநிலையை அடைந்ததும் வரித்திட்டத்தினூடாகக் கட்டாயம் திருப்பிச் செலுத்த வேண்டும். இந்தக் கடனுக்கு விண்ணப்பிக்கும்போது, கையெழுத்திடமுன்னர் எல்லாக் கடப்பாடுகளையும் தெரிந்திருப்பது உங்கள் பொறுப்பாகும். VET FEE-HELP பற்றிய மேலதிக தகவல்களைப் பெறப் போகவும்: http://studyassist.gov.au/sites/studyassist/helppayingmyfees

| பிராந்தியம் | VET தகவல்கள் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| National | My Skills Training Directory | | www.myskills.gov.au |
| ACT | Skilled Capital | 02 6205 8555 | www.skills.act.gov.au/?q=skills-training-act |
| NSW | Smart and Skilled | 1300 772 104 | www.smartandskilled.nsw.gov.au |

| பிராந்தியம் | VET தகவல்கள் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| NT | Northern Territory Training Entitlement | | https://nt.gov.au/learning/adult-education-and-training/vocational-education-and-training-VET |
| | Department of Business | 08 8999 5511 | http://www.vet.nt.gov.au/ |
| Qld | Skills Gateway | 1300 369 935 | www.skillsgateway.training.qld.gov.au |
| SA | Work Ready | 1800 506 266 | www.skills.sa.gov.au/training-learning |
| Tas. | Skills Tasmania | | http://www.skills.tas.gov.au/learners |
| Vic. | Victorian Training Guarantee | 13 1823 | www.education.vic.gov.au/training/learners/vet/pages/funding.aspx |
| WA | Future Skills | 08 6551 5000 | www.futureskillswa.wa.gov.au/studentsparents/Pages/default.aspx |

தகைமைகள், திறமைகளின் அங்கீகாரம் பற்றிய தகவல்களுக்கு, பாருங்கள்:
*அத்தியாயம் 5 வேலைவாய்ப்பு*

## National Training Complaints Hotline

National Training Complaints Hotline நுகர்வோர், தொழிற்கல்வி அல்லது பயிற்சி சம்பந்தமான முறைப்பாடுகளைப் பதிவுசெய்வதற்கான ஒரு தேசிய சேவையாகும். அவர்களது முறைப்பாடுகளுக்கு உதவுவதற்காக நுகர்வோரை இந்தச்சேவை பொருத்தமான முகவர்/அதிகாரி/விசாரணை வரையறைகளுக்குப் பரிந்துரை செய்யும்.

ஆஸ்திரேலிய மாநில, பிரதேச அரசாங்கங்கள் அடங்கலாகப் பல்வேறுபட்ட நிறுவனங்களின் ஈடுபாட்டுடனான தொழிற்கல்வி மற்றும் பயிற்சிப்பகுதி சிக்கலானதாகும். முறைப்பாடுகளை அறிவிக்க ஒரு சீராக்கப்பட்ட, இலகுவான வழியைப்பெற நுகர்வோர் தகுதியுடையவராவர் Hotline முறைப்பாடுகளை விசாரிப்பதில்லை ஆனால் முறைப்பாடுகளை ஆலோசிப்பதற்காக மிகவும் பொருத்தமான முகவர், அதிகாரி அல்லது நியாயாதிக்கமுடையவரிடம் முன்வைக்கப்படும். Hotline பற்றிய மேலதிகத் தகவல்களை www.education.gov.au/NTCH இல் பெற்றுக்கொள்ளலாம்.

நாடுமுழுவதும் திங்கள் தொடக்கம் வெள்ளிவரை, காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை Hotline இயங்குகிறது. தொலைபேசி இலக்கம் 13 38 73 ஆகும். எழுத்துமூலமான முறைப்பாடுகள் skilling@education.gov.au க்கு மின்அஞ்சல் செய்யப்படலாம். உங்களது தொடர்புத் தகவல்கள் அடங்கலாக சாத்தியப்படக்கூடிய அதிகளவு தகவல்களை உள்ளடக்கவும், இதன் பயனாக, உங்களது முறைப்பாடு முற்றாக ஆலோசிக்கப்படலாம்.

உரைபெயர்ப்பாளர் சேவையை 131 450 ஐ அழைத்து TIS National ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம். கேளுங்கள் National Training Complaints Hotline.

## பல்கலைக் கழகங்கள்

உலகத்தில் மிகச் சிறந்த பல்கலைக்கழகங்களுள் ஆஸ்திரேலிய பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. இளமானிப் பட்டப்படிப்புக் கற்கைநெறி முடிவடைய மூன்று ஆண்டுகள் செல்லும் ஆனால், இரட்டைப் பட்டப்படிப்பு மற்றும் பட்டப் பின்-படிப்புக்களுமுண்டு, இவை நீண்ட நாள் எடுக்கும். சில கற்கை நெறிகள் தொலைக்கல்வி (ஒன்லைன்) மற்றும் பகுதிநேரத் தெரிவுகளைக் கொண்டிருக்கும். குறுகிய தொழில் விருத்திப் பாடநெறிகளும் பல்கலைக் கழகங்களால் வழங்கப்படலாம்.

ஆஸ்திரேலிய கல்விமுறைபற்றி அறிந்துகொள்ள:

- ஆஸ்திரேலியாவுக்குக் குடியேற அல்லது ஆஸ்திரேலியாவில் கல்வி பயில நீங்கள் கருதினால், பாருங்கள்: www.studyinaustralia.gov.au
- நீங்கள் ஒர் உள்நாட்டு மாணவர் அல்லது மனிதநேய வீசா வைத்திருப்பின் பார்க்கவும்: அக இருந்தால் போய்ப்பாருங்கள் www.studyassist.gov.au

நீங்கள் ஆஸ்திரேலிய உயர்கல்வி, நிறுவனங்கள் மற்றும் கல்வித்துறைகளை ஒப்பிட்டுப் பார்க்க விரும்பினால், www.qilt.edu.au இல் அவ்வாறு செய்யலாம்.

நுழைவதற்கான தகைமைகள், அனுமதிகள் மற்றும் கற்கை நெறிகள் பற்றிய தகவல்களுக்கு நீங்கள் விரும்பும் பல்கலைக்கழகம் அல்லது உங்கள் மாநிலம் அல்லது பிரதேசத்திலுள்ள பல்கலைக்கழக அனுமதிகள் நிலையத்துடன் (http://studyassist.gov.au/sites/studyassist/mytertiarystudyoptions/courses_quals/pages/enrolling-in-a-course இல்) நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டும்.

குறைந்த ஆங்கிலஅறிவுள்ள மாணவர்கள் தங்களது கற்கை நெறிக்குத் தேவைப்படும் ஆங்கில அறிவின் தரத்தைத் தமது பல்கலைக் கழகத்துடன் தொடர்பு கொண்டு விசாரிக்க வேண்டும். இங்கே கல்வியை மேற்கொள்ள உங்களது ஆங்கிலம் போதியது என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள பல்கலைக்கழகத்துக்குப் புகுவதற்கு முன்னர் ஆங்கில மொழித் திட்டத்தில் நீங்கள் சேர்ந்துகொள்ள வேண்டி வரலாம்.

பல்கலைக்கழகத்தையும், பாடநெறியையும் பொறுத்து பல்கலைக்கழகப் பாடநெறிச் செலவுகள் வேறுபடும். நீங்கள் சேர்ந்துகொள்ள முன்னர், பாட நெறிக்கான செலவு மொத்தமாக எவ்வளவாகலாம், எவ்வாறு நீங்கள் அதைச் செலுத்துவீர்கள் அத்துடன் புத்தகங்கள், தங்குமிடவசதி மற்றும் பொது வாழ்க்கைச் செலவுகளை எவ்வாறு நீங்கள் செலுத்துவீர்களென்பதை நீங்கள் ஆலோசித்துப் பார்க்க வேண்டும்.

பல்கலைக்கழகங்களில் உள்ளூர் மாணவர்களின் கல்விக்கு உதவத் தகுதியுடைய மாணவர்களுக்கு அரசாங்கம் பல்கலைக்கழக இடங்களுக்கு ஊக்குவிப்பதுடன் Higher Education

Loan Program (HELP) ஊடாக நிதியுதவியுமளிக்கிறது. தகுதிபெற்றால், நேரடியாக நீங்கள் படிப்பதற்கான செலவைச் செலுத்தவேண்டியதில்லை ஆனால் உங்களது வருமானம் ஆகக்குறைந்த திருப்பிச் செலுத்தும் படிநிலையை அடைந்ததும் HELP கடனை வரி முறை ஊடாகச் செலுத்தலாம். இந்தப் படிநிலைகள் ஆண்டுதோறும் குறியீடு செய்யப்படுகிறது அத்துடன் இவற்றை StudyAssist (www.studyassist.gov.au) இல் காணலாம்.

### சர்வதேச மாணவர் உதவி

நீங்கள் ஆஸ்திரேலியாவில் படித்துக்கொண்டிருக்கும்போது உங்களுக்கான உதவிக்காக நீங்கள் முதலில் சந்திக்கவேண்டிய இடம் கல்வி மற்றும் பயிற்சி நிலையம் ஆகும். *சர்வதேச மாணவர்களுக்குரிய குடியேற்றத் தகவல்களை* www.studyinaustralia.gov.au/global/live-in-australia இலும் இந்தத் தளங்களிலும் நீங்கள் காணலாம்:

| சர்வதேச மாணவர்களுக்கான தகவல்கள் | இணையத்தளம் |
|---|---|
| Department of Education and Training | www.internationaleducation.gov.au/ |
| Future Unlimited | www.studyinaustralia.gov.au/ |
| Immigration information | www.border.gov.au/Trav/Stud |

## கல்வி அல்லது பயிற்சி நோக்கங்களுக்காகத் தகைமைகள் மற்றும் திறன்களின் அங்கீகாரம்

ஆஸ்திரேலியாவில் நீங்கள் படிப்பை அல்லது பயிற்சியைப் பெற விரும்பினால் முதலில் ஒரு பயிற்சி அளிப்பவர், பல்கலைக்கழகம், அல்லது திறமைகளை மதிப்பிடும் அதிகாரியினால் உங்கள் தகைமைகள் அல்லது வெளிநாட்டு வேலை அனுபவத்தை, சம்பிரதாயப்படி அங்கீகாரம் செய்விப்பது உதவியாகலாம். இது கற்கை நெறிக்கு அனுமதிப்பதற்கான தகைமைகள், அல்லது பயிற்சிக்குத் தேவையான காலத்தைக் குறைக்க உதவலாம். தராதரங்கள், திறமைகளின் அங்கீகாரம் பற்றிய தகவல்களுக்குப் பாருங்கள்: *அத்தியாயம் 5, வேலைவாய்ப்பு*

### மாணவர் உதவிப் பணம்

அங்கீகரிக்கப்பட்ட கல்வியை மேற்கொள்பவர்களும், ஒரு குறிப்பிட்ட மட்டத்திற்குள்ளே வருமானம் மற்றும் சொத்துக்களை வைத்திருப்பவர்களுமாகிய ஆஸ்திரேலிய வதிவாளர்களுக்கு (16 -24 வயதுடையவர்களுக்கு) Youth Allowance மற்றும் (25 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோருக்கு) Austudy நிதி உதவி வழங்கப்படுகிறது. அநேகமாக, புதிதாக வந்துசேர்ந்த வதிவாளர்களுக்கு ஒரு காத்திருக்க வேண்டிய காலம் பிரயோகிக்கப்படுகிறது. அகதிகளும், மனிதநேய வருகையாளர்களுக்கும் இந்தக் காத்திருக்கும் காலம் விலக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களுக்கு www.humanservices.gov.au/customer/subjects/payments-students-and-trainees இல் Centrelink ஐத் தொடர்பு கொள்ளவும்.

[அத்தியாயம் 10. *உங்கள் குடும்பம்*] இதையும் பார்க்கவும்.

## மாணவர் சலுகை அட்டைகள்

சில மாநிலங்கள், பிரதேசங்களில் பாடசாலை மற்றும் உயர்கல்வி மாணவர்கள் உதாரணமாக பொதுப் போக்குவரத்துக்கு சேவைகளுக்கான கட்டணத்தைச் செலுத்த மாணவர் அட்டைகள் தள்ளுபடிக்கு அவர்களைத் தகைமை பெறச்செய்கிறது. ஒரு மாணவர் அட்டை பெறுவது குறித்து உங்கள் பாடசாலை அல்லது நிறுவனத்தைக் கேளுங்கள்.

## சமுதாயக் குறுகிய பாடநெறிகள்

Adult and Community Education (ACE) 15 வயதிற்கும் மேற்பட்டவர்களுக்கு உள்ளூர் சமுதாயத்தில் கல்விக் கற்கை நெறிகளை வழங்குகிறது. ACE கற்கை நெறிகள் பல்வேறு திறமைகள், பின்புலங்கள் கொண்டவர்களுக்குப் பொருத்தமானதும், வழக்கமாக, மிகவும் இசைந்து கொடுக்கக்கூடியவையுமாகும். வழமையாக, பாடநெறிக்காலம், ஆறிலிருந்து எட்டு வாரங்களுக்குமேல், வாரந்தம் இரண்டு தொடக்கம் மூன்று மணித்தியாலங்கள் அல்லது முழுநாள் தொழிற் பட்டறைகள் ஆகும். கற்கை நெறி மாலையில் அல்லது வார இறுதியில் நடாத்தப்படும்.

ACE கற்கை நெறிகள் தகைமைகளைத் தருவதல்ல ஆனால், அவை மேலும் முறையான கல்விக்கான வழியையும்,தொழில்சார் பயிற்சியையும் வழங்குகின்றன. ACE வேலை தொடர்பான திறமைகள், சான்றிதழ்களை வழங்கலாம் அல்லது சொந்த, வாழ்க்கைமுறை அல்லது சமூகத் தேவைகளைத் திருப்தி செய்யலாம்.

சில குறுகியகாலக் கற்கை நெறிகள் அங்கீகாரம் பெற்றுள்ளதுடன், அறிவையும் திறமைகளையும் கொடுப்பதற்காக உருவாக்கப்பட்டவை, உதாரணமாக, கலை, தகவல் தொழில் நுட்பம், சிறு வர்த்தகம், ஏனைய மொழிகள் மற்றும் விளையாட்டு.

Technical and Further Education (TAFE) மற்றும் Vocational Education Training (VET) நிறுவனங்கள் குறுகியகால, அங்கீகாரம் பெற்ற கற்கை நெறிகளை வழங்குவதுபோல், வழமையான மதிப்பீடில்லாத அங்கீகாரம் அளிக்கப்படாத குறுகியகாலக் கற்கை நெறிகளையும் வழங்கலாம்.

# 5 வேலைவாய்ப்பு

## இந்தப் பகுதியில்

- வேலை தேடுதல்
- Centrelink
- தகைமைகள், திறமைகளை அங்கீகரித்தல்
- வேலை இடத்தில் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு
- வேலை இடத்தில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு
- வயதுமுதிர்வு ஓய்வூதியம்

## வேலை தேடுதல்

ஆஸ்திரேலியத் தொழிற் சந்தை மிகவும் போட்டி நிறைந்ததாக இருக்கலாம். எவ்வளவு விரைவில் நீங்கள் ஒரு வேலையை எடுப்பது என்பதை, பொருளாதாரக் காரணிகள், உங்களது தராதரம், திறமைகள் மற்றும் ஆங்கிலம் பேசும் ஆற்றல் அத்துடன் நீங்கள் தேடும் வேலையின் மாதிரி என்பவை பாதிக்கின்றன. வேலையைப் பெற்றுக்கொள்வது ஆஸ்திரேலியாவின் பல்வேறு பகுதிகளில் வேறுபட்டுக் காணப்படுகிறது.

நாளாந்த செய்திப்பத்திரிகைகள் 'Job Vacancies' (அல்லது ‘Positions Vacant’) ஐப் பிரசுரிக்கின்றன. நேரடியாகவும் கணினியில் வேலை வெற்றிடங்கள் பட்டியலிடப்படுகின்றன. தொலைபேசித் தகவல் புத்தகம் மற்றும் ‘ஒன்லைன்’ ஆட்சேர்ப்பு இணையத்தளங்களில் தனியார் தொழில் முகவர்கள் பட்டியலிடப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய இலவச நேரடி வேலை வலைத்தளங்கள் www.jobactive.gov.au/ இல் ஒன்றான jobactive இல் ஆஸ்திரேலியாவில் எப்பகுதியிலும் நீங்கள் வேலை தேடலாம்.

தன்னார்வத் தொண்டராக வேலைசெய்வது தொழில்வாய்ப்புக்கு வழிவகுக்கும்: அத்தியாயம் 12, பாருங்கள்: மக்கள் பங்களிப்பு

## Centrelink

வேலை தேடுவோருக்குக் கொடுப்பனவுகளையும், சேவைகளையும் Centrelink விநியோகிக்கின்றது. நீங்கள் வேலை தேடுபவராக இருந்தால், அங்கீகரிக்கப்பட்ட கல்வியை முடித்துக்கொண்டால், அல்லது அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகளைப் பாரமெடுத்திருந்தால் நீங்கள் ஒரு வருமான ஆதரவுப் படிக்குத் தகுதி பெறக்கூடும்.

| Centrelink | தொடர்பு தகவல்கள் |
|---|---|
| Centrelink இணையத்தளம் | www.humanservices.gov.au |
| குடியேறிகள், அகதிகள், பார்வையாளர்களுக்கான தகவல்கள் | www.humanservices.gov.au/multicultural |

| Centrelink | தொடர்பு தகவல்கள் |
|---|---|
| வேறுமொழியிலான தகவல்களுக்கு | www.humanservices.gov.au/yourlanguage |
| வேறுமொழியிலான தகவல்களுக்கு | 131 202 |
| தொலைபேசியில் வேலை தேடுவோர் | 132 850 |

நீங்கள் ஒரு வேலையைப் பெற்றுக்கொள்ள, ஒருவேளை Centrelink உங்களை jobactive அல்லது Disability Employment Services போன்ற ஒரு தொழில் சேவைகள் வழங்குவோரிடம் அனுப்பலாம் (Employment Services Provider).. நீங்கள் தொலைதூரத்திலுள்ள ஓர் இடத்தில் வசிப்பீர்களானால், உங்களைச் சமூக அபிவிருத்தித் திட்டம் (Community Development Program) வழங்குபவரிடம் போகும்படியும் சொல்லலாம்.

## jobactive

வேலை தேடுவோரைத் தொழில் தருநர்களுடன் இணைப்பதுடன் ஆஸ்திரேலியா பூராக 1,700 க்கும் மேலான இடங்களில் வழங்குநோரால் விநியோகிக்கப்படுகிறது. jobactive தனது சேவைபெறுநோரின் தேவைகளுக்கு ஏற்றதாக தமது சேவைகளை உருவாக்கி வழங்குகிறார்கள். அவர்கள், சேவைபெறுநோர் வேலையைப் பெற்றுக்கொள்வதற்காக உள்ளூர் தொழில் தருநர், பதிவுசெய்யப்பட்ட பயிற்சி நிறுவனங்கள், அரசாங்க, சமூக மற்றும் சுகாதார ஸ்தாபனங்களுடன் பணியாற்றுகிறார்கள்.

பயிற்சிக்கும், வேலை அனுபவத்திற்கும் வழிகாண உதவி, வேறிடம்மாற ஒத்தாசை, உதவித்தொகை, தொழில் பயிற்சி அல்லது ஒரு புதிய வியாபாரத்தை ஆரம்பிக்க New Enterprise Incentive Scheme இன் உதவியைப்பெற உங்களால் இயலும். www.employment.gov.au/jobactive-help-job-seekers இல் Help for jobseekers கிடைக்கும்.

ஒரு வேலையைப் பெறவும், அதனை வைத்துக்கொள்ளவும் நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பதனை விபரிக்கும் ஒரு வேலைத்திட்டத்தைத் தீட்ட உங்களது jobactive வழங்குனோர் உங்களுக்கு உதவுவார். வேலைக்கான விண்ணப்பம் எழுதுதல், வேலைஅனுபவம் பெறல் அத்துடன் புதிய திறமைகள் அல்லது தராதரங்களைப் பெறுதல் இதில் அடங்கலாம்.

நீங்கள் ஓர் அகதி, அல்லது மனிதனேய வருகையாளரானால், நீங்கள் வந்த திகதியிலிருந்தே எல்லாவிதத் தொழில் சேவைகளுக்கும் தகைமை பெற்றவராவீர்கள். ஏனைய குடிவரவாளர்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட தொழில் சேவைகளுக்கு தகுதி பெறக்கூடும்.

உங்களது உள்ளூர் jobactive வழங்குனோரைப் பார்ப்பதற்கு www.jobactive.gov.au க்குப் போகவும்.

ஆஸ்திரேலியாவில் சட்டரீதியாக வேலைசெய்யத் தகைமையுடைய எவரும் (பொருத்தமான வேலை வீசாக்களுடன் ஆஸ்திரேலியாவுக்கு வந்த விருந்தினர் அடங்கலாக) பிராந்தியப் பகுதியில் பழம் மற்றும் ஏனைய பயிர்களைப் பிடுங்கும் வேலையை உள்ளடக்கிய அறுவடைத்

தொழிலைச் செய்யலாம். jobactive ஊடாக Harvest Labour Services வழங்குனர் சேவைகளை வழங்குகிறார்கள்.

| jobactive | தொடர்புத் தகவல்கள் |
|---|---|
| Job Seeker Hotline | 136 268 |
| jobactive இணையத்தளம் | www.jobactive.gov.au |
| jobactive ஆங்கிலம் தவிர்ந்த மொழிகளில் தகவல்கள் | www.employment.gov.au/translated-jobactive-factsheets |
| ஆஸ்திரேலிய Labour Market Update பிரசுரங்கள் | http://employment.gov.au/australian-labour-market-update-publication |
| Harvest Labour Services தகவல்கள் | www.harvesttrail.gov.au |

பின்வரும் சேவைகளும் உதவக்கூடும்:

| முகவர் அல்லது சேவை | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|
| Australian Apprenticeships | 13 3873 | www.australianapprenticeships.gov.au |
| Jobguide – இளைஞர்களுக்கான வேலை | | www.education.gov.au/job-guide |
| Experience+ – பக்குவ வயதையடைந்தவர்களுக்கான தொழில் | 13 1764 | www.employment.gov.au/job-seekers-0 |
| MyFuture – வேலை தேடுவது தொடர்பிலான ஆலோசனை வழங்கும் ஒர் இணையத்தளம் | | http://myfuture.edu.au |
| சிறுதொழில் ஆரம்பிக்க உதவுதல் | 13 62 68 | www.employment.gov.au/self-employment-new-enterprise-incentive-scheme-neis |
| JobAccess – ஊனமுற்ற தொழிலாளருக்கானது | 1800 464 800 | www.jobaccess.gov.au/people-with-disability |

## தகைமைகள், திறமைகளை அங்கீகரித்தல்

உங்களிடம் தகைமைகள், திறமைகள் அல்லது குறிப்பிட்ட ஒரு வேலைக்குப் பொருத்தமான வேலை அனுபவம் இருந்தால், ஆஸ்திரேலியாவில் முறைப்படி இவற்றினை அங்கீகாரம் செய்விப்பதற்கு நீங்கள் விரும்பக்கூடும். உங்கள் அறிவையும், திறமைகளையும் அங்கீகரிக்கச் செய்வித்தலானது, உங்களது எதிர்கால வேலை வாய்ப்புக்களுக்கும், தொழில் அபிவிருத்திக்கும் பக்கபலமாக அமையும்.

ஆஸ்திரேலியாவில் கல்வியை அல்லது பயிற்சியை மேற்கொள்ள நீங்கள் திட்டமிட்டால், கற்கைநெறி அனுமதிக்கு வேண்டப்படுபவை அல்லது படிப்பதற்கு தேவைப்படும் காலத்தைக் குறைப்பதற்கு உதவுவதற்காக என்றாலும் உங்களது தகைமைகள் அல்லது வெளிநாட்டு வேலை அனுபவங்களை மதிப்பீடு செய்விக்க நீங்கள் விரும்பக்கூடும்.

தகைமைகள் அங்கீகாரம் தகவல்களுக்காக http://internationaleducation.gov.au/services-and-resources/pages/qualifications-recognition.aspx க்குப் போகவும்.

உங்கள் திறமைகள், தராதரங்களை மதிப்பீடு மற்றும் அங்கீகாரம் செய்விக்க அநேக வழிகள் உண்டு:

## முன்னைய கல்வியின் அங்கீகாரம்

Recognition of Prior Learning (RPL) ஆனது கல்வி, பயிற்சி, தொழில் மற்றும் வாழ்க்கை அனுபவங்களூடாக ஒருவர்அடைந்த அறிவு மற்றும் திறமைகளை மதிப்பீடு செய்தல், அங்கீகரித்தலுக்கான ஒரு செயற்பாடாகும். ஒரு முழு அல்லது பகுதி அளவிலான ஆஸ்திரேலிய தராதரத்தை அது உங்களுக்கு வழங்கக்கூடும்.

RPL மதிப்பீடுகள் ஆஸ்திரேலிய Registered Training Organisations (RTOs) ஆல் நடாத்தப்படுகிறது. அரசாங்கத்திற்கு அல்லது தனிப்பட்ட வழங்குனோர்களுக்குச் சொந்தமாக இருக்கும் உயர்கல்வி வழங்குனோர் (பல்கலைக்கழகங்கள்) மற்றும் தொழிற்கல்விப் பயிற்சி நிலையங்கள் RTO க்குள் அடங்கும்.

பின்வருவன உங்களிடம் இருந்தால் நீங்களும் RPL க்குத் தகுதி உடையவராகலாம்:

- வெளிநாட்டுத் தகைமைகள்
- பொருத்தமான கல்வி அறிக்கை
- சம்பளத்துடனான அல்லது சம்பளமற்ற வேலையிலிருந்து பெற்ற அனுபவம், வாழ்க்கை அனுபவம் அல்லது சமூக சேவையிலிருந்து பெற்றுக்கொண்ட தொழில் திறன் மற்றும் அறிவுக்கான சான்று.

RTO க்காக அல்லது அதன் சார்பாகக் கடமையாற்றும் ஆஸ்திரேலிய தகைமை பெற்ற மதிப்பீட்டாளர்கள் RPL மதிப்பீட்டினை நடாத்துவார்கள். நீங்கள் செய்துகொண்டிருக்கிற குறிப்பான வேலைகளை மதிப்பீடு செய்பவர் அவதானிக்கக்கூடும் மற்றும் உங்கள் திறமைகள் குறித்து உங்களுடன் கலந்து பேசக்கூடும். அத்துடன், உங்கள் சான்று, அனுபவம் மற்றும் திறமைகளைப் (முறையான கல்வி மற்றும் வேலை அனுபவம் உட்பட) பொருத்தமான ஆஸ்திரேலியத் தரத்துடன் ஒப்பிடுவார்கள். ஆஸ்திரேலிய தேசிய தகைமைகளுக்கான அடிப்படை அமைப்பு ஒன்றைக் கொண்டுள்ளதால், தகைமைகள் அல்லது தீர்மானம் எல்லா RTOக் களாலும் அங்கீகரிக்கப்படும்.

எந்தவிதமான சான்றுகளை நீங்கள் தரவேண்டுமென மதிப்பீட்டாளர் உங்களுக்குச் சொல்வார் - உதாரணமாக, தகைமைகள் அல்லது பயிற்சி அத்தாட்சிப்பத்திரங்கள், தொழில் தருனோரின் சிபாரிசுகள், தொழில் விபரக் கூற்றுக்கள் மற்றும் வேலை மாதிரிகளின் பிரதிகள் ஒரு பொருத்தமான பயிற்சி நிலையத்தை நீங்கள் கண்டறிந்ததும், உங்கள் திறமைகள், அநுபவங்களை மதிப்பிடவும், அங்கீகரிக்கவும் வேண்டப்படும் பணம் பற்றிக் கலந்துரையாட நீங்கள் கட்டாயம்.

பின்வரும் இணையத்தளங்களிலிருந்து RTO களின் தொடர்புத் தகவல்களையும், இடங்களையும் நீங்கள் காணலாம்:

- உங்கள் பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய தொழில் கல்வி மற்றும் பயிற்சி (VET) கற்கை நெறியைத் தேடுவதற்கு MySkills – www.myskills.gov.au
- RPL விண்ணப்ப செயற்பாடு பற்றிய மேலதிக தகவல்கள் போன்று பல்கலைக்கழகம் உள்ளிட்ட எல்லா ஆஸ்திரேலிய RTO க்களினது தொடர்புத் தகவல்களுக்காக - MyFuture – www.myfuture.edu.au

## திறமைகள் மதிப்பீட்டு அதிகாரிகள்

குறிப்பிட்ட ஒரு வேலையில் அல்லது உயர்தொழிலில் ஒரு குடிவரவாளருக்கு ஆஸ்திரேலியத் தராதரத்திற்கேற்ப வேலைசெய்யத் திறமைகள் தராதரங்கள் இருக்கிறதாவெனத் தீர்மானிக்கத் திறமைகள் மதிப்பீட்டு அதிகாரிகள் மதிப்பீடு மற்றும் சோதனை நடாத்துவார்கள். பொதுவாக இந்தச் சேவைகள் குடிவரவு நோக்கங்களுக்காக வழங்கப்பட்டாலும், பல அதிகாரிகள் வேறு நோக்கங்களுக்காகவும் உங்களுக்கு உதவக்கூடிய மதிப்பீடுகளையும், சோதனைகளையும் வழங்குகிறார்கள்:

- Australian Qualification Framework தகைமையைப் பெறவும்.
- குறிப்பிட்ட தொழில்களில் அனுமதி மற்றும் பதிவைப் பெறவும்.
- ஒர் உயர்தொழிற் சங்கத்தில் உத்தியோகபூர்வ அங்கீகாரத்தைப் பெறவும்.

குறிப்பிட்ட தொழில்களில் வெளிநாடுகளில் பெற்ற தகைமைகள், திறமைகள் மற்றும்அனுபவங்களைப் பொறுப்புடன் மதிப்பீடு செய்வதற்காகத் தற்சமயம் 37 அதிகாரிகள் ஆஸ்திரேலியாவில் இருக்கிறார்கள். ஓர் அதிகாரியின் கவனத்திற்கு உங்கள் தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் வருகிறதாவெனப் பார்ப்பதற்கு www.border.gov.au/Trav/Work/Work/Skills-assessment-and-assessing-authorities இல் அதிகாரிகளின் பட்டியலைப் பார்க்கவும்.

## வர்த்தகங்கள் அங்கீகாரம் ஆஸ்திரேலியா - திறமைகள் அங்கீகாரம்

Trades Recognition Australia (TRA) என்பது ஆஸ்திரேலிய அரசாங்க Department of Education and Training இல் அமைந்துள்ள ஒரு வியாபாரப் பகுதியாகும்.

Australian Department of Immigration and Border Protection (DIBP) ஆல் குறிப்பிடப்பட்ட சுமார் 130 தொழில்நுட்ப மற்றும் வர்த்தகர்கள் தொழில்களுக்கான திறமைகளை மதிப்பிடும் அதிகாரக் குழுவாகும். விண்ணப்பதாரியின் சந்தர்ப்ப, சூழ்நிலைகள் மற்றும் அவர் விரும்பிய குடியேற்றப் பலாபலன் என்பவற்றைப் பொறுத்து வேறுபடும் பல்வேறு வகையான பல திறமைகளை மதிப்பிடும் சேவைகளை TRA செய்கிறது.

TRA Trades Recognition Service மற்றும்TRA Optional Skills Assessment Service வேலைவாய்ப்பு மற்றும் உரிமம் வழங்கும் நோக்கத்திற்கான திறமைகளை அங்கீகரிக்கும் பொறுப்பை ஏற்கிறது. TRA இதனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட Registered Training Organisations (RTOs) இந்தச் சேவைகளை ஆஸ்திரேலியா எங்கும் வழங்குகிறது. மதிப்பீட்டின் பின்னர், நிபந்தனையுடன் உங்கள் திறமைகள் வழமையாக அங்கீகரிக்கப்படலாம். அதாவது, Offshore Technical Skills Record அல்லது ஆஸ்திரேலிய வேலைத் தரங்களை அல்லது ஒரு உரிமத்தைப் பெற மேலதிக பயிற்சியைப் பொறுப்பேற்கக் கோரும் தேர்ச்சி அறிக்கை.

உங்களுக்கு ஒரு TRA திறமைகள் மதிப்பீடு பொருத்தமாகுமா எனப் பார்ப்பதற்கு www.tradesrecognitionaustralia.gov.au/PathFinder/Pages/default.aspx இல் TRA Pathfinder க்குப் போகவும்.

அத்துடன் ஒரு வழமையான திறமைகள் மதிப்பீடு ஒன்றைப் பொறுப்பேற்பதாவென நீங்கள் முடிவு செய்ய உதவும் TradeSET இலவசச் சேவையை www.tradeset.com.au இல் தேடிப்பார்க்கவும் நீங்கள் விரும்பக்கூடும்.

| வியாபார அங்கீகாரம் ஆஸ்திரேலியா | தொடர்புத் தகவல்கள் |
|---|---|
| தொலைபேசி (ஆஸ்திரேலியாவுக்கு வெளியே) | +61 2 6240 8778<br>பொது விடுமுறைகள் தவிர (ஜிஎம்ரி + 10 மணிநேரம்) திங்கள் முதல் வெள்ளிவரை, காலை 10.00 இலிருந்து மாலை 12 வரை ஏஈஎஸ்ரி, |
| தொலைபேசி (ஆஸ்திரேலியாவுக்குள்ளே) | 1300 360 992<br>மேலுள்ளவாறு அலுவலக நேரம். |
| மின் அஞ்சல் | traenquiries@education.gov.au |
| TRA இணையத்தளம் | www.tradesrecognitionaustralia.gov.au |

## பட்டதாரித் தகைமைகள் அங்கீகாரம்

ஆஸ்திரேலிய மாநிலங்கள், பிரதேசங்களில் அமைந்துள்ள Overseas Qualification Units, பொது நோக்கங்களுக்காக வெளிநாட்டுத் தகைமைகளின் அங்கீகாரத்தை வழங்குகிறது (அதாவது, முக்கிய கல்வி, குடிவரவு, அல்லது தொழில்வாய்ப்புத் தேவைகளுக்கு அல்ல). Australian Qualification Framework ஐப் பாவித்து உங்கள் தகைமைகளை, அதற்குச் சமமான ஆஸ்திரேலிய தகைமைகளுடன் ஒப்பிடும் இலவசச் சேவையை OQU கள் வழங்குகின்றன.

வெளிநாட்டுத் தகைமைகள் ஒப்பீட்டில் Department of Education and Training (DET) பொதுவான தகவல் மற்றும் ஆலோசனையை வழங்குகிறது. DET ஐத் தொடர்புகொள்ள முன்னர் உங்கள் மாநிலம் அல்லது பிரதேசத்திலுள்ள OQU வில் சரிபார்த்துக் கொள்ளவும்.

| முகவர் | இணையத்தளம் |
|---|---|
| Department of Education and Training | https://internationaleducation.gov.au/Services-And-Resources/services-for-individuals/Pages/Services-for-individuals.aspx |
| State and territory Overseas Qualification Units | http://internationaleducation.gov.au/services-and-resources/pages/qualifications-recognition.aspx |

தமது தகைமைகளை அங்கீகாரம் செய்விப்பதற்காக, இணைப்புக் கல்வியைப் பெறவிரும்பும் வெளிநாட்டுப் பயிற்சியுடன் கூடிய வாழ்க்கைத் தொழிலர், கல்விக்கான கட்டண உதவிக்குத் தகுதிபெறக்கூடும். 1800 020 108 இல் FEE-HELP ஐத் தொடர்பு கொள்ளவும் அல்லது http://studyassist.gov.au/sites/StudyAssist/HELPpayingMyFees/FEE-HELP க்குப் போகவும்.

## வேலை இடத்தில் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு

ஆஸ்திரேலியாவில் வேலைசெய்யும் ஒவொவொருவரும் வேலையின்போது அடிப்படை உரிமைகளுக்கும் பாதுகாப்புக்கும் தகுதியுடையவராவர்.

இது ஆகக்குறைந்த வேதனம், ஓய்வு இடைவேளை, சுகவீன விடுமுறை மற்றும் உடன்படிக்கை அல்லது தீர்ப்பில் குறிப்பிட்டப்படி குறைந்த பட்ச அல்லது உங்கள் தொழில் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளை உள்ளடக்கும்.

www.fairwork.gov.au இல் ஆங்கிலம் உட்பட ஏனைய மொழிகள், தொழில் தருநர், தொழில் பெறுநருக்கான ஆஸ்திரேலியாவினது தொழிற் சட்டம் பற்றிய இலவச ஆலோசனை மற்றும் தகவல்களை Fair Work Ombudsman வழங்குகிறது.

### ஆகக்குறைந்த சம்பளம்

ஆஸ்திரேலியாவில் எல்லாத் தொழிலாளர்களும் ஆகக்குறைந்த வேதனத்தையாவது பெறத் தகுதியுடையவராவர். எந்த மாநிலத்தில் அல்லது பிரதேசத்தில் நீங்கள் வேலை செய்கிறீர்கள், உங்கள் வயது, எந்தத் தீர்மானம் பொருந்தும், மற்றும் வேலை ஒப்பந்த விபரங்களில் சம்பளத்தின் அளவு தங்கியுள்ளது.

உங்கள் வேலை தருநர் ஒழுங்காகப் பணம் செலுத்தவேண்டும் என்பதுடன், உங்கள் அனுமதி இல்லாமல் உங்கள் சம்பளத்தில் கழிக்கக் கூடாது (வரி மற்றும் ஓய்வுகாலக் கொடுப்பனவு நோக்கங்கள் தவிர). நீங்கள் வேலைசெய்ய ஆரம்பிக்கும்போது, சம்பளக் கழிப்பைத் தெளிவாக உங்களுக்கு விபரிக்கும்படி உங்கள் தொழில் தருநரைக் கேளுங்கள். நீங்களேஉங்கள் சம்பளக் கழிப்புக்கான ஏற்பாட்டைச் செய்யலாம்.

சம்பள நாளிலிருந்து ஒரு வேலை நாளுக்குள் சம்பள விபரத்தாள் உங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

## தொழில் நிபந்தனைகள்

ஆஸ்திரேலியாவில் எல்லா வேலையாட்களும் ஆகக்குறைந்த தொழில் நிபந்தனைகளுக்குத் தகுதியுடையவராவர். இத் தகைமைகள், வேலை நேரங்கள், மேலதிக வேலைநேரக் கொடுப்பனவு, ஓய்வு இடைவேளை, சுகவீன விடுமுறை மற்றும் விடுமுறைகளைக் கொண்டதாகும்.

## பிரதிநிதித்துவத்துக்கான உரிமைகள்

தொழிற்சங்கத்தில் சேர்ந்துகொள்ளவும், அதனால் பிரதிநிதித்துவம் செய்யப்படவும் ஆஸ்திரேலியாவில் எல்லாத் தொழிலாளர்களுக்கும் உரிமையுண்டு. வேதனம், தொழில் நிபந்தனைகள், மற்றும் தொழிலிட உரிமைகள் குறித்த ஆலோசனையைச் சங்கங்கள் தமது அங்கத்தவர்களுக்குக் கொடுக்கிறது. அவை வேலை இடத்துப் பிரச்சினைகளில் உதவுகின்றன, அத்துடன் அங்கத்தவர்களின் சம்பளம் மற்றும் தொழில் நிபந்தனைகள் பற்றி தொழில் தருநருடன் பேரம்பேசுகிறது.

நீங்கள் ஒரு சங்க உறுப்பினரென உங்கள் தொழில் தருநருக்கு நீங்கள் சொல்லத் தேவையில்லை. நீங்கள் ஒரு தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர் என்ற காரணத்தால் உங்களுக்குப் பாகுபாடு காட்டவோஅல்லது வேலையிலிருந்து நீக்கவோ முடியாது.

நீங்கள் ஒரு தொழிற்சங்கத்தில் சேர விரும்புகிறீர்கள் ஆனால் எந்தச் சங்கத்தில் சேர்வதெனத் தெரியாவிட்டால் www.australianunions.com.au இல் Australian Unions உடன் தொடர்பு கொள்ளவும். Australian Unions என்பது Australian Council of Trade Unions ஆல் நடாத்தப்படும் அங்கத்துவம் மற்றும் ஆலோசனைச் சேவையாகும். வேலை இடத்தில் உங்கள் உரிமைகள் அல்லது தகைமைகள் பற்றிய கேள்வி இருந்தால் அது உதவும்.

## பாகுபாட்டிலிருந்து பாதுகாப்பு

உங்கள் இனம், மதம், பால், கருத்தரிப்பு, பாலியல் விருப்புக்கள், இயலாமை (அங்கவீனம்) அல்லது ஒரு தொழிற் சங்கத்தில் உறுப்பினராக இருக்கிற காரணங்களுக்காக, பாகுபாடு மற்றும் வேலை இடத்தில் வேற்றுமை மற்றும் 'எதிர் நடவடிக்கை' களுக்கு எதிராக நீங்கள் பாதுகாக்கப் படுவீர்கள்.

தொழிலாளர் ஒருவர் கீழ்க்குறிப்பிட்டவாறு இருப்பது 'எதிர் நடவடிக்கை' ஆகும்:

- வேலைதர மறுத்தல்
- வேலையிலிருந்து நீக்கப்படல்
- பயிற்சிக்கான வாய்ப்புக்களை மறுத்தல்
- பதவி உயர்வு மறுப்பு அல்லது

- அனுகூலம் குறைந்த வேலை வசதிகள் அல்லது தொழில் நிபந்தனைகளுக்கு ஆளாக்குதல்.

பாகுபாடுகாட்டுதல் சட்டங்கள் பற்றி மேலதிகத் தகவல்களுக்குப், பார்க்கவும்: www.humanrights.gov.au/employers/good-practice-good-business-factsheets/quick-guide-australian-discrimination-laws

ஒரு முறைப்பாட்டைச் செய்வதற்குப் போகவும்: www.humanrights.gov.au/complaints/complaint-guides/what-you-can-complain-about/complaints-about-discrimination-employment

## ஏனைய வேலையிட உரிமைகள்

உங்கள் தொழில் குறித்து நீங்கள் ஒரு விசாரணை அல்லதுமுறைப்பாட்டைச் செய்த காரணத்தால் அல்லது உங்கள் உரிமையை நிலைநிறுத்தும்படி கேட்டதால் உங்களது தொழில் தருநர் உங்களை அநியாயமாக நடாத்த அல்லது உங்களை வேலையிலிருந்து விலக்க முடியாது.

## மேலதிகத் தகவல்கள்

சரியான சம்பளத்தைப் பெறுகிறீர்களாவெனத் தெரியாதுவிட்டால், நிபந்தனைகள் மற்றும் வேலையிட உரிமைகள் அல்லது உங்கள் தொழில்தருநர் பற்றி ஒரு புகாரைச் செய்வது பற்றிய மேலதிகத் தகவல்களைப் பின்வருவனவற்றில் காணலாம்:

| தேசிய முகவர்கள் | தொலைபேசி | இணையத்தளமா |
|---|---|---|
| Fair Work Ombudsman (ஆங்கிலம் தவிர்ந்த மொழிகள்) | 13 1394 | www.fairwork.gov.au/contact-us/language-help |
| Fair Work Ombudsman குடியேறிகள் மற்றும் வீசா வைத்திருப்போர் | | www.fairwork.gov.au/find-help-for/visa-holders-and-migrants |
| Australian Unions | 1300 486 466 | www.australianunions.com.au/ |
| Fair Work Commission | 1300 799 675 | www.fwa.gov.au/ |
| ஆஸ்திரேலிய அரசாங்கம் | | www.australia.gov.au/information-and-services/jobs-and-workplace/working-conditions |
| Department of Immigration and Border Protection | | http://www.border.gov.au/Trav/Work/Work/workplace-rights |

## வேலை இடத்தில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

பாதுகாப்பு மற்றும் சுகாதாரமான வேலை இடத்தில் வேலை செய்வதற்கான உரிமை உங்களுக்கு உண்டு. எல்லாத் தொழிலாளர்களும் தமது தொழில்தருனரது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றவேண்டும்.

வேலையின்போது நீங்கள் காயமடைந்தால், தொழிலாளர்களுக்கான நட்டவீட்டிற்கு நீங்கள் தகுதி பெறக்கூடும்.

மாநிலங்கள் மற்றும் பிரதேசங்கள் (Occupational Health and Safety எனவும் அழைக்கப்படும்). Work Health and Safety (WHS) சட்டங்களுக்கு முதன்மைப் பொறுப்புடையதாகும். தொழில்தருநர், அரச முகவர்கள் மற்றும் வேலை, சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்குப் பொறுப்பான ஏனையோரின் கடமைகளை இந்தச் சட்டங்கள் குறிப்பிடுகின்றன.

உங்கள் வேலை இடம் பாதுகாப்பற்றதென நீங்கள் உணர்ந்தால், வேலை இடத்திலுள்ள பொருந்தமான கட்டுப்பாட்டாளர் அல்லது சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரதிநிதியுடன் தொடர்பு கொள்ளவும். உங்கள் தொழிற்சங்கத்தையும் தொடர்புகொள்ள நீங்கள் விரும்பக்கூடும்.

மாநில மற்றும் பிரதேச பாதுகாப்புக் கட்டுப்பாட்டாளர்கள் இருக்கும் இடங்கள்:

| பிராந்தியம் | சுகாதார, பாதுகாப்பு ஒழுங்குபடுத்துபவர் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| ACT | WorkSafe ACT | 02 6207 3000 | www.worksafety.act.gov.au |
| NSW | WorkCover NSW | 13 1050 | www.workcover.nsw.gov.au |
| NT | NT WorkSafe | 1800 019 115 | www.worksafe.nt.gov.au |
| Qld | WorkCover Queensland | 1300 362 128 | www.worksafe.qld.gov.au |
| SA | SafeWork SA | 1300 365 255 | www.safework.sa.gov.au |
| Tas. | WorkSafe Tasmania | 1300 366 322 | www.worksafe.tas.gov.au |
| Vic. | WorkSafe Victoria | 1800 136 089 | www.worksafe.vic.gov.au |
| WA | WorkSafe Western Australia | 1300 307 877 | www.worksafe.wa.gov.au |
| National | Comcare | 1300 366 979 | www.comcare.gov.au |
| National | Safe Work Australia | 1300 551 832 | http://www.safeworkaustralia.gov.au/sites/whs-information/working-safely-in-australia/pages/default |

சுரங்கத்தொழில், எண்ணெய் மற்றும் எரிவாயு போன்ற சில கைத்தொழில்கள் பாதுகாப்புக் கட்டுப்பாட்டாளர்களைப் புறம்பாகக் கொண்டுள்ளன. தொழிலாளர் இழப்பீட்டுக்குக் கட்டுப்பாட்டாளர்கள் உட்பட ஒரு முழு அளவிலான ஒழுங்குபடுத்துபவரின் பட்டியல் www.safeworkaustralia.gov.au/sites/swa/about/who-we-work-with/regulators/pages/whs-regulators இல் கிடைக்கும்.

## வயதுமுதிர்வு ஓய்வூதியம்

உங்கள் ஓய்வுகாலத்துக்காகச் சேமிக்கும் ஒரு வழிதான் வயதுமுதிர்வு ஓய்வூதியமாகும்(superannuation fund). நீங்களும் உங்கள் வேலைதருனரும் அல்லது உங்கள் வேலைதருனர் வயதுமுதிர்வு ஓய்வூதிய நிதிக்குச் செலுத்தலாம். அதை நீங்கள் சாதாரணமாக அறுபது வயதை அடையும்போது பெறலாம்.

அநேகமான சந்தர்ப்பங்களில், நீங்கள் விரும்பிய ஒரு வயதுமுதிர்வு ஓய்வூதியத்திற்கு உங்கள் ஊதியத்தின் ஒன்பது வீதத்திற்குச் சமமான தொகையை செலுத்தவேண்டுமென உங்கள் தொழில்தருனர் சட்டப்படி வேண்டப்படுகிறார். மேலதிகமான பணத்தையும் உங்களுடைய வயதுமுதிர்வு ஓய்வூதியத்திற்கு நீங்கள் செலுத்தலாம். உங்கள் தொழில் தருனர் சரியான தொகையைச் செலுத்துகிறாராவெனப் பார்ப்பதற்கு உங்கள் வயதுமுதிர்வு ஓய்வூதிய நிதியத்துடன் சரிபார்த்துக் கொள்ளவும்.

நீங்கள் சுயதொழில் செய்தால், உங்கள் ஓய்வு காலத்திற்காக வயதுமுதிர்வு ஓய்வூதியத்தில் பணத்தைச் சேர்த்து வைப்பது பற்றி ஆலோசிக்கவும்.

மேலதிகத் தகவல்களுக்கு:

| மூப்புக்கால ஊதியம் - தகவல்கள் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|
| Australian Taxation Office | 13 1020 | www.ato.gov.au/super |
| Australian Securities and Investments Commission | 1300 300 630 | www.moneysmart.gov.au/superannuation-and-retirement |

# 6 ஆஸ்திரேலியச் சட்டம்

## இந்தப் பகுதியில்

ஆஸ்திரேலியாவிலுள்ள ஒவ்வொருவரும் ஆஸ்திரேலியச் சட்டங்களுக்குப் பணியவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறார்கள். வேறு நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்படும் சில விடயங்கள் ஆஸ்திரேலியாவில் சட்டவிரோதமாகும் என்பதுடன் கடுமையான தண்டனைகளை விளைவிக்கலாம்.

ஆஸ்திரேலியச் சட்டங்களைத் தெரிந்திருப்பதானது, ஆஸ்திரேலிய சமூகத்தில் விட்டுக்கொடுத்து வாழவும், பிரச்சினைகளைத் தவிர்க்கவும் உங்களுக்கு உதவும்.


- தண்டனைக்குரிய குற்றச்செயல்
- வன்செயல்
- வீட்டுக்குரிய மற்றும் குடும்ப வன்செயல் மற்றும் பாலியல் பலாத்காரம்
- சம்மதம் அளிப்பதற்கான சட்டமுறையான வயது
- சிறுவர்களின் உரிமைகள்
- சிறுவர் பாதுகாப்பு
- பலவந்தமாக மணம் முடித்தல்
- பெண் இனவிருத்திச் சுகாதாரம் மற்றும் உரிமைகள்
- துப்பாக்கிகள் மற்றும் கத்திகள்
- மிருகங்கள் மற்றும் காட்டுமிருகங்கள்
- புகைத்தல், குடித்தல் மற்றும் போதைவஸ்துகள்
- தாவர அல்லது மிருக இறக்குமதிக் கட்டுப்பாடுகள்
- ஏனைய சட்டங்கள்
- சட்ட உதவி


## தண்டனைக்குரிய குற்றச்செயல்

சட்டத்திற்கு மாறான எந்தவொரு நடத்தை அல்லது செயலும் குற்றமாகும், அது தண்டனைக்கு இட்டுச்செல்லலாம்.

கொலை, தாக்குதல், பாலியல் பலாத்காரம், சொத்துக்களுக்குச் சேதம் விழைவித்தல் அல்லது களவு, ஆயுதம்தரித்த கொள்ளை, குழந்தைகளுடன் அல்லது சமமதமளிக்கச் சட்டப்படி வயதடையாத இளம் சிறுவர்களுடன் பாலுறவு வைத்தல், ஆபத்தை விளைவிக்கும் வகையில் வாகனம் ஓட்டுதல், சட்டவிரோத, போதைப்பொருட்களை வைத்திருத்தல்,பாவித்தல் அல்லது விற்பனை செய்தல், மோசடி என்பவை பாரதூரமான குற்றங்களுள் அடங்கும். ஒரு பொலிஸ் உத்தியோகத்தர், மாநில, அல்லது உள்ளூர் அரசாங்க உத்தியோகத்தர் போன்றவர்களுக்கு இலஞ்சம் கொடுத்தல் (பணம் கொடுத்தல்) அல்லது இலஞ்சம் கொடுக்க முயற்சித்தல் பாரதூரமான குற்றமாகும். அரச உத்தியோகத்தர்களின் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்துவதற்காக அன்பளிப்பு அல்லது இலஞ்சம் கொடுத்தல் சட்டவிரோதம் ஆகும் அத்துடன் அது அறிவிக்கப்படும்.

உரிமம் இல்லாமல் துப்பாக்கி போன்றவற்றை வைத்திருத்தலோ அல்லது கொண்டு செல்வதோ குற்றமாகும். பொது இடங்களில் கத்தி போன்ற ஆபத்தைவிளைவிக்கும் ஏனைய ஆயுதங்களைக் கொண்டுசெல்வதில் அநேகமான மாநிலங்கள் மற்றும் பிரதேசங்கள் மட்டுப்பாடுகளை விதித்திருக்கின்றன.

அவசரகாலத்தில் அல்லது உங்களுக்கு அல்லது யாரவது ஒருவருக்கு உடனடியான ஆபத்து இருந்தால், “Police” ஐத் தொலைபேசி 000 இல் அழையுங்கள். பார்க்கவும் *அத்தியாயம் 2 உதவி பெறுதல்*.

நீங்கள் ஒரு குற்றச்செயலைக் கண்டால் அல்லது ஒரு குற்றத்தைத் தீர்க்க அல்லது தடுக்கப் பொலிசாருக்கு உதவக்கூடிய தகவல் உங்களிடமிருந்தால், www.crimestoppers.com.au இல் Crime Stoppers தொடர்புகொள்ளவேண்டும் அல்லது 1800 333 000 ஐ அழைக்கவேண்டும். உங்கள் பெயரைக் கொடுக்க வேண்டியதில்லை.

## வன்செயல்

இன்னொருவருக்கு வன்செயல் புரிதல் ஆஸ்திரேலியாவில் சட்டவிரோதமானது அத்துடன் அது பாரதூரமான குற்றமாகக் கருதப்படுகிறது. கொடுமையான குற்றத்தைப் புரியும் ஆணோ அல்லது பெண்ணோ, மறியலுக்குப் போகவேண்டும்.

வீட்டில் நடக்கும் வன்செயல் உட்பட (வீடு மற்றும் குடும்பக் கொடுமைகள்) வன்செயல் அல்லது குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டோரை ஆதரிப்பதற்காகப் பல்வேறு சேவைகள் இருக்கின்றன.

## வீட்டுக்குரிய மற்றும் குடும்ப வன்செயல் மற்றும் பாலியல் பலாத்காரம்

துணைவர் அல்லது மற்றைய குடும்ப உறுப்பினரைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் அவருக்குப் பயத்தை அல்லது அவரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நடத்தை அல்லது பயமுறுத்தல், குடும்பத்திற்குரிய அல்லது குடும்ப வன்செயலில்

அடங்கும; அவையாவன:

- அடித்தல், திணறடித்தல் அல்லது துணைவர் அல்லது குடும்ப உறுப்பினருக்குத் தீங்கிளைத்தல்
- குடும்ப உறுப்பினருக்கு அல்லது துணைவருக்குத் தேவைப்படும் பணத்தைக் கொடுக்க மறுத்தல்.
- நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து துணைவரைத் தனிமைப்படுத்துதல்.
- தொடர்ச்சியாகத் துணைவரை அவமதித்தல் அல்லது விமர்சனம் செய்தல்
- குழந்தைகள் அல்லது செல்லப்பிராணிகளைப் பயமுறுத்தல்

ஒருவரின் சம்மதமின்றி அவருடன் பாலியல் நடத்தையில் ஈடுபடல் பாலியல் பலாத்காரமாகும், அவையாவன:

- பாலுறவு அல்லது பாலியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒருவரை வற்புறுத்துவது

- பாலியல் படங்களைப் பார்க்கும்படி ஒருவரைக் கட்டாயப்படுத்துவது.
- குழந்தையுடன் பாலுறவு அல்லது பாலுறவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

ஆஸ்திரேலியாவில், ஒருவரைப் பாலியல் பலாத்காரம் செய்வது சட்ட விரோதமாகும். ஆணோ அல்லது பெண்ணோ யாராயினும் ஒருவர் பாலியல் குற்றத்தைப் புரிந்தால், மறியலுக்குப் போகவேண்டும். திருமணம் செய்து அல்லது திருமணமின்றிக் குடும்பம் நடாத்துபவர்கள் இடையில் பாலியல் பலாத்காரம் ஏற்பட்டாலும்கூட அது சட்டத்துக்கு முரணானதாகும்.

ஆணைப்போலப் பெண்ணுக்கும் அதே உரிமைகள் உண்டு. ஆணையும், பெண்ணையும் ஆஸ்திரேலியச் சட்டம் சமமாகவே நடாத்துகிறது. ஒவ்வொருவரும் வன்செயலுக்கு ஆளாகாமல், மகிழ்ச்சியாக உறவாடி, சமூகத்தில் வாழ உரிமையுண்டு. தகாதமுறையில் அல்லது தீங்கு ஏற்படும் வகையில் நடாத்தப்படுவதைப் பெண்கள் ஏற்கவேண்டியதில்லை.

நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்த யாராவதொருவரோ ஆபத்தில் இருந்தால், தொலைபேசியில் **000**அழைத்து “**Police**” ஐக் கூப்பிடவும். ஆஸ்திரேலியாவிலுள்ள பொலிசார் பாதுகாப்பானவர்கள் அத்துடன் நம்பத்தகுந்தவர்கள்.

Family Safety Pack உங்கள் உரிமைகளை விளங்கிக்கொள்ளவும், தேவைப்படின் எங்கே உதவியைப் பெறுவதென அறியவும் உங்களுக்கு உதவும். கலாச்சார ரீதியில் உணர்வுகளைப் பாதிக்கக் கூடியவற்றிற்கான ஆலோசனைச் சேவைகள் ஆஸ்திரேலியாவில் உண்டு. இந்தப் பொதி பல்வேறு மொழிபெயர்க்கப்பட்ட மொழிகளில் www.dss.gov.au/family-safety-pack கிடைக்கும்.

1800 RESPECT, இலவச, அந்தரங்க தொலைபேசி மற்றும் இணையத்தளம் ஊடாக நேரடி அறிவுரைகளையும், தகவல்களையும் வழங்குகிறது. உங்கள் உள்ளூரில் அறிவுரை கூறுபவர்கள் நீங்கள் கூறுபவற்றை உன்னிப்பாகக் கேட்டு, கேள்விகளுக்கு விடை அளிப்பதுடன், உள்ளூரில் உள்ள வேறு ஆதரவு வழங்கும் சேவைகளைப் பெற உங்களை அனுப்புவார்கள். அழையுங்கள் 1800 737 732 அல்லது www.1800respect.org.au க்குப் போகவும்.

வன்செயல் பிரச்சினைகள் அடங்கலாக குடும்பம் மற்றும் உறவு கொள்வதில் வரும் சிக்கல்களைச் சமாளிக்க ஆண்களுக்கு உதவியளிக்கும் MensLine என்பது ஒரு ஆறுதல் வழங்கும் சேவையாகும். உதவியைப் பெற்றுக்கொள்ள 1300 789 978 ஐ அழையுங்கள் அல்லது www.mensline.org.au இற்குப் போகவும்.

உங்களுக்கு ஓர் உரைபெயர்ப்பாளர் தேவைப்படின், 131 450 இல் ஓர் இலவச மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவையை Translating and Interpreting Service (TIS National) அழையுங்கள். இது உங்களுக்கு ஆறுதல் சேவை வழங்காது ஆனால், ஏனைய சேவைகளுடன் தொடர்புகொள்ள உதவும்.

| பிராந்தியம் | வீட்டு மற்றும் குடும்ப வன்செயல் | தொலைபேசி |
|---|---|---|
| National | Domestic Violence and Sexual Assault -<br>24 மணித்தியால உதவித் தொடர்பு அல்லது<br>www.1800respect.org.au | 1800 200 526<br>அல்லது<br>1800 737 732 |
| National | Child Abuse Prevention Service<br>- 24 மணித்தியால உதவித் தொடர்பு அல்லது<br>www.childabuseprevention.com.au/reporting-abuse.html | 1800 688 009 |
| National | Mensline Australia - 24 மணித்தியால உதவித் தொடர்பு<br>www.mensline.org.au | 1300 789 978 |
| National | Men's Referral Service ஆண்களுக்கான சிபாரிசுச் சேவை<br>http://mrs.org.au | 1300 766 491 |
| ACT | Domestic Violence Crisis Line<br>http://dvcs.org.au | 02 6280 0900 |
| NSW | Domestic Violence Advocacy Service - Sydney Advice Line<br>www.wlsnsw.org.au/legal-services/domestic-violence-legal-service | 02 8745 6999 |
| | Domestic Violence Advocacy Service - சிட்னிக்கு வெளியில் இலவச அழைப்புக்கள் | 1800 810 784 |
| | Community Services Domestic Violence Line<br>www.community.nsw.gov.au/parents,-carers-and-families/domestic-and-family-violence/domestic-violence-line | 1800 656 463 |
| NT | Crisis Line<br>www.ncsmc.org.au/wsas/resources/res_nt.htm | 1800 019 116 |
| | Domestic Violence Counselling Service<br>www.dawnhouse.org.au/domestic-violence-counselling-service | 08 8945 6200 |
| Qld | Women's Help Line<br>www.dvconnect.org/womensline | 1800 811 811 |
| | Men's Help Line<br>www.dvconnect.org/mensline/ | 1800 600 636 |
| SA | Domestic Violence Crisis Services<br>www.sa.gov.au/topics/emergencies-and-safety/safety-at-home-and-in-the-community/domestic-violence | 1300 782 200 |
| | Domestic Violence Help Line<br>www.1800respect.org.au/common-questions/who-can-i-talk-to-about-domestic-family-violence-or-sexual-assault/south-australia-counselling-services/ | 1800 800 098 |

| பிராந்தியம் | வீட்டு மற்றும் குடும்ப வன்செயல் | தொலைபேசி |
|---|---|---|
| Tas. | Family Violence<br>www.dpac.tas.gov.au/safehomessafefamilies | 1800 633 937 |
| | Response and Referral –<br>உளநல ஆலோசனை மற்றும் ஆதரவு சேவைகள்<br>www.dhhs.tas.gov.au/service_information/children_and_families/family_violence_counselling_and_support_service | 1800 608 122 |
| Vic. | Eastern Domestic Violence Service<br>திங்கள் முதல் வெள்ளிவரை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை<br>http://edvos.org.au/what-we-do | 03 9322 3555 |
| | Immigrant Women's Domestic Violence Service<br>www.iwss.org.au | 1800 755 988 |
| | Immigrant Women's Domestic Violence Service<br>திங்கள் முதல் வெள்ளிவரை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை | 03 9898 3145 |
| | உள நல ஆலோசனை மற்றும் ஆதரவு<br>www.safesteps.org.au | 1800 015 188 |
| | Men's Referral Service, Richmond,<br>இலவச அழைப்புக்கள்<br>http://mrs.org.au/about | 1800 065 973 |
| | Men's Referral Service, Richmond,<br>திங்கள் முதல் வெள்ளிவரை காலை 9 இலிருந்து மாலை 9 வரை | 03 9428 2899 |
| WA | Women's Domestic Violence Crisis Service<br>www.dcp.wa.gov.au/CrisisAndEmergency/Pages/Women%27s-Domestic-Violence-Helpline.aspx | 1800 007 339 |
| | Women's Domestic Violence Crisis Service<br>பேர்த்துக்கு வெளியிலிருந்து அழைப்புக்கள் | 08 9223 1188 |
| | Men's Domestic Violence Helpline<br>www.dcp.wa.gov.au/CrisisAndEmergency/Pages/Men%27s-Domestic-Violence-Helpline.aspx | 1800 000 599 |

வீட்டு அல்லது குடும்ப வன்செயல் பிரச்சினைகளுக்கு நடவடிக்கை எடுக்கச் சட்ட உதவி தேவைப்படலாம். மேலதிக தகவல்களை இந்த அத்தியாயத்தின் முடிவில் பார்க்கவும்.

## சம்மதம் அளிப்பதற்கான சட்டமுறையான வயது

இன்னொருவருடன் பாலியல் உறவு வைப்பதற்கு நீங்கள் ஒத்துக்கொள்ள (இணங்குதல்) சட்டம் அனுமதிக்கும் வயதுதான் சட்டமுறையான சம்மதம் அளிக்கும் வயதாகும்.

ஆண்களுக்கும், பெண்களுக்கும் அநேகமான மாநிலங்கள், பிரதேசங்களில் சம்மதமளிப்பதற்கான சட்டமுறையான வயது 16 ஆண்டுகளாகும். தெற்கு ஆஸ்திரேலியா (South Australia) மற்றும் தஸ்மேனியாவில் (Tasmania) அது 17 வயதாகும்.

சம்மதமளிப்பதற்கான வயதை அடையாத குழந்தைகளுடன் ஒரு வயதானவர் பாலுறவு செய்தல் சட்டவிரோதமாகும். சிறுவர் இணங்கினாரா, இல்லையா என்பதனைப் பொருட்படுத்தாது, இந்தச் சட்டத்தை மீறுபவருக்குப் பாரதூரமான தண்டனை வழ்ங்கப்படும்.

White Pages இல் பட்டியலிடப்பட்டுள்ள ஒரு வைத்தியருடன் உரையாடி அல்லது பாலியல் சுகாதார வைத்தியசாலை (கிளினிக்) அல்லது குடும்பக் கட்டுப்பாட்டு வைத்தியசாலை (கிளினிக்) உடன் தொடர்பு கொண்டு அதிகளவில் தெரிந்துகொள்ளலாம்.

## சிறுவர்களின் உரிமைகள்

சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஆஸ்திரேலியா வலுவான பற்றுறுதி கொண்டுள்ளது.

வீடு, பாடசாலை ஆகிய இரண்டு இடங்களிலும், உடல், பாலியல் மற்றும் உணர்பூர்வமாகச் சிறுவர்கள் துஸ்பிரயோகம் செய்யப்படுவதிலிருந்து சட்டத்தால் பாதுகாக்கப்படுகிறார்கள். சிறுவர்களின் மேற்பார்வைக்கும், கவனிப்புக்கும் வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அடித்தல் போன்ற உடல் ரீதியான ஒழுங்குநடவடிக்கையைத் தூண்டக்கூடாது, அத்துடன் குறிப்பிட்டளவு தீங்கை விழைவித்தால், அது சட்டவிரோதமாகும். பாடசாலைகளில் உடல்ரீதியான ஒழுங்கு நடவடிக்கை அனுமதிக்கப்படுவதில்லை.

ஆஸ்திரேலியாவில், சிறுவர் ஒருவருக்குத் தீங்கு விழைவிக்கப்படுவதாகக் கவலைகொண்டால், அதை மாநில மற்றும் பிரதேசச் சிறுவர் பராமரிப்பு அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறு வைத்தியர், ஆசிரியர் போன்ற சிலர் வேண்டப்படுகிறார்கள்.

## சிறுவர் பாதுகாப்பு

ஒரு சிறுவரோ அல்லது இளம் வயதினரோ அவர்கள் பங்குகொள்ளும் நடவடிக்கை தீங்கை அல்லது தீங்கு ஏற்படுவதற்கான சாத்தியம் இருந்தால், சிறுவரின் பாதுகாப்பு மற்றும் உடல்நலத்தை உறுதி செய்வதற்காக சிறுவர் பாதுகாப்புச் சேவையினர் ஈடுபட வேண்டி வரலாம். உங்களுக்கு அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவருக்கு வன்செயல், துஸ்பிரயோகத்திலிருந்து பாதுகாப்புத் தேவைப்பட்டால், பொலிசாரை அல்லது சிறுவர் பாதுகாப்புச் சேவையுடன் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டும்.

மேலதிகத் தகவல்களுக்கு:

| பிராந்தியம் | குழந்தைப் பராமரிப்பு முகவர்கள் | தொலைபேசி 24 மணித்தியால சேவை |
|---|---|---|
| National | Child Abuse Prevention Services<br>http://www.childabuseprevention.com.au/reporting-abuse.html | 1800 688 009 |
| ACT | Office for Children, Youth and Family Support<br>www.communityservices.act.gov.au/ocyfs | 1300 556 729 |
| NSW | Community Services Helpline<br>www.community.nsw.gov.au/preventing-child-abuse-and-neglect | 132 111 |
| NT | Department of Children and Families<br>https://nt.gov.au/law/crime/report-child-abuse | 1800 700 250 |
| Qld | Department of Communities, Child Safety and Disability Services<br>www.communities.qld.gov.au/childsafety/child-safety-services | 1800 811 810 |
| SA | Department for Education and Child Development<br>www.families.sa.gov.au/pages/protectingchildren/HowToNotify | 131 478 |
| Tas. | Department of Health and Human Services Hotline<br>www.dhhs.tas.gov.au/children/child_protection_services | 1300 737 639 |
| Vic. | Department of Human Services - Family Services<br>www.dhs.vic.gov.au/for-individuals/children,-families-and-young-people/child-protection | 131 278 |
| WA | Department for Child Protection and Family Support<br>www.dcp.wa.gov.au/pages/home.aspx | 1800 199 008 |

## பலவந்தமாக மணம் முடித்தல்

ஆஸ்திரேலியாவில் ஒவ்வொருவரும் தாம் திருமணம் புரியவேண்டுமாவெனச் சுதந்திரமாகத் தீர்மானிக்கலாம். ஆஸ்திரேலியாவில், ஒருவரைத் திருமணம் செய்யும்படி வற்புறுத்துவது குற்றமாகும். ஒருவர் பயமுறுத்தப்பட்டு, கட்டாயப்படுத்தப்பட்டு அல்லது ஏமாற்றப்பட்டு அவர் முற்றாகவும் சுதந்திரமாகவும் இணங்காமல் திருமணம் முடிக்கும்போது அது பலவந்தத் திருமணம் எனப்படும்.

எந்த ஒருவரையும் உடல்ரீதியாக, உணர்வுபூர்வமாக, அல்லது உளவியல் ரீதியில் திருமணம் முடிக்கும்படி வற்புறுத்த எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அந்த நபரின் சமய அல்லது இனப் பின்புலம் அவரது பால் அல்லது பாலியல் விருப்புக்கள் அல்லது அவரின் வயது எதுவானாலும் பரவாயில்லை.

ஒருவரை வலுக்கட்டாயமாகத் திருமணம் செய்விப்பதற்காக நாட்டைவிட்டு அனுப்புவது அல்லது வரவழைப்பது அல்லது வேறொருவர் மூலமாக ஒழுங்கு செய்வது சட்டவிரோதமாகும்.

16 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் திருமணம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. 16 க்கும் 18 வயதுக்கும் இடைப்பட்டவர்கள், பெற்றாரின் சம்மதத்துடன் மற்றும் அந்தத் திருமணத்தை அனுமதித்து ஒரு நீதவான் அல்லது நீதிபதியிடமிருந்து பெற்ற ஆஸ்திரேலிய நீதிமன்றக் கட்டளையுடன் மாத்திரம் திருமணம் செய்ய முடியும்.

ஆஸ்திரேலியாவில், ஒழுங்குபடுத்தப்பட்ட திருமணங்கள் சட்டரீதியானவையாகும். இரண்டு தரப்பினரும் இணங்க வேண்டும்.

கட்டாயக் கல்யாணம் மற்றும் உதவி கோரப்படும்போது உங்களையும் ஏனையோரையும் நீங்கள் எவ்வாறு பாதுகாக்க முடியும் என்பது பற்றி மேலும் அறிந்துகொள்ள www.ag.gov.au/forcedmarriage க்குப் போகவும்.

கட்டாய மற்றும் காலத்தால் முந்திய கல்யாணம் பற்றிய தகவல்தாளைக் குடும்பப் பாதுகாப்புப் பொதி (www.dss.gov.au/family-safety-pack) கொண்டுள்ளது.

யாராவதொருவர் கட்டாயக் கல்யாணம் செய்வதற்கு அல்லது அதுபற்றிய ஆபத்திலிருந்தால், 131 237 இல் Australian Federal Police ஐத் தொடர்பு கொள்ளவும்.

பின்வரும் நிறுவனங்களும் உதவக்கூடியதாய் இருக்கலாம்:

| பிராந்தியம் | நிறுவனம், இணையத்தளம் | தொலைபேசி |
|---|---|---|
| National | National Sexual Assault, Domestic and Family Violence Counselling Service<br>www.1800respect.org.au | 1800 737 732 |
| National | Family Law Information<br>http://www.familycourt.gov.au/wps/wcm/connect/fcoaweb/family-law-matters/getting-help/migrants-refugees-language-support | 1300 352 000 |
| National / NSW | Anti-Slavery Australia<br>www.antislavery.org.au | 02 9514 9662 |
| National / NSW | My Blue Sky<br>www.mybluesky.org.au | 02 9515 8815 அல்லது 0481 070 844 (விடயம்) |
| Vic. | Australian Muslim Women's Centre for Human Rights<br>www.ausmuslimwomenscentre.org.au | 03 9481 3000 |

## பெண் இனவிருத்திச் சுகாதாரம் மற்றும் உரிமைகள்

ஆஸ்திரேலியாவில், பெண்களின் இனப்பெருக்க உறுப்பைச் சிதைக்கும் அல்லது வெட்டும் செயற்பாடு (FGM/C) சட்டவிரோதமாகும்.

(FGM/C) நடவடிக்கையானது, மருத்துவக் காரணங்களுக்கல்லாமல், பெண் இனப்பெருக்க உறுப்பின் ஒரு பகுதியை அல்லது அதன் வெளிப்பகுதியை முற்றாக நீக்குதல் அல்லது பெண் இனப்பெருக்க உறுப்புக்கு வேறு காயம் ஏற்படுத்துதல் என்பவற்றை உள்ளடக்கும்.

FGM/C ஐச் செய்துகொள்வதற்காக ஒருவரை எடுத்தல் அல்லது வேறு நாட்டுக்கு அனுப்புதல் அல்லது இன்னொருவரைக்கொண்டு செய்விப்பதற்காக ஒழுங்குபடுத்துதலும்கூடசட்டவிரோதமானதாகும்.

FGM/C, பாரதூரமான மற்றும் நீண்டகாலமாக நீடிக்கக்கூடிய விளைவுகளைக் கொண்டதாகும். இந்தச் செயற்பாடு காரணமாக, ஆஸ்திரேலியாவுக்கு வரும் பெண்கள், சிறுமிகளுக்குச் சுகாதாரப் பிரச்சினைகள் உண்டு.

கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள சிறப்புத் தேர்ச்சி பெற்றோரின் சேவைகள் உதவலாம்:

| ராந்தியம் | மகளிர் இனப்பெருக்க உரிமைகள் சேவை | தொலைபேசி |
|---|---|---|
| National | National Education Toolkit for FGM/C in Australia<br>www.netfa.com.au | |
| ACT | Sexual Health and Family Planning<br>www.shfpact.org.au | 02 6247 3077 |
| | Women's Health Service<br>www.health.act.gov.au/our-services/women-youth-and-children/womens-health-service | 02 6205 1078 |
| NSW | Women's Information and Referral Service<br>www.women.nsw.gov.au | 1800 817 227 |
| | Education Program on FGM<br>http://www.dhi.health.nsw.gov.au/NSW-Education-Program-on-Female-Genital-Mutilation/NSW-Education-Program-on-Female-Genital-Mutilation/default.aspx | 02 9840 3877 |
| NT | Sexual Assault Referral Centre<br>www.health.nt.gov.au/sexual_assault_services<br>Darwin<br>Alice Springs | <br>08 8922 6472<br>08 8955 4500 |
| | Family Planning Welfare Association<br>www.fpwnt.com.au | 08 8948 0144 |

| ராந்தியம் | மகளிர் இனப்பெருக்க உரிமைகள் சேவை | தொலைபேசி |
|---|---|---|
| Qld | Family Planning Queensland (True)<br>www.fpq.com.au அல்லது<br>www.true.org.au | 07 3250 0240 |
| | Multicultural Women's Health – FGM<br>www.true.org.au/resources/resources-overview/multicultural-womens-health-female-genital-mutilation-fgm | 07 3250 0240 |
| SA | Women's Information Service<br>www.wis.sa.gov.au | 1800 188 158 |
| | Women's Health Service<br>www.whs.sa.gov.au | 08 8444 0700 |
| Tas. | Red Cross - Bicultural Community Health Program<br>www.redcross.org.au/bi-cultural-health.aspx | |
| | Child protection service<br>www.dhhs.tas.gov.au/children/child_protection_services | 1300 737 639 |
| | Tasmania police<br>www.police.tas.gov.au | 131 444 |
| | Crime stoppers<br>http://crimestopperstas.com.au | 1800 333 000 |
| Vic. | Royal Women's Hospital<br>www.thewomens.org.au/health-information/<br>உள்ளூர் இலவச அழைப்பு | 03 8345 3058<br>1800 442 007 |
| | South Eastern Centre Against Sexual Assault<br>www.secasa.com.au<br>இலவச அழைப்புக்கள் - 24 மணித்தியாலங்கள்<br>Crisis நெருக்கடி | 1800 806 292<br>03 9594 2289 |
| | Australian Muslim Women's Centre for Human Rights<br>http://ausmuslimwomenscentre.org.au/2014/a-guide-for-responsible-reporting-on-female-genital-cutting | 03 9481 3000 |
| WA | Women's Information Service<br>www.communities.wa.gov.au/communities-in-focus/women/womens-information-service/Pages/default.aspx<br>இலவச அழைப்பு திங்கள் முதல் வெள்ளிவரை, காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை | 1800 199 174 |

| ராந்தியம் | மகளிர் இனப்பெருக்க உரிமைகள் சேவை | தொலைபேசி |
|---|---|---|
| | WA Health, FGM Program<br>www.kemh.health.wa.gov.au/health_professionals/WHCSP/gbv.php | 08 9340 1557 |

## துப்பாக்கிகள் மற்றும் கத்திகள்

ஆஸ்திரேலியாவில், கத்திகள், துப்பாக்கிகள் போன்றவற்றைக் காவித்திரிதல் சட்டத்திற்கு மாறானதாகும். கொண்டுதிரிய அல்லது சொந்தமாக வைத்திருக்க உங்களிடம் அனுமதி இருக்க வேண்டும்.

வழமையாக, துப்பாக்கிப் பாவனை மற்றும் இளையவர்களுக்குத் துப்பாக்கி அல்லது கத்தி விற்பனையில் வயதுக் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. துப்பாக்கிப் பாவனை அல்லது சொந்தமாக வைத்திருத்தலில் ஒவ்வொரு மாநிலம் மற்றும் பிரதேசங்களில் வேறுபட்ட ஒழுங்குகளையும், சட்டங்களையும் கொண்டுள்ளன.

## மிருகங்கள் மற்றும் காட்டுமிருகங்கள்

பொதுவாக, சுதேச மிருகங்கள் மற்றும் எந்தவொரு மிருகத்தையாவது தேசிய பூங்கா அல்லது வேறு இயற்கை வன, மிருகப் பாதுகாப்பு இடங்களில் வேட்டையாடுதல் அனுமதிக்கப்படாது.

மாநிலம், பிரதேசங்களுக்கிடையில் வேட்டை, மீன்பிடிச் சட்டங்கள் வேறுபட்டன. உங்கள் பிரதேசத்திற்குப் பொருத்தமானதை நீங்கள் சரிபார்க்க வேண்டும். சில பிரதேசங்களில் பழக்கப்படாத காட்டு மிருகங்களை நீங்கள் வேட்டையாடக்கூடும். நீங்கள் ஒரு அனுமதி, உரிமம் வைத்திருக்க வேண்டும் அல்லது வேட்டையாடக் கட்டணம் செலுத்தவேண்டும் அத்துடன் நீங்கள் பாவிக்கும் ஆயுதத்திற்கு அனுமதி இருக்கவேண்டும்.

வழக்கமாக ஒரு அனுமதி அல்லது உரிமம் இருந்தால் சமுத்திரத்தில் அல்லது ஆறுகளில் பொழுது போக்காக மீன்பிடிக்க அனுமதிக்கப்படலாம். நீங்கள் பிடிக்கும் மீனின் உருவ அளவு மற்றும் எண்ணிக்கைக்குப் பொதுவாக மட்டுப்பாடுகள் உண்டு.

ஆஸ்திரேலியாவில் மிருகங்களைக் கொடுமைப்படுத்தல், மற்றும் கவனியாது விடுவதிலிருந்து காப்பாற்றச் சட்டங்கள் உண்டு. மிருகங்களையும், பறவைகளையும் தவறாக நடாத்தும் ஆட்களுக்கு அபராதம் விதித்தல் அல்லது சிறைப்படுத்தல் அல்லது இரண்டும் நடக்கலாம். வீட்டில் மிருகங்களை வைத்திருக்கச் சட்டம் அனுமதி அளிக்கிறது ஆனால், பொதுவாக, ஆஸ்திரேலிய சுதேச மிருகங்களை வைத்திருக்க விஷேட அனுமதி தேவை.

கொல்லைப் புறத்தில் மிருகங்களைக் கொல்லுதல் தடுக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 12, *மக்கள் பங்களிப்பையும்* பார்க்கவும்.

## புகைத்தல், குடித்தல் மற்றும் போதைவஸ்துகள்

புகைத்தல் ஆரோக்கியத்திற்கு ஆபத்தானது அத்துடன் ஆஸ்திரேலியாவில், இறப்பு மற்றும் நோய்க்கான முன்னணிக் காரணங்களில் ஒன்றாகும்.

வைத்தியர்கள் மற்றும் மருந்தாளர்கள் போன்ற வாழ்க்கைத்தொழில் புரிவோரிடமிருந்து புகையிலை மற்றும் புகைத்தலை எவ்வாறு கைவிடுவது என்பது பற்றிய தகவல்களைப் பெறலாம். 13 7848 (13 Quit), அல்லது www.quitnow.gov.au இல் Quitline போன்ற சேவைகளிடமிருந்தும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

சிறுவர்கள் இருக்கும் வண்டிகள் (கார்கள்) மற்றும் அலுவலகங்கள், வேலை இடங்கள், பொருட்கள் வாங்கும் நிலையங்கள், வைத்தியசாலைகள், சுகாதார நிலையங்கள் (கிளினிக்), உபசரிப்பு இடங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் உட்பட அநேகமான பொது இடங்களில் புகைத்தல் அனுமதிக்கப்படுவதில்லை.

18 வயதுக்கும் குறைந்த ஒருவருக்கு புகையிலைப் பொருட்களை விற்பது அல்லது விநியோகிப்பதும் சட்டவிரோதமாகும்.

ஆஸ்திரேலியாவில் மதுபானம் அருந்துதல் சட்டமுறையானதாகும் ஆனால் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில் மாத்திரம் அருந்தலாம். எந்தவொரு நாளிலும் தரமான இரண்டு பானங்களுக்கு மேல் பருகக்கூடாதென மதுபானப் பாவனை வழிகாட்டிகள் சிபாரிசு செய்கிறது.

வயது வராத ஒருவருக்கு மதுபானத்தை ஒருவர் விற்பதோ அல்லது விநியோகிப்பதோ சட்டத்திற்கு முரணானதாகும். தனியார் வீடு போன்ற, தனியார் சொத்தில் தவிர 18 வயதுக்கும் குறைவான எந்தவொரு நபரும் மது அருந்துவது சட்டத்திற்கு முரணானதாகும். அநேகமான பொது இடங்களிலும் மது அருந்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

சில போதை வஸ்துக்களை ஆட்கள் வைத்திருத்தல், விற்றல் அல்லது பாவித்தலைத் தடுக்க ஆஸ்திரேலியாவில் சட்டங்கள் உண்டு. போதைப்பொருட் சட்டங்களை மீறுவது அபராதம், சிறைவாசம் உட்பட, கடுமையான தண்டனைகளுக்கு இட்டுச் செல்லும். சட்டவிரோத போதைப்பொருள் பாவனையாளர்களுக்கும், மற்றும் விநியோகித்தல், உற்பத்திசெய்தல் அல்லது அவற்றை விற்கும் வியாபாரத்தைச் செய்பவர்களுக்கு மிடையிலான வேறுபாட்டை ஆஸ்திரேலிய போதைப்பொருள் சட்டங்கள் காட்டுகிறன.

போதைப்பொருள் அல்லது மதுபானம் அருந்திவிட்டு வண்டியோட்டுவது சட்டவிரோதமானது. போதைவஸ்தை எடுத்தபின்னர் அல்லது மதுபானத்தை அருந்திவிட்டு ஓட்டினால், உங்கள் சாரதி அனுமதியை இழக்க, அபராதம் விதிக்கப்பட, சிறைக்குப் போக அல்லது இவை எல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டிவரலாம். அத்தியாயம் 8, *போக்குவரத்தினையும்* பார்க்கவும்.

நீங்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவர் சட்டவிரோத, போதைப்பொருள் அல்லது மதுபானம் அருந்துவதால் சிக்கல்களுக்கு உள்ளானால், உங்கள் வைத்தியர், உங்கள் உள்ளூர் சமூக சுகாதார சேவை அல்லது உங்கள் மாநிலம் அல்லது பிரதேசத்திலுள்ள மது அல்லது போதைப்பொருள் ஆதரவுடன் (ஹெல்ப் லைன்) பேசவும்:

| மாநிலம் அல்லது பிராந்தியம் | மதுபானம், போதைவஸ்து தகவல் சேவைக்கான தொலைபேசி |
|---|---|
| ACT | 02 6207 9977 |
| NSW | 02 9361 8000 (Sydney)<br>1800 422 599 (NSW நாட்டுப்புறம்) |
| NT | 08 8922 8399 (Darwin)<br>08 8951 7580 (மத்திய ஆஸ்திரேலியா)<br>1800 131 350 (பிரதேசம் முழுவதும்) |
| Qld | 1800 177 833 |
| SA | 1300 131 340 |
| Vic. | 1800 888 236 |
| Tas. | 1800 811 994 |
| WA | 08 9442 5000 (Perth)<br>1800 198 024 (WA நாட்டுப்புறம்) |

மேலதிகத் தகவல்களுக்கு:

| முகவர் அல்லது இயக்கம் | இணையத்தளம் |
|---|---|
| National Tobacco Campaign | www.quitnow.gov.au |
| Department of Health | www.alcohol.gov.au/ |
| National Drugs Campaign | www.drugs.health.gov.au/ |
| Australian Drug Information Network | www.adin.com.au/content.asp?Document_ID=38 |

## தாவர அல்லது மிருக இறக்குமதிக் கட்டுப்பாடுகள்

நீங்கள் கணினி மூலம் நேரடியாகப் பொருட்களை வாங்கினால், அல்லது ஆஸ்திரேலியாவிலிருந்து போய் வந்தால், என்ன தாவரங்கள் மற்றும் விலங்குகளை நீங்கள் உங்களுடன் கொண்டுவர முடியும் என்பது பற்றி விதிகள் இருக்கின்றன. பாருங்கள் போகவும்: www.environment.gov.au/biodiversity/wildlife-trade/travellers-shoppers

உங்களது பயணப்பை வனவிலங்குச் சட்டங்களை மீறுகின்றனவா எனப் பார்ப்பதற்குப் போகவும்: www.environment.gov.au/biodiversity/wildlife-trade/travellers-shoppers/tourist-souvenirs

ஆஸ்திரேலியாவுக்குள்ளே எவ்வித தாவரங்கள் மற்றும் விலங்குகளை ஏற்றிச் செல்லலாமென்பது பற்றிய சட்டங்கள் உண்டு. ஆஸ்திரேலியாவுக்குள்ளே பயணம் செய்யத் திட்டமிட்டால், நீங்கள் போய்ச்சேரவேண்டிய இடத்திற்குக் கொண்டுசெல்வதற்கான வேண்டுதல்களைப் பார்ப்பதற்குப் போகவும்: www.quarantinedomestic.gov.au/

## ஏனைய சட்டங்கள்

ஆஸ்திரேலியாவில் மரணதண்டனை கிடையாது.

குப்பைவீசுதல், மாசுபடுத்துதல் அல்லது அனுமதி இல்லாமல் பயனற்ற பொருட்களை வைத்தல் அல்லது கூடுதலான சத்தத்தை ஏற்படுத்துதலுக்கு எதிரான சட்டங்கள் உண்டு.

### அயலவருடன் தகராறு

பல்வேறு விடயங்களில் அயலவர்களுக்கிடையிலான தகராறும் சட்டத்தில் இடம்பெறுகிறது. நீதிமன்றத்திற்குப் போவதற்குப் பதிலாக இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவும் தகராறு தீர்க்கும் மற்றும் நடுவராக இணங்கித் தீர்க்கும் சேவைகள் இருக்கின்றன.

மேலதிகத் தகவல்களுக்கு:

| மாநிலம் அல்லது பிரதேசம் | சேவை | இணையத்தளம் |
|---|---|---|
| ACT | Conflict Resolution Service | www.crs.org.au/pdf/Healthy_neighbourhoods_brochure.pdf |
| NSW | Information about the law in NSW | www.legalanswers.sl.nsw.gov.au/guides/neighbours/ |
| NT | Community Justice Centre | www.cjc.nt.gov.au/ |
| Qld | Queensland Government | www.qld.gov.au/law/housing-and-neighbours/ |
| SA | Legal Services Commission of SA | www.lawhandbook.sa.gov.au/ch31s01.php |
| Tas. | Hobart Community Legal Service | www.hobartlegal.org.au/tasmanian-law-handbook/community-and-environment/neighbourhood-disputes/introduction |
| Vic. | Victoria Legal Aid | www.legalaid.vic.gov.au/find-legal-answers/disputes-with-neighbours |
| WA | Legal Aid WA | www.legalaid.wa.gov.au/InformationAboutTheLaw/Homes/neighbours/Pages/NeighboursCommonProblems.aspx |

அத்தியாயம் 12, *மக்கள் பங்களிப்பையும்* பார்க்கவும்

## சட்ட உதவி

மக்களின் சட்ட உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் குறித்து அவர்களுக்கு அறிவிப்பதற்கும், நீதித்துறையை அணுகுவதற்குமான வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கும் ஒவ்வொரு மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் நிறுவனங்கள் இருக்கின்றன.

குற்றமுறையான விடயங்கள், குடும்ப முறிவு, குடும்ப வன்செயல், புலம்பெயர்வு, உளநலம், சமூகப் பாதுகாப்பு, கடன் மற்றும் வாகனப் போக்குவரத்துக் குற்றங்கள் குறித்து தகுதியுடைய கட்சிக்காரர்களுக்குச் சட்ட ஆலோசனையைச் Legal Aid முகவர்கள் வழங்குகிறார்கள்.

| மாநிலம் அல்லது பிரதேசம் | சட்ட உதவி முகவர் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| ACT | Legal Aid ACT | 1300 654 314 | www.legalaidact.org.au/ |
| NSW | Legal Aid NSW | 1300 888 529 | www.legalaid.nsw.gov.au/ |
| NT | Northern Territory Legal Aid Commission | 1800 019 343 | www.nt.gov.au/ntlac |
| Qld | Legal Aid Queensland | 1300 651 188 | www.legalaid.qld.gov.au/ |
| SA | Legal Services Commission of South Australia | 1300 366 424 | www.lsc.sa.gov.au/ |
| Tas. | Legal Aid Commission of Tasmania | 1300 366 611 | www.legalaid.tas.gov.au/ |
| Vic. | Victoria Legal Aid | 1300 792 387 | www.legalaid.vic.gov.au/ |
| WA | Legal Aid Western Australia | 1300 650 579 | www.legalaid.wa.gov.au/ |

பல்வேறுபட்ட விடயங்களில் சட்ட ஆலோசனை மற்றும் உதவியை சமூக, சட்ட நிலையங்கள் வழங்குகின்றன. உங்களது சட்ட உரிமைகள், பொறுப்புக்கள் பற்றி நீங்கள் அதிகளவில் அறிந்துகொள்ள, சமூக வகுப்புக்களையும் சில வழங்குகின்றன.

| தேசிய சட்ட நிறுவனங்கள் | இணையத்தளம் |
|---|---|
| National Association of Community Legal Centres | www.naclc.org.au/ |
| Children’s and Youth Law Centre | www.lawstuff.org.au/ |
| Women’s Legal Services | www.wlsa.org.au/ |

# 7 வீட்டு வசதி

## இந்தப் பகுதியில்

ஆஸ்திரேலியாவில் வீட்டைத் தேடி எடுப்பது சிரமமானதாகலாம். மற்றும் வாடகை விலைகூடியதாகலாம். குறிப்பாக, பெரிய குடும்பங்கள், தமது எல்லாத் தேவைகளுக்கும் பொருத்தமான நீண்டகால தங்குமிட வசதியைத் தேடி எடுப்பது சிரமமானதாகலாம். நீங்கள் விட்டுக்கொடுத்துக் கிடைக்கக்கூடிய வீட்டைப் பெறவேண்டிவரலாம்.

- குறுகிய காலத் தங்குமிடவசதி
- தனியார் வீடு அல்லது அடுக்குமாடிவீட்டை வாடகைக்கு எடுத்தல்
- வீட்டுவசதிக்கான உதவி
- வாடகைக்குடியிருப்பாளர்களின் உரிமைகளும், பொறுப்புக்களும்
- வீடு அல்லது அடுக்குமாடி குடியிருப்பு வாங்குதல்
- வீட்டுக்கான அவசிய சேவைகள்
- வீட்டுக்குரிய குப்பை சேகரிப்பு மற்றும் மீள்சுழற்சி
- தபால் (அஞ்சல்)

## குறுகிய காலத் தங்குமிடவசதி

நீங்கள் முதலில் வந்துசேர்ந்ததும் ஆலோசிக்கக்கூடிய குறுகியகாலத் தங்குமிட விருப்புக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:

- விடுதிகள் மற்றும் தள்ளுபடி விலையில் தங்குமிடங்கள்
- நீங்கள் ஆஸ்திரேலியாவில் கல்விகற்றால், நீங்கள் குடியேறத் தீர்மானித்துக்கொண்டிருக்கையில் தற்காலிக மாணவர் விடுதிகளுக்கான வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கலாம். உங்களது நிறுவனத்தின் சர்வதேச ஆதரவு உத்தியோகத்தருடன் பேசுங்கள் அல்லது அவர்களது இணையத்தளத்தில் ஆராய்ந்து பாருங்கள். சர்வதேச மாணவர்களுக்கான தங்குமிட வாய்ப்புக்களுக்காகப் பார்க்கவும்: www.studyinaustralia.gov.au/global/live-in-australia/accommodation
- ஆஸ்திரேலியாவில், மாணவர் மட்ட வாழ்க்கைச் செலவு குறித்து ஓர் ஆலோசனையைப் பெறப் போகவும் www.studyinaustralia.gov.au/global/live-in-australia/living-costs

## தனியார் வீடு அல்லது அடுக்குமாடிவீட்டை வாடகைக்கு எடுத்தல்

வீட்டுச் சொந்தக்காரருக்காகச் செயற்படும் ஒரு ஆதன முகவரிடமிருந்து ஒரு வீடு அல்லது அடுக்குமாடி வீடு வழமையாக வாடகைக்கு எடுக்கப்படுகிறது. வீட்டுச் சொந்தக்காரரிடமிருந்து நீங்களும் நேரடியாக வாடகைக்கு எடுக்கலாம். கணினியில் நேரடியாக மற்றும் புதினப்பத்திரிகையில் 'To let' மற்றும் 'Accommodation vacant' பகுதியில் வாடகை வீடுகள் விளம்பரப்படுத்தப்படுகிறன. நீங்கள் ஆதனமுகவர் பணிமனைக்குச் சென்று அவர்களின் வாடகைக்கு விடப்படும் வெற்றிடமான வீடுகளின் பட்டியலைப் பார்ப்பதற்காகக் கேட்கலாம். ஒரு 'குத்தகை (lease)' அல்லது 'குடியிருப்பு வாடகை உடன்படிக்கை (residential tenancy agreement)', வாடகைக்குடியிருப்பாளருக்கும், வீட்டு உரிமையாளருக்கும் இடையில்

சட்டரீதியாக எழுதப்பட்ட ஓர் ஒப்பந்தமாகும். ஒப்பமிட முன்னர் கால அவகாசத்தைப்பற்றி நீங்கள் இணக்கம் காண முடியுமானாலும், வழக்கமாக இது குறிப்பிட்ட ஒரு காலமான ஆறு அல்லது பன்னிரண்டு மாதங்களுக்கானதாக இருக்கும். காலம் முடிவடையும்போது நீங்கள் குத்தகையைப் புதுப்பிக்கலாம். ஓர் எழுத்திலான ஒப்பந்தத்தை வைத்திருப்பதானது, வாடகைக் கட்டணம், எப்போது அதைச் செலுத்தவேண்டும், பயன்பாடுகளுக்குப் பணம் செலுத்துபவர் யார் (மின்சாரம், தண்ணீர், எரிவாயு, குப்பை சேகரிப்பு மற்றும் ஏனைய சேவைகள் போன்றவை) பரிசோதனைக்காலம், செல்லப்பிராணி அனுமதிக்கப்படுகிறதா? அத்துடன் எவ்வளவு காலம் நீங்கள் வீட்டில் தங்கலாம் என்பவை போன்ற குத்தகை நிபந்தனைகள் முன்கூட்டியே இணக்கம் காணப்பட்டுள்ளன எனப் பொருள்படும்.

ஒத்துக்கொள்ளப்பட்ட காலத்திற்கு முன்னர் நீங்கள் விட்டுச் செல்வதானால் ("குத்தகை முறிப்பு" (breaking a lease) எனப்படும்), குறித்த செலவுகள் இருக்கக்கூடுமாதலால், நீங்கள் இருக்கக்கூடிய காலத்திலும் பார்க்க அதிகப்படியாக நீடிக்கக்கூடிய ஒரு குத்தகைக்கு உங்களையே நீங்கள் ஆளாக்கிக்கொள்ள வேண்டாம்.

வழமையாக வாடகை ஆரம்பத்தில், ஒருமாத வாடகை முற்பணம் மற்றும் வாடகைப் பிணைப் பணத்தை நீங்கள் செலுத்த வேண்டும். பிணைப் பணமாவது வீட்டுச் சொந்தக்காரருக்குச் செலுத்தப்படும் வைப்புப் பணமாகும். பல்வேறு மாநிலங்கள், பிரதேசங்களில் தொகை மாறுபடுகிறது. உங்கள் மாநிலம் அல்லது பிரதேசத்தில் குடியிருப்பு குத்தகைக்குப் பொறுப்பான அதிகாரியிடம் உங்கள் பிணைப்பணத்தை வீட்டுச் சொந்தக்காரர் அல்லது ஆதனமுகவர் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். நீங்கள் விட்டுச் செல்லும்போது கொடுக்கப்படவேண்டிய வாடகை இல்லாமலும், வீடு சேதப்படுத்தப்படாது சுத்தமாகவும் இருந்தால், பிணைப்பணம் உங்களுக்குத் திருப்பிச் செலுத்தப்படும்.

நீங்கள் வீட்டுக்குள் போகமுன்னர், வீடு இருக்கின்ற நிலவரம் மற்றும் வீட்டுக்கு ஏதாவது சேதம் ஏற்கனவே ஏற்பட்டிருந்தால் அதனையும் 'நிலவர அறிக்கை (condition report)' என அழைக்கப்படும் ஆவணத்தில் பதிவு செய்யப்படுகிறது. இது உங்களாலும், வீட்டுச் சொந்தக்காரராலும் அல்லது அவரது ஆதனமுகவரால் பூர்த்திசெய்யப்படுகிறது அத்துடன் இது நீங்கள் வீட்டைவிட்டுப் போகும்போது கருத்து வேறுபாடுகளைத் தவிர்க்க உதவும். ஏதாவது சேதம் இருந்தால், வீட்டுச் சொந்தக்காரருக்குக் கட்டாயம் அதை அறிவித்து ஆதனத்திற்கு ஏதாவது மாற்றம் செய்யவதாயின் அவரின் அனுமதியைப் பெறவேண்டும். திருத்தவேலைகளுக்கு வழமையாக வீட்டுச் சொந்தக்காரரே பொறுப்பாவார்.

*ஒப்பமிட்டபின் அதற்கு நீங்கள் சட்டபூர்வமாகக் கட்டுப்பட வேண்டுமாகையால், நீங்கள் வீட்டை நன்றாகப் பார்க்காது விட்டால் அத்துடன் ஆவணததிலுள்ள விடயங்கள், நிபந்தனைகளை முற்றாக நீங்கள் விளங்கிக்கொள்ளாவிட்டால் குத்தகை ஒப்பந்தத்தில் கையொப்பமிடவேண்டாம்.*

வீட்டை இன்னொருவருக்கு குத்தகைக்குவிடவோ (அதாவது இன்னொருவருக்குக் குத்தகைக்கு விடுவது ஒப்பந்தத்தில் இல்லை), சட்டப்படியான குடியிருப்பாளரின் எண்ணிக்கையை அதிகரிக்குமாதலால் நீண்டகால விருந்தினரை வீட்டில் வைத்திருக்கவோ அனுமதிக்கப்படமாட்டீர்கள்.

வெளியேற விரும்பினால், வீட்டுச் சொந்தக்காரருக்குப் போதிய அறிவிப்புக் கொடுக்க வேண்டும் (பொதுவாக, ஆகக்குறைந்த நான்கு வாரம் அல்லது குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டவாறு).

## வீட்டுவசதிக்கான உதவி

குத்தகைப் பிணைப்பணம் மற்றும் முதல்மாத முற்பணத்தைச் செலுத்துவதற்கு உதவியாக, குறைந்த வருமானத்திலிருக்கும் மக்கள் தற்காலிக வசிப்பிடம் அல்லது நிதிஉதவியை அரசாங்கத்திடமிருந்து பெறத் தகுதியடையலாம்.

Rent Assistance என்பது, குறைந்த வருமானத்திலிருக்கும் மக்கள் தமது வாடகையைச் செலுத்த உதவுவதற்கான அரசாங்கக் கொடுப்பனவாகும். (www.humanservices.gov.au/rentassistance).

### அரசாங்க வீட்டுவசதி

நீங்கள் Centrelink கொடுப்பனவுகளைப் பெறுபவரானால், அல்லது குறைந்த வருமானத்திலிருந்தால் அரசாங்கத்திற்குச் சொந்தமான வீட்டைக் குத்தகைக்குப் பெற விண்ணப்பிக்கலாம்.

நீங்கள் அரசாங்க வீட்டில் இருந்தால், தனியார்க்கான வாடகையை விடவும் குறைந்த அளவான வாடகைப் பணத்தை நிதியுதவியுடன் செலுத்துவீர்கள்.

எங்கே நீங்கள் வாழ விரும்புகிறீர்கள், வீட்டின் அளவு மற்றும் வீட்டுத்தேவைக்கான அவசியத்தின் பிரகாரம் அரசாங்க வீட்டுக்கான காத்திருப்புக் காலம் வேறுபடும்.

மேலதிகத் தகவல்களுக்கு:

| மாநிலம் அல்லது பிரதேசம் | வீட்டுவசதிகள் அதிகாரிகள் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| ACT | Housing and Community Services | 133 427 | www.communityservices.act.gov.au/hcs |
| NSW | Housing NSW | 1300 468 746 | www.housing.nsw.gov.au |
| NT | Department of Housing | 08 8999 8814 | https://nt.gov.au/property/public-housing |
| Qld | Department of Housing and Public Works | 13 74 68 | www.qld.gov.au/housing/public-community-housing |
| SA | Housing SA | 131 299 | www.housing.sa.gov.au |
| Tas. | Housing Tasmania | 1300 135 513 | www.dhhs.tas.gov.au/housing |

| மாநிலம் அல்லது பிரதேசம் | வீட்டுவசதிகள் அதிகாரிகள் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| Vic. | Office of Housing | 1300 650 172 | www.housing.vic.gov.au/public-housing |
| WA | Department of Housing | 1800 093 325 | www.housing.wa.gov.au |

## வீடற்றவர்களுக்குத் தங்குமிட உதவி

நீங்கள் வீடற்றவரானால், அல்லது வீட்டு வசதிகளை இழக்கும் ஆபத்து வருமானால், கீழே அட்டவணைப்படுத்தப்பட்டிருக்கும் அவசரகால வீட்டுவசதிகள் அல்லது அதற்கான சிபாரிசுகளை வழங்கும்.

| பிரதேசம் | சேவை மற்றும் இணையத்தளம் | தொலைபேசி |
|---|---|---|
| National | Homelessness Australia<br>www.homelessnessaustralia.org.au/index.php/are-you-homeless | 02 6247 7744 |
| ACT | FirstPoint<br>www.firstpoint.org.au | 1800 176 468 |
| NSW | Link2Home<br>www.facs.nsw.gov.au/about_us/news/link2home | 1800 152 152 |
| NT | ShelterMe<br>www.shelterme.org.au | |
| Qld | Homeless Hotline<br>www.qld.gov.au/housing/emergency-temporary-accommodation/homeless-persons-information-qld/ | 1800 474 753 |
| SA | Help in Crisis Situations<br>www.sa.gov.au/topics/housing-property-and-land/housing/emergency-shelter-and-homelessness/accessing-services | 1800 003 308 |
| Tas. | Housing Connect<br>www.dhhs.tas.gov.au/housing/housing_connect | 1800 800 588 |
| Vic. | Crisis and emergency accommodation<br>www.housing.vic.gov.au/crisis-and-emergency-accommodation | 1800 825 955 |
| WA | Homelessness Advisory Service<br>www.housing.wa.gov.au/housingoptions/homelessadvisoryservice | 1800 065 892 |

## வாடகைக்குடியிருப்பாளர்களின் உரிமைகளும், பொறுப்புக்களும்

பலதடவைகள் பல்வேறு மொழிகளில் வாடகைக்குடியிருப்பாளர்களுக்கு அவர்களது உரிமைகள், பொறுப்புக்கள் பற்றிய அறிவுரைகளை வழங்கும் அரசாங்க அதிகாரிகள் எல்லா மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருக்கிறார்கள்:

| மாநிலம் அல்லது பிரதேசம் | வீட்டுவசதிள் நியாய விலை அதிகாரி | தொலைபேசி |
|---|---|---|
| ACT | Access Canberra<br>www.accesscanberra.act.gov.au/app/answers/service/images/favicon.ico | 13 22 81 |
| NSW | NSW Fair Trading<br>www.fairtrading.nsw.gov.au/ftw/Tenants_and_home_owners/Renting_a_home.page | 13 32 20 |
| NT | Consumer Affairs<br>www.consumeraffairs.nt.gov.au/ForConsumers/ResidentialTenencies | 1800 019 319 |
| Qld | Residential Tenancies Authority<br>www.rta.qld.gov.au/ | 1300 366 311 |
| SA | Consumer and Business Services<br>www.sa.gov.au/topics/housing-property-and-land/housing/renting-and-letting/renting-privately | 131 882 |
| Tas. | Consumer Affairs and Fair Trading<br>www.consumer.tas.gov.au/renting | 1300 654 499 |
| Vic. | Consumer Affairs Victoria<br>www.consumer.vic.gov.au/housing-and-accommodation/renting/during-a-lease-or-residency/rent-and-other-payments/rent-receipts | 1300 558 181 |
| WA | Department of Commerce<br>www.commerce.wa.gov.au/publications/tenant-guide-renting-home-wa | 1300 304 054 |

வாடகைக் குடியிருப்பாளருக்கு அறிவுரை வழங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களும் உண்டு:

| மாநிலம் அல்லது பிரதேசம் | வாடகைக்குடியிருப்பாளர் இணையத்தளம் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| ACT | Tenants' Union ACT | 02 6247 2011 | www.tenantsact.org.au/contactUs/Tenants-Advice-Service |
| NSW | Tenants NSW | | www.tenants.org.au |
| NT | NT Tenants' Advice Service | 1800 812 953 | www.dcls.org.au/legal-and-advocacy-services/tenants-advice |
| Qld | Tenants Queensland | 1300 744 263 | http://tenantsqld.org.au/info-for-tenants |

| மாநிலம் அல்லது பிரதேசம் | வாடகைக்குடியிருப்பாளர் இணையத்தளம் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| SA | Tenants Information and Advisory Service | 1800 060 462 | www.syc.net.au/tias/overview |
| Tas. | Tenants Union of Tasmania | 1300 652 641 | http://tutas.org.au |
| Vic. | Tenants Union of Victoria | 03 9416 2577 | www.tuv.org.au |
| WA | Tenancy WA<br>உள்ளூர் இலவச அழைப்பு | 08 9221 0088<br>1800 621 888 | www.tenancywa.org.au |
| National | Real Estate Institute of Australia | | http://reia.asn.au/consumers/renting-or-leasing-a-property |

## வீடு அல்லது அடுக்குமாடி குடியிருப்பு வாங்குதல்

புதினப்பத்திரிகைகள் அல்லது கணினியில் நேரடியாக விற்பனைக்கான வீடுகள் அல்லது அடுக்குமாடிக் குடியிருப்புகள் வழக்கமாக விளம்பரப்படுத்தப்படுகின்றன. விற்பனைக்கான வீடுகளை ஆதன முகாமையாளர்களும் பட்டியலிடுகிறார்கள். நீங்கள் ஆஸ்திரேலியாவில் முதல் தடவையாக ஒரு வீட்டை வாங்குவீர்களானால், முதல் வீட்டு உரிமையாளர் அரச நிதிஉதவிக்குத் தகுதி பெறக்கூடும் (பாருங்கள்: www.firsthome.gov.au).
ஆஸ்திரேலியாவின் நிரந்தரக் குடியிருப்பாளராக நீங்கள் இல்லாதுவிட்டால், வீடொன்றை வாங்குவதற்கு, வெளிநாட்டு முதலீட்டு அங்கீகாரம் தேவை (பார்க்கவும்: www.firb.gov.au/real-estate).

நீங்கள் ஒரு வீடுவாங்குவதற்குக் காசு கடன்பட வேண்டுமானால், வங்கி அல்லது வேறு நிதி நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளவும். ஆஸ்திரேலியாவில், ஆதனம் வாங்கும்போது, கொடுக்கல் வாங்கலைச் சமாளிப்பதற்கு மக்கள் வழமையாக ஒரு சட்டவாளர் அல்லது உடமைமாற்றுபவரைப் பாவிக்கிறார்கள். நியதிகள், நிபந்தனைகளை நீங்கள் முற்றாக விளங்கிக்கொள்ளாது விட்டால், எந்தவொரு ஒப்பந்தத்திலும் கையொப்பமிடவேண்டாம்.

ஆதனம் வாங்குவதுபற்றி மேலதிக தகவல்ளுக்காகப் போகவும்
www.australia.gov.au/information-and-services/family-and-community/housing-and-property

## வீட்டுக்கான அவசிய சேவைகள்

நீங்கள் குத்தகைக்கு எடுத்தாலோ அல்லது வாங்கினாலோ, தண்ணீர், மின்சாரம் மற்றும் எரிவாயு போன்ற வீட்டுப் பயன்பாட்டுத் தொகுதிகளை ஆதனத்துடன் இணைத்துக் கொள்வித்தல் அவசியமாகும். நீங்கள் இருக்கும் இடத்தைப் பொறுத்து இந்தச் சேவைகளை வழங்குபவர்கள் ஒருவேளை அரசாங்க முகவர்களாக அல்லது தனியார் நிறுவனங்களாக இருக்கலாம்-தொலைபேசித் தகவல் புத்தகத்தைப் பரிசீலிக்கவும்.

புதிய வீடொன்றுக்குப் போகமுன்னர் பொதுவாக ஒருசில நாட்கள் முன்பதாக அறிவித்தலை நீங்கள் சேவை வழங்குனோருக்குக் கொடுக்கவேண்டும்.

வீட்டுப்பாவனைக்குரிய சேவைகளுக்கான ஒப்பந்தத்தைக் கையொப்பமிடமுன்னர், நிச்சயம் இந்தச் சேவைகள் தேவைதானா என நிச்சயப்படுத்திக் கொள்ளவும். உதாரணமாக, நீங்கள் தற்காலிக வசிப்பிடத்தில் வசித்துவந்தால் மின்சார விநியோகத்திற்காக மூன்று ஆண்டுகளுக்குரிய ஒப்பந்தத்தில் ஒப்பமிட வேண்டாம். விநியோகஸ்தர்களுடனான ஒப்பந்தமொன்றைக் கையொப்பமிட முன்னர், ஒப்பந்தத்தின் நியதிகள், நிபந்தனைகளை விளங்கிக் கொள்வது முக்கியமாகும். வீட்டில் பாவிக்கக்கூடிய இச் சேவைகளைச் சமாளிப்பதற்கு www.accc.gov.au/publications/managing-energy-services-at-home இல் ஒரு உதவி வழிகாட்டி கிடைக்கும். ஆஸ்திரேலியச் சக்தி ஒழுங்குபடுத்துபவர் (Australian Energy Regulator) உம் மேலதிக தகவல்களை www.aer.gov.au/consumers/aer-resources இல் தருகிறார்.

நிறுவனம் தங்கள் சேவைகளுக்கான கட்டணத்திற்குரிய விலைப்பட்டியலை உங்களுக்கு ஒழுங்காக அனுப்பும். கொடுக்கவேண்டிய தினத்தில் பணம் கொடுக்க முடியாது போனால், அல்லது கொடுப்பனவுச் செயல்முறையில் மாற்றம் செய்ய விரும்பினால், உடனடியாக அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.

உங்கள் கட்டணங்களைச் செலுத்துவதில் உங்களுக்கு சிக்கல் இருந்தால் உங்கள் விநியோகஸ்தர் உங்களுக்கு உதவலாம், அத்துடன் உங்கள் சேவைகள் துண்டிக்கப்படுவதை நீங்கள் தவிர்க்கலாம்.

### மின்சாரம், எரிவாயு

நீங்கள் ஒரு மின்சாரம் மற்றும் எரிவாயு விநியோகஸ்தரைத் தெரிவுசெய்ய உதவுவதற்காகவும், உங்கள் உரிமைகளைத் தெரிந்து கொள்ளவும், காணொளி அடங்கிய தகவல்களுக்காக Energy Made Easy www.energymadeeasy.gov.au/ இல் ஆஸ்திரேலிய அரசாங்க இணையத்தளத்திற்கு வருகை தரவும்.

ஒரு விநியோகஸ்தரைத் தெரிவுசெய்யும் போது பரிசீலிக்க நினைவில் இருக்கட்டும்:

- ஒப்பந்தம் எவ்வளவு காலத்திற்குரியது

- நீங்கள் முன்கூட்டியே வெளியேறினால், இணைப்பை மேற்கொள்ள கட்டணம் இருக்கிறதா,
- நீங்கள் சலுகைகள் அல்லது வருமான ஆதரவு பெறுகிறீர்களாவென்பது விநியோகஸ்தருக்குத் தெரியுமா.

பல எண்ணிக்கையிலும், பல்வேறு மொழிகளிலும் (www.energymadeeasy.gov.au/publications-0) அத்துடன் உங்களது மின்சார, எரிவாயு விநியோகஸ்தருடனான பிரச்சினை ஒன்றினைத் தீர்க்க முடியாதுபோனால் தொடர்புகொள்வதற்கு வலு குறைகேள் அதிகாரிகளின் (energy ombudsmen) பட்டியல் ஒன்றுடனான (www.energymadeeasy.gov.au/useful-contacts) தகவல்த் தாளும் Energy Made Easy இல் இருக்கிறது.

## Centrepay

Centrelink வாடிக்கையாளருக்காக தன்னார்வக் கட்டணம் செலுத்தும் சேவையை Centrepay இலவசமாகச் செய்கிறது. (பார்க்கவும்: www.humanservices.gov.au/customer/services/centrelink/centrepay). உங்கள் கட்டணங்கள் (bills), செலவுகள் மற்றும் வாடகை, எரிவாயு, மின்சாரம், தண்ணீர், தொலைபேசி போன்ற வீட்டுக்கான கொடுப்பனவுகளுக்காக Centrelink கட்டணத்திலிருந்து ஒழுங்காகப் பணத்தைக் கழிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய நீங்கள் Centrepay ஐப் பாவிக்கலாம். எந்த நேரமும் நீங்கள் ஆரம்பிக்கவோ அல்லது கழிவை மாற்றவோ இயலும். www.my.gov.au இல் myGov ஊடாக Centrelink ஐப் பாவித்து நேரடியாகக் கணனியில் அதைச் செய்வது மிகவிரைவான வழியாகும்.

## தொலைபேசி, இணையத்தளம்

ஆஸ்திரேலியாவில், கைபேசிகள் 'அலைபேசி' எனவும் உங்கள் வீட்டில் இணைக்கப்பட்ட தொலைபேசிகளை 'நிலக்கீற்று தொலைபேசிகள்' அல்லது'நிலக்கீற்றுக்கள்' (landlines) எனவும் சொல்லப்படும்.

இந்தச் சேவைகளுக்கான ஒப்பந்தங்கள் பல வேளைகளில் 'திட்டங்கள்' (plans) என அழைக்கப்படும். 'அலைபேசித் திட்டம் (mobile plan)', 'நிலக்கீற்றுத் திட்டம் (landline plan)', 'இணையத்திட்டம் (internet plan)' எனும் வார்த்தைகளைப் பதிவுசெய்வதன் மூலம் நீங்கள் நேரடியாகக் கணினியில் தொலைபேசி மற்றும் இணையத்தளச் சேவைகளை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

ஒப்பந்தத்தைக் கையொப்பமிட முன்னர், நிறுவனத்துடனான நிபந்தனைகளைக் கவனமாகச் சரிபார்க்கவும் அத்துடன், *சர்சைக்குரிய தகவல் சுருக்கம் (Critical Information Summary)* என அழைக்கப்படும் சிறிய ஆவணத்தை வாசிக்கவும்.

இவை ஆஸ்திரேலியாவின் தொலைபேசி மற்றும் இணையத்தள ஒப்பந்தங்கள் பற்றிய சில பொதுவான விபரங்களாகும்:

- வழமையாகச் சேவைகளுக்கு இணைப்புக் கட்டணம் வேண்டும்.
- உங்களுக்கு ஓர் ஆண்டு அல்லது இரண்டு ஆண்டு ஒப்பந்தம் செய்யத் தேவைப்படலாம்.
- நடமாடும் அகல அலைவரிசை (mobile broadband)க்காக அழைப்புகளுக்கான உதவித்தொகை அல்லது ஒரு தகவல் உதவிப்பணத்தை (data allowance) ஒவ்வொரு மாதமும் அநேக நடமாகும் சேவைகள் கொண்டிருக்கின்றன. அத்துடன் அனுமதிக்கப்பட்ட தொகையை மீறினால், நீங்கள் அதிகம் செலுத்தவேண்டி ஏற்படலாம்.
- அனுமதிக்கப்பட்ட உங்கள் மாதாந்த தொகையில் 50%, 85% அல்லது 100% ஐக் கடந்துவிட்டீர்களெனப் பாவனை அறிவிப்பைச் (spend management service ) - குறும் செய்தி அல்லது மின்அஞ்சல் பல சேவைகள் உள்ளடக்கும்.
- முற்பணம் செலுத்தப்பட்ட சேவைகளை (பாவனைக்கு முன்னர் பணம் செலுத்தப்பட்ட) அல்லது தபால் கட்டணம் செலுத்தப்பட்ட (விநியோகஸ்தர் ஒழுங்காகக் கட்டணச் சீட்டை அனுப்புவார்)சேவைகளில் இருந்து தெரிவுசெய்யலாம்.

நீங்கள் ஒரு தொலைபேசி அல்லது இணையத்தளக் கட்டணச் சீட்டைப் பெற்று, அதனைச் செலுத்த வேண்டிய திகதியில் செலுத்த முடியாவிட்டால், நீங்கள் நிறுவனத்துடன் தொடர்ப்புகொள்ள வேண்டும்.

மாதாந்தத் தொலைபேசி உதவிப்பணத் திட்டத்திற்குள், வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புகள் பல வேளைகளில் அடங்காது. இந்த அழைப்புகள் விலையுயர்ந்தவைகளாகலாம். நீங்கள் கவனமாக வெளிநாட்டு அழைப்புகளை அவதானிக்கவேண்டி வரலாம். அல்லது ஏற்கனவே பணம் செலுத்தப்பட்ட அட்டைகளைப் பாவியுங்கள் (அதிக நேரம் திறந்திருக்கும் கடையில் பெறலாம்).

இணையத்தினை வீட்டில் பொருத்த அல்லது அதை வான் அலைவரிசைச் சாதனம் (wireless device) ஊடாகப்பெற நீங்கள் விரும்பினால், ஒரு இணையத்தளச் சேவை விநியோகத்தருடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் கைச்சாத்திட முன்னர், உங்களுக்குக் கட்டுப்படியாகும் அத்துடன் உங்கள் தேவைகளை அது பூர்த்தியாக்கும் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவும். வான் அலைவரிசை இணையத்தை முற்பணம் செலுத்தியும் நீங்கள் வாங்கலாம்.

கட்டுப்படியாகக்கூடிய இணைய வாய்ப்புக்கள் மற்றும் பயிற்சிகளை இலவசமாகத் தரக்கூடிய பல செயற்திட்டங்களுண்டு. உதாரணமாக, பொது நூல் நிலையங்கள், உள்ளூர் சபைகள் ஒருவேளை இலவச இணைய வாய்ப்புக்களை வழங்கக்கூடும்.

(www.tio.com.au/members/members-listing இல் பட்டியலிடப்பட்டுள்ள) Telecommunications Industry Ombudsman (TIO) திட்டத்தில் உறுப்பினர்களாக இருக்கும் தொலைபேசி மற்றும் 'இன்ரர்நெற்' நிறுவனங்களை மாத்திரம் நீங்கள் பாவிக்க வேண்டும்.

உங்கள் தொலைபேசியில் அல்லது இணையச் சேவையில் ஏதாவது தவறு ஏற்பட்டு, அதை நிறுவனம் தீர்க்க முடியாது போனால் TIO ஐத் தொலைபேசி 1800 062 058 இல் அல்லது www.tio.com.au/making-a-complaint க்குப் போய் ஓர் இலவச முறைப்பாட்டைச் செய்யலாம்.

## வீட்டுக்குரிய குப்பை சேகரிப்பு மற்றும் மீள்சுழற்சி

உள்ளூர் சபைகள் பொதுவாக கழிவுப்பொருள் சேகரிப்பை நிர்வகிக்கின்றன. சாதாரண வீட்டுக் குப்பைகள் மற்றும் போத்தல்கள், தகரப்பேணிகள், கடதாசி மற்றும் அட்டைப்பெட்டிகள் போன்ற மீள்சுழற்சிக்குரிய பொருட்களுக்காகத் தனியான தொட்டிகள் உள்ளன.

சேகரிப்புத் தினங்களை அறிந்துகொள்ள, உங்கள் உள்ளூர் சபையை அல்லது உங்கள் அயலவர்களைக் கேளுங்கள். *அத்தியாயம் 12 குடிமக்கள் பங்களிப்பையும்* பாருங்கள்.

## தபால் (அஞ்சல்)

நீங்கள், கடிதங்களையும், பொதிகளையும்(பார்சல்) Australia Post பெட்டிகள் அல்லது அலுவலகங்கள் ஊடாக அனுப்பலாம். வெளிநாட்டு அஞ்சலுக்கான முத்திரைகள் ஆஸ்திரேலிய அஞ்சலுக்கான முத்திரையைவிட அதிக செலவாகும். விலைச் சீட்டுக்களுக்கான(bills) பணத்தினைச் செலுத்துதல், கடவுச்சீட்டுக்கான புகைப்படம் பிடித்தல் போன்ற ஏனைய சேவைகளையும் Australia Post வழங்குகிறது (பாருங்கள் www.auspost.com.au).

நீங்கள் வீட்டை மாற்றினால், உங்கள் புதிய முகவரிக்குத் கடிதங்களைத் திருப்பி அனுப்புவிக்கலாம். (பாருங்கள்; www.auspost.com.au/parcels-mail/redirecting-your-mail.html). செலவுக்கான தள்ளுபடிக்கு நீங்கள் தகுதியுடையவராகலாம். உங்கள் புதிய முகவரியை ஏனைய நிறுவனங்களுக்கும் Australia Post அனுப்ப முடியும்.

# 8 போக்குவரத்து

## இந்தப் பிரிவில்

நீண்ட தூரங்களால் பிரிக்கப்பட்ட மாநகரங்களையும், நகரங்களையும் தனனகத்தே கொண்ட ஆஸ்திரேலியா ஒரு பாரிய நாடாகும். நகரங்களுக்கிடையிலும், அல்லது நாட்டினூடாகவும் பயணிக்கப் பல்வேறு போக்குவரத்துக்களைத் தெரிவுசெய்யலாம்.

- பொதுசனப் போக்குவரத்து
- வாடகை வண்டிச் (டாக்ஸி) சேவைகள்
- மிதிவண்டி (சைக்கிள்) ஓட்டம்
- நடத்தல்
- தனியார் வாகனங்கள்

## பொதுசனப் போக்குவரத்து

ஆஸ்திரேலியாவில் பேருந்துகள், தொடருந்துகள், 'ட்ராம்' மற்றும் படகுப் பயணம் ஆகியன பொதுசனப் போக்குவரத்துக்குள் அடங்கும். அநேகமான சேவைகளைப் பெற்றுக்கொள்ள நீங்கள் ஒரு கட்டணத்தைச் செலுத்த வேண்டும் அல்லது ஒரு பயணச்சீட்டை வாங்கவேண்டும். பொதுவாக, மாணவர்கள், முதியவர்கள், Health Care Card வைத்திருப்போர் சலுகைக் கட்டணங்களைப் பெறலாம். நாளாந்த அல்லது தனியான பயணச் சீட்டுக்களைவிட, வாராந்த அல்லது மாதாந்தப் பயணச்சீட்டுக்கள் மலிவானவை.

பல உள்ளூர் சபைகள், விருந்தினர் மையங்கள், நேரடிக்கணனி, தொடரூந்து நிலையங்கள், நூல் நிலையங்கள், பொதுத் தகவல் நிலையங்களிலிருந்து தகவல்களையும்,
நேர அட்டவணைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

| மாநிலம் அல்லது பிரதேசம் | பொதுசனப் போக்குவரத்து முகவர் | இணையத்தளம் |
|---|---|---|
| ACT | ACTION | www.action.act.gov.au |
| NSW | Transport NSW | www.transport.nsw.gov.au/ |
| NT | Department of Transport | http://nt.gov.au/driving/public-transport-cycling |
| Qld | Translink | www.translink.com.au |
| SA | Transport SA | www.sa.gov.au/topics/transport-travel-and-motoring/public-transport-and-travel |
| Tas. | Metro Tasmania | www.metrotas.com.au |
| Vic. | Metlink | www.metlinkmelbourne.com.au |
| WA | Public Transport Authority | www.pta.wa.gov.au |

## வாடகை வண்டிச் (டாக்ஸி) சேவைகள்

ஆஸ்திரேலியாவின் அநேகமான பகுதிகளில் ‘டாக்ஸி’ அல்லது வாடகை வண்டிகள் நாளொன்றில் 24 மணித்தியாலங்கள் செயற்படுகின்றன. முகப்புப்பெட்டி (dashboard) யிலுள்ள அளவுக்கருவி கட்டணத்தைக் காட்டும். Yellow Pages இல் ‘வாடகை வண்டிகள்’ என்பதற்குக் கீழ் டாக்ஸி நிறுவனங்கள் நேரடியாக பட்டியலிடப்பட்டிருக்கின்றன. இயலாமையுடனான அல்லது சக்கரக் கதிரையைப் பாவிக்கும் மக்களுக்குக் கிடைக்கக் கூடியதாக விசேட டாக்ஸிகள் அநேக நகரங்களில் இருக்கின்றன. நீங்கள் குழந்தைப் பிள்ளைகளுடன் பயணம் செய்வதானால், பதிவு செய்யும்போது ஒரு குழந்தை ஆசனம் தேவையென டாக்ஸி நிறுவனத்துக்குத் தெரியப்படுத்தவும்.

சில இடங்களில், டாக்ஸி போக்குவரத்துக்குப் பதிலாக ‘ஊபர்’ அல்லது வழமைக்குமாறாக ஆட்கள் குழுவாகப் பயணிக்கும் ஒழுங்குகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

## மிதிவண்டி (சைக்கிள்) ஓட்டம்

வீதி விதிகள் எல்லாவற்றையும், குறியீடுகளையும் மிதிவண்டியோட்டிகள் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். இயக்கக்கூடிய தடுப்புகள், மணி, உங்கள் மிதிவண்டியில் இருக்க வேண்டும். நீங்கள் ஒரு மிதிவண்டி ஓட்டினால், நீங்களும் எந்தவொரு பயணியும் கட்டாயம் ஒரு தலைக்கவசம் அணியவேண்டும். இரவில் ஓட்டும்போது, உங்கள் மிதிவண்டியில் முகப்பு மற்றும் பின்புற விளக்குகள் இருக்க வேண்டும். எப்பொழுதும் மிதிவண்டியை விட்டுச் செல்லும்போது அதைப் பூட்டிவைக்கவும்.

மிதிவண்டியோட்டிகள், பொதுமக்கள் போக்குவரத்துடன் இணையும் மிதிவண்டிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிறுத்துமிடங்கள் அல்லது பாதைகள் (வீதியில் அல்லது வீதிக்கப்பால்) போன்ற மிதிவண்டியோட்டத்தை ஊக்குவிப்பதற்கான ஏற்பாடுகள் உங்கள் உள்ளூர் பிரதேச அல்லது நகரப்பிரதேசங்களில் விசேடமாகச் செய்யப்பட்டுள்ளன.

மிதிவண்டிப் பாதை கிடைக்கக்கூடியதாக இருந்தால், அது பாதுகாப்பானதாகையால், நீங்கள் கட்டாயம் அதில் செலுத்தவேண்டும், சில நகரங்கள் மற்றும் பிரதேசங்கள் இதைக் கோருகின்றன. ஒரு மிதிவண்டிப் பாதை இல்லாது போனால், பாதுகாப்பான அளவுக்கு நீங்கள் வீதியின் இடது பக்கத்துக்கு அருகாமையாக ஓட்டவேண்டும்.

## நடத்தல்

ஆஸ்திரேலியாவில் நடத்தல் ஒரு பிரபல்யம் வாய்ந்த பொழுதுபோக்குச் செயல்பாடாகும்.

போக்குவரத்து வழிகாட்டி விளக்குகளில் அல்லது நடைபாதையில் வீதியைக் கடவுங்கள். வாகனத்தை அவதானிப்பதற்காகக் கவனமாக உங்கள் இடது, வலது பக்கங்களைப் பார்க்கவும்.

புதருக்குள் நடக்க நீங்கள் திட்டமிட்டால், நீங்கள் அதற்கான கருவிகளைக் கொண்டுள்ளீர்களா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதுடன் நீங்கள் எங்கே போகிறீர்களென்பதை யாராவதொருவருக்குத் தெரிவிக்கவும்.

## தனியார் வாகனங்கள்

நீங்கள் சொந்தமாக வைத்திருந்து, விரும்புவதுபோல் பாவிக்கும் போக்குவரத்து, தனியார் போக்குவரத்தாகும். அநேகமான ஆஸ்திரேலியர்கள் சொந்தப் பாவனைக்காகக் கார்கள் அல்லது மோட்டார் சைக்கிள்களைப் பாவிக்கிறார்கள். சொந்தமாகக் கார் வைத்திருப்பது வசதியானது ஆனால் விலையுயர்ந்தது. ஆஸ்திரேலியாவில் கார் சொந்தமாக வைத்திருப்பதும், ஓட்டுவதும் பல பொறுப்புக்களுடன் கூடியதாகும்.

ஓடிப்போகும் காரில் இடம் கேட்பது, அறியாதவருடன் அவரின் காரில் அல்லது பாரஉந்து (ட்ரக்)கில் இலவசமாகப் பயணம் செய்வது பாதுகாப்பற்றதுடன், சிபாரிசு செய்யக்கூடியதல்ல.

### வாகன சாரதி அனுமதிப்பத்திரம்.

ஆஸ்திரேலியாவில், ஒரு மகிழுந்து (காரை) அல்லது விசையுந்து (மோட்டார் சைக்கிளை) ஓட்டுவதற்கு உங்களிடம் ஒரு சாரதிக்குரிய அனுமதிப்பத்திரம் இருக்க வேண்டும். நீங்கள் ஓட்டும்பொழுது எப்பொழுதும் அதை வைத்துக்கொள்ளுங்கள்.

வேறு நாட்டிலிருந்து வந்த ஒரு சாரதி அனுமதிப்பத்திரம் உங்களிடம் இல்லையானால், ஒரு Learner's Permit ஐ எடுப்பதற்கு நீங்கள் Driver Knowledge Test இல் சித்தியடைய வேண்டும். நீங்கள் ஒரு அனுமதிபெற்ற சாரதியுடன் சேர்ந்து பயிலுவதற்கு Learner’s Permit உங்களை அனுமதிக்கும். நீங்கள் ஓட்டும்பொழுது உஙகள் காரில் “L” தகடு இருக்கவேண்டும்.

தகுந்த திறமைகளை நீங்கள் பெற்றதும், ஒரு Provisional சாரதிக்குரிய அனுமதிக்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம். ஒரு Provisional Licence ஐப் பெறுவதற்கு நீங்கள் குறைந்தது 17 வயதுடையவராக, மொத்தமாக ஆறுமாத காலம் சாரதி இசைவு அட்டையை (permit) வைத்திருந்திருக்க வேண்டும் அல்லது வேறுமாநில அல்லது வெளிநாட்டுச் சாரதி அனுமதிப் பத்திரத்தை வைத்திருக்க வேண்டும். நீங்கள் ஓட்டும்போது “P” தகட்டைக் கட்டாயம் வைத்திருக்க வேண்டும்.

உங்களது Provisional காலம் கடந்துவிட்டால், நீங்கள் ஒரு தடைகளற்ற அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம். உங்கள் அனுமதிப்பத்திரத்தில் நிபந்தனைகள் இருந்தால், அதற்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.

பார்க்கவும்: [அத்தியாயம் 1, வந்து சேர்ந்ததும் உடனடியாகச் செய்யவேண்டியது என்ன]

## வாகன ஓட்டத்துக்குப் பொருந்தக்கூடிய சட்டங்கள்

வாகன ஓட்டுதலுக்குப் பிரயோகிக்கப்படும் சட்டங்களை நீங்கள் அறிந்திருப்பதுடன் அவைற்றிற்குப் பணிந்து நடக்கவும் வேண்டும். உதாரணமாக:

- நீங்கள் ஓட்டும் வாகனம் கட்டாயமாக அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- உங்கள் காரில் இருக்கும் ஒவ்வொருவரும் கட்டாயமாக ஆசனப்பட்டி அணிய அல்லது சரியான குழந்தைத் தடைக்கட்டு இருக்க வேண்டும்.
- ஓட்டும்போது அலைபேசி (mobile phone)யைப் பாவிப்பது சட்ட விரோதமானது.
- வீதி விபத்தில் நீங்கள் சம்மந்தப் பட்டால், அதை உடனடியாக நீங்கள் பொலிசாருக்கு அறிவிக்க வேண்டும்.

ஆஸ்திரேலியாவில் வாகனச் சட்டங்கள் மிகவும் கடுமையானவை. மாநிலத்துக்கு மாநிலம் ஓட்டுனர் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் வேறுபடுகின்றன. வாகனச் சட்டங்களுக்குப் பணிய மறுத்தால் அல்லது மீறினால், அதிக அபராதம், அனுமதிப்பத்திர இழப்பு அல்லது மறியல்வரையான விழைவுகளைக் கொண்டுவரும். சட்டவிரோதமாக வாகனம் நிறுத்தப்படுவதும் பெருந்தொகைப் பணத்துடனான அபராதத்தை விழைவிக்கும். வேகக் கட்டுப்பாடுகள் வலியுறுத்தப்படுகின்றன. வேகக் கட்டுப்பாட்டை மீறுவோரை பிடிப்பதற்காக வேகக்கண்காணிப்புக் கமராக்கள் பாவிக்கப்படுகின்றன.

ஓட்டும்போது மது அருந்துதல், அல்லது போதைக்குள்ளாதல், அல்லது போதைப்பொருளுக்கு ஆளாதல் சட்டவிரோதமானது. மாநிலங்கள் அல்லது பிரதேசங்கள் அத்துடன் வைத்திருக்கும் வாகன சாரதி அனுமதிப்பத்திர வகுப்பைப் பொறுத்து இரத்தத்தில் அனுமதிக்கப்பட்ட மதுசாரத்தின் அளவு வேறுபடும். வாகனச் சாரதிகள், சட்டமுறையான மதுசார மட்டத்தை மீறிவிட்டார்களா எனப் பார்ப்பதற்குப் பொலிசார் திடீரென அவர்களைச் சோதனையிடுவார்கள். [அத்தியாயம் 6, ஆஸ்திரேலிய சட்டம்].

மேலதிகத் தகவல்களுக்கு:

| மாநிலம் அல்லது பிரதேசம் | வீதிப்போக்குவரத்து அதிகாரசபை | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| ACT | Road Transport Authority | 13 22 81 | www.rego.act.gov.au |
| NSW | Roads and Maritime Services | 13 22 13 | www.rms.nsw.gov.au |
| NT | Department of Transport | 1300 654 628 | https://nt.gov.au/driving |
| Qld | Department of Transport and Main Roads | 13 23 80 | www.tmr.qld.gov.au/ |

| மாநிலம் அல்லது பிரதேசம் | வீதிப்போக்குவரத்து அதிகாரசபை | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| SA | Transport | 13 10 84 | www.transport.sa.gov.au |
| Tas. | Transport Tasmania | 1300 135 513 | www.transport.tas.gov.au |
| Vic. | VicRoads | 13 11 71 | www.vicroads.vic.gov.au |
| WA | Department of Transport | 13 11 56 | www.transport.wa.gov.au/index.asp |

## ஆசனப்பட்டியும், குழந்தைத் தடுப்புக்காப்பும்

உங்கள் காரில் இருக்கும் ஒவ்வொருவரும் ஆசனப்பட்டி அல்லது ஒரு சரியான குழந்தை தடுப்புக் காப்பைப் பாவிக்க வேண்டும். ஆசனபபட்டி அணியாமல் ஓட்டுவதற்கு அபராதம் உண்டு, நீங்கள் உங்கள் சாரதி அனுமதிப்பத்திரத்தை இழக்கக்கூடும். சகல கார்களிலும் முதியவர்கள் மற்றும் வயதான சிறுவர்களுக்கு ஆசனப் பட்டிகள் இருக்கின்றன.

ஏழு வயது வரையான குழந்தைகளுக்கும், இளம் சிறுவர்களுக்கும் அரசாங்கத்தின் விசேட அங்கீகாரம் பெற்ற தடுப்புக் காப்புகள் உங்களுக்குத் தேவை. குழந்தைக்கு அதன் வயதுக்கு ஏற்றபடி ஆஸ்திரேலிய தரக்கட்டுப்பாட்டை அனுசரித்தும், செம்மையாக வாகனத்துடன் பொருத்தப்பட்டும், தக்கவாறு அமைத்துக்கொள்ளக் கூடியதாகவும் குழந்தைத் தடுப்புக் காப்புகள் இருக்கவேண்டும்.

- ஆறு மாதங்கள் வரையான வயதுடைய குழந்தைகள் பின்புறம் நோக்கிய குழந்தைத் தடுப்புக் காப்பில், உதாரணமாகத் தனியான குழந்தை இருக்கை, தடுத்துவைக்கப்பட வேண்டும்.
- பின் நோக்கிய அல்லது முன் நோக்கிய குழந்தைத் தடுப்புக் காப்பில், உதாரணமாக குழந்தைப் பாதுகாப்பு ஆசனம், ஆறு மாதத்திலிருந்து நான்கு வயது வரையான குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.
- சரியாகச் சீர்ப்படுத்தி, ஆசனப்பட்டி அல்லது குழந்தைப் பாதுகாப்பு நாடாவால் இறுக்கமாகக் கட்டப்பட்டு முன்பக்கம் நோக்கிய அல்லது உந்துவிசையுடனான ஆசனத்தில் நான்கு வயதிலிருந்து ஏழு வயதுவரையான குழந்தைகள் பாதுகாக்கப் படுகின்றன.

வாகனத்தின் முன் ஆசனத்தில் இளம் பிள்ளைகள் இருக்க அனுமதிக்கப்படுவதில்லை. ஏழு வயதுக்கும் குறைந்த பிள்ளைகள் ஏனைய பின் ஆசனங்களில் அமர்ந்திருந்தாலன்றி நான்குக்கும் ஏழுக்கும் இடைப்பட்ட வயதுடைய சிறுவர்கள் முன்ஆசனத்தில் அமர அனுமதிக்கப்படுவதில்லை.

குழந்தைப் பாதுகாப்புத் தடுப்புக்காப்பு ஆசனங்களை வாடகைக்கு வாங்குவதற்கு www.kidsafe.com.au ஐப் பார்க்கவும்.

### கார் வாங்குதல்

கணனியில் நேரடியாகவும், புதினப்பத்திரிகை வாயிலாகவும் புதிய, பாவித்த வாகனங்கள் விற்பனைக்காக விளம்பரம் செய்யப்படுகின்றன. அவற்றை, புதிய கார் காட்சிஅறைகள் மற்றும் பாவித்த கார்வைத்திருக்கும் வளவுகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

வழமையாக, பதிவுக்கட்டணம், முத்திரைக்கட்டணம் (இது விற்பனை வரி போன்ற), கட்டாயக் காப்புறுதி என்பன காரின் கொள்விலைக்குள் அடங்காது. இவ்வாறான செலவுகள் வேறாகச் செலுத்தப்படவேண்டும்.

வாகனம் ஒன்றினை வாங்குவதற்குப் பணம் கடன் எடுப்பது பற்றிய தகவலுக்கு, உங்களது வங்கி, அல்லது ஒரு நிதிநிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும். கடனுக்காக ஏதாவதொரு ஒப்பந்தத்தில் கையொப்பமிட முன்னர் எல்லா நியதிகளையும் நிபந்தனைகளையும் நீங்கள் விளங்கிக்கொள்வதை நிச்சயப்படுத்துவது நினைவிலிருக்கட்டும்.

நீங்கள் வாங்கும் காரின் முன்னைய சொந்தக்காரர் வாகனத்தின் மீதான கடனைச் செலுத்தாதிருந்தால், கடனைப் பெறவேண்டிய நிறுவனத்தால் சட்டமுறையாக அந்தக்காரை எடுக்க அல்லது மீளவும் சொந்தம்கொள்ள இயலும். வாகனத்திற்கு முன்னைய சொந்தக்காரன் கடன்கொடுக்க வேண்டுமா என்பதைச் சரிபார்க்க Personal Property Securities Register (PPSR) ஐத் தொடர்பு கொள்ளவும்.

இந்த வாகனம் களவாடப்பட்டதாகப் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டிருந்தால், வாகன அபராதங்களைச் செலுத்தாத காரணத்தால் பதிவுநீக்கம் செய்யப்பட்டிருந்தால், பதிவுஅழிக்கப்பட்டதாகப் பதிவு செய்யப்பட்டிருந்தால், பிரயாணதூர அளவுகருவியில் குறுக்கீட்டுக்கான சாத்தியம் காரணமாக (பயணித்த தூரத்தின் அளவில் மோசடி மாற்றம்) Commissioner for Fair Trading இல் பதியப்பட்டிருந்தால், PPSR உங்களுக்குத் தெரிவிப்பார். மேலதிக தகவல்களுக்காக, தொலைபேசி 1300 007 777 இல் அழையுங்கள் அல்லது http://www.ppsr.com.au/individuals க்குப் போகவும்.

பாவித்த வாகனங்களை வாங்க இருக்கும் கொள்வனவுக்காரருக்கான வாகனப் பரிசோதனை, பயணத் தகவல்கள், காப்புறுதி மற்றும் வீதிச் சேவை (உங்கள் வாகனம் பழுதடைய நேர்ந்தால்) போன்ற சேவைகளை எல்லா மாநிலங்கள், பிரதேசங்களில் இருக்கும் வாகன ஓட்டுனர் சங்கங்கள் வழங்குகின்றன. அங்கத்தவர், அங்கத்தவரல்லாதவர் எவராயினும் பலவித சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

| பிராந்தியம் | மோட்டார் உரிமையாளர் சங்கம் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| National | Australian Automobile Association | 02 6247 7311 | www.aaa.asn.au |
| ACT | National Road Motorists Association (NRMA) | 132 132 | www.nrma.com.au |
| NSW | National Road Motorists Association (NRMA) | 132 132 | www.nrma.com.au |
| NT | Automobile Association of Northern Territory (AANT) | 08 8925 5901 | www.aant.com.au |
| Qld | Royal Automobile Club of Queensland (RACQ) | 13 1905 | www.racq.com.au |
| SA | Royal Automobile Association (RAA) | 08 8202 4600 | www.raa.net |
| Tas. | Royal Automobile Club of Tasmania (RACT) | 132 722 | www.ract.com.au |
| Vic. | Royal Automobile Club of Victoria (RACV) | 137 228 | www.racv.com.au |
| WA | Royal Automobile Club (RAC) | 131 703 | www.rac.com.au |

# 9 உடல் நலமும் நல்வாழ்வும்

## இந்தப் பகுதியில்


- அறிமுகம்
- Medicare
- Health Care Card
- தனியார் சுகாதாரக் காப்புறுதி
- மருத்துவ உதவி
- அம்புலன்ஸ் செலவுகள்
- மருந்துகள்
- மாநில, பிரதேச சுகாதார சேவைகள்
- இயலாமைக்கான சேவைகள்
- உளநலச் சேவைகள்
- சித்திரவதை, உணர்வதிர்ச்சி உளநல ஆலோசனை
- குழந்தைப் பாதுகாப்பும் விபத்துத் தவிர்ப்பும்
- தடுப்புமருந்து
- பல் சேவைகள்
- ஆஸ்திரேலியாவில் முதியோர் பராமரிப்பு சேவைகள்
- முதியோர் அல்லது சுகாதாரப் பராமரிப்புச் சேவைகள் பற்றிய முறைப்பாடுகள்
- ஒரு மரணத்தைத் தொடர்ந்து


## அறிமுகம்

ஆஸ்திரேலியாவில், எந்தவொரு சுகாதாரக் கவனிப்புச் சேவைகளுக்கும், அத்தியாவசியம் இல்லையானால், முதலில் சந்திக்க வேண்டியவர் உங்களது general practitioner (GP) ஆவார். உங்கள் உடல் பராமரிப்பு தேவைகளை மதிப்பிட்டு ஒரு சிகிச்சைக்கான நடைமுறையைத் தீர்மானிப்பார். மருந்து எழுதிக்கொடுத்தல், நோயியல் அல்லது வியாதியைக் கண்டறியும் நிலையத்துக்கு சிபாரிசு செய்தல், அறுவைச்சிகிச்சையாளர், அல்லது மருத்துவ ஆலோசகர் போன்ற ஒரு சிறப்பு வைத்தியருக்குப் பரிந்துரைத்தல் என்பவற்றை இது உள்ளடக்கும்.

நீங்கள் உங்களது சொந்த GP ஐத் தேர்ந்து எடுக்கலாம். GP பணம் அறவிடும் ஒழுங்குகளைப் பொறுத்து Medicare ஆல் GP யின் கட்டணத்தில் ஒரு பகுதியோ அல்லது முழுவதும் உங்களுக்குத் திருப்பித் தரப்படும்.

# Medicare

Medicare என அழைக்கப்படும் ஒரு தேசிய சுகாதாரப் பராமரிப்புத் திட்டத்தினூடாக மருத்துவ மற்றும் வைத்தியசாலைச் செலவுகளை நீங்கள் செலுத்துவதற்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் உதவுகிறது. Medicare க்குக் கீழே, நீங்கள் வைத்தியசாலையால் நியமிக்கப்பட்ட ஒரு வைத்தியரால் ஒரு பொது வைத்தியசாலையில் சிகிச்சை செய்யப்படும் ஒரு பொது நோயாளியானால், சிகிச்சை மற்றும் தங்குமிட வசதிகள் இலவசமாகும். சுகாதார வாழ்க்கத்தொழிலாளரிடம் நீங்கள் போவதற்கான செலவுகளுக்கு (வைத்தியர்கள்,

சிறப்புவைத்தியர்கள், கண்பரிசோதகர்கள் மற்றும் சிலவேளைகளில் பல்வைத்தியர், மற்றும் அதனோடிணைந்த சுகாதார உத்தியோகத்தர்கள் போன்றவர்கள்) Medicare உதவும். நீங்கள் வைத்தியரை அடிக்கடி பார்த்தால் அல்லது பரிசோதனைகளை ஒழுங்காகச் செய்தால், உங்களது மருத்துவச் செலவுகள் அதிகரிக்கலாம். Medicare Safety Net தொடக்கநிலையை அடைந்ததும் சுற்றுலா வைத்தியர் அல்லது பரிசோதனைகளை மேற்கொள்ளும் செலவு குறைவாகலாம்.

குடியேற்றவாசிகள்,அகதிகள் மற்றும் மனிதாபிமான வருகை தந்தோரின் வீசாவைப் பொறுத்துப் பொதுவாக Medicare இன்கீழ் சுகாதாரப் பராமரிப்புக்கு உடனடி வாய்ப்புக் கிடைக்கும். ஏனைய தற்காலிக வருகையாளர் தனியார் உடல்நலக் காப்புறுதி வைத்திருக்க வேண்டும்.

சில வைத்தியர்கள், சுகாதார வாழ்க்கைத்தொழிலர் காசில்லாமல் மருந்து எழுதிக் கொடுப்பர். பணம் பெறாத இந்த வைத்தியர் நேரடியாக Medicare க்கு அனுபிப் பணத்தைப் பெறுவர், நீங்கள் உங்கள் பணத்தைக் கொடுக்க வேண்டியதில்லை. ஏனைய வைத்தியர் மற்றும் சுகாதார வாழ்க்கைத் தொழிலர் தங்கள் சேவைக்கு உங்களிடம் பணம் அறவிடலாம். அப்படியானால், உங்கள் உடல்நல வாழ்க்கைத் தொழிலருடன் கலந்துரையாடுங்கள் அல்லது Medicare நன்மைகளைக் கோருவது பற்றிய அதிக தகவல்களுக்காகப் போகவும்: www.humanservices.gov.au/medicare உங்கள் சுகாதார வாழ்க்கைத் தொழிலரைப் பார்க்கப் போகும் பொழுது நீங்கள் கட்டாயம் Medicare அட்டையைக் (அத்துடன் Health Care Card உங்களிடம் இருப்பின் அதையும்) கொண்டுவர வேண்டும்.

Pharmaceutical Benefits Scheme (PBS) இன்கீழ், சில மருந்துகளின் செலவுக்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் உதவுகிறது. உங்களுக்கு அதிகளவு மருந்து தேவைப்பட்டால், டாக்டர் எழுதிக்கொடுக்கும் மருந்துக்கான செலவுக்கு PBS Safety Net உதவக்கூடும். நீங்கள் PBS Safety Net தொகைக்கு வந்துவிட்டால் அத்துடன் ஒரு மருந்தாளர் PBS Safety Net Card ஒன்றை உங்களுக்குக் கொடுத்திருந்தால், உங்கள் PBS மருந்துகள் மலிவானவையாகும் அல்லது ஆண்டின் மிகுதியாயிருக்கும் காலத்துக்கு இலவசமாகும். மிகவும் விலையுயர்ந்த சின்னம் பொறித்த மருந்துகள் அல்லது வைத்தியர் எழுதிக்கொடுத்த மருந்தை நீங்கள் தெரிவுசெய்தால், அப்பவும் நீங்கள் அதிக பணம் செலுத்த வேண்டிவரும். நீங்கள் www.pbs.gov.au/pbs/home இல் PBS பற்றிய அதிக தகவல்களைக் காணலாம்.

தனிப்பட்ட நோயாளருக்காக அம்புலன்ஸ் பணம், பல் மற்றும் அத்துடன் இணைந்த சுகாதார சேவைகள், மூக்குக் கண்ணாடிகள் அல்லது வைத்தியசாலை தங்குமிட வசதிகளுக்காக Medicare பணம் **செலுத்தாது**.

Medicare இல் சேர்ந்துகொள்ள உங்களுக்கு தகுதியிருக்கிறதாவென அறிந்துகொள்ள, Department of Immigration and Border Protection அல்லது Visa Entitlement Verification Online இடமிருந்து ஒரு சான்று போன்ற தகுதியாக்கும் ஆவணங்கள், உங்கள் கடவுச்சீட்டு அல்லது Immicard உடன் Medicare Service Centre க்குப் போகவும். நீங்கள் தகுதி பெற்றால், உங்களுக்கு ஒரு Medicare இலக்கம் தரப்படும். அதைப்பாவித்து உடனடியாக நீங்கள் சுகாதார பராமரிப்புச் சேவைகளுக்கான வாய்ப்பினைப் பெறலாம். அதே அட்டையில் உங்கள் குடும்ப அங்கத்தவர்களும் சேர்க்கப்பட்டிருந்தால், உங்கள் பெயரும் அத்துடன் அவர்களின் பெயர்களுடனான உங்கள் Medicare உங்களுக்குத் அஞ்சலில் அனுப்பப்படும்.

Medicare பற்றிய மேலதிக தகவல்களுக்கு www.humanservices.gov.au/medicare க்குப் போகவும் அல்லது உங்கள் Department of Human Services க்கு வருகை தரவும். http://findus.humanservices.gov.au/ இல் அதைக் காணலாம்.

*அத்தியாயம் 1, வந்துசேர்ந்தவுடன் செய்யவேண்டியது என்ன* இதையும் பார்க்கவும்

## Health Care Card

நீங்கள் Centrelink கொடுப்பனவைப் பெறுபவராக இருந்தால் அல்லது நீங்கள் குறைந்த வருமானத்தில் இருப்பவரானால், நீங்கள் அரசாங்க Health Care Card க்குத் தகுதியுடையவராகலாம். (பாருங்கள் www.humanservices.gov.au/concessioncards). மருந்து, வைத்தியர்கள், பல்வைத்தியர்கள், மற்றும் அம்புலன்ஸ்க்கான செலவுகள் அடங்கலாகச் சுகாதார சேவைகளுக்கான சலுகைகளுக்கு இந்த அட்டை உங்களைத் தகுதியடையச் செய்யும்.

உங்களிடம் ஒரு Health Care Card இருந்தாலும், எல்லா அடிப்படை வைத்தியசாலை மற்றும் மருத்துவச் சிகிச்சைக்கு நீங்கள் Medicare அட்டையுடன் Health Care Card ஐயும் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலதிக தகவல்களுக்காகப் பாருங்கள்: *அத்தியாயம் 10. உங்கள் குடும்பம்*

### தனியார் சுகாதாரக் காப்புறுதி

தனியார் அல்லது பொது மருத்துவமனையில் தனிப்பட்ட நோயாளருக்கான முழு அல்லது சில சிகிச்சைச் செலவுளை இவை உள்ளடக்குவதால், பல ஆஸ்திரேலியர்கள் தனியார் சுகாதார காப்புறுதிகளைத் தெரிவு செய்கிறார்கள். இவை Medicare க்குள் அடங்காத பல் பராமரிப்பு, அநேகமான பார்வைப் பராமரிப்பு, அம்புலன்ஸ் சேவைகளை இவை கொண்டுள்ளன.

அதற்கான செலவுகளும், பாதுகாப்புக்களுக்கான வகைகளும் வேறுபடுகின்றன, எனவே நீங்கள் தனியார் சுகாதாதரக் காப்புறுதியை வாங்குவதாக முடிவு செய்தால், காப்புறுதி உடன்பாட்டு ஆவணத்தை (Policy) வாங்க முன்னர் பல்வேறான காப்பீடுகளுடன் விபரங்களைக் கவனமாகச் சரிபார்த்துக் கொள்வது மிகவும் முக்கியமாகும்.

## ஊக்குவிப்புச் சலுகைகள்

தனியார் சுகாதாரக் காப்புறுதி எடுத்துச் செல்வதை ஊக்குவிப்பதற்காக ஆஸ்திரேலிய அரசாங்கம் ஊக்குவிப்பு நிதியை வழங்குகிறது. நீங்கள் தனியார் சுகாதார காப்புறுதியை பெற்றுக்கொள்ள ஆலோசித்தால், நீங்கள் கட்டாயம் இவற்றைத் தெரிந்திருக்க வேண்டும்:

- **Private Health Insurance Rebate -** நீங்கள் Medicare க்குத் தகுதியுடையவாரானால், அத்துடன் வைத்தியசாலைச் சிகிச்சை, பொதுவான சிகிச்சை (அத்துடன் இணைந்த அல்லது மேலதிக)க் காப்பு அல்லது இரண்டுக்கும் கட்டுப்படும் சுகாதாரக் காப்புறுதி ஒப்பந்த ஆவணம் இருந்தால் நீங்கள் ஒருவேளை Private Health Insurance Rebate ஐக் கோரலாம்.
- **Medicare Levy Surcharge -** தனியார் சுகாதாரக் காப்புறுதி இல்லாத, வருமானம் ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் (ஆரம்ப நிலை) பெற்றுக்கொள்ளாத மக்களால் செலுத்தப்படும் ஒரு சத வீத வரி Medicare Levy Surcharge எனப்படும்.
- **Lifetime Health Cover -** மருத்துவக்காப்பை, ஆட்களுக்கு வயது வரமுன்னரே எடுத்துக்கொள்ள இத்திட்டம் தூண்டுகிறது. ஆஸ்திரேலியாவுக்கு வந்த புதிய குடிவரவாளருக்கான Lifetime Health Cover முடிவு திகதி பின்வரும் கடைசி இரு தினங்களாகும்:
    - 31வது பிறந்தநாளுக்கு அடுத்துவரும் 1 யூலை; அல்லது,
    - நீங்கள் 31 வயதுக்கும் மேற்பட்டவரானால், முழு Medicare பயன்களையும் பெறத் தகுதியுடையவராகப் பதிவுசெய்து முதலாவது ஆண்டு பூர்த்தியான தினம்.

ஒருவர் வைத்தியக்காப்பை அவரது Lifetime Health Cover காலக்கெடுவின் பின்னர் பெற்றுக்கொண்டால், வைத்தியக் காப்பை முதலில் வாங்கும்போது30 வயதுக்கும் மேல் எவ்வளவு வயது உண்டோ அதற்கேற்ப ஒவ்வொரு ஆண்டுக்கும் மேலதிக 2% ஐச் செலுத்த வேண்டும். உதாரணமாக, ஒருவர் தனது 45 ஆவது வயதில் முதல் தடவையாக வைத்தியக் காப்புறுதியை வாங்கினால், தனது வைத்தியக் காப்புக்கு மேலதிக 30% ஐச் செலுத்த வேண்டும். Lifetime Health Cover க்கு மேலதிகமாகப் பணம் செலுத்த வேண்டியதைத் தவிர்க்க, உங்கள் Lifetime Health Cover காலக்கெடுவுக்கு முன்னர் வைத்தியக் காப்புறுதியை ஒரு ஆஸ்திரேலிய பதிவுபெற்ற வைத்தியக் காப்பீட்டாளரிடமிருந்து நீங்கள் வாங்க வேண்டும்.

மேலதிகத் தகவல்களுக்கு:

| தனியார் சுகாதாரக் காப்புறுதித் தகவல் | இணையத்தளம் |
|---|---|
| தனியார் சுகாதாரக் காப்புறுதி | www.health.gov.au/internet/main/publishing.nsf/content/private-1 |
| Lifetime Health Cover | www.health.gov.au/internet/main/publishing.nsf/Content/health-privatehealth-lhc-providers-general.htm |

| தனியார் சுகாதாரக் காப்புறுதித் தகவல் | இணையத்தளம் |
|---|---|
| Private Health Insurance Ombudsman | www.phio.org.au |
| சுகாதார நிதியம் மற்றும் கொள்கை ஒப்பீடு | www.privatehealth.gov.au |

# மருத்துவ உதவி

## குடும்ப வைத்தியரைப் பெற்றுக்கொள்ளல்

ஆஸ்திரேலியாவில் ஒரு வைத்தியரிடம் நீங்கள் பதிவுசெய்து கொள்ளத் தேவையில்லை. எவ்வாறாயினும், பலருக்கு ஒரு குடும்ப வைத்தியர் இருக்கிறார் - இவர், தடுப்புமருந்துகள், எழுதிக்கொடுக்கும் மருந்துகள், மருத்துவச் சான்றுகள், சுகாதார ப் பரிசோதனை, உள ஆரோக்கியம், உடல் நல ஆலோசனை உட்பட பொதுவான உடல்நல விடயங்களுக்கான ஒரு மருத்துவராவார்.

General Practitioners (GPs) என இவர்கள் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் ஒரு சிறிய தனியார் மருத்துவ நிலையம் அல்லது தொழில் நிலையத்தைக் கொண்டிருப்பர். அல்லது ஏனைய வைத்தியர்களுடன் பொது, அல்லது தனியார் மருத்துவ நிலையத்தில் வேலை செய்வார்கள். நீங்கள் போகவேண்டிய வைத்தியர் அல்லது மருத்துவநிலையத்தை நீங்கள் தெரிவு செய்யலாம். தொலைபேசி விபரப்பட்டியலில் ‘மருத்துவர்கள்’ க்குக் கீழே GP கள் அட்டவணைப் படுத்தப் பட்டுள்ளனர். ஒவ்வொரு தடவையும் நீங்கள் ஒரே வைத்தியரைப் பார்க்கவேண்டுமா அல்லதுஅதே நிலையத்திலேயே ஏனைய வைத்தியர்களைக் கொண்டு சிகிச்சை செய்விக்க விரும்புகிறீர்களாவென நீங்கள் தீர்மானிக்கலாம்.

நீங்கள் விரும்பும் ஒரு குடும்ப வைத்தியரைத் தெரிந்தெடுக்க நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வைத்திய நிலையங்களுக்குச் செல்லவேண்டி ஏற்படலாம். சில மருத்துவ நிலையங்கள் புதிய நோயாளிகளை ஏற்பதில்லை.

உங்களுக்கு அண்மையில் இருக்கும் ஒரு General Practice இன் சேவைகளைப் பெற்றுக்கொள்ள www.healthdirect.gov.au இல் இருக்கும் healthdirect இணையத்தளத்திலும் General Practice ஐத் தேடுவதற்கான குறிப்புக்கள் இருக்கின்றன.

## வழக்கமான உடல் நலப் பிரச்சினைகள்

உங்களுக்கு ஒரு உடல்நலப் பிரச்சினை இருந்து அது அவசரமானதொன்றல்ல வெனில் உங்கள் குடும்ப வைத்தியரிடம் அல்லது ஒரு மருத்துவ நிலையத்துக்குப் போகவும். ஒரு வைத்தியரைப் பார்ப்பதற்கு நீங்கள் காத்திருக்க வேண்டி ஏற்படலாம்.

நீங்கள் போய்ச்சேரமுன்னர் வழமையாக, தொலைபேசியில் அல்லது நேரடியாகக் கணினியில் முன்பதிவு ஒன்றினைச் செய்ய வேண்டும். சரியான நேரத்தில் உங்கள் முன்பதிவுக்குப் போவதை நிச்சயப்படுத்தவும்.

### சுவாசகாசம்

நீங்கள் ஆசியா, ஆபிரிக்கா, இந்திய உபகண்டம், தென் அமெரிக்கா அல்லது கிழக்கு ஐரோப்பா நாட்டைச் சேர்ந்தவரானால் நீங்கள் சுவாசகாச நோயால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய வாய்ப்புகள் இருந்திருக்கலாம் அத்துடன் அதனால் பாதிக்கப்பட்டு, நோய்வாய்படக்கூடிய அதிக அபாயத்தில் இருக்கிறீர்கள்.

ஆஸ்திரேலியாவுக்கு வரமுன்னர் சுவாசகாசத்திற்காக நீங்கள் பரிசோதிக்கப்பட்டு இருப்பினும், ஒரு மார்பு எக்ஸ் கதிர்ப்படத்தில் கண்டுகொள்ள முடியாத, நோய்க்குறியற்ற, மறைந்திருக்கும் தொற்றுக்கிருமி இருக்கக்கூடும்.

நீங்கள் சுகவீனமடைந்தால் அல்லது உங்களுக்குச் சுவாசகாச நோய் தொற்றக்கூடிய சாத்தியம் உள்ளது என நினைத்தால் உங்கள் குடும்ப வைத்தியரைத் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது கீழே பட்டியலிடப்பட்டுள்ள தொலைபேசித் தகவல் மற்றும் ஆலோசனச் சேவைகளைத் தொடர்பு கொள்ளவும்.

## சிறப்பு வைத்தியர்கள்

முதலில் பொது வைத்தியரை (குடும்ப வைத்தியர்)ப் பார்க்காமல் நீங்கள் ஒரு சிறப்பு வைத்தியருடன் ஆலோசிக்க முடியாது. மேலதிக சிகிச்சைக்காக இந்தப் பொது வைத்தியர் உங்களை வேறொரு மருத்துவ அல்லது சிறப்பு வைத்தியருக்குப் பரிந்துரைக்கலாம்.

## வைத்தியர்களின் உரைபெயர்ப்பு முன்னுரிமை தொலைபேசித் தொடர்பு

தேவையேற்படின் TIS National மொழிபெயர்த்துரைப்பவர்களை வைத்தியர்கள் பாவிக்கலாம். நீங்கள் ஒரு ஆஸ்திரேலிய பிரசை அல்லது நிரந்தர வதிவாளரானால் இது ஒரு இலவச சேவையாகும். அத்துடன், மருத்துவ ஆலோசனை Medicare க்குள் அடங்கும். தேவைப்படின் உங்கள் வைத்தியரும் தானிருக்குமிடத்துக்கு வரவழைக்க ஒரு உரைபெயர்ப்பாளரைப் பதிவு செய்யலாம். பாருங்கள்: *அத்தியாயம் 3, ஆங்கிலமொழி.*

### மருத்துவ,அவசரகாலநிலை

பொது வைத்தியசாலைகளிலுள்ள அவசரகால சிகிச்சைப் பகுதிகளில் அவசரகால மருத்துவ சிகிச்சையை ஒரு நாளில் 24 மணித்தியாலங்களும், வாரத்தில் ஏழு நாட்களும் பெற்றுக்கொள்ளலாம். ‘வைத்தியசாலைகள்’ இன்கீழ் பொது வைத்தியசாலைகள் White Pages இல் பட்டியலிடப்பட்டுள்ளன. சில மருத்துவ நிலையங்களிலும், சில தனியார் மருத்துவ மனைகளிலும் அவசரகாலச் சிகிச்சை கிடைக்கக்கூடும்.

நீங்களோ அல்லது வேறொருவரோ பாரதூரமாக நோய்வாய்ப்பட்டால், தொலைபேசியில் **“Ambulance” ஐக் கேட்டு** உடனடியாக **000** ஐ அழைக்கவும். வைத்தியசாலைக்குப்

போகும்போது, உங்களது Medicare , தனியார் மருத்துவக் காப்புறுதி அங்கத்துவம், Health Care அல்லது Pension Concession க் கொண்டு வரவும்.

இந்த நிலமை அத்தியாவசியமானதாக இல்லையானால், உங்கள் குடும்ப வைத்தியரைத் தொடர்பு கொள்ளவும்.

## தொலைபேசி உடல்நலத் தகவல்களும் ஆலோசனைச் சேவைகளும்

எல்லா மாநிலங்களிலும், பிரதேசங்களிலும் ஒரு நாளில் 24 மணித்தியாலங்களும், வாரத்தில் ஏழு நாட்களும் இயங்குகின்ற தொலைபேசி மூலமான சுகாதார சேவைகள் இருக்கின்றன. அவர்கள் இலவச வழிகாட்டலை வழங்குகின்றனர் மற்றும் அவர்கள் உங்களை உள்ளூர் சுகாதார சேவைகளுக்கு வழிகாட்டுவார்கள்.

உங்களுக்கு சுகாதாரப் பிரச்சினைகள் இருந்தால், நீங்கள் முதலில் உங்கள் குடும்ப வைத்தியரைத் தொடர்புகொள்ள வேண்டும். ஆனால், அவர்கள் கிடைக்காது விட்டால், உடனடியாக வைத்திய ஆலோசனையைத் தரக்கூடிய தகுதிபெற்ற தாதிகள் தொலைபேசி சேவையில் இருக்கிறார்கள்.

| மாநிலம் அல்லது பிரதேசம் | தொலைபேசி சுகாதார ஆலோசனை சேவை | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| ACT, NSW, NT, Tas., SA மற்றும் WA | healthdirect | 1800 022 222 | www.healthdirect.gov.au |
| Qld | 13 HEALTH | 13 43 25 84 | www.health.qld.gov.au/13health/default.asp |
| Vic. | NURSE-ON-CALL | 1300 606 024 | www.health.vic.gov.au/nurseoncall |

## அம்புலன்ஸ் செலவுகள்

அம்புலன்ஸ் போக்குவரத்துச் செலவுகள் Medicare க்குள் அடங்காது. நீங்கள் எந்த மாநிலத்தில் அல்லது பிரதேசத்தில் வாழுகிறீர்கள் என்பதைப்பொறுத்து அம்புலன்ஸ் செலவுகள் வேறுபடும்.

குயின்ஸ்லாந்திலும், தஸ்மேனியாவிலும் அம்புலன்ஸ் சேவைகள் பொதுவாக உள்ளூர் வாசிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. ஏனைய மாநிலங்களிலும், பிரதேசங்களிலும், கட்டணங்கள் அறவிடப்படலாம். உங்கள் பிரயாணம் செய்யும் தூரம், உங்கள் வருத்தத்தின் தன்மை, சலுகைக்கு நீங்கள் தகுதியுடையவரா என்பதைப் பொறுத்துக் கட்டணங்கள் வேறுபடும்.

அம்புலன்ஸ் காப்புறுதி உங்களிடம் இல்லையானால், ஒரு சிறிய பயணத்திற்கும் அம்புலன்ஸ் செலவு கூடியதாக இருக்கலாம். நீங்கள் குயின்ஸ்லாந்து அல்லது தஸ்மேனியாவுக்கு வெளியில் வசித்தால் நீங்கள் காப்புறுதியை ஒருவேளை பெறவேண்டும். இதனை நீங்கள் அம்புலன்ஸ்

சேவை, அல்லது ஒரு தனியார் சுகாதாரக் காப்புறுதி நிதியத்தால் வழங்கப்படும் அங்கத்துவத் திட்டத்தினூடாகச் செய்யலாம்.

மேலதிகத் தகவல்களுக்காகப் பாருங்கள் *அத்தியாயம் 2 உதவி பெறுதல்*

## மருந்துகள்

உங்களுக்கு மருந்து தேவைப்பட்டால், ஒரு மருந்தகம் அல்லது மருந்துச்சாலைக்கு எடுத்துச் சென்று வாங்க உங்கள் வைத்தியர் மருந்தை எழுதித்தரலாம். வைத்தியரின் துண்டு இருந்தால் மட்டும்தான் நுண்ணுயிர்க் கிருமிகள் (பக்றீரிய) எதிர்ப்பு மருந்தைப் பெறலாம். உங்களிடம் Health Care Card அல்லது Pension Concession Card இருந்தால், குறிப்பிட்ட மருந்துகளுக்கான சலுகைகளுக்கு உங்களுக்கு தகுதியுண்டு. மருந்துக்கடைக்கு உங்கள் Medicare அட்டையைக் கட்டாயம் கொண்டுவரவும்.

மருந்துகளிலுள்ள பெயர்ச்சீட்டுகள், அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்து, உங்களுக்கு நிச்சயமில்லாவிட்டால் கேள்விகளை உங்கள் வைத்தியர், அல்லது மருந்தாளரிடம் கேளுங்கள். உதவிக்கு அல்லது மருந்துகளைப்பற்றிய தகவல்களுக்கு மருந்துக்கலவையாளருடன் பேசவும் அல்லது Medicine Line ஐத் 1300 633 424 இல் அழைக்கவும்.

அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப்படும் தொலைபேசி உரைபெயர்ப்பாளரையும் மருந்தாளர்கள் பாவிக்கலாம்.

| மருந்துகள், வைத்தியர் எழுதிய மருந்துகள் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|
| NPS MedicineWise Medicine Line – மருந்துகள் மற்றும் எழுதிக்கொடுக்கப்படுபவை பற்றிய தகவல்கள் | 1300 633 424 திங்கள் முதல் வெள்ளிவரை காலை 9.00 இலிருந்து மாலை 5.00 வரை | www.nps.org.au/contact-us/medicines-line |
| Medicare Australia – எழுதிக்கொடுக்கப்படும் பி பி எஸ் ஐக் கோருவதற்கான தகவல் பற்றியது | | www.medicareaustralia.gov.au/public/services/scripts/index.jsp |

## மாநில, பிரதேச சுகாதார சேவைகள்

மருத்துவ, சமூகசுகாதார மற்றும் ஆறுதலளிக்கும் சேவைகளை மாநில மற்றும் பிரதேச அரசாங்கங்கள் வழங்குகின்றன.

### சமூக சுகாதார நிலையம்.

குறைந்த செலவில் எல்லா வயதினருக்குமான சுகாதார சேவைகளைச் சமூக சுகாதார நிலையங்கள் வழங்குகின்றன. எல்லா நிலையங்களும் இதே சேவைகளை வழங்குவதில்லை. நோயாளரைப் பராமரிக்கும், சுகாதாரக் கல்வியும் பதவியுயர்வும், உடற்பயிற்சிச் சிகிச்சை (இயன்வைத்தியம்), பல் பராமரிப்பு, மருத்துவக் கவனிப்பு, மதிவள ஆலோசனை, சமூக நலன் என்பவை இந்தச் சேவையிலடங்கும்.

### இளம் குழந்தைகளுடனான குடும்பங்களுக்கான சுகாதாரச் சேவைகள்.

பிறந்ததிலிருந்து பாடசாலைக்குப் போகும் வயதுடைய சிறுவர்களுடனான குடும்பங்களுக்காக வழமையாக இலவச மகப்பேறு, குழந்தை சுகாதார சேவைகள் இருக்கின்றன. அவை, இளம் குழந்தைகளுக்கான சுகாதாரத் தகவல்கள், தடுப்பு மருந்து, குழந்தை மேம்பாடு பற்றிய ஆலோசனை, குழந்தைப் பராமரிப்பும் இளம் பிள்ளைகளுக்கான ஊட்டச்சத்துள்ள உணவு சேவைகளை வழங்குகின்றன.

### பெண்கள் சுகாதார சேவைகள்

பெண்களின் பிறப்புறுப்பைச் சிதைத்தல் அல்லது வெட்டுதல் உட்பட, இனப்பெருக்க சுகாதார சேவைகள், கர்ப்பப்பை மற்றும் மார்பகப் புற்று ஆய்வு, மது, போதைவஸ்துப் பிரச்சினைகள், உளநலச் சிக்கல்கள் அத்துடன் பாலியல் பலத்காரமும், வீட்டு வன்செயல்களுக்கு பெண்கள் சுகாதார சேவைகள் உதவி வழங்குகின்றன. பாருங்கள்: *அத்தியாயம் 6, ஆஸ்திரேலியச் சட்டம்*

### பல்வேறு பின்புலங்களுடனான மக்களுக்கான சேவைகள்

உள்ளூர் புலம்பெயர் சமூகங்களுக்காக, சேவை வழங்கும் சுகாதார உத்தியோகத்தர்கள் பல வைத்தியசாலைகளிலும், பெரிய சுகாதார நிலையங்களிலும் இருக்கின்றனர். உளநல ஆலோசனை, புத்திமதி, சிபாரிசு மற்றும் சுகாதாரத் தகவல்கள் இந்தச் சேவைக்குள் அடங்கும்.

உங்கள் மொழிக் குழுவுக்காக Multicultural Health Worker இருக்கிறாரா எனப்பார்ப்பதற்கு உங்கள் உள்ளூர் வைத்தியசாலை அல்லது சமூக சுகாதார நிலையத்தைத் தொலைபேசியில் அழைக்கவும்

சுகாதாரச் சேவையைக் கண்டறிய:

| மாநிலம் அல்லது பிரதேசம் | சுகாதார முகவர்கள் | இணையத்தளம் |
|---|---|---|
| ACT | ACT Health | http://health.act.gov.au/our-services/which-health-service-suits-you-best |
| NSW | NSW Ministry of Health | www.health.nsw.gov.au/hospitals/pages/default.aspx |
| NT | Department of Health | www.health.nt.gov.au/Service_Locator/index.aspx |

| மாநிலம் அல்லது பிரதேசம் | சுகாதார முகவர்கள் | இணையத்தளம் |
|---|---|---|
| Qld | Queensland Health | www.health.qld.gov.au |
| SA | SA Health | www.sahealth.sa.gov.au/wps/wcm/connect/Public+Content/SA+Health+Internet/ |
| Tas. | Department of Health and Human Services | https://www.dhhs.tas.gov.au |
| Vic. | Department of Health and Human Services | https://www2.health.vic.gov.au |
| WA | Department of Health | http://ww2.health.wa.gov.au |

## இயலாமைக்கான சேவைகள்

National Disability Insurance Scheme (NDIS), நிரந்தர மற்றும் குறிப்பான குறைபாடுடையவர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் ஆகிய தகுதிபெறக்கூடிய மக்களுக்கு அவரவர்களுக்கு ஏற்றவாறு ஆதரவு வழங்குகிறது. NDIS ஆனது வருமானத்தைப் பார்க்காது, இயலாமைக்கான ஆதரவு, ஓய்வூதியம் அல்லது பராமரிப்பாளர் கொடுப்பனவு போன்றவற்றால் பாதிப்படையாத ஆதரவை வழங்குகிறது.

இந்த நேரத்தில், NDIS க்கான வாய்ப்பினைப்பெற நீங்கள் வயது, இடம் போன்றவைற்றிற்கான வேண்டுதல்களைப் பூர்த்திசெய்யவேண்டும். www.ndis.gov.au/people-disability/access-requirements இல் தகைமை பற்றிய தகவல்கள் இருக்கிறன.

நீங்கள் ஒரு NDIS இடத்தில் இல்லையானால், தற்போதுள்ள இயலாமைக்கான சேவைகளைப் பெறக்கூடியதாக இருக்கும். இந்தச் சேவைகள் பற்றிய தகவல்களுக்குப் போகவும்: www.ndis.gov.au/people-disability/other-services

மாநிலம் மற்றும் பிரதேச சுகாதார சேவைகள், இயலாமையுடையோர், அவர்களது குடும்பங்கள், பராமரிப்பாளர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய பல்வேறு ஆதரவு பல்வேறு சேவைகளை வழங்குகிறது.

| மாநிலம் அல்லது பிரதேசம் | இயலாமை முகாமை | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| ACT | Disability ACT | 133 427 | www.communityservices.act.gov.au/disability_act |
| NSW | Department of Family and Community Services (Ageing, | | www.adhc.nsw.gov.au/individuals/support |

| மாநிலம் அல்லது பிரதேசம் | இயலாமை முகாமை | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| | Disability and Home Care) | | |
| NT | Northern Territory Government Office of Disability | 1800 139 656 | http://health.nt.gov.au/Aged_and_Disability/Office_of_Disability/index.aspx |
| Qld | Department of Communities, Child Safety and Disability Services | 13 QGOV அல்லது 13 74 68 | www.communities.qld.gov.au/ndis |
| SA | Disability Information Service | 1300 786 117 | www.sa.gov.au/topics/community-support/disability |
| Tas. | Tasmanian Government Disability and Community Services | 1300 135 513 | www.dhhs.tas.gov.au/disability |
| Vic. | Department of Health and Human Services | 1300 650 172 | www.dhhs.vic.gov.au |
| WA | Disability Services Commission | (08)9426 9200 இலவச அழைப்பு 1800 998 214 | www.disability.wa.gov.au |

இயலாமைக்கான சேவைகள்பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு:

| தேசிய நிறுவனம் | இணையத்தளம் |
|---|---|
| Department of Social Services – சமூகசேவைகள் திணைக்கழம் திட்டங்களும், சேவைகளும் | https://www.dss.gov.au/disability-and-carers/programs-services |
| Department of Human Services – இயலாமையுடனான மக்ககளுக்கு | www.humanservices.gov.au/disability |
| இயலாமை தொடர்பான முகவர்கள் மற்றும் தளங்கள் | www.dss.gov.au/our-responsibilities/disability-and-carers/related-agencies-sites |
| இயலாமையுடைய மக்கள், அவர்களைப் பராமரிப்போருக்கான அரசாங்க ஆதரவு, நன்மைகள் மற்றும் கொடுப்பனவுகள் பற்றிய தகவல்கள் | www.australia.gov.au/information-and-services/benefits-and-payments/people-with-disability |

## உளநலச் சேவைகள்

உங்களுக்கு உளநலப் பிரச்சினைகள் அல்லது சுகவீனத்திற்கு உதவி தேவைப்பட்டால், உங்கள் குடும்ப வைத்தியர் அல்லது சமூக, சுகாதார நிலையத்தைத் தொடர்புகொள்ளவும்.

உங்களுக்கு அவசியமாக உதவி தேவைப்பட்டால், உங்கள் அருகாமையிலுள்ள வைத்தியசாலை மன நோய்க் குழு அல்லது கீழுள்ள 'ஹெல்ப் லைன்' உடன் தொடர்பு கொள்ளவும்:

| உளநல உதவி | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|
| Lifeline – 24 மணித்தியாலங்கள் உதவித் தொலைத்தொடர்பு | 13 1114 | www.lifeline.org.au/ |
| Kids Helpline – 24 மணித்தியாலங்கள் உதவித்தொலைத்தொடர்பு | 1800 55 1800 | www.kidshelp.com.au/ |
| Mens Helpline Australia – 24 மணித்தியாலங்கள் நெருக்கடிகாலத் தொடர்பு | 1300 789 978 | www.mensline.org.au/ |
| Suicide Call Back Service – உலகளாவிய இலவச ஆலோசனைச் சேவை | 1300 659 467 | www.suicidecallbackservice.org.au |

கீழே தரப்பட்டவை அடங்கலாக, சமுதாய மட்டத்திலே Department of Social Services ஆல் உளநலத்திற்கு ஆதரவு வழங்குவதற்கான சேவைகளும் திட்டங்களும் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு:

- Family Mental Health Support Service (FMHSS)
- Personal Helpers and Mentors (PHaMs)
- Mental Health Respite: Carers Supports (MHR:CS)

போகவும்: www.dss.gov.au/mental-health

## சித்திரவதை, உணர்வதிர்ச்சி உளநல ஆலோசனை

சிறப்புத்தேர்ச்சிபெற்ற சேவைகள், உணர்வதிர்ச்சி, சித்திரவதையை அனுபவித்தவர்களுக்கு உதவுகிறது:

| மாநிலம் அல்லது பிரதேசம் | சித்திரவதை மற்றும் உணர்வதிர்ச்சி மதிவளசௌவை | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| ACT | Companion House – சித்திரவதை மற்றும் உணர்வதிர்ச்சியிலிருந்து மீண்டோருக்கு உதவுதல் | 02 6251 4550 | www.companionhouse.org.au |

| மாநிலம் அல்லது பிரதேசம் | சித்திரவதை மற்றும் உணர்வதிர்ச்சி மதிவளசெளவை | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| NSW | Service for the Treatment and Rehabilitation of Torture and Trauma Survivors (STARTTS) | 02 9794 1900 | www.startts.org.au |
| NT | Melaleuca Refugee Centre – சித்திரவதை மற்றும் உணர்வதிர்ச்சியிலிருந்து தப்பிப்பிழைத்தோருக்கான ஆதரவுசேவை. | 08 8985 3311 | www.melaleuca.org.au |
| Qld | Queensland Program of Assistance to Survivors of Torture and Trauma (QPASTT) | 07 3391 6677 | www.qpastt.org.au |
| SA | Survivors of Torture and Trauma Assistance and Rehabilitation Service (STTARS) | 08 8206 8900 | www.sttars.org.au |
| Tas. | Phoenix Centre – சித்திரவதை மற்றும் உணர்வதிர்ச்சியிலிருந்து தப்பிப்பிழைத்தோருக்கான ஆதரவு சேவை. | 03 6234 9138 | http://mrchobart.org.au/phoenix-centre/ |
| Vic. | Foundation House – Victorian Foundation for Survivors of Torture (VFST) | 03 9388 0022 | www.foundationhouse.org.au |
| WA | Association for Services to Torture and Trauma Survivors (ASeTTS) | 08 9227 2700 | www.asetts.org.au |

## குழந்தைப் பாதுகாப்பும் விபத்துத் தவிர்ப்பும்

ஆஸ்திரேலியாவின் குழந்தை விபத்து தடுப்பு நிதியம், Kidsafe ஒரு அரச சார்பற்ற நிறுவனம் ஆகும். இது www.kidsafe.com.au இல் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் விபத்துத் தவிர்ப்புத் தகவல்களையும், சேவைகளையும் பெற்றோருக்கும், சமூகங்களுக்கும் வழங்குகிறது. இணையத்தளத்தின் மேற்கு ஆஸ்திரேலியா, விக்டோரியாப் பகுதிகளில் சில மொழிபெயர்க்கப்பட்ட தகவல் தாள்கள் கிடைக்கும்.

## தடுப்புமருந்து

தீங்கிழைக்கும் தொற்றுக்கள், வருத்தங்களிலிருந்து குழந்தைகளையும், வளர்ந்தோரையும் தடுப்புமருந்துகள் பாதுகாக்கின்றன. தடுப்புமருந்து கட்டாயமானதல்ல ஆனால் குழந்தைகளுக்கும், வளர்ந்தோருக்கும் சிபாரிசு செய்யப்படுகிறது. ஒரு பிள்ளை குழந்தைப்பராமரிப்பு அல்லது பாடசாலையை ஆரம்பிக்க முன்னர் சில மாநிலங்கள் மற்றும் பிரதேசங்கள் குழந்தையினுடைய தடுப்புமருந்து அறிக்கையை வேண்டுகின்றன.

அநேக தடுப்பு மருந்துகள் உங்கள் குடும்ப வைத்தியர் அல்லது உங்கள் சமூகச் சுகாதார நிலையத்தால் கொடுக்கப்படுகிறது. எவ்வாறாயினும், சில தடுப்புமருந்துகள் பாடசாலையில் கொடுக்கப்படுகின்றன. மேலும் அறிந்துகொள்ள, உங்கள் குடும்ப வைத்தியர் அல்லது சமூகச் சுகாதார நிலையத்தைத் தொடர்பு கொள்ளவும்.

www.humanservices.gov.au/acir இல் உள்ள The Australian Childhood Immunisation Register (ACIR) ஆனது 20 வயதுகளுக்குக் கீழான சிறுவர்கள் மற்றும் வயதுவராதோருக்குக் கொடுக்கப்படும் தடுப்புமருந்துகளைப் பதிவுசெய்யும் ஒரு தேசிய அறிக்கையாகும்.

Medicare இல் பதியப்பட்ட 20 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் மற்றும் வயதுவராத இளையோர் ACIR இல் தானாகவே உள்வாங்கப்பட்டுக் கொள்வார்கள்.
வைத்தியரிடம் வரும்போது அவர்களுடைய தடுப்புமருந்து அறிக்கையைக் கொண்டுவரவும், அப்பொழுது அவர் ஏதாவது வெளிநாட்டு தடுப்புமருந்து விபரங்களைப் பதிவுப்புத்தகத்தில் பதிவுசெய்யலாம்.

சில அரசாங்கக் கொடுப்பனவுகளுக்காக, தடுப்புமருந்து கொடுத்தல் ஒரு வேண்டுதலாகும். (www.humanservices.gov.au/immunisation) மருத்துவக் காரணங்களுக்காக மட்டுமே தடுப்புமருந்து வேண்டுதலில் இருந்து விலக்களிக்கப்படும்.

| தடுப்பூசிபற்றிய தகவல்கள் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|
| National Immunisation Information Line | 1800 671 811 | www.immunise.health.gov.au |
| Australian Childhood Immunisation Register | 1800 653 809 | www.humanservices.gov.au/acir |

## பல் சேவைகள்

பொதுவான சுகாதாரத்துக்கும், உடல்நலத்திற்கும் வாயின் ஆரோக்கியம் அவசியமாகும். தனியார் பல்வைத்தியர்கள் பல் பராமரிப்பை வழக்குவதில் பிரதானமானவர்களாவர். வழமையாக, தனிப்பட்ட பல்வைத்தியர்கள் தமது சேவைக்குப் பணம் அறவிடுகிறார்கள். தொலைபேசி தகவல் புத்தகத்தில் அவர்கள் பட்டியலிடப்பட்டுள்ளனர். பல் சேவைச் செலவுக்கான பாதுகாப்பு உதவிக்காக தனியார் சுகாதாரக் காப்புறுதியைப் பெற நீங்கள் விரும்பக்கூடும்.

(www.humanservices.gov.au/childdental இல்) The Child Dental Benefits Schedule இது, அடிப்படைப் பல் சேவைகளுக்காக, இரண்டுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடையோர் $1,000 வரை சலுகையாகப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கிறது. இந்தச் சலுகை அடுத்துவரும் இரண்டு கலண்டர் ஆண்டுகளுக்கு மட்டுப்படுதப்பட்டுள்ளது. நீங்கள் தகுதியுடையவரானால், Department of Human Services உங்களுடன் தொடர்பு கொள்ளும்.

மாநில மற்றும் பிரதேச அரசாங்கங்கள் தகுதியுடைய Centrelink சலுகைக்கான அட்டைகளை வைத்திருப்போருக்குச் சில இலவச பல் சுகாதாரப் பராமரிப்பை வழங்குகிற்து. உங்கள் பிரதேசத்தில் சேவைகள் பற்றிய தகவல்களுக்காக உங்களுக்கு அண்மையில் உள்ள மருத்துவ நிலையம் அல்லது வைத்தியசாலையைத் தொடர்புகொள்க. நீங்கள் தகுதியுடையவரா எனக் கண்டறிய Centrelink உடன் தொடர்பு கொள்ளவும்.

## ஆஸ்திரேலியாவில் முதியோர் பராமரிப்பு சேவைகள்

உங்களுக்கு வயதாகும்போது, உங்களை யார் கவனிக்கப்போகிறார், உங்கள் சொந்த வீட்டில் தங்குவதா அல்லது முதியோர் பராமரிப்பு இல்லத்திற்குப் போவதா, என்பது பற்றிய தெரிவுகள் உங்களிடம் உண்டு. முதியோர் பராமரிப்பு சேவைகள் நீங்கள் சுயாதீனமாக வாழ்வதற்காகத் திட்டமிடப்பட்டவையாகும் அத்துடன் உங்கள் கவனிப்புப் பற்றிய விருப்பத் தெரிவுகளைக் கொண்டதாகும்.

ஆஸ்திரேலியாவில் பல்வேறான முதியோர் பராமரிப்புச் சேவைகளுக்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் ஆதரவு வழங்குகிறது. உங்கள் தனிப்பட்ட சூழ் நிலைகள் இடம்தருமானால், உங்களைப் பராமரிப்பதற்கான செலவுக்கு நீங்கள் பங்களிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

www.myagedcare.gov.au இல் My Aged Care இணையத்தளத்தில், உங்கள் விருப்பத் தேர்வுகள், அத்துடன் முதியோர் பராமரிப்பை எவ்வாறு பெறுவது என்பது பற்றிய தகவல்கள் உண்டு. முதியோர் பராமரிப்பு முறையை நீங்கள் விளங்கிக்கொள்ள அது உதவும். மொழிபெயர்க்கப்பட்ட தகவல்களை இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். முதியோர் பராமரிப்புத் தேவைகளை My Aged Care ஐ 1800 200 422 இல் TIS National ஊடாகத் தொடர்புகொண்டும் கலந்துரையாடலாம்.

முதியோர் பராமரிப்பு சேவைகளுக்கான இரண்டு விருப்பத்தேர்வுகளாவன:

- நீங்கள் தொடர்ந்தும் வீட்டில் இருக்க விரும்பினால், மின்சாரக் குமிழ் விளக்குகளை மாற்றுதல், தோட்டவேலை, நீரூற்றுதல், ஆடைஅணிதல் அல்லது பலசரக்கு வாங்கக் கடைக்குப் போதல் போன்ற நாளாந்த வேலைகளை இனிமேலும் நீங்களாகவே சமாளிக்க முடியாது விட்டால் நீங்கள் உதவி பெறலாம். நீங்கள் நடந்துசெல்ல உதவும் கட்டமைப்பு (walking frame) போன்ற உபகரணத்தை வாங்கலாம்.
- இனிமேலும் உங்கள் சொந்த வீட்டில் வசிக்க இயலாதென நீங்கள் உணர்ந்தால், முதியோர் பராமரிப்பு இல்லத்திற்கு நீங்கள் போகலாம்.

My Aged Care நீங்கள் அரச ஆதரவுடனான முதியோர் பராமரிப்புச் சேவைகளைப் பெறத் தகுதியுடையவரா எனப் பார்ப்பதற்காகவும், உங்கள் நிலவரம் பற்றி மேலும் விபரமாகப் பேசுவதற்கு ஒரு மதிப்பீட்டை ஒழுங்குபடுத்தவும், உங்கள் தேவைகளைக் கலந்துரையாட முடியும் - மேலும் தகவல்களுக்காகப் போகவும் www.myagedcare.gov.au/eligibility-and-assessment அல்லது அழையுங்கள்: 1800 200 422.

## முதியோர் அல்லது சுகாதாரப் பராமரிப்புச் சேவைகள் பற்றிய முறைப்பாடுகள்

Aged Care இல்லங்களைப் பற்றி எவரொருவராவது ஒரு முறைப்பாட்டைச் செய்ய விரும்பினால், வீட்டுக் கவனிப்பு பொதிகள் அல்லது Commonwealth Home Support Program சேவைகள் Aged Care Complaints Commissioner ஐத் தொடர்புகொள்ள உரிமை உண்டு. இது ஒரு இலவச சேவை. நீங்கள் Aged Care Commissioner ஐத் தொடர்பு கொள்ளவும்.

- கணினியில் நேரடியாக - www.agedcarecomplaints.gov.au/
- தொலைபேசி - அழைக்கவும் 1800 550 552
- எழுத்தில் - எழுத்திலான உங்கள் முறைப்பாட்டுக்குரிய முகவரி:
  Aged Care Complaints Commissioner
  GPO Box 9848 (உங்கள் தலை நகரம்,மாநிலம்/பிரதேசம்)

உங்களது My Aged Care அனுபவங்கள் பற்றிய எதாவது அக்கறைகள் இருப்பின் நீங்கள் 1800 200 422 இல் அல்லது www.myagedcare.gov.au/ இல் My Aged Care இணையத்தள்த்தினூடாக My Aged Care உடன் தொடர்பு கொள்ளலாம்.

உங்களுக்கு அல்லது இன்னொருவருக்குக் கொடுக்கப்படும் சுகாதாரக் கவனிப்பு பற்றிய கவலைகள் இருந்தால், உங்கள் மாநில அல்லது பிரதேசத்திலுள்ள சுயாதீன சுகாதார முறைப்பாடுகள் ஆணையாளருக்கு நீங்கள் ஒரு முறைப்பாட்டைச் செய்யலாம்.

| மாநிலம் அல்லது பிரதேசம் | சுகாதாரப் பராமரிப்பு முறைப்பாடுகள் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| ACT | Human Rights Commission | 02 6205 2222 | http://hrc.act.gov.au/olderpeople |
| NSW | Health Care Complaints | 1800 043 159 | www.hccc.nsw.gov.au |
| NT | Health and Community Services Complaints Commission | 1800 004 474 | www.hcscc.nt.gov.au |
| Qld | Office of the Health Ombudsman | 133 646 | http://www.oho.qld.gov.au |
| SA | Health and Community Services Complaints Commissioner | 1800 232 007 | www.hcscc.sa.gov.au |

| மாநிலம் அல்லது பிரதேசம் | சுகாதாரப் பராமரிப்பு முறைப்பாடுகள் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| Tas. | Office of the Health Complaints Commissioner | 1800 001 170 | www.healthcomplaints.tas.gov.au |
| Vic. | Office of the Health Services Commissioner | 1800 136 066 | www.health.vic.gov.au/hsc |
| WA | Health and Disability Services Complaints Office | 1800 813 583 | www.hadsco.wa.gov.au |

## ஒரு மரணத்தைத் தொடர்ந்து

ஆஸ்திரேலியாவில் யாராவதுஒருவர் மரணமடையும் பொழுது வைத்தியர் ஒருவர் மரணத்தை உறுதிப்படுத்தும் அத்தாட்சிப்பத்திரத்தில் கையொப்பமிடவேண்டும். இந்த அத்தாட்சிப்பத்திரம் விநியோகிக்கப்படும் வரை, எந்தவித மரணச்சடங்கு ஏற்பாடுகளும் செய்யமுடியாது.

ஆஸ்திரேலியாவில் மரணச்சடங்குகள் செலவு கூடியவையாக இருக்கலாம் அத்துடன் $4, 000 - $15,000 க்கு இடைப்பட்ட செலவை ஏற்படுத்தக்கூடும். சிலவேளைகளில் மரணத்தைத் தொடர்ந்து ஏற்படக்கூடிய மரணச்சடங்கு மற்றும் ஏனைய செலவுகளைச் செய்ய காப்புறுதித் திட்டங்கள் உதவுகின்றன. சிலநேரங்களில், தனது மரணச்சடங்குக்கான செலவைச் செலுத்துவதற்கு இறந்தவர் தனது சொந்த ஏற்பாடுகளைச் செய்திருப்பார் அல்லது தனது Will (உயில்) இல் தனது விருப்பங்களைத் தெரிவித்திருப்பார்.

Will என்பது, மரணத்தின் பின்னர் எவ்வாறு இறந்தவரின் சொத்துக்கள் பங்கிடப்பட வேண்டும், யார் தனது பிள்ளைகளைக் கவனிக்க வேண்டும் என்பதுடன் தர்மஸ்தாபனங்களுக்கான நன்கொடைகள், உடலுறுப்புத் தானம் போன்ற ஏனைய அறிவுறுத்தல்களுடன் கூடிய ஒரு எழுதப்பட்ட, சட்டரீதியான ஆவணமாகும். இது சட்டபூர்வமானதாக இருக்க, Will இலிருந்து பயனடையாத இருவர் அந்த Will க்குச் சாட்சிகளாக இருக்கவேண்டும். ஒரு Will பொதுவாக ஒரு Executor (நிறைவேற்றுனர்) ஐ நியமிக்கும்.

Will இல் உள்ள அறிவுறுத்தல்கள் நிறைவேற்றப்படுவதை உறுதிசெயவதுடன், இறந்தவரின் சொத்துகளுக்கான வரி அலுவல்களைச் நிர்வகிக்கவும், Will இல் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு அவரின் சொத்துக்களைப் பங்கிடவும் Will இல் குறிப்பிடப்பட்டுள்ள Executor பொறுப்புடையவராவர். ஒவ்வொரு மாநிலம் மற்றும் பிரதேசங்களில், Executor (பொதுவாகக் கட்டணம் அறவிடப்படும்) ஆக இயங்கவல்ல Public Trustee (பொது நம்பிக்கைப் பொறுப்பாளர்) இருக்கிறார்.

ஒருவர் Will ஐ விட்டுச் செல்லவில்லையானால், சட்டத்தால் உருவாக்கப்பட்ட கோட்பாட்டின் கீழ் ஆதனம் பங்கிடப்படும். நெருங்கிய உறவினர் இல்லையானால், ஆதனம் மாநில அல்லது பிரதேச அரசாங்கத்திற்குச் சென்றடையலாம்.

அன்புக்குரியவரின் இழப்பில் கலந்து, பங்குகொள்ள உதவி கிடைக்கும்.

மேலதிகத் தகவல்களுக்கு:

| ஆலோசனை | இணையத்தளம் |
|---|---|
| ஓர் இறப்பைத் தொடர்ந்து செய்யவேண்டியது என்ன | www.humanservices.gov.au/customer/subjects/what-do-following-death |
| ஓர் உயிலை (Will) எழுதுவது | www.moneysmart.gov.au/life-events-and-you/over-55s/wills-and-power-of-attorney |
| அந்தியகாலச் செலவுகள் | www.moneysmart.gov.au/life-events-and-you/over-55s/paying-for-your-funeral |
| Public Trustees | www.australia.gov.au/information-and-services/family-and-community/wills-and-powers-of-attorney/wills |
| Organ Donation Register | www.humanservices.gov.au/customer/services/medicare/australian-organ-donor-register |
| இழப்பில் உதவுதல் | www.australia.gov.au/information-and-services/family-and-community/death-and-bereavement |

# 10 உங்களது குடும்பம்

## இந்தப் பகுதியில்


- திருமணம் மற்றும் ஏனைய உறவுமுறைகள்
- இளைஞர்களுக்கான சேவைகள்
- பெற்றார்
- சகுழந்தை ஆதரவு
- முதியோர்
- உறவினரைக் தேடிக்கண்டுபிடித்தல்
- உங்கள் குடும்பம் மற்றும் Centrelink


ஆஸ்திரேலியாவில், நீங்கள் பழக்கப்பட்டதிலிருந்து ஆஸ்திரேலிய குடும்பத்தில் பழகும் முறை வித்தியாசமானதாகும். ஆணும், பெண்ணும் சமமான உரிமைகள், கடமைகளைக் கொண்டிருக்கிறார்கள். ஆண், பெண் இருவரும் வேலைக்குப் போவது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதும், பொதுவானதுமாகும். குழந்தைகளைப் பராமரித்தல், சமையல் மற்றும் துப்புரவுசெய்தல் போன்ற வீட்டுப்பொறுப்புக்களிலும் ஆணும், பெண்ணும் பங்கிட்டுக்கொள்கிறார்கள்.

சில குடும்ப உறுப்பினர்கள், ஏனையவர்களைவிடவும் மிக விரைவாக ஆஸ்திரேலியாவில் தமது புது வாழ்வுக்குத் தக்கவாறு தம்மை அமைத்துக்கொள்கிறார்கள். உதாரணமாக, பெற்றாரைவிடவும் பலதடவை மிகவிரைவாகக் குழந்தைகள் ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்கிறார்கள்.

ஒரு குடும்பமாக ஒன்றாகச் செயற்படுவது உங்களது புது வாழ்வை அனுசரித்துப்போக முக்கியமானதாகும். உங்களுக்கு உதவி தேவைப்படலாம் அத்துடன் இந்த அத்தியாயம் கிடைக்கக்கூடிய சில சேவைகள் பற்றிய தகவல்களைத் தருகிறது. ஆஸ்திரேலியாவில், உங்கள் குடும்பத்துக்கு ஆதரவளிக்க உதவி பெறுவது சாதாரணமானதும், ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதுமாகும். அரசாங்க மற்றும் சமூக ஆதரவுக்குக்கான தொடர்புகளுக்கு போகவும், www.humanservices.gov.au/servicefinder

## திருமணம் மற்றும் ஏனைய உறவுமுறைகள்

குடும்ப, வீட்டு வன்முறை மற்றும் பாலியல் பலாத்காரம் பற்றிய விடயங்களில் உதவியை அல்லது தகவல்களைத் தேடும் மக்களுக்காக உளநல ஆலோசனைகள், தகவல்கள் மற்றும் சிபாரிசுச் சேவைகளை 1800RESPECT. வழங்குகிறது. உளநல ஆலோசனை வழங்குவதைத் தொழிலாகக் கொண்டவர்களை ஒரு நாளில் 24 மணித்தியாலங்களும், வாரத்தில் ஏழு நாட்களும் பெற்றுக்கொள்ளலாம். நண்பர், உறவினர், சகபாடி அல்லது ஒரு கட்சிக்காரனுக்காகக் கவலைகொண்டுள்ள எவருக்காயினும் அவர்கள் உதவலாம். அழையுங்கள் 1800 737 732 அல்லது போகவும் www.1800respect.org.au

பிரிவினைக்குப் பின்னர் பிள்ளைவளர்ப்பதற்கான ஏற்பாடுகள் குறித்த குடும்ப உறவுப்பிரச்சினைகள் பற்றிய தகவல்கள் மற்றும் ஆலோசனையை Family Relationship Advice Line வழங்குகிறது. அத்துடன் குடும்பத்தில் சிறந்த உறவைக் கட்டியெழுப்ப அல்லது பிரிந்திருக்கும் பொழுதும் நடவடிக்கை மேற்கொள்ள உதவும் உள்ளூர் சேவைவழங்குனருக்கு தம்மிடம் வருபவர்களை இது சிபாரிசு செய்கிறது. இந்த ஆலோசனைச் சேவை, தேசிய பொது விடுமுறைகள் தவிர, திங்கள் முதல் வெள்ளிவரை காலை 8.00 லிருந்து மாலை 8.00 வரை மற்றும் சனிகிழமையில் காலை 10.00 லிருந்து மாலை 4.00 வரை செயற்படுகிறது.
(இலவச அழைப்பு) தொலைபேசி: 1800 050 321 அல்லது போகவும்:
www.familyrelationships.gov.au/BrochuresandPublications/Pages/family-relationships-advice-line.aspx

குடும்ப உறவுகள் மற்றும் குடும்பப்பிரிவுக்கான தகவல்களை Family Relationships Online வழங்குகிறது. பிரிவினைக்குப் பின்னர் குழந்தைகளுக்கான ஏற்பாடுகளையும், உறவுமுறைப் பிரச்சினையைச் சமாளிக்கவும் உதவும் சேவைகளைப்பற்றிக் குடும்பங்கள் கண்டறியலாம். போகவும் www.familyrelationships.gov.au

தமது குடும்ப வாழ்வில் அல்லது முக்கியமாகக் குடும்ப உறவில் பிரச்சினையுடைய ஆண்களுக்கு உதவுவதற்காக உளநல ஆலோசனை, தகவல்கள் மற்றும் சிபாரிசு சேவைகளை MensLine Australia வழங்குகிறது. தமது துணைவர், கணவர் அல்லது தந்தையர் பற்றிக் கவலைகொண்டுள்ள பெண்கள், குடும்ப உறுப்பினர்களுக்காகவும் இது ஆதரவு வழங்குகிறது. இது ஒரு நாளில் 24 மணித்தியாலங்களும், வாரத்தில் ஏழு நாட்களும் செயற்படுகிறது. தொலைபேசி: 1300 789 978 அல்லது போகவும்: www.mensline.org.au

## இளைஞர்களுக்கான சேவைகள்

25 வயதுக்குக் குறைந்த ஆட்களுக்கான திட்டங்களை சமூக முகவர்கள் வழங்குகிறார்கள். இளைஞர் சேவையாளர்கள் தகைமை பெற்றவர்கள் மற்றும் அனுபவமுடையவர்களாவர் அத்துடன் இளைஞர் நிலையங்கள் அல்லது உள்ளூர் சபைகளில் பலதடவைகள் பாதுகாப்பான சுற்றுச் சூழலில் தகவல், உதவி மற்றும் செயற்பாடுகளை இவர்கள் வழங்குகிறார்கள்.

மேலும் அதிக உதவிக்கு:

| தேசிய இளை ஞர் சேவைகள் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|
| Kids Helpline – ஐந்துமுதல் 25 வயது வந்தவர்களுக்கு 24 மணித்தியால ஆலோசனை | 1800 551 800 | www.kidshelpline.com.au |
| Headspace – 12 முதல் 25 வயதை அடைந்தவர்களுக்கு ஆரம்ப ஈடுபாட்டுச் சேவைகள் | 1800 650 890 | https://headspace.org.au |

| தேசிய இளை ஞர் சேவைகள் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|
| YouthBeyondBlue – மன அழுத்தம், மனநோயுடனான இளவயதினருக்காக 24 மணித்தியால உதவி | 1300 22 4636 | www.youthbeyondblue.com |
| Department of Education and Training | | https://education.gov.au/youth |
| Generation Success – இளம் தொழிலாளருக்கு உதவுவதற்கு வளங்கள் | | www.employment.gov.au/generation-success-youth-employment-initiative |
| Youth Employment | | www.employment.gov.au/job-seekers-0 |
| Australian Institute of Family Studies இருந்து இணைப்புக்கள் | | https://aifs.gov.au/cfca/publications/helplines-and-telephone-counselling-services-children-y |
| வீடற்றவர்கள் அல்லது வீட்டை இழக்கும் ஆபத்தை எதிர்நோக்கும் 12 – 18 வயதுடையோருக்கு Reconnect உதவுகிறது. | | www.dss.gov.au/our-responsibilities/housing-support/programmes-services/homelessness/reconnect/reconnect-services |
| 18 வயதிற்கும் குறைந்த சிறுவர்களைக் குறிவைத்து கொடூர இணைய அடாவடித்தனம் செய்வோர் முறையிடுவதற்காக - Office of the Children's eSafety Commissioner | | www.esafety.gov.au/reportcyberbullying |

இளைஞர் சேவைகளை மாநில மற்றும் பிரதேசங்களும் வழங்குகின்றன.

| மாநிலம் அல்லது பிரதேசம் | இளைஞர் சேவை | இணையத்தளம் |
|---|---|---|
| ACT | Youth InterACT | www.youth.act.gov.au |
| NSW | Youth NSW | www.youth.nsw.gov.au |
| NT | Office of Youth Affairs | www.youth.nt.gov.au |
| Qld | Queensland Youth | www.communityservices.qld.gov.au/youth |
| SA | South Australia Youth Site | www.officeforyouth.sa.gov.au |
| Tas. | Office of Children and Youth Affairs | www.linkzone.tas.gov.au |
| Vic. | Youth Central | www.youthcentral.vic.gov.au |

| மாநிலம் அல்லது பிரதேசம் | இளைஞர் சேவை | இணையத்தளம் |
|---|---|---|
| WA | Office for Youth | www.wa.gov.au/information-about/your-community/youth |

இளைஞர்களுக்கான பொழுதுபோக்கு மற்றும் ஏனைய திட்டங்களுக்காக உள்ளூர் சபை (கவுன்சில்)களுடன் தொடர்பு கொள்ளவும்.

## பெற்றார்

பிள்ளைவளர்ப்பை ஆஸ்திரேலியா மதிக்கிறது ஆனால், ஒரு 'நல்ல' பெற்றாராக இருப்பது எப்போதும் சுலபமானதல்ல எனக் கண்டறிந்துள்ளது. பல நிறுவனங்களிலிருந்து தகவலும் உதவியும் கிடைக்கும்.

குழந்தைகளுக்கான கண்டிப்பு, பிள்ளை வளர்ப்பில் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது, ஆனால், ஆஸ்திரேலியாவில் உடல்ரீதியான தண்டனை வழங்குதல் சட்டவிரோதமானது. சிறப்புரிமையை மீளப்பெறல் அல்லது உங்கள் குழந்தையை அவர்களின் அறைக்கு அனுப்புதல் போன்ற வேறுவிதமான கண்டிப்புகளை நீங்கள் வழங்கலாம்.

உங்கள் குழந்தைகளைக் கட்டுப்படுத்துவதில் உங்களுக்குப் பிரச்சினை இருப்பின், குடும்ப ஆலோசனை மற்றும் பிள்ளை வளர்ப்பு ஆதரவு சேவையாளரிடமிருந்து உதவி பெறுங்கள்.

| சர்வதேச பெற்றோர் பராமரிப்பு | இணையத்தளம் |
|---|---|
| Family and Relationship Advice Line (தொலைபேசி 1800 050 321) | www.familyrelationships.gov.au |
| MyChild | www.mychild.gov.au/ |
| Raising Children Network | www.raisingchildren.net.au |
| Australian Childhood Foundation – மொழிபெயர்க்கப்பட்ட தகவல்கள் அடங்கலாக | www.kidscount.com.au/en |
| வயதுவந்த சிறுவர்களை பராமரித்து வளர்த்தல் | www.abcdparenting.org |
| Kidsafe | www.kidsafe.com.au |
| ஆஸ்திரேலிய அரசாங்க இணைப்பு | www.australia.gov.au/information-and-services/family-and-community/caring-for-children |

## குழந்தை ஆதரவு

பிரிந்து வாழும் பெற்றோர் தமது பிள்ளைகளின் நன்மைக்காக, குழந்தை ஆதரவு கொடுப்பனவுகளைச் சமாளிக்க Department of Human Services ஆல் நிர்வகிக்கப்படும் Child Support திட்டம் உதவுகிறது. உங்கள் குழந்தைக்கான ஆதரவு விருப்பத்தேர்வுகளைக் கலந்துரையாட திணைக்களத்துடன் தொடர்புகொள்ளவும்.

| குழந்தைப் பராமரிப்பு | டர்புத் தகவல்கள் |
|---|---|
| Child Support இணையத்தளம் | www.humanservices.gov.au/childsupport |
| தொலைபேசி Child Support | 131 272 |
| வேற்று மொழியில் தகவல்கள் | www.humanservices.gov.au/yourlanguage |
| வந்தேறிகள், அகதிகள் மற்றும் விருந்தினர் | www.humanservices.gov.au/multicultural |

## முதியோர்

50 வயதுக்கு மேற்பட்டோருக்குச் சேவைகளை வழங்கும் பல அரச, தனியார், சமூக நிறுவனங்கள் இருக்கின்றன.

ஆஸ்திரேலிய அரசாங்கம் பின்வருவனவற்றை வழங்குகிறது:

- Age Pension - www.humanservices.gov.au/agepension இல் தகைமையுடைய வயதான ஆஸ்திரேலியர்கள் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கள் மற்றும் வருமானஆதரவு.
- My Aged Care - உங்கள் விருப்பத்தெரிவுகள் மற்றும் www.myagedcare.gov.au இல் எவ்வாறு அணுகுவது என்பது பற்றிய தகவல்கள்,

*அத்தியாயம் 9, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு* - இதையும் பார்க்கவும்.

எல்லா மாநிலங்களிலும், பிரதேசங்களிலும் Seniors Card திட்டம் இருக்கிறது.இந்த அட்டை இலவசமானது அத்துடன் இதனை வைத்திருப்பவர்கள் தாம் பங்கு கொள்ளும் வியாபாரங்களில் சலுகைகளுக்கும், தள்ளுபடிகளுக்கும் தகைமையுடையவர்களாவர்.

மேலதிகத் தகவல்களுக்கு:

| மூத்தோர் தகவல் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|
| Centrelink | 132 300 | www.humanservices.gov.au/olderaustralians |
| My Aged Care | 1800 200 422 | www.myagedcare.gov.au |
| Seniors Card திட்டங்கள் | | www.australia.gov.au/information-and-services/benefits-and-payments/older-australians/seniors-card |

| மூத்தோர் தகவல் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|
| ஆஸ்திரேலிய அரசாங்க - வயதான ஆஸ்திரேலியர்கள் | | www.australia.gov.au/information-and-services/benefits-and-payments/older-australians |

## உறவினரைக் தேடிக்கண்டுபிடித்தல்

யுத்தம், உள்நாட்டுக் கலவரங்கள், இயற்கை அழிவுகள் காரணமாகப் பிரிந்துவிட்ட உறவினரைத் தேடிக்கண்டுபிடித்தல் மற்றும் செய்திப்பரிமாற்றச் சேவைகளை ஆஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கம் வழங்குகிறது.செஞ்சிலுவைச் சங்கங்களின் Australian Red Cross உலகளாவிய இணைப்பு, வெளிநாடுகளிலுள்ள காணாமல்போன குடும்ப உறுப்பினரைக் கண்டறிய உதவுகிறது. அத்துடன் ஆஸ்திரேலியாவில் இப்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கிறவர்களை, வெளிநாட்டிலுள்ளவர்களுக்கு அறிந்துகொள்ள உதவுகிறது.

Red Cross International Tracing and Refugee Service யினது, காணாமல் போனோரைத்தேடும், மற்றும் அகதி சேவைகளுடன் தொடர்புகொள்ள:

| ஆஸ்திரேலியன் செஞ்சிலுவை | தொடர்புத் தகவல்கள் |
|---|---|
| மின் அஞ்சல் | natinfo@redcross.org.au |
| Red Cross இணையத்தளம் | www.redcross.org.au |
| National | 03 9345 1800 |
| ACT | 02 6234 7600 |
| NSW | 02 9229 4111 அல்லது இலவச அழைப்பு 1800 812 028 |
| NT | 08 8924 3900 |
| Qld | 07 3367 7222 அல்லது இலவச அழைப்பு 1300 554 419 |
| SA | 08 8100 4500 |
| Tas. | 03 6235 6077 |
| Vic. | 03 8327 7700 அல்லது இலவச அழைப்பு 1800 131 701 |
| WA | 08 9225 8888 அல்லது இலவச அழைப்பு 1800 810 710 |

# உங்கள் குடும்பம் மற்றும் Centrelink

Centrelink மற்றும் Medicare ஊடாகச் சமூக, சுகாதார மற்றும் வேறு கொடுப்பனவுகளையும், சேவைகளையும், Department of Human Services வழங்குகிறது. இது ஒவ்வொரு தனிப்பட்டவர்களதும், குடும்பங்களினதும் தேவைகளைப் பொறுத்து வேறுபடும். உங்கள் சந்தர்ப்ப சூழ்நிலை மாறினால், உதாரணமாக, உங்களுக்கு ஒரு குழந்தை கிடைத்தால், நீங்கள் வேலையை இழந்தால், அல்லது சுகவீனமுற்றால், உதவிக்காக, உடனடியாக Centrelink ஐத் தொடர்பு கொள்ளவும்.

Centrelink, உதவி தேவைப்படுவோருக்கு ஆதரவளிக்கும் அதேநேரம், மக்கள் மிகவும் தன்னிறைவுடைய ஆதரவளிப்பதுடன், வேலை பெற்றுக் கொள்ள உதவுகிறது. ஓய்வுபெறத் திட்டமிடுவோருக்கு அல்லது வருத்தத்தை அனுபவிப்பவர்களுக்கு அல்லது ஒரு நெருக்கடி போன்ற பல்வேறுபட்ட வாழ்க்கை நிலைகளில் விசேட உதவி தேவைப்படுறவர்களுக்கும் Centrelink ஆதரவளிக்கிறது.

## இந்தப் பகுதியில்

- உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்துதல்
- வேறு மொழிகளில் உதவி
- Centrelink உடன் தொடர்பாடலுக்கு உதவி
- Centrelink காத்திருப்புக் காலம்
- Centrelink கொடுப்பனவுகளைக் கோருதல்
- குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள்
- நியூஸீலந்து குடிமக்கள் (ஆஸ்திரேலிய குடிமக்கள் அல்லாதோர்)
- அகதிகள், மனிதநேய வருகையாளர்களுக்கான Crisis Payment
- ஏனைய Centrelink சேவைகள்
- குறைந்த வருமானம் பெறுவோருக்குச் சலுகைகள்
- சந்தர்ப்பசூழல் மாற்றம்
- துணைவர் என்பதன் விளக்கம்
- மீளாய்வும், மேன்முறையீடும்
- உங்கள் தகவல்களின் இரகசியம்
- இளைஞர்கள்
- ஆதரவுக்கான உத்தரவாதம்

## உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்துதல்

உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்த Centrelink இல் கையளிக்க வேண்டிய ஆவணங்களாவன, உதாரணமாக, கடவுச்சீட்டு, பிரயாண ஆவணங்கள், வங்கிக்கணக்கு விபரங்கள் அல்லது வசிப்பிட விபரங்கள்.
(www.humanservices.gov.au/customer/enablers/proof-of-identity)

# வேறு மொழிகளில் உதவி

## வேறு மொழிகளில் தகவல்கள்

கொடுப்பனவுகள், சேவைகள் பற்றி நீங்கள் வாசிக்க, பார்க்க அல்லது செவிமடுக்கக் கூடிய ஒரு தொகுதி மொழிபெயர்க்கப்பட்ட தகவல்களை http://humanservices.gov.au/yourlanguage இல் Centrelink இடம் உண்டு.

கொடுப்பனவு, வேலைதேடல், Medicare அட்டை , Health Care Card போன்ற தலைப்புக்களை உள்ளடக்கிய *ஆஸ்திரேலியாவுக்குப் புதிது* பற்றிய10 மொழிகளில் பெற்றுக்கொள்ளக்கூடிய, ஒரு தொகுதி காணொளிகள் Centrelink www.humanservices.gov.au/yourlanguage இல் உண்டு.

## பன்மொழித் தொலைபேசிச் சேவை

நீங்கள் ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய மொழியில் பேசுபவரானால், 131 202 இல் எமது பன்மொழி தொலைபேசி சேவையில், (உள்ளூர் நேரம் காலை 8 - மாலை 5) Centrelink கொடுப்பனவுகள், சேவைகள் பற்றி உங்கள் மொழியில் பேசும் ஒருவருடன் நீங்கள் உரையாடலாம்.

## உரைபெயர்ப்பாளர்கள்

நீங்கள் ஆங்கிலம் பேசாதவரானால், உங்களது சந்திப்புக்கான முன்பதிவுக்கு, இலவசமாக ஒரு உரைபெயர்ப்பாளரை Centrelink உங்களுக்குப் பெற்றுத்தரும். ஒரு மொழிபெயர்ப்பாளரை ஒழுங்குசெய்வற்கு 131 202 ஐ அழையுங்கள் அல்லது உங்கள் உள்ளூர் Centrelink Service Centre இல் கேளுங்கள்.

## உங்கள் ஆவணங்களை மொழிபெயர்த்தல்

எமது கொடுப்பனவுகள், சேவைகளுக்கு நீங்கள் ஒரு கோரிக்கை செய்ய உதவும் உங்களுக்குத் தேவையான ஆவணங்களை இலவசமாக மொழிபெயர்க்க Centrelink ஒழுங்குசெய்யும். 131 202 ஐ அழையுங்கள் அல்லது உங்கள் உள்ளூர் Centrelink Service Centre இல் கேளுங்கள்.

## பன்மொழிச் சேவை உத்தியோகத்தர்

குடிபெயர்ந்த அகதி சமூகங்களுக்கான Centrelink உடைய திட்டங்கள், சேவைகள் பற்றிய தகவல்களை பன்மொழி சேவைகள் உத்தியோகத்தர்கள் (பாருங்கள்: www.humanservices.gov.au/mso) வழங்குகிறார்கள்.

# Centrelink கடிதங்கள்

Centrelink உங்களுக்கு அனுப்பும் கடிதங்கள் முழுவதையும் நீங்கள் வாசித்துத் தேவையானால் பதில் அளிக்க வேண்டும். உங்கள் மொழியில் ஒரு கடிதத்தை விளக்க வேண்டுமானால், 131 202 ஐ அழைக்கவும்.

## Centrelink உடன் தொடர்பாடலுக்கு உதவி

உங்கள் சார்பாகச் செயற்பட ஒருவரையோ அல்லது நிறுவனத்தையோ ('நியமிக்கப்பட்டவர்' ஒருவர்) நீங்கள் நியமிக்கலாம். பார்க்க: www.humanservices.gov.au/nominees

| Centrelink | தொடர்புத் தகவல்கள் |
|---|---|
| Centrelink | www.humanservices.gov.au/centrelink |
| வந்தேறிகள், அகதிகள் மற்றும் பார்வையாளர்களுக்கான தகவல்கள் | www.humanservices.gov.au/multicultural |
| வேறு மொழிகளில் தகவல்கள் | www.humanservices.gov.au/yourlanguage |
| வேறு மொழிகளில் தகவல்களுக்கு | 131 202 |
| கோருவதற்கான எண்ணம் | www.humanservices.gov.au/customer/enablers/intent-to-claim |
| உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தல் | www.humanservices.gov.au/customer/enablers/proof-of-identity |
| ஒரு சேவை நிலையத்திற்கு வருகைதரல் | www.humanservices.gov.au/findus |

## Centrelink காத்திருப்புக் காலம்

அநேக கொடுப்பனவுகளையும், நன்மைகளையும் பெறுவதற்கு முன்னர் அண்மையில் வந்துசேர்ந்த குடியிருப்பாளர்கள் அல்லது தற்காலிக புலம்பெயர்ந்தோர் எல்லோரும் கட்டாயமாக 104 வாரங்கள் காத்திருக்க வேண்டும். (Newly Arrived Resident's Waiting Period). குடும்ப ஆதரவுக் கொடுப்பனவுகளுக்கு இந்தக் காத்திருப்புக் காலம் ஏற்புடையதாகாது. (பார்க்கவும்: Payments for Families). மேலதிக தகவல்களுக்குப் பாருங்கள்: www.humanservices.gov.au/families

ஆஸ்திரேலியாவில் வந்துசேர்ந்த திகதி மற்றும் எவ்வகையான நன்மை, யாருக்கு இது பிரயோகிக்கப்படும் என்பவற்றைப் பொறுத்துக் காத்திருக்கும் காலம் வேறுபடும். உங்கள் வாழ்க்கைக் காலத்தில் எவ்வேளையிலாவது ஆஸ்திரேலிய வதிவாளராக வாழ்ந்த காலம், காத்திருப்புக் காலத்திற்குள் சேர்த்துக்கொள்ளப்படும்.

காத்திருப்புக் காலத்தின்போது, வேலைதேட உதவிபெற, நீங்கள் jobactive இல் பதியலாம். Centrelink Service Centres இலுள்ள தொழில் தேடுவதற்கான சுய- உதவிபெறும் வசதிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

## Newly Arrived Resident's Waiting Period இலிருந்து விலக்களித்தல்

Newly Arrived Resident's Waiting Period இலிருந்து விலக்களிப்புகள் கீழே குறிக்கப்பட்டவர்களுக்குப் பொருந்தும்:

- ஆஸ்திரேலியக் குடிமக்கள்.
- ஆஸ்திரேலியக் குடிமக்களின் அல்லது நீண்டகால வதிவாளரின் குடும்ப உறுப்பினர்கள்.
- மனிதாபிமான வருகையாளர் திட்டத்தின்கீழ் வந்துசேர்ந்தவரின் குடும்ப உறுப்பினர்கள் அல்லது ஒருவர்.
- குறித்த சில உப பிரிவுகளில் வீசா வைத்திருப்போர்.

உங்கள் சூழ்லையில் ஏற்பட்ட முக்கியமான மாற்றம் காரணமாக, நீங்கள் கஸ்டப்பட்டால், உடனடியாக ஒரு விசேட நலனைப்பெற உங்களால் முடியும். சாதாரணமாக, வேலை இழப்பு, அல்லது வெலை தேடிஎடுக்க முடியாமை ஒரு முக்கியமான சூழ் நிலைமாற்றமாகக் கருதப்படுவதில்லை. நீங்கள் தகுதியுடையவரா என்பதைக் கண்டறிய ஒரு கோரிக்கையை Centrelink இல் சமர்ப்பியுங்கள்

### வசிப்பிடத் தகைமைபெறத் தேவையானவை

புதிதாக வந்துசேர்ந்த வதிவாளரின் காத்திருக்கும் காலத்தில் ஓய்வூதியங்கள் மற்றும் சில உதவித்தொகைகளைப் பெறமுடியாது, ஆனால், 'வசிப்பிடத்துக்கான தகைமையடைதல்' காத்திருப்புக் காலத்தில் இருக்கிறது:

- Parenting Payment and Widow Allowance: 104 வாரங்கள்.
- Age Pension and Disability Support Pension: 10 ஆண்டுகள்.

சில விதிவிலக்குகள் உண்டு. உதாரணமாக, ஆஸ்திரேலிய வதிவாளராக வந்த பின்னர் நீங்கள் ஒரு அகதியானால் அல்லது மனிதாபிமான வருகையாளர், அல்லது தாரமிளந்தவராதல், ஊனமுற்றல் அல்லது தனியான பெற்றாராதல்.

நீங்கள் கோருகிற கொடுப்பனவை உள்ளடக்கிய ஒரு சர்வதேச சமூக பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை ஆஸ்திரேலியாவுடன் செய்துகொண்டுள்ள ஒரு நாட்டில் நீங்கள் வாழ்ந்திருந்தால் நீங்கள் ஓய்வூதியத்திற்குத் தகைமை யுடையவராகலாம். www.humanservices.gov.au/issa இல் பட்டியலிடப்பட்டுள்ள 29 நாடுகளுடன் ஆஸ்திரேலியா சமூக, பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்துள்ளது.

வெளிநாட்டு ஓய்வூதியம் கோருதல் அல்லது வெளிநாட்டில் இருக்கும்போது ஆஸ்திரேலிய ஓய்வூதியத்தைக் கோருதல் அடங்கிய ஓய்வூதியம் பற்றிய மேலதிக தகவல்களுக்குப் போகவும்: www.humanservices.gov.au/international

# Centrelink கொடுப்பனவுகளைக் கோருதல்

சமூக, பாதுகாப்புக் கொடுப்பனவைக் கோர நீங்கள் ஒரு 'கோருவதற்கான விருப்பம்' இல் பதிவு செய்யவேண்டும். இது, நீங்கள் கொடுப்பனவு ஒன்றிற்காக விண்ணப்பிக்க விரும்புகிறீர்களென்பதை Centrelink க்கு அறிவிக்கும். இதை கணினியில் நேரடியாகவும், நேரேசென்றும் அல்லது தொலைபேசி மூலம் நீங்களாகவோ அல்லது உங்களுக்காக இன்னொருவரோ செய்யலாம்.

உங்கள் விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டால், Intent to Claim ஐப் பதிவுசெய்த நாளிலிருந்து உங்களுடைய கொடுப்பனவு அல்லது சலுகை அட்டை ஆரம்பிக்கும் (கொடுப்பனவுக்காக அல்லது சலுகை அட்டைக்காக அந்த நாளில் நீங்கள் தகைமை பெறுவதுடன் உங்களுடைய பூர்த்திசெய்யப்பட்ட கோரிக்கைப் படிவம் 14 நாட்களுக்குள் திருப்பி அனுப்பப்பட்டால்).

ஆஸ்திரேலியாவில் வாழுகின்ற, ஆஸ்திரேலிய வதிவாளர்களுக்கு மாத்திரம் அநேக Centrelink கொடுப்பனவுகள் கிடைக்கும் (போய்ப் பார்க்கவும்: www.humanservices.gov.au/customer/enablers/residence-descriptions).

கொடுப்பனவு வகையைப் பொறுத்து குறித்தசில தற்காலிக வீசா வைத்திருப்பவர்களும் தகைமை பெறக்கூடும். விதிவிலக்கு இல்லாவிட்டால், தகைமையளிக்கும் ஒரு வதிவிட காலம் அல்லது Newly Arrived Resident's Waiting Period உங்களுக்குத் தேவைப்படலாம். ஏனைய காத்திருப்புக் காலங்களும் பொருந்தும். பார்க்கவும், பாருங்கள் *Centrelink காத்திருப்புக் காலம்.*

வருமான ஆதரவுக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள உங்களிடம் வரிக் கோவை இலக்கம் (TFN) இருக்கவேண்டும்.

உங்கள் நிலவரத்தைப் பொறுத்து, எவ்வகையான கொடுப்பனவுகளுக்கு நீங்கள் தகுதியுடையவர்களென்பதை கீழுள்ள அட்டவணை குறிப்பிடும்.

| உங்கள் நிலவரம் | தொலைபேசி | சென்ரர் லிங்க் கொடுப்பனவு | இந்தக் கொடுப்பனவு உதவுகிறது |
|---|---|---|---|
| நான் வேலை தேடுகிறேன் | 132 850 | Newstart Allowance அத்துடன்/ அல்லது Youth Allowance | நீங்கள் சம்பளத்துடன் கூடிய வேலையைத் தேடினால்,அல்லது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியிலோ அல்லது வேறு செயற்பாடுகளிலோ பங்குபற்றினால், அது நீங்கள் வேலையைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கும். |
| நான் படித்துக்கொண்டிருக்கிறேன் அல்லது பயிற்சி பெறுகிறேன் | 132 490 | Youth Allowance | நீங்கள் 16 – 24 வயதுடையவரானால், முழு நேரக்கல்வி பெறுபவரானால், அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஆஸ்திரேலிய தொழில் பயிற்சியை அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொண்டு வருபவரானால். |

| உங்கள் நிலவரம் | தொலைபேசி | சென்ரர் லிங்க் கொடுப்பனவு | இந்தக் கொடுப்பனவு உதவுகிறது |
|---|---|---|---|
| | | Austudy | நீங்கள் 25 அல்லது அதற்கும் மேலான வயதுடையவரானால், முழுநேரம் கல்விமேற்கொள்பவரானால் அல்லது முழுநேர ஆத்திரேலிய தொழில் பயிற்சியை மேற்கொள்பவரானால். |
| நெருக்கடியில் எனக்கு உதவி தேவை | 132 850 | Crisis Payment | நெருக்கடிகாலக் கொடுப்பனவு:<br>• நீங்கள் ஓர் அகதியாக அல்லது மனித நேய வருகையாளராக அண்மையில் ஆஸ்திரேலியாவுக்கு வந்துசேர்ந்திருந்தால்<br>• நெருப்பு அல்லது வெள்ளத்தினால் சேதம் காரணமாக உங்கள் வீட்டில் வசிக்கமுடியாவிட்டால்,<br>• வீட்டு வன்முறைகாரணமாக நீங்கள் உங்கள் வீட்டைவிட்டு வெளியேறியிருந்தால்,<br>• தற்சமயம் நீங்கள் சிறையிலிருந்து வெளியேறியிருந்தால் ஒரு தடவை மாத்திரம் பணம் செலுத்தவேண்டியதாகும். |
| | | Special Benefit | உங்கள் கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்ட சந்தர்ப்ப சூழல் காரணமாக உங்களுக்குக் கடுமையான பணத் தேவையிலிருந்தால். |
| நான் ஒருவரை பராமரிக்கிறேன் | 132 717 | Carer Payment | உங்கள் பராமரிப்பு வேலைக்கான கட்டாயத்தேவைகள் காரணமாக சம்பளம் பெறும் உத்தியோகத்தின்மூலம் உங்களை நீங்கள் கவனித்துக்கொள்ள முடியாத ஒரு பராமரிப்பாளராக நீங்கள் இருந்தால் |
| | | Carer Allowance (வருமானத்திற்கு ப்பதிலான) | பின்வருவோருக்கு நாளாந்தம் மேலதிக பராமரிப்பு மற்றும் கவனிப்பினை வழங்கும் ஒரு பெற்றோராக அல்லது கவனிப்பாளராக நீங்கள் இருந்தால்:<br>- ஒரு வயதானவர் அல்லது இயலாமையுடனான அல்லது மருத்துவத்திற்குரிய நிலையிலுள்ள குழந்தை<br>- நொடிந்துபோன, வயதான வயதுவந்தோர்களுக்கான, நாளாந்த மேலதிக கவனிப்பு மற்றும் பராமரிப்பை வழங்கும் பெற்றோர் அல்லது பராமரிப்பாளராக நீங்கள் இருந்தால் |

| உங்கள் நிலவரம் | தொலைபேசி | சென்ரர் லிங்க் கொடுப்பனவு | இந்தக் கொடுப்பனவு உதவுகிறது |
|---|---|---|---|
| நான் சுகவீனமுற்றுள்ளேன் அல்லது எனக்கு இயலாமை உள்ளது | 13 2717 | Disability Support Pension | அடுத்த இரண்டு ஆண்டுகளுக்காக வேனும் நீங்கள் தொழில் பார்க்க முடியாதவாறு உடல், உள அல்லது மனக்கோளாறு அல்லது நீங்கள் நிரந்தர பார்வையிழப்பு உங்களுக்கிருப்பின் |
| | | Sickness Allowance | மருத்துவ நிலை காரணமாக, நீங்கள் வேலை அல்லது முழுநேரப் படிப்பில் இருந்தாலும், தற்காலிகமாக வேலையோ அல்லது கல்வியையோ மேற்கொள்ள முடியாதிருப்பின் அத்துடன் நீங்கள் குணமடைந்ததும் திரும்பவும் ஈடுபட வேலை அல்லது கல்வி உங்களுக்கு இருந்தால். |
| நான் ஓய்வுபெறவுள்ளேன் அல்லது நான் ஓய்வு பெற்றுவிட்டேன் | 13 2300 | Age Pension | ஓய்வுகாலத்தில் உங்களுக்கு ஆதரவுதர உங்களுக்குப் போதிய வருமானம் இல்லாதிருந்தால். |
| ஒருவர் இறந்த பின்னர் எனக்கு உதவி தேவை | 13 2300 | Bereavement Payment | உங்களது பங்காளர், குழந்தை அல்லது நீங்கள் பராமரித்தவர் இறந்தால் அத்துடன் நீங்கள் ஒரு Centrelink கொடுப்பனவைப் பெறுபவராக இருந்தால். |
| | | Bereavement Allowance | உங்களது பங்காளர் அண்மையில் இறந்துவிட்டார் அத்துடன் நீங்கள் Centrelink இலிருந்து கொடுப்பனவைப் பெறவில்லையானால். |

ஒரு முழு அளவிலான Centrelink இனது கொடுப்பனவுப் பட்டியல் www.humanservices.gov.au/centrelink இல் இருக்கிறது.

## குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள்

உங்களில் தங்கிவாழும் குழந்தைகள் உங்களிடம் இருந்தால், வேலை, குடும்பப் பொறுப்புக்களுக்கு உதவிடப் பல்வேறு கொடுப்பனவுகளை Centrelink குடும்பங்களுக்கு வழங்குகிறது.

மேலதிகத் தகவல்களுக்கு:

| Centrelink தகவல்கள் | தொடர்புத் தகவல்கள் |
|---|---|
| டும்ப இணையத்தளம் | www.humanservices.gov.au/families |
| ஏனைய மொழிகளில் தகவல்கள் | www.humanservices.gov.au/yourlanguage |
| வேறு மொழிகளில் உதவிக்காக | 131 202 |
| சேவை நிலை நிலயத்திற்குப் போக் | www.humanservices.gov.au/findus |

வயது, குழந்தைகளின் எண்ணிக்கை, உங்கள் குடும்ப வருமானம் உட்பட உங்களது குடும்ப சூழ்நிலையைப் பொறுத்து நீங்கள் உதவிபெறத் தகுதிபெறக்கூடும்.

பொதுவாக, குடும்ப உதவிக் கொடுப்பனவுகளைப் பெறத் தகுதியடைவதற்கு நீங்கள் நிரந்தர வீசா வைத்திருப்பதுடன், ஆஸ்திரேலியாவில் வசிக்கவும் வேண்டும், ஆனால் இதற்குச் சில விதிவிலக்குகளும் உண்டு.

| குடும்பம் உதவித்தொகை | இந்தக் கொடுப்பனவு உதவுகிறது... |
|---|---|
| Family Tax Benefit Part A | குழந்தைகளை வளர்ப்பதற்கான செலவுகளுடன். |
| Family Tax Benefit Part B | பிரதான ஒரு வருமானத்துடன் தனியொரு பெற்றார் வீட்டிலே தங்க அல்லது குழந்தைகளைப் பராமரித்துக்கொண்டு சில சம்பளத்துடனான வேலையைச் செய்து சரிக்கட்டத் தெரிவுசெய்த்தால், தனிப்பெற்றார் மற்றும் குடும்பங்கள் அடங்கலான குடும்பங்களுக்கான மேலதிக உதவியை வழங்குவதன் முலம். |
| Single Income Family Supplement | தனியான பெற்றாருடனான குடும்பங்கள் மற்றும் ஒரு பிரதான வருமான உழைப்பாளியுடனான சில குடும்பங்கள். |
| Child Care Benefit | அங்கீகரிக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட குழந்தைப் பராமரிப்புகான செலவுடன். |
| Child Care Rebate | அங்கீகரிக்கப்பட்ட குழந்தைப் பராமரிப்புக்கான செலவுடனான தகமைபெற்ற குடும்பங்கள். |
| Parental Leave Pay | புதிதாகப் பிறந்த அல்லது அண்மையில்  தத்தெடுத்த குழந்தையைப் பராமரிப்பதற்காக வேலையிலிருந்து விடுப்புப் பெற்ற தகுதியுடைய பெற்றோர். |

| குடும்பம் உதவித்தொகை | இந்தக் கொடுப்பனவு உதவுகிறது… |
|---|---|
| Newborn Upfront Payment and Newborn Supplement | தகைமையுடைய பெற்றோருக்கு Family Tax Benefit Part A ஐ அதிகரிப்பதன் மூலம் அவர்களுக்கு ஒரு புதிய குழந்தை பிறக்கும்போது அல்லது ஒரு குழந்தையைத் தத்தெடுக்கும்போது உதவுதல். |
| Dad and Partner Pay | ஒரு புதிதாய்ப் பிறந்த அல்லது அண்மையில் தத்தெடுத்த குழந்தையின் கவனிப்புக்கான அப்பாக்கள் அல்லது பெற்றோர். |
| Parenting Payment | உங்களில் தங்கிவாழும் குழந்தை அல்லது குழந்தைகளின் பிரதான பராமரிப்பாளராக நீங்கள் இருந்தால் |
| Double Orphan Pension | அநாதைகள் இரட்டை ஒய்வூதியம் |

## நியூஸீலந்து குடிமக்கள் (ஆஸ்திரேலிய குடிமக்கள் அல்லாதோர்)

நியூஸீலந்து கடவுச்சீட்டில் ஆஸ்திரேலியாவுக்கு வந்துசேரும் மக்களுக்குப் பொதுவாக, வந்து சேர்ந்ததும் ஒரு Special Category Visa (SCV) வழங்கப்படுகிறது. ஆஸ்திரேலிய சமூக பாதுகாப்பு நோக்கங்களுக்காக, 26 பெப்ரவரி, 2001 இல் ஆஸ்திரேலியாவில் SCV வைத்திருந்தவர்கள் பொதுவில் “பாதுகாக்கப்பட்ட” SCV வைத்திருப்போரெனக் கருதப்பட்டார்கள். 26 பெப்ரவரி 2001 க்குப் பின்னர் ஆஸ்திரேலியாவுக்கு வந்தவர்கள் பொதுவாக, “பாதுகாக்கப்பட்டவர்கள்” ஆகக் கருதப்படவில்லை.

- “பாதுகாக்கப்பட்ட” SCV வைத்திருப்போர், தற்சமயம் ஆஸ்திரேலியாவில் வசிப்பதுடன் காத்திருக்கும் காலம் உட்பட, தகுதி பெறுவதற்கான தகமைகளைக் கொண்டிருந்தால், ஆஸ்திரேலிய பிரஜகளாவர் என்பதுடன் Centrelink கொடுப்பனவுகளைப் பெற வழி உண்டு.
- SCVவைத்திருக்கும், “பாதுகாக்கப்படாத” வர்கள் ஆஸ்திரேலிய வதிவாளர் அல்லர். பொதுவாக அவர்கள் வருமான உதவிக்கு வழிதேடமுடியாது.

இந்த விதிகளையும், காத்திருக்கும் காலம் ஏதாவதிருப்பின் அவற்றையும் பூர்த்தி செய்யும் SCV வைத்திருப்போர் அனைவரும், குடும்ப உதவி, சலுகை அட்டைகளுக்கான வாய்ப்பினைப் பெறலாம்.

“பாதுகாக்க”ப்படாத ஆனால் 26 பெப்ரவரி, 2001 லிருந்து குறைந்தது கடந்த பத்து ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக ஆஸ்திரேலியாவில் வசித்துவந்த SCV வைத்திருப்போர் Newstart Allowance, Sickness Allowance அல்லது Youth Allowance இலிருந்து ஒருவேளை ஒருதடவைக் கொடுப்பனவைப் பெற வாய்ப்பிருக்கலாம். பெறுவதற்குத் தகைமையுடையவர்களுக்கான கொடுப்பனவுகள் ஆகக்கூடிய தொடர்ச்சியான காலப்பகுதியான ஆறுமாதங்கள் வரை இடம்பெறும்.

“பாதுகாக்கப்பட்டவர்”களா, இல்லையா என்பதைப் பொருட்படுத்தாது, ஆஸ்திரேலியாவுக்கும் நியூஸிலந்துக்குமிடையிலான சமூக, பாதுகாப்பு ஒப்பந்தம் சில SCV வைத்திருப்போரை Age Pension, Disability Support Pension அல்லது Carer Payment க்குத் தகைமையுடையவர்களாக்கும் www.humanservices.gov.au/paymentsfornewzealanders இல் நியூஸீலந்து குடிமக்களுக்கான அதிக தகவல்கள் இருக்கின்றன.

## அகதிகள், மனிதநேய வருகையாளர்களுக்கான Crisis Payment

மோசமான சூழ்நிலைகளை அனுபவித்த மக்களுக்கான ஒரு குறைவான கொடுப்பனவு Crisis Payment ஆகும். ஆஸ்திரேலியாவுக்கு வந்துசேர்ந்து ஏழு நாட்களுக்குள் நீங்கள் கோரவேண்டும் அல்லது வந்துசேர்ந்து ஏழு நாட்களுக்குள் ‘Intent to Claim’ ஐ நீங்கள் Centrelink இல் தாக்கல் செய்யவேண்டும்.

மேலும் தகவல்களுக்காக Crisis Payment தகவல்த் தாளை www.humanservices.gov.au/crisispayment இல் போய்ப் பாருங்கள்.

## ஏனைய Centrelink சேவைகள்

பின்வருவன உட்பட பல சேவைகளை Centrelink வழங்குகிறது:

| Centrelink சேவை | தொலைபேசி | உதவி கிடைக்கும் |
|---|---|---|
| Self Service | 136 240 | பாருங்கள் *அத்தியாயம் 1, சுயசேவை* |
| Online Services Support | 132 307 | Centrelink உடைய நேரடிச் சேவைகள் மூலம் உதவி பெறுதல் |
| Centrelink International Services | 131 673 | இடம்பெயர்தல்,அல்லது ஆஸ்திரேலியாவுக்கு வெளியே பயணம் மேற்கொள்ளல், ஆஸ்திரேலியாவுக்கு வெளியே இருக்கும்போது கொடுப்பனவுகளைக் கோருதல், அல்லது வெளிநாட்டிலிருந்தவாறே பணத்தைப் பெறுதல் பற்றிய விசாரணைகள் |
| Financial Information Service (FIS) பதிவுசெய்யும் சேவை | 132 300 | கருத்தரங்கு ஒன்றிற்குப் Financial Information Service பதிவுசெய்தல் |
| முறைப்பாடுகள் மற்றும் பின்னூட்டமும் | 1800 132 468 | பாராட்டுக்கள், முறைப்பாடுகள் மற்றும் அபிப்பிராயங்களை வழங்குவதற்கு |

## குறைந்த வருமானம் பெறுவோருக்குச் சலுகைகள்

வருவாய், தொழில், வயது அல்லது Centrelink கொடுப்பனவு வகையைப் பொறுத்து, குறைந்த வருமானம் பெறும் மக்கள் சலுகைகளை மத்திய, மாநில/பிரதேச மற்றும் உள்ளூர் அரசாங்கங்களிடமிருந்தும் அதேபோல் தனியார் துறையிலிருந்தும் பெற்றுக்கொள்ளத் தகைமை பெறலாம். சுகாதாரம், குடும்பச் செலவு, கல்வி மற்றும் போக்குவரத்துச் செலவுக்குச் சலுகை கிடைக்கக்கூடும். மேலதிகத் தகவல்களுக்கு www.humanservices.gov.au க்குப்போய்த் தேடவும் "குறைந்த வருமானம்"

## சந்தர்ப்பசூழல் மாற்றம்

நீங்கள் சரியான கொடுப்பனவைப் பெறுவதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக, உங்கள் குடும்பத்தில் ஏற்படும் தொழில் அல்லது வாழ்க்கை நிலவர மாற்றங்களை இயன்றளவு விரைவில் Centrelink க்கு அறிவிக்கவேண்டும். உங்கள் தகுதிக்கும் மேலாக உங்களுக்குப் பணம் செலுத்தப்பட்டால், ஓரளவை அல்லது முழுப் பணத்தையும் நீங்கள் திருப்பிச் செலுத்த வேண்டும்.

நீங்கள் Centrelink க்குச் சொல்லவேண்டிய சில மாற்றங்களாவன:

- சொந்த மற்றும் தொடர்பு விபரங்கள்
- வங்கி விபரங்கள்
- உறவுமுறை நிலைமைகள்
- உங்கள் குழந்தைகள் உட்பட, உங்கள் கவனிப்பிலுள்ள எவராவதொருவருக்கான பராமரிப்பு ஏற்பாடுகள்
- தொழில் நிலவரம்
- தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக நாட்டைவிட்டுச் செல்லல்,
- தொகையாகப் பணம் பெறுதல்
- உங்கள் துணைவருடைய வருமானம், சொத்துக்கள் உட்பட வருமான அல்லது சொத்துக்களின் அதிகரிப்பு அல்லது இழப்பு
- கல்வியை ஆரம்பித்தல் அல்லது முடித்தல்.

## துணைவர் என்பதன் விளக்கம்

நீங்கள் தனித்தவரா அல்லது துணைவர் (partner) இருக்கிறாரா என்பதை நீங்கள் Centrelink க்குக் கட்டாயம் தெரிவிக்க வேண்டும். இதனைச் சிலவேளைகளில் 'சோடியில் ஒரு உறுப்பினர்' எனச் சொல்லப்படும். சோடியிலுள்ள இருவரினதும் இணைந்த வருமானம், சொத்துக்களை அநேக கொடுப்பனவுகள் கணிப்பீட்டுக்கு எடுத்துக்கொள்ளும். நீங்கள் தனித்தவரா அல்லது துணைவர் இருக்கிறாரா என்பதைப்பொறுத்துச் சில கொடுப்பனவுகளின் கணிப்பு வீதம் மாறுபடும். துணைவர் இல்லாத ஆட்களுக்கு மாத்திரம் சில கொடுப்பனவுகள் கிடைக்கும்.

## மீளாய்வும், மேன்முறையீடும்

ஒரு தீர்மானத்தில் உங்களுக்குத் திருப்தி இல்லையானால், அதனை மீளாய்வு செய்துகொள்ள www.humanservices.gov.au/customer/reviews-and-appeals இல் Centrelink ஐத் தொடர்பு கொள்ளவும். மீளாய்வுகள், மேன்முறையீடுகளை மேற்கொள்ளவதற்கான நடைமுறைகள் உண்டு.

## உங்கள் தகவல்களின் இரகசியம்

சட்டத்தால் அனுமதிக்கப்பட்டால், அல்லது நீங்கள் சம்மதித்தால் மாத்திரம் உங்கள் சொந்தத் தகவல்கள் Centrelink ஆல் வெளியிடப்படும்.

## இளைஞர்கள்

உங்களிடம் 16 வயதுக்கும் மேலான சிறுவர்கள் இருந்தால் Youth Allowance அல்லது Family Tax Benefit க்கு அவர்கள் தகுதிபெறலாம். இளைஞர்களுக்கான சேவைகளையும் பார்க்கவும்.

## ஆதரவுக்கான உத்தரவாதம்

ஆஸ்திரேலிய வதிவாளர் அல்லது நிறுவனத்திற்கும் ('உத்தரவாதம் அளிப்பவர்'), ஆஸ்திரேலிய அரசாங்கத்திற்கும் இடையில் சட்டமுறையாகக் கட்டுப்படுத்தும் ஓர் ஒப்பந்தம்தான் ஆதரவுக்கான உத்தரவாதம் ஆகும். (www.border.gov.au/about/corporate/information/fact-sheets/34aos). ஆஸ்திரேலியாவில் குடியேறுபவருக்கு ஆதரவளிக்க உத்தரவாதமளிப்பவர் இணங்குகிறார், இதனால் உத்தரவாதம் அளிக்கப்படுபவர் அரச கொடுப்பனவுகளில் தங்கியிருக்கத் தேவையில்லை.

வழங்கப்பட்ட வீசாவின் வகையைப்பொறுத்து ஆதரவுக்கான உத்தரவாதம் இரண்டு அல்லது 10 ஆண்டுகளுக்கு நீடிக்கும். ஆதரவுக்கான உத்தரவாத ஒப்பந்தப் பாதுகாப்பு இருக்கையில், நீங்களோ அல்லது உங்களில் தங்கிவாழ்பவரோ குறித்த நல்வாழ்வுக் கொடுப்பனவைக் கோரினால், உத்தரவாதமளித்தவர் அரசாங்கத்திற்கு முழுத்தொகையையும் திருப்பிச் செலுத்தவேண்டும்.

# 11 பணம்

## இந்தப் பகுதியில்

- நிதிச் சேவைகள்
- பணத்தைப் புரிந்துகொள்ளுதல்
- வங்கித்தொழில்
- வரிவிதிப்பு
- சிறு வியாபாரங்கள்
- கடன் மற்றும் வரவுவைத்தல்
- காப்புறுதி
- நிதி ஆலோசனை பெறுதல்
- காசுப் பிரச்சினைகளுக்கு உதவி
- நுகர்வோர் பாதுகாப்பு

## நிதிச் சேவைகள்

ஆஸ்திரேலியாவில், பல வங்கி நடவடிக்கைகள், காப்புறுதி, ஓய்வுகாலக் கொடுப்பனவு மற்றும் முதலீட்டுப் பொருட்கள், சேவைகள் இருக்கின்றன. வருவாயுடன்கூடிய பொருட்கள், சேவைகளைக் கொடுக்கல் வாங்கல் செய்ய வியாபாரங்கள் அரசாங்க அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதியின்றி இவ்வாறு செய்தல் சட்டவிரோதமானது.

## பணத்தைப் புரிந்துகொள்ளுதல்

உங்கள் தனிப்பட்ட நிதியினை நிர்வகித்தல் பற்றிய தகவல்கள், கணிப்பீட்டுக் கருவிகளுடனான இணைப்பு மற்றும் தொழில்கருவிகளுக்காகப் போகவும்: www.australia.gov.au/information-and-services/money-and-tax/personal-finance

குடும்ப வரவு செலவு, வங்கிநடவடிக்கை, காப்புறுதி மற்றும் கடன் உள்ளிட்ட பணத்தை நிர்வகித்தல், முதலீடுசெய்தல் பற்றிய பயனுள்ள தகவல்கள் Australian Securities and Investment Commission's Moneysmart (www.moneysmart.gov.au) இணையத்தளத்தில் உண்டு.

உங்கள் பணத்தைத் தாம் பெற்றுக்கொள்ளவதற்காக நேர்மையற்ற ஆட்கள் உங்களை ஏமாற்ற முயற்சிக்கலாம். பணம் வைப்பிலிடுவது, வியாபாரக்கடன், காப்புறுதி, வயதுமுதிர்வு ஓய்வுகாலக் கொடுப்பனவு, முதலீடு மற்றும் நிதி ஆலோசனை அல்லது ஒரு முதலீடுபற்றி நிச்சயமின்மை அல்லது சந்தேகம் பற்றி உங்களிடம் ஒரு முறைப்பாடு இருந்தால், 1300 300 630 இல் அழையுங்கள் அல்லது போகவும், Australian Securities and Investments Commission (ASIC) அல்லது போய்ப்பாருங்கள் www.moneysmart.gov.au/tools-and-resources/how-to-complain

## வங்கித்தொழில்

வங்கிகள், கட்டடக் கழகங்கள், கடன் சங்கங்கள் வங்கி சேவையை வழங்குகின்றன. பணத்தை மீளப்பெற, ஒரு வங்கிக்குப் போகவும் அல்லது ATM (Automatic Teller Machine) இலிருந்து பணத்தைப் பெற உங்கள் கடன் அட்டையையும்,உங்களது PIN (Personal Identification Number) ஐயும் உபயோகிக்கவும். நீங்கள் உங்கள் PIN ஐப் பாதுகாக்க வேண்டும். உங்கள் பணப்பை, கையடக்க சிறுபை அல்லது கைப்பேசி போன்றவற்றைக் களவாடப்படக்கூடிய இடத்தில் வைக்கவோ அல்லது உங்கள் PIN ஐ கடன் அட்டையில் எழுதவோ வேண்டாம்.

உங்களது கடனட்டை களவாடப்பட்டோ அல்லது தொலைந்தோ போனால், உங்கள் வங்கிக்கு உடனடியாகச் சொல்லவும்.

வங்கியில் உங்களால் தீர்த்துக்கொள்ள முடியாத பிரசினை இருந்தால், Financial Services Ombudsman ஐ www.fos.org.au இல் தொடர்பு கொள்ளவும்.

மேலதிகத் தகவல்களுக்கு:

| வங்கித் தொழில் தகவல்கள் | இணையத்தளம் |
|---|---|
| Australian Bankers Association – வங்கிக் கணக்கு அடிப்படைகள் | www.bankers.asn.au/Consumers/Managing-Your-Money |
| உங்கள் வங்கிக்கணக்கை நிர்வகித்தல் | www.moneysmart.gov.au/managing-your-money/banking |
| Australian Competition and Consumer Commission – இணைய வங்கித்தொழில் | www.accc.gov.au/consumers/online-shopping/internet-banking |
| MoneySmart மொழிபெயர்க்கப்பட்ட தகவல்கள் | www.moneysmart.gov.au/tools-and-resources/publications |
| Financial Service Ombudsman | www.fos.org.au |

## வரிவிதிப்பு

ஆஸ்திரேலியாவில், தொழில், வியாபாரம் அல்லது முதலீட்டிலிருந்து கிடைக்கும் பணத்தில் அரசாங்கத்திற்கு நீங்கள் வரி செலுத்துகிறீர்கள். தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்களிலிருந்து Australian Taxation Office (ATO) வரியை அறவிட்டு வைத்தியசாலைகள், பாடசாலைகள், வீதிகள், தொடர்வண்டி சேவைகள் போன்ற முக்கிய சமூகச் சேவைகளுக்குச் செலுத்துகிறது.

ஆஸ்திரேலியாவினது வரி வசூலிப்பு மற்றும் மூப்புக்கால ஓய்வூதிய முறை பற்றி மக்கள் அறிந்துகொள்ள உதவும்முகமாக, ATO http://tv.ato.gov.au/ato-tv/channel?c=c-b8nuuyo இல் காணொளிகளை வழங்குகிறது.

## பொருட்கள், சேவைகள் வரி

அநேகமான பொருட்கள், சேவைகள் மற்றும் வேறு விற்கப்படும் அல்லது நுகரப்படும் பொருட்களின் விலைகள் உட்பட பொருட்கள், சேவைகளுக்கான (GST) 10% வரி ஆஸ்திரேலியாவில் உண்டு. அடிப்படை உணவு, அநேக கல்வி, சுகாதார சேவைகள், தகைமையுடைய குழந்தைக்கான பராமரிப்பு மற்றும் முதியோர் இல்லப் பராமரிப்பு போன்ற சில விடயங்களுக்கு (GST) இல்லை.

## வரிக் கோவை இலக்கம்

தனிப்பட்டவர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு ATO வினால் விநியோகிக்கப்படும் வரிக்கோவை இலக்கம் (TFN) தனித்தன்மைவாய்ந்தது. இது வரிவிதிப்புக்கும், முதியோர் ஓய்வூதியகொடுப்பனவுகளுக்கும் உங்களை அடையாளப்படுத்துகிறது. இயன்றளவு விரைவாக உங்கள் வரிக்கோவை இலக்கத்துக்கு விண்ணப்பிக்கவும்.

TFN பெற்றுக்கொள்வதற்கான மிக விரைவான வழி நேரடியாக ஒன்லைன் www.ato.gov.au/tfn இல் ஆகும். ஒரு நாளில் 24 மணித்தியாலங்களும், வாரத்தில் ஏழு நாட்களும்,நேரடியாகப் பதிவுசெய்யலாம். உங்களுடைய கடவுச்சீட்டு விபரங்களும், ஆத்திரேலிய முகவரியும் தேவைப்படும். www.ato.gov.au/order-publications இல் விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கும் அல்லது 13 28 61 இல் வரிக்கோவை இலக்க 'ஹெல்ப்லைன்' இல் ATO Publication Ordering Service ஐத் தொடர்புகொண்டும் பெற்றுக்கொள்ளலாம். உங்கள் விண்ணப்பம் கிடைத்து 28 நாட்களுக்குள் ATO இடமிருந்து உங்களது TFN இலக்கம் உங்களுக்குக் கிடைக்கவேண்டும்.

TFN ஐ மாத்திரம் நீங்கள் பெறுவீர்கள். அது வாழ்க்கைபூராக உங்களுடையதும், கட்டாயமாகப் பாதுகாக்கப்படவேண்டியதுமாகும். நீங்கள் உங்கள் பெயர், அல்லது தொழில், வேறு மாநிலங்களுக்கு இடம்மாறுதல், ஆஸ்திரேலியாவைவிட்டுச் சென்று மீண்டும் வந்தாலும், உங்கள் TFN அதேமாதிரியாகவே இருக்கும். ஒவ்வொருவருக்கும் தங்களுடைய சொந்த TFN தேவை. உங்கள் குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்களுடன் உங்கள் TFN ஐ பகிர்ந்து கொள்ளவேண்டாம்.

உங்கள் பணப்பை, கையடக்கப்பை, கைபேசி போன்ற களவாடப்படக்கூடிய இடங்களில் உங்கள் வரிக்கோவை இலக்கத்தை வைக்கவேண்டாம்.

உங்கள் TFN ஐ இன்னொருவருக்குப் பாவிக்கக் கொடுப்பது, விற்பது அல்லது யாருக்காவது கொடுப்பது பயங்கரமான பிரச்சினைகளை உருவாக்கும். நேர்மையற்றவர்கள் அதைப் பின்வருவனவற்றிற்குப் பயன்படுத்துவர்:

- திரும்பிவரும் வரிப் பணத்தைத் திருடுவர்
- உங்கள் வங்கிக் கணக்கை அணுகுவர்
- உங்கள் பெயரில் வங்கிக்கணக்கை ஆரம்பித்து உங்களைக் கடனாளியாக்குவர்
- உங்கள் பெயரில் அரச நன்மைகளைப்பெற விண்ணப்பம் செய்வதன் மூலம் மோசடியைச் செய்வர்.

Australian Taxation Office, Centrelink, உங்கள் ஒய்வுகால நிதியம், வங்கி அல்லது நிதி நிறுவனம் அத்துடன் உங்களது தொழில் தருனர் உட்படக் குறித்த சில ஆட்கள்தான் உங்கள் TFN ஐக் கேட்கத் தகுதியுடையவர்களாவர்.

வேலை விண்ணப்பம் ஒன்றில் உங்கள் TFN ஐச் சேர்த்துக்கொள்ளும்படி தந்திரமாகக் கேட்கும் நேர்மையற்ற மக்களைப்பற்றிக் (ஏமாற்றிப் பணம் பறிப்போர் / “scammers”) கவனமாக இருக்கவும். உங்கள் அடையாளத்தைத் திருடுவதற்காகவும் பொய்யான வேலை விண்ணப்பத்தினூடாக உங்கள் TFN ஐப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பர். உங்கள் புதிய வேலையை ஆரம்பித்த பின்னர் மாத்திரமே நீங்கள் TFN வேலை தருநருக்குக் கொடுக்கலாம்.

## வேலை கிடைக்கும்போது ஒரு TFN இல்லாதுபோனால் என்ன நடக்கும்?

நீங்கள் வேலையை ஆரம்பிக்கும்போது, வரிக்கோவை இலக்க வெளிபபடுத்தல் படிவத்தை நிரப்புவதற்குக உங்கள் தொழில் தருனர் கொடுக்கும் வேளையில் நீங்கள் உங்கள் TFN ஐ எழுதவேண்டும்.

உங்களிடம் ஒரு TFN இல்லையாயின், உங்கள் சொந்த TFN ஐப் விண்ணப்பித்துப் பெறுவதற்கு நீங்கள் வேலை ஆரம்பித்து 28 நாட்கள் இருக்கிறது. 28 நாட்களுக்குப் பின்னரும் உங்கள் சொந்த TFN இல்லையாயின், உங்களுக்குக் கொடுக்கப்படும் பணத்திலிருந்து ஆகக்கூடுதலான தொகை வரியை உங்கள் தொழில் தருநர் கட்டாயம் எடுக்கவேண்டும். நீங்கள் TFN இல்லாமலும் வேலைசெய்யலாம் ஆனால், உங்கள் சம்பளத்திலிருந்தும், முதுமைக்கால ஓய்வு கொடுப்பனவுகளிலிருந்தும் கூடுதலான வரி அறவிடப்படும். உங்களிடம் ஒரு TFN இல்லையாயின் கணினியூடாக வரிப்பணம் செலுத்தவோ, அரச நன்மைகளுக்கு விண்ணபிக்கவோ அல்லது Australian business number (ABN) பெறவோ முடியாது.

## வருமான வரி திருப்புதல்

ஒரு நிதிஆண்டில் (30 ஜூன் - 1 ஜூலை இடையில்) நீங்கள் ஏதாவது வருமானத்தைச் சம்பாதித்தால், அந்த ஆண்டின் 31 ஒக்ரோபருக்குள் வருமானவரி திருப்பும் அறிக்கையை ATO இல் கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

உங்களது வரிதிருப்பும் அறிக்கையைத் தயாரிக்க ஒரு பதிவுசெய்யப்பட்ட வரி முகவரை நீங்கள் பாவித்தால், 31 ஒக்ரோபருக்குப் பிந்தாமல் நீங்கள் வருமானவரி (tax return) அறிக்கையைச் சமர்ப்பிக்கலாம். சமர்ப்பிக்கப் பொருத்தமான திகதியை 31 ஒக்ரோபருக்கு முன்னர் பெற்றுக்கொள்ள ஒரு வரி முகவருடன் நீங்கள் ஒழுங்குசெய்து கொள்ள வேண்டும்.

நீங்களாகவே உங்கள் வருமானவரி அறிக்கையைக் கணினியில் நேரடியாக www.ato.gov.au/Individuals/Lodging-your-tax-return இல் செய்யலாம். இது ATO வால் வழங்கப்படும் இலவசமான, வசதியான அத்துடன் பாதுகாப்பான சேவையாகும். உங்களது தொழில் தருநர், வங்கிகள், சுகாதார நிதியங்கள், மற்றும் அரசாங்கத் திணைக்களம் வழங்கும் தகவல்களைப் பாவித்து உங்களுக்காக வரிதிருப்பல் படிவத்தை ATO பூர்த்தியாக்க இது அனுமதிக்கும்.

கணினியில் நேரடியாக வரி திருப்பலைச் சமர்ப்பிக்க https://my.gov.au இல் myGov கணக்கு ஒன்றை நீங்கள் உருவாக்கவேண்டும்.

## வரி உதவி

ஒவ்வொரு ஆண்டும் ஜூலையிலிருந்து ஒக்ரோபர் வரைக்கும் குறைந்த வருமானம் பெறுவோர் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு இலவச சேவையே "Tax Help" (வரி உதவி) எனப்படும். 'my Tax' ஐ நேரடியாகப் பாவித்து வருமானவரிப் படிவத்தைப் பூர்த்திசெய்து சமர்ப்பிக்க உங்களுக்கு உதவுவதற்காக ATO வால் பயிற்றப்பட்ட தன்னார்வத் தொண்டர்கள் 'வரி உதவி' நிலையங்களில் இருக்கிறார்கள்.

| ATO | தொடர்புத் தகவல்கள் |
|---|---|
| தொலைபேசி<br>(Tax Help – (வரி உதவி) உட்பட) | 13 2861 |
| வியாபாரம் மற்றும் GST விசாரணைகள் | 13 2866 |
| கணினியில் நேரடியாக ஒரு வரிக்கோவை இலக்கத்துக்கு விண்ணப்பிக்கவும் | www.ato.gov.au/TFN |
| ஓர் அலுவலகத்திற்கு வருகை தரவும் | www.ato.gov.au/Visitus |
| ATO மொழிபெயர்க்கப்பட்ட தகவல்கள் | www.ato.gov.au/General/Other-languages |
| ATO இணையத்தளம் | www.ato.gov.au |

## வெளிநாட்டு ஆதனங்கள், முதலீடுகள், வருமானம்

ஆஸ்திரேலிய குடியிருப்பாளர்கள் தமது உலகளாவிய வருமானத்தில் வரி அறவிடப்படுகிறார்கள். அத்துடன் தமது வருமான வரி திருப்பிச் செலுத்தும் பொழுது கட்டாயம் தமது வெளிநாட்டு வருவாயைக் வெளிப்படுத்தவேண்டும். வரி அறவிடும் நோக்கங்களுக்காக நீங்களொரு ஆஸ்திரேலியரா எனத் தீர்மானிப்பது தனித்தனி ஒவ்வொருவரையும் பொறுத்ததாகும்

Australian Taxation Office (ATO) தனது இணையத்தளத்தில் தகவல்களைக் கொண்டுள்ளது. பின்வருவனவற்றிலிருந்து வரும் வருமானங்கள் உட்பட உங்கள் வரிக் கடப்பாடுகளை நீங்கள் விளங்கிக்கொள்ள இது உதவும்:

- முதலீடுகள் உறுதிச்சீட்டுகள், குத்தகை ஆதனங்கள் போன்ற
- வட்டி மற்றும் உரிமைத்தொகை
- வெளிநாட்டு வியாபார நடவடிக்கைகள்
- வெளிநாட்டிலிருந்துவரும் ஓய்வூதியம்
- நேரடியாக(ஒன்லைன்) பொருட்கள் சேவைகள் வியாபாரம் போன்ற சர்வதேச வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள்.

உங்களுக்கு வெளிநாட்டிலிருந்து வருமானம் கிடைத்தால், நீங்கள் அதைச் சம்பாதித்த நாட்டில் வரிசெலுத்தினாலும், நீங்கள் வெளிப்படுத்தவேண்டும். வெளி நாட்டு வருமானம் ஆஸ்திரேலியாவில் கணிப்பிடக்கூடியதாக இருந்தால், அதற்கான வரியை நீங்கள் வெளிநாட்டில் செலுத்தியிருந்தால், வெளிநாட்டு வரி செலுத்தியமைக்கான அங்கீகாரத்திற்கு நீங்கள் தகுதிபெறக்கூடும்.

ஆஸ்திரேலிய வரி அறவிடலிலிருந்து விடுவிக்கப்பட்ட வெளிநாட்டு வருமானத்தை நீங்கள் கட்டாயம் வெளிப்படுத்த வேண்டும். ஆஸ்திரேலியாவில் நீங்கள் சம்பாதித்த வருமானத்தில் நீங்கள் செலுத்த வேண்டிய வரித்தொகையைக் கணக்குப்பார்க்கையில் வெளிநாட்டு வருமானமும் கணக்குக்குள் சேர்த்துக்கொள்ளப்படக்கூடும். ஏனைய நாடுகளில் அந்த வருமானத்திற்கு நீங்கள் வரிசெலுத்த வேண்டியதில்லையானாலும்கூட, அந்த வருமான மூலத்தை நீங்கள் வெளிப்படுத்த வேண்டும்.

மூன்றாம் தரப்பினரால் ATO க்கு வழங்கப்படும் கரைகடந்த கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய தகவல்களை ஒவ்வொரு ஆண்டும் அறிக்கையுடன் ATO ஒப்பிட்டுப் பார்க்கிறது. இந்தத் தகவல்களுக்கும், உங்களுடைய வருமான வரி அறிக்கைக்குமிடையில் நீங்கள் கொடுத்த தொகைக்குமிடையில் ஏதாவது வேறுபாடு காணப்பட்டால், ATO உங்களைத் தொடர்பு கொண்டு உங்கள் வருமான வரி அறிக்கையுடன் திருத்திக்கொள்ளும்.

உங்களுடைய நிதி அலுவல்கள் சிக்கலானதாக இருந்தால், ஒருவேளை நீங்கள் ஒரு பதிவுசெய்யப்பட்ட வரி முகவரைப் பாவிக்கவேண்டி வரலாம் அல்லது ATO இடமிருந்து ஆலோசனை கேட்கலாம்.

## சிறு வியாபாரங்கள்

ஆஸ்திரேலியாவின் பொருளாதாரத்தில் சிறு வியாபாரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. நீங்கள் சொந்த வியாபாரத்தை ஆரம்பித்தால், உதவி கிடைக்கும். போய்ப்பாருங்கள்: www.business.gov.au/business-topics/starting-a-business/Pages/default.aspx ஒரு சிறு வியாபாரத்தை ஆரம்பிப்பதுபற்றி ஆலோசித்தால், Australian Competition and Consumer Commission, வழங்கும் Small Business Education Program பற்றிய தகவல்களுக்குப் போகவும் www.accc.gov.au/about-us/tools-resources/small-business-education-program

ஆஸ்திரேலியாவில் ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்க விரும்பினால், Australian business number (ABN) க்கு விண்ணப்பிக்க உங்களுக்கு உங்களது TFN தேவைப்படும். கீழே கொடுக்கப்பட்டவையுடன் வேறு பதிவுகளும் தேவைப்படலாம்:

- GST பதிவு (ஆண்டுக்குரிய கைமாறும் மொத்தப் பணத்தொகை AUD75 000 க்கு மேற்பட்டால்) மற்றும்/ அல்லது டாக்ஸிப் பயணத்தை வழங்கவும்.
- தொழில் தருனராகப் பதிவுசெய்தல்.
- ஏனைய அரச முகவர்களால் கேட்கப்படும் பதிவுகள்.

Australian business number வைத்திருப்பதானது நீங்கள் ஒரு வியாபாரத்தை நடாத்துகிறீர்கள் எனப்பொருள்படும். நீங்கள் ஒரு வியாபாரத்தை நடாத்துகிறீர்களா அல்லது வேலை செய்வதற்காக ABN எடுக்கும்படி வற்புறுத்தப்படுகிறீர்களா என நிச்சயமாகத் தெரியாதுவிட்டால், 132 866 ஐ அழையுங்கள். உங்கள் வியாபார வருமானத்தில் வரியைச் செலுத்துங்கள் அத்துடன் உங்களது வியாபாரத்தை அல்லது ஆதனத்தை விற்றால் மூலதனத்தில் ஈட்டிய வருமானத்தில் வரி செலுத்தவேண்டி வரலாம். உங்கள் வருமான சம்பாதிப்புடன் தொடர்புடைய செலவுகளுக்கான கழிவுகளை நீங்கள் கோரலாம்.

உங்களிடம் வேலையாட்கள் இருந்தால், அவர்களுக்கு மூப்புக்கால ஓய்வூதியத்தை நீங்கள் செலுத்த வேண்டும் அத்துடன் ATO வுக்கு அனுப்புவதற்காக அவர்களுடைய சம்பளத்திலிருந்து வரியை அறவிடுங்கள். அவர்கள் குடும்ப உறுப்பினர்களாக இருந்தாலும்கூட நீங்கள் இதனைச் செய்தே ஆகவேண்டும்.

ஒரு வியாபாரத்தை உருவாக்குவதற்கு நீங்கள் அரசாங்க முகவர்களிடமிருந்து அங்கீகாரம் பெறவேண்டும். முடிவொன்றுக்காகச் செல்வாக்குச் செலுத்த அல்லது விரைவுபடுத்தப் பரிசுகளோ அல்லது பணமோ கொடுக்கவேண்டாம். அவ்வாறு ஊக்குவிப்பது சட்டவிரோதமானதுடன், முறைப்பாடு செய்யப்படும். வியாபாரங்களும், தனிப்பட்டவர்களும் தமது வரிக்கான தகைமைகளையும், பொறுப்புக்களையும் விளங்கிக்கொள்ள உதவும் முகமாக, ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்ட வெளியீடுகளிலும் உதவி, தகவல்கள் ATO இல் உண்டு. நீங்கள் இணங்கி ஒத்துப்போகவேண்டிய ஏனைய பொறுப்புக்களுக்கு Australian Business License and Information Service (ABLIS) உங்களுக்கு உதவும்.

மேலதிகத் தகவல்களுக்கு:

| பொருள் | இணையத்தளம் |
|---|---|
| ஒரு சிறு தொழிலை ஆரம்பித்து, நடாத்துதல் | www.business.gov.au/small-business/Pages/starting-and-running-your-small-business.aspx |
| வியாபாரத்துக்கான அரசாங்கத் தகவல்கள் | www.australia.gov.au/information-and-services/business-and-industry |

| பொருள் | இணையத்தளம் |
| --- | --- |
| சிறு தொழில்களுக்கான மானியம் | https://www.business.gov.au/assistance |
| வியாபார உரிமம் மற்றும் பதிவு | https://ablis.business.gov.au/pages/home.aspx |
| சிறு தொழில் வரித் தகவல்கள் | https://www.ato.gov.au/Business/Starting-your-own-business/ |
| Fair Work உங்களிடம் தொழிலாளர்கள் இருந்தால் - தொழிலிட உறவு முறை | www.fairwork.gov.au/find-help-for/small-business |
| மாநிலம் மற்றும் பிரதேச ஆதரவு மற்றும் தகவல்கள் | www.business.gov.au/business-topics/starting-a-business/Pages/advice-and-support-in-your-state-or-territory.aspx |
| Australian Business License and Information Service | https://ablis.business.gov.au/pages/home.aspx |

## கடன் மற்றும் வரவுவைத்தல்

கடன் எடுப்பது அல்லது வங்கிக்கணக்கைப் பாவித்து நீங்கள் பணத்தை வட்டி எனப்படும் மேலதிக கட்டணத்துடன் பிந்திய ஒரு தினத்தில் செலுத்த ஒத்துக்கொண்டு இரவலாக வாங்குவதாகும். தனிப்பட்ட கடன், வீட்டுக்கடன், கடன் அட்டை அல்லது வைப்புத் தொகைக்கு மேலாக வாங்குவது கடனுக்கான வேறுபட்ட வகைகளில் சிலவாகும்.

எந்தவகைக் கடன், கடன்கொடுப்பவர், திருப்பிச் செலுத்த எடுக்கும் காலம், வட்டி வீதம், கட்டணங்கள் மற்றும் கூலி என்பவற்றில் கடனுக்கான செலவு பெருமளவில் மாறுபடும். உங்களால் திருப்பிச் செலுத்த முடியாதுபோனால், நீங்கள் கடன் எடுக்கவோ அல்லது கடன் அட்டையைப் பாவிக்கவோ கூடாது என்பது முக்கியமாகும். வங்கியில் வரவு வைத்தல், கடன் எடுத்தல் மற்றும் இரவலாகப் பெற்றுக்கொள்ளல் பற்றிய அறிவுரைக்காகப், போகவும்: www.moneysmart.gov.au/borrowing-and-credit

## காப்புறுதி

இழப்பு அல்லது சேதத்திலிருந்து நிதிப்பாதுகாப்பிற்காக, ஒவ்வொரு ஆண்டும் ஒருதொகைப் பணத்தை நீங்கள் செலுத்தும்போது அது காப்புறுதி ஆகிறது. ஏற்படும் இழப்பிற்கு நீங்களாகவே பணம் செலுத்தவேண்டி ஏற்படுவதைத் தவிர்த்து விட்டு அதனைத் தானே செலுத்த ஒரு காப்புறுதியாளர் ஒத்துக்கொள்கிறார்.

சுகாதாரம் (அத்தியாயம் 9, *சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு*), வீடு, கட்டடக் காப்புறுதி, பிரயாணம், வாழ்க்கை மற்றும் வாகனக் காப்புறுதி என்பவை பொதுவான காப்புறுதி வகைகளாகும். நீங்கள் ஓர் ஒப்பந்தத்தை ஆரம்பிக்க முன்னர், காப்புறுதி உடன்பாடு பற்றியும், அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதையும் விளங்கிக் கொள்வது முக்கியமாகும்.

பல்வேறுபட்ட வாகனக் காப்புறுதி வகைகளைப் பெற்றுக்கொள்ளலாம். உங்களிடம் ஒரு கார் இருந்தால் மூன்றாம் தரப்புக் காப்புறுதி (Compulsory Third Party - “CTP”) மேற்கொள்வது முக்கியமாகும். இது விபத்தொன்றில் நீங்கள் இன்னொருவருக்குக் காயம் விழைவித்தால் உங்களைக் காப்பாற்ற உதவும். முழுமையான கார் காப்புறுதியை வாங்க நீங்கள் விரும்பக்கூடும். நீங்கள் விபத்தில் ஈட்பட்டிருந்தால், உங்கள் காருக்கு விளையும் ஏதாவது சில சேதங்களுக்கான செலவுகளுக்கான காப்பு. (அல்லது இன்னொருவருடைய கார்) அல்லது உங்கள் கார் தொலைந்து போதலுக்கான காப்பு போன்ற அதிகப்படியான காப்புறுதிப் பாதுகாப்பை இது வழங்கும்.

காப்புறுதி குறித்த மேலதிகத் தகவல்களுக்காக www.moneysmart.gov.au/insurance க்குப் போகவும்.

## நிதி ஆலோசனை பெறுதல்

நிதிப் பிரச்சினைகள் பற்றிய தகவல்களை Financial Information Service (FIS) வழங்குகிறது. FIS என்பது, தொலைபேசியில், நேருக்கு நேர் அல்லது நிதிக் கல்விக் கருத்தரங்குகளூடாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய இலவசமான, சுயாதீனமான சேவையாகும். வழங்கப்படும் சேவைகளைப் பற்றி அதிகளவில் அறிந்துகொள்ள, அழையுங்கள் 132 300 அல்லது www.humanservices.gov.au/fis இல் FIS இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்.

ஒரு கருத்தரங்கில் சமூகமளிக்க, தொலைபேசி 136 357 இல் அழையுங்கள்.

## காசுப் பிரச்சினைகளுக்கு உதவி

உங்களுக்குக் காசுப்பிரச்சினை இருந்தால், உதவி நாடுவது ஆஸ்திரேலியாவில் ஏற்றுக்கொள்ளக்கூடியதும், சாதாரணமானதுமாகும்.

நிதி நெருக்கடியில் இருக்கும் மக்களுக்கு நிதி ஆலோசகர்கள் தகவல்களை வழங்குகிறார்கள். தனிப்பட்டவர்களின் அல்லது குடும்பங்களின் நிலவரங்களை மதிப்பீடு செய்வார்கள், பின்னர் பல்வேறு விருப்பத்தேர்வுகளின் சாதக, பாதகங்களை அடையாளம்காண்பார்கள்.

தொலைபேசி 1800 007 007 அல்லது போகவும்: www.moneysmart.gov.au/managing-your-money/managing-debts/financial-counselling

## நுகர்வோர் பாதுகாப்பு

நேரடியாக (online) வாங்கியவை உட்பட, ஆஸ்திரேலியாவில் நீங்கள் பொருட்கள் அல்லது சேவைகளைப் பெற்றுக்கொள்ளும்போது, Australian Consumer Law இன்கீழ் உங்களுக்கு உரிமைகள் உண்டு. உதாரணமாக, நீங்கள் வாங்கும் உற்பத்திப் பொருட்கள், சேவைகளைப் பற்றிச் சரியான, உண்மையான தகவல்களைப் பெற உங்களுக்கு உரிமையுண்டு. நீங்கள் வாங்கிய பொருட்களில் உள்ள குறை காரணமாக ஏதாவது தவறு ஏற்பட்டால், அதைத் திருத்துவிக்க, அதற்குப்பதிலாக வேறொன்றைப்பெற அல்லது பணத்தைத் திருப்பிப்பெற உங்களுக்கு உரிமையுண்டு. ஒரு உற்பத்திப்பொருள் பாவனைக்குப் பாதுகாப்பானதென எதிர்பார்க்க உங்களுக்கு உரிமையுண்டு. வர்த்தகர்கள் தொலைபேசியில் அல்லது வீட்டுக்கு வந்தால், நீங்கள் அவர்களை விட்டுப் போகும்படி கேட்டால் போகவேண்டும் என்பது போன்ற அவர்கள் பின்பற்றவேண்டிய விதிகள் உண்டு.

கொள்வனவொன்றில் உங்களுக்கு பிரச்சினை இருந்தால், உங்கள் உரிமைகள் மற்றும் தெரிவுகளைப்பற்றிய தகவல்களுக்காக, உங்கள் மாநிலம் அல்லது பிரதேசத்திலுள்ள நுகர்வோர் பாதுகாப்பு முகவரைத் தொடர்பு கொள்ளவும். வாடகைக்கு விடுதல், வீட்டு வசதிகள், வீடு ஒன்றை வாங்குதல் அல்லது விற்றல், கட்டுமானம் மற்றும் திருத்தவேலைகள், கார் வாங்குதல், பொருட்கள்வாங்கக் கடைக்குப்போதல், உத்தரவாதங்கள், தள்ளிவைப்பு, மீள் கொடுப்பனவு, கடன் மற்றும் வர்த்தகம் தொடர்பான பிரச்சினைகளுக்கு அவர்கள் உதவிசெய்யலாம். ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்கள் உங்களுக்கும், விற்றவருக்கும் இடையில் பிரச்சினைக்கு இணக்கம் (பேச்சுவார்த்தை) காண நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

விலைகுறிப்பிடுதல், நியாயமற்ற வியாபாரச் செயற்பாடு, நியாயத்திற்குப் புறம்பான மற்றும் நியாயமற்ற சந்தைப்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் பொருள் நம்பகத்தன்மைக்கு மாறானவற்றிலிருந்து ஆஸ்திரேலியர்களை Australian Competition and Consumer Commission (ACCC) பாதுகாக்கிறது.

மேலதிகத் தகவல்களுக்கு:

| பிராந்தியம் | நுகர்வோர் முகவர் | இணையத்தளம் |
|---|---|---|
| National | Australian Competition and Consumer Commission - தொலைபேசி 1300 302 502 | www.accc.gov.au |
| National | ACCC ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய மொழிகளில் தகவல்கள் | www.accc.gov.au/about-us/information-for/non-english-speaking-background |
| ACT | Office of Regulatory Service (Access Canberra) | www.ors.act.gov.au |
| NSW | NSW Fair Trading | www.fairtrading.nsw.gov.au |

| பிராந்தியம் | நுகர்வோர் முகவர் | இணையத்தளம் |
|---|---|---|
| NT | Consumer Affairs | www.consumeraffairs.nt.gov.au/ForConsumers/ConsumerRights/Pages/default.aspx |
| Qld | Office of Fair Trading | www.fairtrading.qld.gov.au/consumers.htm |
| SA | Office of Consumer and Business Affairs | www.cbs.sa.gov.au/wcm/consumers/consumer-advice/ |
| Tas. | Consumer Affairs and Fair Trading | www.consumer.tas.gov.au |
| Vic. | Consumer Affairs Victoria | www.consumer.vic.gov.au |
| WA | Consumer Protection | www.commerce.wa.gov.au/ConsumerProtection/ |

அரசாங்க ஸ்தாபனங்கள் அத்துடன் சில கைத்தொழில்களில் தனியார் நிறுவனங்கள் பற்றிய முறைப்பாடுகளை விசாரனைசெய்யும் சுயாதீன அதிகாரிகளே குறைகேள் அதிகாரிகளாவர் (ஒம்புட்ஸ்மன்). அவர்கள் சட்டவிரோத, நியாயமற்ற அல்லது பாகுபாடாக நடாத்துதலை நிறுத்த நடவடிக்கை எடுப்பார்கள் அல்லது உங்களுக்காக ஒரு சிறந்த முடிவெடுக்க முயற்சித்துத் தலையிடுவார்கள். அழையுங்கள் 1300 362 072 அல்லது மாநில, பிரதேச மற்றும் கைத்தொழில் குறைகேள் அதிகாரியின் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவதற்குப் போகவும்: www.ombudsman.gov.au

தொலைக்காட்சி, வானொலி போன்ற ஒலிபரப்பு சேவைகளில் பொருத்தமற்ற பொருளடக்கம் பற்றிய முறைப்பாடுகளை Australian Communications and Media Authority (ACMA) விசாரணைசெய்யும். சேவைக்கான சொந்தக்காரருக்கு அல்லது வழங்குபவருக்கு முதலில் முறையிடவேண்டும். முறைப்பாட்டுக்கு முடிவுகாணப்படாவிட்டால், www.acma.gov.au க்குப் போகவும். ACMA வேண்டாத மின்அஞ்சல்கள் மற்றும் தொலைபேசிச் சந்தைப்படுத்தல் அழைப்புக்களையும் விசாரணை செய்வதுடன் “Do Not Call” பதிவுப்புத்தகம் ஒன்றினை நிர்வகிக்கிறது.

ஆஸ்திரேலியர்கள் ‘ஒன்லைன்’ இல் பாதுகாப்பாக இருப்பது பற்றிய தகவல்களையும், வழிமுறைகளையும் www.esafety.gov.au இல் The Office of the Children’s eSafety Commissioner வழங்குகிறது. இணையத் தொல்லைகள், குற்றமுறையான மற்றும் சட்டவிரோதமான ‘ஒன்லைன்’ உருவங்கள் பற்றிய முறைப்பாடுகளையும் அவர்கள் விசாரணை செய்கிறார்கள்.

இணையத்தில் உங்கள் குழந்தை தொல்லைப்படுத்தப்பட்டால், அல்லது ‘ஒன்லைன்’ இல் குற்றமுறையானது அல்லது சட்டவிரோதமானதென நீங்கள் நினைக்கும் காட்சிகளைப் பார்த்தால், www.esafety.gov.au/complaints-and-reporting இல் நீங்கள் ஒரு முறைப்பாட்டைச் செய்யலாம்.

# 12 மக்கள் பங்களிப்பு

## இந்தப் பகுதியில்

ஆஸ்திரேலியச் சமூகவாழ்க்கைக்கு நீங்கள் உங்களை சரிசெய்துகொள்ள ஆஸ்திரேலிய வழக்காறுகளும், சட்டங்களும் உங்களுக்கு உதவும்.

- ஆஸ்திரேலியா பற்றி
- பொறுப்புக்களும் விழுமியங்களும்
- சமத்துவம் மற்றும் பாகுபாடின்மை
- தன்னார்வத்தொண்டு செய்தல்
- மக்கள் சந்திப்பு
- சாந்தமான நடத்தை
- ஆடை அணிதல்
- பொதுவான ஆஸ்திரேலிய பேச்சு வழக்கம்
- வெளிக்களச் செயற்பாடுகளும் பாதுகாப்பும்
- வீட்டில் பாதுகாப்பு
- சுற்றாடல்
- மிருகங்களும், செல்லப்பிராணிகளும்
- புதினப் பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி
- சூதாட்டம்
- இரைச்சல்
- உள்ளூர் அரசாங்க சேவைகள்
- விசாக்கள் (நுழைவிசைவு)
- ஆஸ்திரேலியன் குடியுரிமை

## ஆஸ்திரேலியா பற்றி

ஆகக் குறைந்தது 40,000 ஆண்டுகளுக்கு முன்னர் இம்மண்ணில் குடியேறிய பூர்வீக மற்றும் 'ரொரெஸ்' நீரிணை தீவைச்சேர்ந்த மக்கள்தான் ஆஸ்திரேலியாவின் முதல் வாழ்ந்தோராவர். தமக்கே உரித்தான தனித்துவம் வாய்ந்த ஆன்மீக நம்பிக்கைகள் மண்ணுடனான ஓர் ஆழமான உறவு, செழிப்பான மற்றும் பல்வேறுபட்டகலாச்சார மற்றும் தொடர்ந்து கொண்டு போவதும், உலகின் மிகப்பழமைவாய்ந்தவற்றில் ஒன்றான பாரம்பரியம் இந்த மண்ணின் மைந்தர்களிடமுண்டு, ஆஸ்திரேலியாவின் தேசிய அடையாளத்திற்கு மண்ணின் கலாச்சாரங்கள் முக்கிய பங்களிக்கின்றன. அத்துடன், கலை, ஊடகம், கல்வியறிவு, விளையாட்டு மற்றும் வியாபாரத்திற்குப் பூர்வீக மக்கள், ரொரெஸ்' நீரிணை தீவைச்சேர்ந்த மக்கள் குறிப்பிடக்கூடியளவு பங்களிப்பை வழங்குகிறார்கள். ஆஸ்திரேலியாவின் வரலாறு, பரம்பரைச் சொத்து மற்றும் பழங்குடிமக்களின் கலாச்சாரம் பற்றிய தகவல்கள் www.australia.gov.au/information-and-services/culture-and-arts இல் உண்டு.

பல்வேறுபட்ட கலாச்சாரங்கள், மதங்கள் மற்றும் இனப் பின்புலங்களுடன் கூடிய வேறுபட்ட சமுதாயங்களை ஆஸ்திரேலியா ஏற்றுக்கொள்ளக்கூடியதாகும். முழு உலகத்திலிருந்தும் ஆஸ்திரேலியர்கள் வருகிறார்கள். கிட்டத்தட்ட 46 சதவீதமான ஆஸ்திரேலியர்கள் ஒன்றில் வெளிநாட்டில் பிறந்திருக்கிறார்கள் அல்லது வெளிநாடுகளில் பிறந்த பெற்றோரைக் கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலம் தேசிய மொழியாக இருந்தபோதும், சுதேச மொழிகள் உட்பட சுமார் 300 மொழிகள் ஆஸ்திரேலியாவில் பேசப்படுகின்றன. உலகின் பிரதான மதங்கள் இங்கே பின்பற்றப்படுகின்றன.

ஆஸ்திரேலியாவில், ஆஸ்திரேலிய சட்டத்துக்கு மாறாக இல்லாதவரை ஒவ்வொருவரும் தமது கலாச்சாரங்களையும், சமய சம்பிரதாயங்களையும் பின்பற்றவும், கொண்டாடவும் சுதந்திரமுடையவர்களாவர். ஒவ்வொருவரும், ஓர்ஆஸ்திரேலியனாகச் சமூகத்தைச் சொந்தம் கொள்ளவும், பங்குகொள்ளவும் முடியும். முதலில் அந்த வேறுபாட்டுக்கு நீங்கள் பழக்கப்பட மாட்டீர்கள். எவ்வாறாயினும், ஏனையோரையும், அவர்களின் எண்ணங்களையும், மரபுகளைய வெளிப்படையாகவும், கௌரவமாமவும் மதித்து நடந்துகொண்டால், உங்கள் புதிய வாழ்க்கை பொருத்தமாகவும் வெற்றிகரமாகவும் மாறும்.

ஆஸ்திரேலிய சமூகத்தின் வேறுபட்ட சமூக அமைப்பிற்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் ஆதரவளிக்கிறது. அத்துடன், ஒவ்வொருவரும் நாட்டின் வாழ்வில் சொந்தம்கொள்ளவும், பங்குகொள்வதற்கான சந்தர்ப்பத்தைப்பெற்றுக்கொடுப்பதற்கான தனது பற்றுறுதியை மீளவும் உறுதிசெய்துள்ளது. ஆஸ்திரேலியாவைப்பற்றி அதிகளவில் அறிந்துகொள்ள, போகவும்; www.australia.gov.au/about-australia

## பொறுப்புக்களும் விழுமியங்களும்

ஒவ்வொருவரும் தங்கள் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில்தான் ஆஸ்திரேலியாவில் நாம் அனுபவிக்கும் சுதந்திரமும், சமத்துவமும் தங்கியுள்ளது. ஆஸ்திரேலியாவுக்கு விசுவாசம், எமது ஜனநாயக வாழ்க்கைமுறைக்கு ஆதரவு, ஆஸ்திரேலியாவின் விழுமியங்கள் மற்றும் எல்லோரையும் நியாயமாகவும் அரவணைப்புடனும் ஏற்றுக்கொள்ளும் பாரம்பரியங்களையும், பண்பாடுகளையும் பேண நீங்கள் உதவவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறீர்கள்.

ஆஸ்திரேலியாவினது சுதந்திரமான, ஜனநாயகச் சமூகத்திற்கு எமது குடியுரிமை விழுமியங்கள்தான் அடிப்படையாகும்.

- பாராளுமன்ற ஜனநாயகம்
- சட்ட ஆட்சி
- அமைதியாக வாழுதல்
- பின்புலத்தைப்பற்றிப் பொருட்படுத்தாது தனி நபர் எல்லோரையும் கௌரவித்தல்
- தேவைப்படுவோருக்காக இரங்குதல்
- பேச்சுச் சுதந்திரம் மற்றும் கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரம்
- ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம்
- மத சுதந்திரம் மற்றும் மதம்சாரா அரசாங்கம்

- ஊனம் மற்றும் வயது போன்றவற்றைப் பொருட்படுத்தாது தனிப்பட்டவர்களுக்கிடையிலான சமத்துவம்.
- ஆணுக்கும், பெண்ணுக்குமிடையிலான சமத்துவம்
- சமமான வாய்ப்பு

ஆஸ்திரேலிய பிரஜைகளின் பொறுப்புக்களுள் அடங்குபவை:

- சட்டத்தை மதித்தல்
- பொது, மாநில, அல்லது பிரதேசத் தேர்தல்கள் அத்துடன் ஒரு கருத்துக்கணிப்பில் வாக்களித்தல்
- தேவையேற்படின் ஆஸ்திரேலியாவை ஆதரித்துப் பேசுதல்.
- அழைக்கப்பட்டால் நடுவர் (jury) ஆகச் சேவையாற்றல்

ஆஸ்திரேலிய குடியுரிமை பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு, போகவும்: www.citizenship.gov.au ஆஸ்திரேலிய குடியுரிமைப் பரீட்சை வழிமுறைப் பத்தகம் *ஆஸ்திரேலிய குடியுரிமை: எமது பொது இணைப்பு*.

## சமத்துவம் மற்றும் பாகுபாடின்மை

எல்லோரையும்போல், உங்கள் தேவைகள் நியாயமாக ஆலோசிக்கப்படவும், நீங்கள் மரியாதைக்குரியவராக நடத்தப்படவும் உங்களுக்கு உரிமையுண்டு. அதேபோல், நீங்களும் ஆஸ்திரேலியாவில் பிறந்தவர்களோ அல்லது இங்கு வந்தேறிகளோ, ஏனைய மக்கள் எல்லோரையும் கௌரவிக்கவேண்டும். ஆஸ்திரேலியாவில், இனவெறி மற்றும் பாகுபாடு எந்தவடிவத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும்.

பாகுபாட்டிற்கெதிரான சட்டங்களின் கீழ், வயது, இனம், பிறந்தநாடு, பால், திருமண நிலவரம், கர்ப்பம், அரசியல் அல்லது மத நம்பிக்கைகள், இயலாமை அல்லது பாலியல் விருப்புக்கள் காரணமாக ஏனையோரை விடவும் குறைவான வாய்ப்புடன் நடத்தப்படக்கூடாது. இது அநேகமாகத் தொழில், கல்வி, வீட்டுவசதி, பொருட்கள் வாங்குதல் அத்துடன் வைத்தியர்கள், வங்கிகள், விடுதிகள் போன்ற சேவைகளுக்கான வாய்ப்புகள் உட்பட்ட விடயங்களுக்குப் பொருந்தும். சட்டத்தின்கீழும், ஏனைய எல்லா நோக்கங்களுக்கும் ஆணும், பெண்ணும் சமமானவர்களாவர்.

ஆஸ்திரேலியா பேச்சுச் சுதந்திரப் பாரம்பரியத்தைக் கொண்டது. ஆனாலும், வேறொரு நபரையோ அல்லது குழுவையோ அவர்களின் வயது, இனம், பிறந்தநாடு, பால், திருமண நிலவரம், கர்ப்பம், அரசியல் அல்லது மத நம்பிக்கைகள், இயலாமை அல்லது பாலியல் விருப்புகள் அடிப்படையில் அவமதித்தல், ஏழனம்செய்தல், குற்றம் சுமத்துதல் அல்லது பயமுறுத்துதல் சட்டவிரோதமாகும்.

Australian Human Rights Commission மனித உரிமைகள், பாரபட்ச எதிர்ப்பு மற்றும் சமூகநீதி விடயங்களில் பொதுச்சட்டத்தை நிர்வாகம் செய்கிறது.

| Australian Human Rights Commission | தொடர்புத் தகவல்கள் |
|---|---|
| பொது விசாரணைகள்<br>காலை 9.00 – மாலை 5.00 AEST | 1300 369 711 |
| முறைப்பாடுகள் தகவல் வரிசை காலை 9.00 - மாலை 5.00 AEST (செவ்வாய் மாலை 1.00 மணியிலிருந்து மூடப்பட்டிருக்கும்) | 1300 656 419 |
| பேச்சு, செவிப்புலன் அற்றோருக்காக - TTY | 1800 620 241 |
| மொழிபெயர்க்கப்பட்ட தகவல்கள் - மனித உரிமைகள் | www.humanrights.gov.au/about/translated-information |
| Human Rights இணையத்தளம் | www.humanrights.gov.au |

ஒவ்வொரு மாநிலம் மற்றும் பிரதேசம் தமக்கான பாரபட்சத்திற்கெதிரான சட்டம் மற்றும் அரச முகவரைக் கொண்டுள்ளது.

| மாநிலம் அல்லது பிரதேசம் | மநனித உரிமைகள் முகவர் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| ACT | ACT Human Rights Commission | 02 6205 2222 | www.hrc.act.gov.au |
| NSW | Anti-Discrimination Board of NSW | 02 9268 5544 அல்லது 1800 670 812 இல் பிராந்திய நிசவே இலவச அழைப்பு | www.lawlink.nsw.gov.au/adb |
| NT | NT Anti-Discrimination Commission | 08 8999 1444 அல்லது 1800 813 864 இல் NT இலவச அழைப்ப்பு | www.adc.nt.gov.au/ |
| Qld | Anti-Discrimination Commission Queensland | 1300 130 670 | www.adcq.qld.gov.au |
| SA | Equal Opportunity Commission | 08 8207 1977 அல்லது பிராந்திய SA இலவச அழைப்பு 1800 188 163 | www.eoc.sa.gov.au |
| Tas. | Office of the Anti-Discrimination Commissioner | 03 6165 7515 அல்லது 1300 305 062, இல் TAS இலவச அழைப்பு | www.antidiscrimination.tas.gov.au |
| Vic. | Victorian Equal Opportunity and Human Rights Commission | 1300 292 153 | www.humanrightscommission.vic.gov.au |

| மாநிலம் அல்லது பிரதேசம் | மநனித உரிமைகள் முகவர் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|---|
| WA | Equal Opportunity Commission | 08 9216 3900 அல்லது WA இலவச அழைப்புக்கு 1800 198 149 | www.equalopportunity.wa.gov.au |

## தன்னார்வத்தொண்டு செய்தல்

புதிய திறமைகளைக் கற்றுக்கொள்ளவும், உங்கள் சமூகத்தில் வசிக்கும் மற்றும் வேலைபார்க்கும் மக்களைச் சந்திப்பதற்கும், ஏனையோருக்கு உதவவும், தானாக முன்வந்து தொண்டு செய்தல் ஒரு நல்ல வழியாகும். பல ஆஸ்திரேலியர்கள் தொண்டு செய்ய முன்வருகிறார்கள். தொண்டர்களுக்குப் பணம் செலுத்தப்படுவதில்லை ஏனெனில் அவர்கள் தமக்காகவும், சமூக நன்மைக்காகவும் தமது நேரத்தையும், திறமைகளையும் கொடுக்கிறார்கள். தொண்டுசெய்வது எப்பொழுதும் விருப்பத்துடன் தெரிவு செய்யப்படுவதாகும், கட்டாயமல்ல.

தொண்டு செய்தல் சம்பளத்துடனான வேலைக்குப் பதிலான ஒன்றல்ல என்ற பொழுதும், நீங்கள் ஒரு வேலையைப் பெற்றுக்கொள்ள உதவக்கூடிய திறமைகள், வேலை அனுபவத்தை அது வழங்கக்கூடும். தொண்டுவேலை செய்வதால் உங்கள் ஆங்கிலம் மேம்படும், சமூக மற்றும் சமுதாயத் தொடர்புகளை உருவாக்கலாம் அத்துடன் உங்கள் சுய நம்பிக்கையைப் பெருக்கலாம்.

தொண்டாற்றும் சந்தர்ப்பங்களைப் பல நிறுவனங்களும், இணையத்தளங்களும் பட்டியலிடுகின்றன. Volunteer Resource Centres ஆஸ்திரேலியா முழுவதும் அமைந்துள்ளன அத்துடன் அவை தன்னார்வத் தொண்டர் தகவல்கள், சேர்த்துவைத்தல், பரிந்துரைச் சேவைகளை வழங்குகிறார்கள்.

மேலதிகத் தகவல்களுக்கு:

| பிராந்தியம் | நறுவனம் | இணையத்தளம் |
|---|---|---|
| ACT | Volunteering ACT | www.volunteeringact.org.au |
| NSW | The Centre for Volunteering | www.volunteering.com.au |
| NT | Volunteering SA-NT | www.volunteeringsa.org.au |
| Qld | Volunteering Queensland | www.volunteeringqld.org.au |
| SA | Volunteering SA-NT | www.volunteeringsa.org.au |
| Tas. | Volunteering Tasmania | www.volunteeringtas.org.au |
| Vic. | Volunteering Victoria | www.volunteeringvictoria.org.au |
| WA | Volunteering WA | www.volunteeringwa.org.au |

| பிராந்தியம் | நறுவனம் | இணையத்தளம் |
|---|---|---|
| ஆஸ்திரேலியா முழுவதும் தன்னார்வத்தொண்டுக்கான சந்தர்ப்பங்கள் | GoVolunteer | www.govolunteer.com.au |
| ஆஸ்திரேலியாவில் தன்னார்வத்தொண்டு செய்வதற்கான தேசிய உச்ச மன்றம் | Volunteering Australia | www.volunteeringaustralia.org |

## மக்கள் சந்திப்பு

யாராவது ஒருவரை முதல் தடவையாகச் சந்திக்கும்போது, அந்த ஆளின் வலது கரத்தை உங்கள் வலது கரத்தால் கைலாகு (குலுக்குவது) கொடுப்பது பொதுவானதாகும். பொதுவாக ஒருவருக்கொருவர் தெரியாதவர்கள், முதற்சந்திப்பில் முத்தமிடுவதோ அல்லது கட்டிஅணைப்பதோ இல்லை.

புதிய ஆட்களைச் சந்திக்கும்போது, அவர்களின் வயது, மதம், திருமணம், குழந்தைகள் அல்லது பணம் பற்றிய கேள்விகள் கேட்கப்பட்டால் அநேக ஆஸ்திரேலியர்கள் அசௌகரியப்படுகிறார்கள். வேலை இடங்களிலும், நண்பர்களிடத்தும் ஆஸ்திரேலியர்கள் வழமையாக அவர்களின் முதல் பெயர்களைச் சொல்லிக் கூப்பிடுகிறார்கள்.

அநேக ஆஸ்திரேலியர்கள் தாம் கலந்துரையாடும் ஆளின் பேச்சை உன்னிப்பாகக் கேட்பதைத் தெரிவிக்கவும், மரியாதையின் அடையாளமாகவும் அவரின் கண்களை, பார்க்கிறார்கள்.

## சாந்தமான நடத்தை

ஆஸ்திரேலியர்கள் வழமையாக ஏதாவதொன்றைக் கேட்கும்போது “தயவுசெய்து (please)” என்றும், யாராவதொருவர் ஒரு உதவியைச் செய்யும்போது “நன்றி உங்களுக்கு (thank you)” என்றும் சொல்கிறார்கள். தயவுசெய்து, நன்றி உங்களுக்கு என்று சொல்லாமை பணிவற்றதாகத் தோன்றலாம்.

ஆஸ்திரேலியர்கள் வழமையாக ஒருவருடைய கவனத்தைக் கவர “மன்னிக்க வேண்டும் (sorry)” எனவும், யாருடனாவது முட்டுப்பட்டால் “மன்னிக்க வேண்டுகிறேன் (excuse me)” எனவும் சொல்கிறார்கள். ஆட்கள் வரிசையில் நின்றால், வரிசையில் கடைசியாக இணைந்துகொண்டு ஒழுங்காக முன் நகர்ந்து செல்வது பண்பட்ட செயலாகும்.

கூட்டங்களுக்கும் ஏனைய வேறு முன்பதிவுகளுக்கும் சரியான நேரத்தில் சமூகமளிக்க முயற்சிக்க வேண்டும். நீங்கள் பிந்தினால், மன்னிப்புக் கோருவதற்காக அந்த ஆளை அழைத்து எந்த நேரத்தில் நீங்கள் சென்றடைவீர்களென்பதைத் தெரியப்படுத்தவும். தாமதமாக வந்தமைக்காக அல்லது அவருக்குத் தெரியப்படுத்தாததால் நீங்கள் அந்த முன்பதிவைத் தவறவிடலாம் இதற்காக உங்கள்மீது குற்றம் சாட்டப்படலாம் என்பதனால் வாழ்க்கைத் தொழில்சார்ந்த முன்பதிவுகள் மிக முக்கியமானதாகும் (உதாரணமாக ஒரு வைத்தியருடன் செய்துகொண்ட முன்பதிவு). எப்பொழுதுமே பிந்திவருபவர், நம்பத்தகுந்தவர் அல்ல எனக்கருதப்படுவார்.

நீங்கள் எழுத்து மூலமான அழைப்பிதழ் ஒன்றைப்பெற்றால், “RSVP” எனும் எழுத்துக்கள் ஒரு திகதியுடன் சேர்க்கப்பட்டிருக்கலாம். உங்களை அழைப்பவர் நீங்கள் சமூகமளிப்பீர்களா இல்லையாவென அறிய விரும்புகிறார் என்பது இதன் அர்த்தமாகும். அந்தத் திகதியளவில் தெரியப்படுத்துவது பண்பாகும்.

சில பழக்கங்கள் பண்பற்றன மாத்திரமல்லாமல் சட்டத்திற்கு மாறானதுமாகும். தூஷித்தல் மற்றும் பொது இடத்தில் துப்புதல், குப்பை போடுதல் அத்துடன் பொது அல்லது தனியார் கழிப்பறை தவிர்ந்த எந்த இடத்திலாவது சிறுநீர் கழித்தல் அல்லது மலம் கழித்தல் போன்றவை இவற்றுளடங்கும் சில பழக்கங்களுக்கான உதாரணங்களாகும்.

மேலே குறிப்பிட்ட சமத்துவம் மற்றும் பாரபட்சத்திற்கு எதிரானவற்றையும் *பாருங்கள்.*

## ஆடை அணிதல்

ஆஸ்திரேலியா பல்வேறு சமூகங்களைக் கொண்டது. பலவகையான உடைகள் அணிவது வேறுபட்ட சமூகங்களைப் பிரதிபலிக்கிறது. அநேகமான மக்கள், சமூக நிலவரம் அல்லது காலநிலைக்கு ஏற்றதாக அல்லது வசதிக்காக தற்காலிகமாக அல்லது வழமைக்கு மாறாக அணிகிறார்கள். ஏனையோர் மதசார்பான அல்லது வழக்கமான, பாரம்பரிய உடைகளைக் குறிப்பாக விசேடமான காலத்தில் தெரிந்து அணிகிறார்கள்.

வேறுபட்ட வேலை இடங்களிலும், குறிப்பிட்ட இடங்களிலும் அதற்கான உடுப்புக்களைத்தான் அணியவேண்டுமென வேண்டப்பட்ட போதிலும், உடையைப்பற்றிய சில சட்டங்களும், விதிகளும் உண்டு. உதாரணமாக, கட்டட நிர்மாண வேலை இடங்களில் பாதுகாப்புக் காரணங்களுக்காக பாதுகாப்பான பாதணிகளும், உறுதியான தொப்பிகளும் அணியவேண்டும். அத்துடன் பொலிஸ், இராணுவம் மற்றும் சில தொழில்களுக்கான உத்தியோகத்தர்கள் சீருடை அணிகிறார்கள்.

ஆஸ்திரேலியாவில் தடுக்கக்கூடிய தோல் புற்றுநோய் சம்பவங்கள் அதிகம் உண்டு. பாதுகாப்பான ஆடைகளும், தொப்பிகளும் தோல் புற்றுநோயின் அபாயத்தைக் குறைக்கின்றன. பல பாடசாலைகள், சீருடையின் ஒரு பகுதியாக தொப்பிகளை அணியுமாறு சிறுவர்களை வேண்டுகிறது. மேலும் சூரியப் பாதுகாப்புத் தகவல்களுக்கு, போகவும்:
www.cancer.org.au/preventing-cancer/sun-protection

மன்றங்கள், திரைப்பட நிலையங்கள் மற்றும் வேறு இடங்கள், ஒழுங்கான, பொருத்தமான பாதணிகளிடன் இருக்கவேண்டுமெனத் தமது வாடிக்கையாளரை வேண்டுகிறது.

பெண்களும், ஆண்களும் தமது உடலை முற்றாக மூடாத ஆடைகளை அணியலாம். இது மேலைத்தேய நாடுகளில் சாதாரணமானது அத்துடன் இது கவனத்தைக் கவர விரும்புகிறார்களெனக் கருதப்படாது.

## பொதுவான ஆஸ்திரேலிய பேச்சு வழக்கம்

பல பொதுவான ஆஸ்திரேலிய பேச்சு முறைகள் அல்லது கொச்சையான பேச்சுக்கள் புதுமையாகத் தோன்றலாம். ஆஸ்திரேலியர்கள் பல வேளைகளில் வார்த்தைகளை வெட்டிக் குறைக்கிறார்கள் (உதாரணமாக, கால்பந்து (‘football’) க்கு ‘footy’ என்பர்). பேச்சின் அர்த்தம் புரியாது விட்டால், கேட்டுத் தெரிந்து கொள்வது ஏற்றுக்கொள்ளக்கூடியது. சில பொதுவான உதாரணங்களாவன:

- ஒரு கோப்பை கொண்டுவா (bring a plate) – ஒரு சமூக அல்லது வேலை நிகழ்ச்சிக்கு உங்களை அழைக்கும்பொழுது, ‘கோப்பை ஒன்று கொண்டு வரவும் (bring a plate)’ என்றால் ஏனையோருடன் பங்கிட ஒரு தட்டு உணவை எடுத்துவரவும் எனப்பொருள்படும்.
- BYO – இதன் அர்த்தம் உங்களுக்கான குடிவகையைக் கொண்டுவரவும் (Bring your own drink) என்பதாகும். உதாரணமாக, மது, பழச்சாறு, மென்பானம் அல்லது தண்ணீர். சில போசனசாலைகள் BYO ஆகும், அதாவது, நீங்கள் உங்களது போத்தலில் அடைக்கப்பட்ட பானங்களைக் கொண்டுவர முடியும் என்பதாகும். நீங்கள் BYO ஆனால், வழமையாக வழங்குவதற்கும், கோப்பைகளைக் கழுவுவதற்கும் “corkage” எனப்படும் ஒரு கட்டணம் அறவிடப்படும்.
- Open door policy – வேலை இடங்களில் “Open door policy” என்பதன் பொருள், பிரச்சினைகள் அல்லது வேறு விடயங்கள் பற்றி தொழிலதிபருடன் நீங்களோ அல்லது வேறு தொழிலாளரோ பேசுவதற்கு வழமையான முன்பதிவு ஒன்று தேவையில்லை என்பதாகும்.
- See you later – (உங்களை மீண்டும் சந்திக்கிறேன்) இது “goodbye” என்று சொல்லுவதற்குப் பதிலான, முறைப்படி அமையாத வழியாகும்.எதிர் காலத்திலே இந்த நபர் மீண்டும் திரும்பி வருவாரென இது பொருளாகாது.

ஆஸ்திரேலிய பேச்சு வழக்கை உங்களுக்கு ஆங்கில மொழி ஆசான் சொல்லிக்கொடுத்து உதவுவார். பார்க்கவும்: *அத்தியாயம் 3, ஆங்கில மொழி.*

## வெளிக்களச் செயற்பாடுகளும் பாதுகாப்பும்

நீச்சல், புதர்நடை, முகாமிடல் மற்றும் விளையாட்டுக்கள் போன்ற வெளிக்களச் செயற்பாடுகளுக்கு ஆஸ்திரேலியா மிகவும் பொருத்தமானது. நினைவிலிருக்கவேண்டிய பாதுகாப்பு விதிகள் உண்டு.

## நீச்சலும் வெளிக்களப் பாதுகாப்பும்

- நீங்களோ அல்லது உங்கள் குழந்தைகளோ நீந்த முடியாவிட்டால், நீச்சல் மற்றும் தண்ணீர்ப் பாதுகாப்பு வகுப்புகளுக்குச் சமூகமளிக்கவும்
- சமுத்திரத்தில் நீந்துவது மிகவும் ஆபத்தானதாக இருக்கலாம். பாதுகாப்பாகக் கடற்கரையை அனுபவிக்க:
    - உயிர்க்காப்பாளரால் மேற்பார்வை செய்யப்படும் பிரதேசத்தைக் குறிக்கும் சிவப்பு மற்றும் மஞ்சள் கொடிகளுக்கிடையில் எப்பொழுதும் நீந்தவும்
    - பாதுகாப்புக் குறிகளைச் வாசிக்கவும்.
    - பிரச்சினைக்குள் சிக்கினால், அமைதியாக இருக்கவும், கையை உயர்த்தி உதவிக்கு அழைக்கவும்.
    - சிவப்பு, மஞ்சள் கொடிகளைக்காண முடியாவிட்டால் அல்லது நீந்துதல் உகந்ததல்ல என அல்லது கடற்கரை மூடப்பட்டுள்ளது என அறிவுறுத்தப்பட்டால் கடலில் நீந்தவேண்டாம்
- சமுத்திரம் எதிர்வுகூற முடியாததாகும். கடல் கற்பாறையில் வழுக்குதல், அல்லது பெரிய அலைகளால் அல்லது நீர்மட்டம் உயர்வதால் கடலுக்குள் அடித்துச் செல்லப்படல் போன்ற விபத்துகளைத் தவிர்ப்பதற்கான எச்சரிக்கை அடையாளங்களை அவதானியுங்கள். பெரிய அலைகளால் பலர் அடித்துச் செல்லப்பட்டு கடலில் மூழ்கிவிட்டபடியால் கற்பாறையிலிருந்து மீன்பிடிக்கும்போது மிக அவதானமாக இருங்கள்
- ஆறுகள், ஏரிகள், நீர்த்தேக்கங்களில் நீந்தும்போது கவனமாக இருக்கவும்:
    - நீருக்குள் இறங்குமுன்னர் நீரின் ஆழத்தையும், அமிழ்ந்திருக்கும் பொருட்களையும் எப்பொழுதுதும் அவதானித்துக்கொள்ளவும்
    - அபாயத்தைக்குறிப்பிடும் அடையாளங்களை அவதானித்து (முதலைகள், மாசுபட்ட நீர் போன்றவை) அவற்றிற்குப் பணியவும்.
- கொல்லைப்புறத்திலுள்ள தடாகம் உட்பட நீந்துகிற அல்லது தண்ணீருக்கருகிலுள்ள சிறுவர்களை எப்போதும் மேற்பார்வை செய்துகொள்ளவும். தடாகங்கள் கட்டாயம் வேலியிடப்பட வேண்டும்.
- தனியாக நீந்துதல், மீன்பிடித்தல் அல்லது புதர்நடைபோடுதலைத் தவிர்க்கவும். எங்கே போகிறீர்கள், எப்பொழுது திரும்பி வருவதாக எதிர்பார்க்கிறீர்களென யாராவது ஒருவருக்குச் சொல்லுங்கள். உணவும், நீரும் நிறைய எடுத்துச் செல்லவும்.
- ஆஸ்திரேலியாவிலுள்ள சில பாம்புகளும், சிலந்திகளும் நச்சுத்தன்மை வாய்ந்தவை. கடித்தால், கடிக்கப்பட்ட உறுப்பினை அசையாமல்செய்து பூச்சியம் மூன்றை 000 ஐ அழைத்து மருத்துவ உதவியைப் பெறவும்.
- வசந்த காலத்தில் பாடும்பறவைகள் எனப்படும் magpies தமது பிரதேசத்தைப் பாதுகாப்பதற்காகப் பாதையில் நடப்போர், சைக்கிளோட்டிகள் மீது திடீரெனத் தாளப்பறந்து தாக்கவரும். பாடும்பறவைகளிலிருந்து தப்பிக்கக் குறியீடுகள் எச்சரிக்கலாம். இந்தப் பறவைகள் பாதுகாக்கப்படுகின்றன. ஆகவே, அவை கூடுகட்டும்

இடங்களைத் தவிர்த்தும், தொப்பிகள், கறுப்புக் கண்ணாடிகளை அணிந்தும் அல்லது ஒரு தடியை எடுத்துச் சென்றும் அல்லது தலைக்குமேலே குடையைப் பிடித்தும் இவைகளின் தாக்குதலைத் தவிருங்கள்.

- ஆஸ்திரேலியாவில் சூரியன் மிகவும் உக்கிரமானது. தோல் எரிவைத் தடுக்க வெயில் நாட்களில் சூரியக்கதிர் காப்புத் திராவகம், பாதுகாப்பான உடை மற்றும் தொப்பி அணியுங்கள். இது இளம் சிறுவர்களுக்குக் குறிப்பாக முக்கியமானதாகும்.
- காலநிலை முன்அறிவித்தலைக் கவனியுங்கள். நெருப்பைக் கட்டாயமாகத் தவிர்க்க வேண்டிய நாட்களில் திறந்தவெளி நெருப்புக்கள், barbeques அனுமதிக்கப்படுவதில்லை. வானிலையாய்வுச் செயலகம் www.bom.gov.au/index.php இல் காலநிலை எச்சரிக்கைகளை வழங்குகிறது.
- ஆஸ்திரேலிய நகரங்களில், அநேக உலக நகரங்கள்போல, குறிப்பாக இரவு நேரங்களில் தாக்குதல்கள் இடம்பெறத்தான் செய்கின்றன. உங்கள் சொந்தப்பாதுகாப்புபற்றிக் கவனமாக இருங்கள். பூங்காக்கள், இருட்டான இடங்கள், பிரச்சினை எனத் தெரிந்த இடங்களைத் தவிருங்கள்.

மேலதிகத் தகவல்களுக்கு:

| தகவல் மூலம் | இணையத்தளம் |
|---|---|
| Bureau of Meteorology – கால நிலை முன்னறிவிப்பு மற்றும் தீ பரவாமல் தடுத்தல் | www.bom.gov.au/weather |
| Royal Life Saving Society – நீச்சல் மற்றும் நீர் பாதுகாப்பு | www.royallifesaving.com.au |
| Surf Life Saving Australia | www.slsa.asn.au |
| Beach Safety – மொழிபெயர்க்கப்பட்ட தகவல்கல் அடங்கலாக | www.beachsafe.org.au |
| Rip Current Safety Tips – ஆங்கிலம் அல்லாத வேறு மொழிகளில் உள்ள தகவல்கள் உட்பட | www.ripcurrents.com.au |
| Australian Cancer Council – சூரியஒளிப் பாதுகாப்பு | www.cancer.org.au |

## வீட்டில் பாதுகாப்பு

### வீட்டுப் பாதுகாப்பு

வீட்டைவிட்டுப் புறப்படும்பொழுது எப்பொழுதும் கதவைப்பூட்டுங்கள், யன்னல்களைச் சாத்துங்கள். சாத்தியப்படுமானால், அதைத் திறக்க முன்னர் தடுப்புக் கதவு அல்லது பாதுகாப்புச் சங்கிலியை வைத்திருங்கள். இதனால், அதைத் திறக்குமுன்னர் யாரென நீங்கள் பார்க்க முடியும். வெளிச்சத்தைப் போட்டுவைத்து, அல்லது முன்கதவுக்கு முன்னால் உணர்ந்து ஒளிரும் மின்குமிழ் (sensor light)ப் பாவித்து நீங்கள் வீட்டுக்குத் திரும்பும்போது அங்கே இருப்பவர்

யாரெனத் தெரிந்துகொண்டு சுலபமாக வீட்டுக்கதவைத் திறக்கலாம். பலவந்தமாக உள்ளே புகுவதற்கு வரக்கூடியவர்களை இது தடுக்கும்.

## மருந்துகளும் இரசாயனப் பொருட்களும்

வீட்டைச் சுற்றிவரக் காணப்படும் சில மருந்துகளும், இரசாயனப் பொருட்களும் தீங்கையோ அல்லது கடுமையான சுகவீனத்தையோ ஏற்படுத்தலாம்.

- குழந்தைகள், செல்லப்பிராணிகள் அணுக முடியாத இடங்களில் அல்லது குழந்தைகள் கண்டுகொள்ள முடியாத இடங்களில் சகல மருந்துகளையும் வைக்கவும்.
- மருந்து உட்கொள்வதை நீங்கள் நிறுத்திக்கொண்டால், அல்லது அவை காலாவதியாகிவிட்டால், குப்பைக்குள்ளோ அல்லது வடிகாலிலோ போடவேண்டாம். உங்களது மருந்தாளர் எஞ்சிய மருந்தைப் பாதுகாப்பாகவும், கட்டணமின்றியும் அப்புறப்படுத்துவார்.
- குழந்தைகளும், செல்லப்பிராணிகளும் அணுக முடியாதவாறு எல்லாவிதமான துப்புரவு செய்யும் மருந்துகளையும் ஒரு பூட்டிய அலமாரிக்குள் வைக்கவும்.

குழந்தைப் பாதுகாப்பு உபகரணங்களை (அலமாரிப் பூட்டுக்கள் போன்றவை) இரும்புக்கடைகளில் (hardware shops) வாங்கலாம்.

## வீட்டில் தீ பாதுகாப்பு

ஆஸ்திரேலியாவில் ஒவ்வொரு ஆண்டும் கிட்டத்தட்ட 50 இறப்புக்களையும், பல கடுமையான காயங்களையும் வீட்டுத் தீ ஏற்படுத்துகிறது.

உங்கள் உயிரைப் பாதுகாக்கவும், தீ பரவுவதைத் தடுக்கவும் நேரத்தோடு அவசரகால சேவைகளை விழிப்புடனிருக்கச் செய்யவும் புகை அபாய அறிவிப்பு ஒலிக்கருவி ஆரம்ப எச்சரிக்கையை வழங்குகிறது. இந்த எச்சரிக்கை மக்கள் தூக்கத்திலிருக்கும் முக்கியமாம இரவு நேரங்களில் முக்கியமானதாகும். வீட்டிலுள்ள ஒவ்வொரு மாடியிலும் ஆகக்குறைந்தது ஒரு புகை அபாய அறிவிப்பு ஒலிக்கருவி பூட்டிவைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு ஆறு மாதமும் அதனைச் சரிபார்த்து, மின்கலங்களை (batteries) மாற்றவேண்டும்.

பலவேளைகளில் சமையல்கட்டில், தவறான மின்சார கம்பிகள், உபகரணங்களைப் தவறாகப் பாவித்தல் அல்லது செயற்படும் உபகரணங்களைக் கவனிக்காமல் விடுவதால் வீட்டுத்தீ ஆரம்பிக்கிறது. பின்வரும் முன்னெச்சரிக்கைகளை எடுத்து வீட்டுத்தீயை தடுக்கவும்:

**வீட்டில்**

- அளவுக்குமீறிச் சூடேறுவதைத் தடுப்பதற்காக மின் சாதனங்களைச் சுற்றிலும் இடைவெளி இருப்பதை நிச்சயப்படுத்துங்கள்.
- மின்சாரப் பலகைகளில் மின் சக்தியை அதிகரிக்க வேண்டாம் (overload) - ஒரு குழிக்குள் (socket) ஒரு செருகி (plug) யை மாத்திரம்தான் பூட்ட வேண்டும்.

- செருகிகளையும், குழிகளையும் தூசி அல்லது பழுது இருக்கிறதாவெனச் சரிபார்த்து ஏதாவது பிரச்சினையிருந்தால் நிவர்த்தி செய்யவும். ஒரு தகைமைபெற்ற மின்சாரத்தொழிலாளியைக் கொண்டுதான் சகல திருத்த வேலைகளும் செய்விக்கப்பட வேண்டும்.
- திரைச்சீலைகள், துணிமணிகள், மற்றும் படுக்கைவிரிப்புக்களுக்கு அப்பால் மெழுகுவர்த்திகள், சூடாக்கும் கருவிகள் வைக்கப்பட்டிருப்பதனை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.
- நீங்கள் அறையில் இல்லாதபோது, மெளுகுவர்த்திகளையோ அல்லது எரிந்துகொண்டிருக்கும் தீச்சுவாலைகளையோ ஒருபோதும் விட்டுச் செல்லவேண்டாம்.
- நீங்கள் வீட்டில் இருக்கும்போது, உட்பக்கமாகக் கதவுகள் பூட்டப்படாது (அதாவது: முடக்கம்) இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் எனவே ஓர் அவசரகாலத்தில் உடனடியாக நீங்கள் அவற்றைத் திறக்க முடியும்.
- படுக்கையில் புகைக்கவேண்டாம்.
- குழந்தைகள் தீப்பெட்டியையோ அல்லது தீமூட்டியையோ (lighter) அணுகாமையை நிச்சயப்படுத்தவும்.

**சமையல் கட்டில்**

- ஒருபோதும் குழந்தைகளைச் சமையல்கட்டில் கவனிக்காமல் விடவேண்டாம்.
- ஒரு பொழுதும் சமையலைக் கவனிக்காமல் அப்படியே விட்டுச்செல்லவேண்டாம் - சமயல்கட்டை விட்டுப் போவதானால், நீங்கள் திரும்ப வரும்வரை அடுப்பை அணைத்துவிடுங்கள்.
- சமைக்கும்போது,சூட்டடுப்பு, மின்அடுப்பு மேல்பகுதி மற்றும் சூளையிலிருந்து குழந்தைகளைத் தள்ளி வையுங்கள்.
- சட்டிப்பிடியை சூட்டடுபின் கரைக்கு அப்பால் வைத்துத்திருப்பவும், இதன்பயனாக, அவை அடிபட்டு, வெளியில் சிந்தாது. சுடுநீரும் எரிகாயங்களை உருவாக்கும்.
- தீப்பிடிக்கக்கூடிய பொருட்களை சூட்டை உருவாக்குவனவற்றிற்கு அப்பால் வைப்பதனை நிச்சயப்படுத்துங்கள்.
- உலோகக்கிண்ணம், அலுமினியத் தகடு அல்லது உலோகப் பாத்திரங்கள் உட்பட, உலோகப் பொருட்களை ஒருபொழுதும் நுண்அலை அடுப்பில் (microwave oven) வைக்கவேண்டாம்
- சில சமையல் கட்டுகளிலும், 'பாபிகியூ' (சூட்டில் வேக வைப்பது) களிலும் எரிவாயு பாவிக்கப்படுகிறது. நீங்கள் பாவித்து முடிந்ததும் எப்பொழுதும் எரிவாயு அடுப்பு, மின்அடுப்பை அணைத்துவிடுங்கள். எரிவாயு மணம் வந்தால், தீப்பெட்டியைப் பற்ற வைக்கவேண்டாம் ஏனெனில் தீச்சுவாலை எரிவாயுவை வெடிக்க வைக்கும். எரிவாயு வெளியேறும் இடத்தைப் தேடிப்பார்த்து, உடனடியாக அணைத்துவிடுங்கள். உங்களால் முடியாவிட்டால் மூன்று பூச்சியம் 000 இல் "Fire Brigade" அழையுங்கள்.

**தீப்பிடித்தால் என்ன செய்வது:**

- அயலவர் வீடு, பொது அல்லது கைபேசி யில் மூன்று பூச்சியத்தை 000 ("Fire Brigade") அழைத்து தீயணைக்கும் படையைக் கேளுங்கள். எங்கே நெருப்பு இருக்கிறதெனவும், யாராவது இன்னமும் உள்ளே இருக்கிறார்களாவெனவும் அவர்களுக்குச் சொல்லவும். தொலைபேசி அழைப்பைத் துண்டிக்க வேண்டாம்
- நெருப்பு ஏற்படும் பட்சத்தில் என்ன செய்யவேண்டுமென்பது பற்றிய விபரமான ஆலோசனையை அரச தீயணைப்பு சேவைகள் வழங்குகின்றன. பாருங்கள்: *அத்தியாயம் 2, உதவி பெறவும்*.

## காட்டுத்தீ பாதுகாப்புத் திட்டம்

உங்கள் வீட்டின் பாதுகாப்பை ஆஸ்திரேலியாவிலுள்ள சில பகுதிகளில் ஏற்படும் காட்டுத்தீ பாதிக்கலாம். உள்ளூர் காட்டுத்தீ அபாயமுள்ள இடத்தில் நீங்கள் வசித்தால், காட்டுதீயிலிருந்து தப்புவதற்கான திட்டமொன்றைத் தீட்டுங்கள். தீயணைப்பு சேவைகள், காட்டுத்தீயிலிருந்து தப்புவதற்கான திட்டம் ஒன்றை நீங்கள் தயாரிக்க உதவுவதற்கான தகவல்கள் மற்றும் வழிகாட்டிகளைக் கொண்டுள்ளது.

காட்டுத்தீ பருவகாலத்திற்கு முன்னர், காட்டுத்தீ ஏற்பட்டுக்கொண்டிருக்கிற காலத்தில், தீ அபாய நாட்களை நோக்கிய அத்துடன் அதற்கான உதவித் திட்டத்திற்கான நடவடிக்கைகளை உங்கள் திட்டம் கொண்டிருக்க வேண்டும். உங்கள் ஆதனத்தைப் பரிபாலனம் செய்ய, தீ ஏற்படும் தறுவாயில் ஆதனத்தைத் தயாரிக்க, தீ ஏற்படும் தறுவாயில் தனிப்பட்ட தொடர்பு விபரங்கள், அவசரகாலப் பொதியிலுள்ள பொருட்கள், வீட்டில் தங்கியிருக்கும் எல்லோருக்குமான குறிப்பிட்ட தேவைகள் (உதாரணமாக, குழந்தைகள் அல்லது முதியோரின் உடனடி நடமாட்டம்). வீட்டிலுள்ள செல்லப்பிராணிகளும்/ அல்லது கால்நடை களுக்கான திட்டம், வெளியேறத் தூண்டுவது, புறப்பாட்டுக்கான வழிகள், ஆதரவுக்கான திட்டம் மற்றும் வீட்டுக்குத் திரும்பி வருவதற்கான திட்டம் போன்ற விபரங்களை உள்ளடக்கியதாக சரிபார்க்கும் பட்டியல் இருக்கவேண்டும்.

மேலதிகமான காட்டுத்தீ தகவல்கள் மற்றும் உள்ளூர் தீ சேவைகளுக்கான தொடர்புத் தகவல்களுக்காகப் பாருங்கள்: *அத்தியாயம் 2, உதவி பெறவும்*.

## சுற்றாடல்

ஆஸ்திரேலியர்களுக்கு ஒரு சுத்தமான சூழலும், இயற்கைப் பாதுகாப்பும் முக்கியமாகும். குப்பைபோடுதல், மாசுபடுத்துதல் அல்லது அனுமதியின்றிக் கழிவுகளை அகற்றுதல் சட்டவிரோதமாகும். கழிவு அகற்றுதல் குறித்த மேலதிக தகவல்களுக்குப் போகவும்: www.australia.gov.au/information-and-services/environment/pollution-and-waste-management அல்லது Clean Up Australia (www.cleanup.org.au/au) அல்லது Keep Australia Beautiful (http://kab.org.au) குப்பை போடுவதற்கெதிரான இணையத்தளங்கள்.

சுதேச விலங்குகள், மீன்,கடல் வாழ் சிப்பிகள், தாவரங்கள் சட்டத்தால் பாதுகாக்கப் படுகின்றன. உங்களுக்கு அனுமதி தேவையா எனச் சரிபார்க்க முன்னர் வேட்டையாடவோ, மீன்பிடிக்கவோ அல்லது தாவரங்கள் அல்லது கடல்வாழ் சிப்பிகளை சேகரிக்கவோ வேண்டாம்.

தேசிய பூங்காக்கள் அழிந்துபோகாமல் தடுக்க விசேடமான விதிகள் பிரயோகிக்கப்படுகின்றன. அத்துடன் சிலவேளைகளில் அவற்றைத் தரிசிக்கக் கட்டணம் அறவிடப்படுகிறது.

மேலதிகத் தகவல்களுக்கு:

| பிரதேசம்ம் | முகவர் | இணையத்தளம் |
|---|---|---|
| National | Department of Environment – Parks Australia | www.environment.gov.au/topics/national-parks |
| ACT | Parks and Conservation | www.environment.act.gov.au/parks-conservation/parks-and-reserves |
| NSW | NSW National Parks and Wildlife Service | www.environment.nsw.gov.au/nationalparks |
| NT | NT parks and reserves | https://nt.gov.au/leisure/parks-reserves |
| Qld | Queensland National Parks, Sport and Racing | www.nprsr.qld.gov.au |
| SA | National Parks South Australia | www.environment.sa.gov.au/parks |
| Tas. | Parks and Wildlife Service Tasmania | www.parks.tas.gov.au |
| Vic. | Parks Victoria | www.parkweb.vic.gov.au |
| WA | Parks and Wildlife | www.dpaw.wa.gov.au |

## மிருகங்களும், செல்லப்பிராணிகளும்

மிருகங்களின் நல்வாழ்வுக்கும் அது தொடர்பான சட்டங்களுக்கும் மாநில, பிரதேச அரசாங்கங்கள் பொறுப்பாக இருக்கும்பொழுது வீட்டு மற்றும் தோழமை விலங்குகளை உள்ளூர் அரசாங்கங்கள் பரிபாலிக்கும்.

உங்களிடம் ஒரு செல்லப்பிராணி இருந்தால், அதற்கு உணவூட்டுதல், அதைச் சுத்தமாக வைத்திருத்தல் உட்பட அதைச் சரிவரப் பராமரிப்பதற்கு நீங்கள் பொறுப்புடையவராவீர்கள். அதன் கழிவுகளையும் நீங்கள் சுத்தப்படுத்த வேண்டும். பல செல்லப்பிராணிகள் ஒழுங்காகத் தடுப்பு மருந்து கொடுக்கப்படுவதுடன், அவை நோய் அல்லது காயம் அடைந்திருக்கும்போது ஒரு மிருக வைத்தியரால் சிகிச்சை செய்யப்பட வேண்டும். வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணிகள் இனவிருத்தித் தடை மற்றும் சிறு தகடுகள் போடப்பட்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதுடன் சட்டத்தாலும் வேண்டப்படலாம்.இது சொந்தக்காரரின் பொறுப்பாகும். மேலும் தகவல்களுக்கு உங்கள் உள்ளூர் மிருக வைத்தியரைக் அல்லது www.rspca.org.au இல் Royal Society for the Prevention of Cruelty to Animals (RSPCA) கேளுங்கள்.

சில வீட்டு செல்லப்பிராணிகள் உள்ளூர் சபையில் பதியப்பட்டிருக்க வேண்டும். செல்லப்பிராணிகளின் தொகையிலும், வகையிலும் கட்டுப்பாடுகள் இருப்பதுடன், அவற்றை எங்கே, எப்படி நீங்கள் வைத்திருக்க வேண்டுமென விதிகள் உண்டு. வாடகை வீடுகள் செல்லப்பிராணிகளை அனுமதிப்பதில்லை.

உங்கள் செல்லப்பிராணியை இனிமேலும் உங்களால் கவனிக்க முடியாதுவிட்டால், நீங்கள் அதைக் கைவிடவோ, அல்லது வெளியேற்றவோ கூடாது. நண்பர்கள் அல்லது உறவினர் அதை ஏற்றுக்கொள்ள முடியுமா எனக் கேளுங்கள், செல்லப்பிராணி ஏற்றுக்கொள்ளல் இணையத்தளத்தில் விளம்பரம் செய்யவும், அல்லது உங்கள் மிருகவைத்தியரிடம் உதவி அல்லது ஆலோசனை கேளுங்கள்.

மிருகங்களை வைத்திருத்தல், அல்லது மிருக நல்வாழ்வு பற்றி உங்களிடம் கேள்விகள் இருப்பின், போகவும்: www.agriculture.gov.au/animal/welfare/state அல்லது உங்கள் மிருகவைத்தியரைக் கேளுங்கள்.

*அத்தியாயம் 6, ஆஸ்திரேலியச் சட்டம்*- இதனையும் பார்க்கவும்.

## புதினப் பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி

பிரதானமான கடைத் தொகுதிகளில் பல்வேறு மொழிகளில் அநேகமான புதினப்பத்திரிகைகள் இருக்கின்றன. உங்களுக்கு வேண்டிய குறிப்பிட்ட மொழியில் புதினப்பத்திரிகை அவர்களிடம் இல்லையானால், அதற்கான கோரிக்கையைச் செய்யுமாறு கேளுங்கள்.

(Australian Broadcasting Corporation (ABC - www.abc.net.au) மற்றும் Special Broadcasting Service (SBS - www.sbs.com.au)) இந்த இரண்டு அரசாங்க ஒலிபரப்பாளர்கள் உட்படப் பல இலவச தொலைக்காட்சி நிலையங்கள் உண்டு. இவற்றைப் பார்பதற்கு உங்களிடம் தொலைக்காட்சி அனுமதி அல்லது சந்தாதாரர் ஆகவேண்டிய தேவை இல்லை.

ஏனைய தொலைக்காட்சி சேவைகள் பணம் கொடுத்துச் (pay TV) சந்தாதாரராக வேண்டுமெனக் கேட்கிறது. தொடர்புச் சேவைகளுக்கான ஏதாவது ஒப்பந்தத்தைக் கையொப்பமிட முன்னர் அந்தச் சேவைகளுக்கான பணத்தைச் செலுத்த முடியுமா எனவும், உங்கள் தேவைகள், வாழ்வு ஏற்பாடுகளைப் பூர்த்தியாக்குகிறதா என்பதையும் நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். ஒரு சிறு காலத்திற்கு மாத்திரம் வாடகை வீட்டில் குடியிருப்பதானால், நீண்டதொரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாதீர்கள். Free-to-air காட்சிகளைப் பார்ப்பதற்காகப் பணம் கொடுத்துச் சந்தாதாரராக கையொப்பமிடாதீர்கள்.

நீங்கள் 'ஒன்லைன்' இல் பார்க்கக்கூடியதாக "catch up" நிகழ்ச்சிகளைப் பல ரி.வி. நிலையங்கள் வழங்குகிறார்கள். எவ்வாறாயினும், 'ஒன்லைன்' இல் பார்ப்பதால் முக்கியமான தரவுகள் (data) தீர்ந்துவிடும் அத்துடன் உங்களுக்கு அனுமதிக்கப்பட்ட தரவுகளுக்கும் மேலாகப் போனால், மிகக்கூடிய விலை செலுத்த வேண்டிவரும்.

Netflix, Presto மற்றும் Stan போன்ற "Streaming" சேவைகளையும் ஆஸ்திரேலியாவில் பெற்றுக்கொள்ளலாம். நிகழ்ச்சிக் களஞ்சிய (library) த்திற்குப் போவதற்கு ஒரு மாதாந்தக் கட்டணத்தை இவை அறவிடுகின்றன. இந்த சேவைகளைப் பார்வையிட உங்களிடம் ஒரு துரித அகண்ட அலைவரிசை இணைப்புத் (broadband) தேவை. குறிப்பாக கைப்பேசியில் இவற்றைப் பார்வையிட கூடியளவு தரவுகள் தேவைப்படுவதால் செலவு அதிகமாகலாம் என்பதை அறிந்துகொள்ளவும்.

பல்வேறு சமூக மொழிகளில் தொலைக்காட்சி, வானொலி நிலையங்கள் Special Broadcasting Service (SBS) இல் உண்டு. வாராந்த நிகழ்ச்சிகள் மாநகரப் புதினப்பத்திரிகைகளிலும், "ஒன்லைன்" இலும் பட்டியலிடப்பட்டுள்ளன.

National Ethnic and Multicultural Broadcasters' Council (www.nembc.org.au) அல்லது தொலைபேசி: 03 9486 9549 இல் இனம்சார்ந்த வானொலி நிலையங்களை அறிந்து கொள்ளலாம்.

## சூதாட்டம்

சூதாட்டத்தில் செலவு செய்யக்கூடிய குறிப்பாக நேரம் அத்துடன்/அல்லது பணத்தொகையைக் கட்டுப்படுத்துவதில் சிரமப்பட்டால், சிலர் குறிப்பிடத்தக்க தீங்குகளைச் சூதாட்டத்தால் எதிர்கொள்ளவேண்டி வரலாம். சூதாட்டம் பாரதூரமான பணப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கலாம். அத்துடன், மனநிலை அல்லது உடல் ஆரோக்கியம், தொழில் மற்றும் உறவுமுறை போன்ற ஏனைய மனிதவாழ்வின் அம்சங்களில் பாதிப்பைக் கொண்டுவரலாம். சூதாட்டப் பிரச்சினைகள் சூதாடுபவரை மட்டுமன்றி அவரின் குடும்ப உறவினர், நெருங்கிய நண்பர்களையும் பாதிக்கிறது.

சூதாட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பம் மற்றும் நண்பர்களுக்கும் உளநல ஆலோசனை உட்பட, நிதி ஆலோசனை, சட்ட ஆலோசனைகளை ஆதரவுச்

சேவைகளில் பெற்றுக்கொள்ளலாம்:

| முகவர் | தொலைபேசி | இணையத்தளம் |
|---|---|---|
| National Problem Gambling Hotline | 1800 858 858 | www.gamblinghelponline.org.au |
| Lifeline | 131 114 | www.lifeline.org.au |
| Gamblers Anonymous | 02 9726 6625 | http://gaaustralia.org.au/ |

## இரைச்சல்

நாய்கள் குரைத்தல், அல்லது ஒலி அதிகரித்த இசையை அயலவர் போட்டுக் கேட்பது அல்லது மின்சார கருவிகளின் பாவனை போன்றவை மக்களைக் குழப்பும் பாரிய சத்தங்கள் எனப்படும் இரைச்சலாகும்.

அளவுக்கதிகமான சத்தங்களிலிருந்து ஆஸ்திரேலியர்களைப் பாதுகாக்கச் சட்டங்கள் இருக்கின்றன .மாநிலங்கள மற்றும் பிரதேசங்களுக்கிடையில் ஒழுங்குவிதிகள் வேறுபடுகின்றன, ஆனால் காலை 7.00 மணிக்கும் அதற்குப் பின்னரும் மாலை 11.00மணிக்கும் இடையில் இரைச்சலான நடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

அயலவர்களுடைய சத்தம் உங்களைப் பாதித்தால், அவர்களுடன் பேசுங்கள் .அவர்களுடைய சத்தம் உங்களைப் பாதிப்பதை உங்கள் அயலவர்கள் அறியாதிருக்கலாம் .பொதுவாக, ஆஸ்திரேலியர்கள் எப்போதாவது ஏற்படும் சத்தத்தைப் பொறுத்துக்கொள்வார்கள் அத்துடன் அதைப்பற்றிப் பேசி பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வார்கள் .எவ்வாறாயினும், அந்த இரைச்சல் அடிக்கடி, கூடிய ஒலியுடன், அல்லது அதிகாலை அல்லது பிந்திய இரவில் ஏற்பட்டால், அத்துடன் பேசியும் பயனளிக்கவில்லையானால், உள்ளூர் சபை, மாநில அல்லது பிரதேச சூழல் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அல்லது பொலிசாருக்கு நீங்கள் முறையிடலாம்.

நீங்கள் கட்டட திருத்தவேலை, அல்லது கொண்டாட்டம் போன்ற இரைச்சல் தரக்கூடிய செயற்பாட்டுக்குத் திட்டமிடுவதானால், அயலவருக்குச் சொல்லவும் .சத்தம் எப்போது தொடங்கி எப்போது முடியும் மற்றும் பிரச்சினை ஒன்று ஏற்பட்டால் யாரை அணுகுவது என்பது குறித்து ஏற்கனவே தெரியவந்தால் ஆட்கள் வழமையாகக் குறைந்தளவே குழப்பமடைவார்கள் . பாருங்கள் :*அத்தியாயம் 6, ஆஸ்திரேலியச் சட்டம்.*

## உள்ளூர் அரசாங்க சேவைகள்

குழந்தை சுகாதார நிலையங்கள், குழந்தை பராமரிப்பு நிலையம், இளைஞர் தொழிலாளர், முதியோர் பராமரிப்பு மற்றும் இயலாமைக்கான சேவைகள் போன்ற பல ஆதரவு சேவைகளை உள்ளூர் சபைகள் வழங்குகின்றன. நீங்கள் ஆஸ்திரேலியா வாழ்வை அமைத்துக்கொள்ளும் வேளையில் பெறுமதிமிக்க ஆதரவையும், அறிவுரைகளையும் தரவல்ல பல்வேறு கலாச்சார அல்லது சமூக சேவையாளர்களைப் பல உள்ளூர் சபைகள் கொண்டுள்ளன. பலவேளைகளில் பொது மண்டபங்கள், விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் கலாச்சார வசதிகளையும் சமூகக் குழுக்களின் பயன்பாட்டுக்காக உள்ளூர் சபைகள் வழங்குகின்றன.

கவுன்சில், உள்ளூர் வீதிகளைப் பராமரிக்கிறது, பொதுசனக் கழிப்பறைகளை வழங்குகிறது, அத்துடன் சரியான சுகாதாரத் தரங்களைக் கடைகளும், உணவுச்சாலைகளும் பேணுகின்றனவா என்பதையும் உறுதிப்படுத்துகிறது. அவைகள் கட்டட மேம்பாட்டைக் கட்டுப்படுத்துகின்றன. உங்கள் வீட்டுக்கு மாற்றம் செய்ய நீங்கள் விரும்பினால், அங்கீகாரத்திற்காக உள்ளூர் சபையுடன் நீங்கள் கட்டாயம் சரிபார்த்துக்கொள்ள வேண்டும்.

உள்ளூர் சபை சேவைகளுக்காக நீங்கள் பணம் செலுத்தவேண்டி ஏற்படலாம். கட்டணங்கள் துண்டுப் பிரசுரங்களிலும், சபையின் இணையத்தளத்திலும் வெளியிடப்படுகின்றன. ஒரு தீர்மானம் அல்லது அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நீங்கள் மேலதிக பணத்தை அல்லது பரிசுகளை அரச உத்தியோகத்தர்களுக்குக் கொடுக்கக்கூடாது. பரிசுப்பொருட்கள் அல்லது இலஞ்சம் கொடுத்தல் சட்டவிரோதமானது அத்துடன் அது முறைப்பாடு செய்யப்படும்.

உள்ளூர் அரசாங்கங்களுடனான தொடர்புத் தகவல்களுக்கு போகவும்,
*அத்தியாயம் 2, உவி பெறுதல்.*

## நூல் நிலையங்கள்

மக்கள் இலவசமாகப் புத்தகங்களை இரவல்வாங்க இணைந்துகொள்ள அநேகமான பிரதேசங்களில் பொதுசன நூல்நிலையங்கள் உண்டு. ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய மொழிகளில் சில புத்தகங்கள் நூல்நிலையங்களில் உண்டு அல்லது அவற்றைப் பெற்றுக்கொள்ளக் கோரிக்கை விடலாம். அநேக நூல் நிலையங்களில் இலவச இணையத்தள வசதி உண்டு.

நூல் நிலையம் ஒன்றினைக் கண்டுகொள்ள www.nla.gov.au/libraries க்குப் போகவும்.

## குப்பை சேகரிப்பு மற்றும் மறுபயன்பாடு (மீள்சுழற்சி)

குப்பை சேகரிப்புக்கும், மீள்பாவனைக்கும் கவுன்சில் பொறுப்பாகும்.
பொதுவான கழிவுகளுக்கும், மீள்சுழற்சி (பத்திரிகை, 'பிளாஸ்ரிக்', கண்ணாடி மற்றும் உலோகம்) க்கும் தனியான தொட்டிகளை அநேகமான கவுன்சில்கள் வைத்திருக்கின்றன. அத்துடன் சில (தோட்டக் கழிவுக்காக) அல்லது வீதியோர, பெரியளவிலான பொருட்களின் சேகரிப்புக்கு (மரத்தளபாடம் போன்றவை) பசுமைக் கழிவு தொட்டிகளை வழங்குகின்றன.

சேகரிப்பு நேரங்கள், பொறுப்புடன் குப்பையை அகற்றுதல் பற்றி அறிந்துகொள்ள கவுன்சிலுடன் அல்லது உங்கள் அயலவருடன் சரிபார்த்துக்கொள்ளவும். கிடைக்கக்கூடிய குப்பைத் தொட்டியில் கொள்ள முடியாதளவு கூடியளவு கழிவுகள் இருந்தால், நீங்கள் அதைக் குப்பை போடும் இடம் அல்லது மீள்சுழற்சி நிலையத்திற்கு எடுத்துச் சென்று கட்டணம் செலுத்துங்கள். கழிவுகளைப் பொது இடத்திலோ அல்லது பொது அல்லது தனியார் இடத்தில் வீசுவது சட்டவிரோதமானது.

## பொதுசன கழிப்பறைகள்

ஆஸ்திரேலியாவில் பொதுசன கழிப்பறைகள் சாதாரணமாக ஊழியரைக் கொண்டிருப்பதில்லை, பொதுவாக இலவச பாவனைக்குத் திறந்திருக்கும். குழந்தைகள் ஆடை மாற்றும் வசதிகளைக் கொண்டிருக்கலாம் மற்றும் குந்திக் கொண்டிருப்பவை இல்லாமல், அவை வழமையாக அமர்வாசன கழிப்பறைகள் அல்லது சிறுநீர் கழிப்பிடங்களாகும். சில தானாக இயங்கும் மற்றும் இருபால் கழிப்பிடம் இருந்தாலும், அநேகமான பொது கழிப்பறைகள் ஆண் மற்றும் பெண்களுக்குத் தனியாக அமைந்துள்ளன.

பாவித்த ன்னர், தயவுசெய்து கழிப்பறைகளைச் சுத்தமாகவும், ஒழுங்காகவும் விட்டுச் செல்லவும். ஆஸ்திரேலியாவில் சில கழிப்பறைகள் கழிவுகள் கழுவுப்பட்டுச் செல்லாமல், அவற்றைக் கூட்டுப் பசளையாக்குகிறது. எனவே நீங்கள் கழிப்பறையில் போடுவது பற்றி விழிப்புடன் இருங்கள்.

பொதுகழிப்பறையைக் காண்பதற்கு http://toiletmap.gov.au க்குப் போகவும்.

## நீர்ப்பாவனை

ஆஸ்திரேலியாவில் தண்ணீர் பொதுவாக நல்ல தரமுடையது. எவ்வாறாயினும், சில இடங்களில், கிணற்றுநீர் அல்லது குடிக்கக்கூடாத நீர் பாவனையில் உள்ளது. அதை நீங்கள் பருகக்கூடாது. இப்படியான இடங்கள் இப்படியான இலச்சினைகளால் அடையாளமிடப்பட்டுள்ளன.



தண்ணீர் மட்டுப்பாடு உள்ளூர் பிரதேசங்களில் அமுலில் இருக்கிறது. குறிப்பிட்ட நேரத்திற்கு அல்லது செயற்பாடுகளுக்கு உங்கள் தண்ணீர்ப்பாவனை மட்டுப்படுத்தப்படலாம் என்பது இதன் அர்த்தமாகும். உதாரணமாக, உங்களால் உங்கள் தோட்டத்திற்கு நீரூற்ற, அல்லது கார் அல்லது யன்னலைக் கழுவ முடியாமல் போகலாம். உங்கள் உள்ளூர் கவுன்சிலுடன் அல்லது www.bom.gov.au/water/restrictions க்குப் போகவும்.

# விசாக்கள் (நுழைவிசைவு)

Department of Immigration and Border Protection (DIBP) தற்காலிக அல்லது நிரந்தர வதிவு விசாக்களை விநியோகிப்பதுடன், குடியுரிமை விண்ணப்பங்களையும் தீர்மானிக்கிறது (www.border.gov.au)

உங்களுக்குப் பொருத்தமான விசாவைக் கண்டுகொள்ள www.border.gov.au/Trav/Visa-1 இல் Visa Finder கருவியைப் பயன்படுத்தவும்.

www.border.gov.au/Trav/Visa/Appl இல் பலவித வீசாக்களுக்கு நீங்கள் 'ஒன்லைன்' இல் விண்ணப்பிக்கலாம்.

## வதிவாளர் திரும்பிவரும் வீசாக்கள்

நீங்கள் தற்போது அல்லது முன்னர் ஆஸ்திரேலிய நிரந்தர வதிவாளராக இருந்து, வெளிநாட்டுக்குச் சென்று நிரந்தர வதிவாளராக ஆஸ்திரேலியாவுக்கு திரும்பிவரவிரும்பினால், Resident Return வீசா (RRV) க்கு விண்ணப்பிக்க வேண்டி வரலாம் www.border.gov.au/Trav/Visa-1/155-

உங்களது தற்போதய நிரந்தர வீசாவில் பிரயாணத்திற்கான காலம் முடிவடைந்து விட்டதால் அல்லது முடிவடைய இருப்பதால், உங்களுக்கு இந்த வீசா தேவையாகும்.

பிரயாண வசதிகள் செல்லுபடியான காலப்பகுதிக்குள் நீங்கள் ஒரு ஆஸ்திரேலிய நிரந்தர வாசியாக வெளிநாட்டுக்குப் பயணம்செய்து திரும்பிவர அனுமதிக்கும் RRV ஒரு நிரந்தர வீசாவாகும். இதனை வைத்திருப்பவரை ஆஸ்திரேலியாவில் காலவரையறையின்றித் தங்கியிருக்க இது அனுமதிக்கும். நீங்கள் வெளிநாட்டுக்குப் போக விரும்பாவிட்டால் RRV க்கு விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை. RRV பற்றிய அதிக தகவல்கள் www.border.gov.au/trav/visa-1/155- இல் DIBP இணையத்தளத்தில் காணலாம்.

## ஆஸ்திரேலியாவுக்கு வருகைதர வீசாக்கள்

தற்காலிகமாக வருகை தருவோர் ஆஸ்திரேலியாவில் தங்க விரும்பும் முழுக்காலத்தையும் உள்ளடக்கிய விசா ஒன்றுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வருகையின் நோக்கத்தைப் பொறுத்து ஒரு தொகுதி தற்காலிக வீசாக்கள் உண்டு. ஒவ்வொரு வீசாவுக்கும் விசேட நிபந்தனைகள் இருக்கின்றன. மேலதிகத் தகவல்களுக்கு www.border.gov.au/about/corporate/information/fact-sheets/46temporary-entry க்குப் போகவும்.

## நிரந்தரமாகக் குடியேறுவதற்கான வீசாக்கள்

ஆஸ்திரேலியாவுக்கு நிரந்தரமாகக் குடியேறுவதற்கு மூன்று வழிமுறைகள் உண்டு:

- குடும்பக் குடிபெயர்வு (Family migration) - அவர்களுக்கு உத்தரவாதம் அளிப்பதற்கு (sponsor) ஆஸ்திரேலியாவில் தகைமைபெற்ற உறவினர் ஒருவரை விண்ணப்பதாரி வைத்திருக்கவேண்டும்
- திறமைபெற்ற மற்றும் வியாபார புலம்பெயர்வு (Skilled and business migration) - ஆஸ்திரேலிய வாழ்வில் பொருளாதாரத்திற்கு அல்லது வேறு பகுதிகளுக்குப் பங்களிப்பைச் செய்யக்கூடிய திறமைகள் அல்லது விசேட செயல்திறன்கள் விண்ணப்பதாரியிடம் இருக்க வேண்டும்.
- மனிதநேய குடிவரவாளர் (Humanitarian migration) - தமது சொந்த நாட்டில் இந்த விண்ணப்பதாரி துன்புறுத்தல் அல்லது அப்பட்டமான மனித உரிமைகள் மீறலை ஏற்படுத்தக்கூடிய பாகுபாட்டுக்கு ஆளாகி இருக்கவேண்டும், அத்துடன் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டிய தேவை உள்ளவராக மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஒவ்வொரு பிரிவும் கடுமையான கோரிக்கைகளைக் கொண்டுள்ளது. வீசாக்கள் பற்றி இற்றைவரையான தகவல்களையும், www.border.gov.au இல் உங்களுக்குப் பொருந்தக்கூடிய வீசாவுக்கான விருப்பத் தேர்வுகளைக் கண்டறிய உதவும் "Visa Finder" கருவி DIBP இணையத்தளத்தில் உண்டு.

## பதிவுசெய்யப்பட்ட புலம்பெயர் முகவர்கள்

ஒரு கட்சிக்காரரின் சார்பாக, குடிவரவு விடயங்களிலே ஆலோசனை வழங்குதல், வீசா விண்ணப்பங்களைத் தயாரித்தல் மற்றும் தாக்கல் செய்ய உதவுதல் அத்துடன் கட்சிக்காரர் சார்பாக DIBP உடன் தொடர்புவைக்கும் ஒருவர் தான் புலம்பெயர் முகவராவார்.

நீங்கள் ஒரு புலம்பெயர் முகவரைப் பாவிக்க வேண்டியதில்லை. நீங்கள், தனியாக ஒரு விண்ணப்பத்தை நம்பிக்கையுடன் தாக்கல் செய்ய விரும்பாவிட்டால் அல்லது உங்கள் விடயம் சிக்கலானதாக விருந்தால், நீங்கள் ஒரு பதிவு செய்யப்பட்ட புலம்பெயர் முகவரைப் பாவிக்க விரும்பலாம்.

ஆஸ்திரேலியாவில் வேலைசெய்யும் புலம்பெயர் முகவர்கள் கட்டாயமாக Office of the Migration Agents Registration Authority (OMARA) இல் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஒரு புலம் பெயர் முகவரைப் பார்ப்பதற்கு www.mara.gov.au/search-the-register-of-migration-agents/ இல் OMARA வலைத்தளத்திற்குப் போகவும்.

### 'ஒன்லைன்'இல் உங்கள் வீசா விபரங்களைச் சரிபார்த்தல்

Visa Entitlement Verification Online (VEVO) வீசா வைத்திருப்பவர்கள் மற்றும் நிறுவனங்கள் தற்கால வீசா வைத்திருப்பவரின் விபரங்களை இலவசமாக, நேரடியாகச் சரிபார்க்கும் ஒரு செயற்பாடாகும். அத்துடன் www.border.gov.au/vevo இல் நேரடியாக அணுகலாம். அப்பிள் ஆக்கங்களில் கிடைக்கக்கூடியதும் அப்பிள் வைப்பகத்திலிருந்து இலவசமாகத் தரவிறக்கம் செய்யக்கூடிய myVEVO விண்ணப்பங்களும் இருக்கின்றன.

## ஆஸ்திரேலியன் குடியுரிமை

ஒரு குடிமகனாக வருவதென்பது, ஆஸ்திரேலியா மற்றும் அது கொண்டிருக்கும் நிலைப்பாடுகள் சகலவற்றிற்குமான தொடர்ச்சியான பற்றுறுதியாகும். ஆஸ்திரேலிய குடியுரிமை என்பது பெருந்தொகையான வெகுமதிகளை வழங்கும் ஒரு சிறப்புரிமை என்பதுடன் எமது ஜனநாயக நாட்டில் முற்றாகப் பங்கேற்பதற்கான வாய்ப்பினை வழங்குவதுமாகும்.

பிரஜைகளாக வர விரும்பும் அநேகமான நிரந்தர வதிவாளர்கள் குடியுரிமைக்காக விண்ணப்பிக்க முன்னர் குறித்த தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும். ஆஸ்திரேலியாவில் குறிப்பிட்ட காலம் வாழ்ந்தமை மற்றும் நல்ல குணாதிசயங்கள் என்பவற்றை இவை உள்ளடக்கும்.

www.border.gov.au/Trav/Citi இல் குடியுரிமை பற்றிய தகவல், தகைமை மற்றும் விண்ணப்பப்படிவங்கள் உண்டு.

ஆஸ்திரேலிய குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் அநேகமானோர் குடியுரிமைச் சோதனையில் கட்டாயம் சித்தியடைய வேண்டும். இந்த குடியுரிமைச் சோதனையானது புதிய ஆஸ்திரேலியர்கள் பிரஜைகளாக வரும்போது செய்யும் Pledge of Commitment க்குள் அடங்கிய விழுமியங்களைத் தழுவியதாக இருக்கும். ஆஸ்திரேலியாவின் ஜனநாயக நம்பிக்கைகள், குடியுரிமையின் பொறுப்புக்கள் மற்றும் சிறப்புரிமைகள் அத்துடன் அரசாங்கம் மற்றும் ஆஸ்திரேலிய சட்டம் போன்ற தலைப்புக்களை உள்ளடக்கும். சோதனைக்குத் தயார் செய்ய www.border.gov.au/Trav/Citi/pathways-processes/Citizenship-test இல் குடியுரிமைச் சோதனை வாய்ப்பு வள ஆதாரப் புத்தகத்தைப் படியுங்கள்.

நீங்கள் சித்தியடைந்தால், குடியுரிமை வைபவத்துக்கு சமூகமளிக்கும்படி அழைக்கப்படுவீர்கள். அந்த வைபவத்தில் எல்லா வயதுவந்த விண்ணப்பதாரிகளும் ஒரு Pledge of Commitment செய்யுமாறு கேட்கப்படுவார்கள்.

ஆஸ்திரேலிய பிரஜையாக வந்தபின்னர், ஆஸ்திரேலிய கடவுச்சீட்டுக்கு நீங்கள் விண்ணப்பிக்கக் கூடும். உங்கள் ஆஸ்திரேலிய குடியுரிமைபோல வேறோரு நாட்டின் குடியுரிமையையும் வைத்திருந்தால், நீங்கள் கட்டாயமாக உங்கள் ஆஸ்திரேலிய கடவுச்சீட்டைப் பாவித்து ஆஸ்திரேலியாவுக்கு வரவும், வெளியேறவும் வேண்டும்.

மேலதிகமான தகவல்கள் அல்லது ஆஸ்திரேலியன் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்க www.passports.gov.au/Pages/home.aspx க்குப் போகவும்.

## எதிர்கால சிறுவர் மற்றும் ஆஸ்திரேலிய குடியுரிமை

அநேகமான சந்தர்ப்பங்களிலே,நீங்கள் ஒரு நிரந்தர வதிவாளராக இருக்கையில் உங்களுக்கு ஆஸ்திரேலியாவில் பிறந்த எந்தவொரு குழந்தை அல்லது குழந்தைகள் பிறப்பிலேயேஅவர்கள் ஆஸ்திரேலிய குடியுரிமை பெறுவார்கள். இந்தக் குழந்தைகளுக்கு ஆஸ்திரேலிய கடவுச்சீட்டு தேவையானால், நீங்கள் ஆஸ்திரேலிய குடியுரிமைச் சான்றினைப் பெறுவதற்கான விண்ணப்பமாகிய Form 119 ஐச் சமர்ப்பித்து அவர்களின் ஆஸ்திரேலிய குடியுரிமைக்கான சான்றினைப் பெறவேண்டும்

மேலும் தகவல்கள் மற்றும் Form 119 ஐ DIBP இணையத்தளம் www.border.gov.au இல் போய்ப்பெற்றுக்கொள்ளவும்.

## வாக்களித்தல்

வாக்களிப்பதற்கு 18 அல்லது அதற்கும் மேற்பட்ட வயதான ஆஸ்திரேலிய குடிமக்கள் பதிவு செய்யவேண்டும். உங்கள் குடியுரிமைக்கான வைபவத்தில் நீங்கள் வாக்காளராகப் பதிவுசெய்யலாம். நீங்கள் 18 வயதையடையும்போது வாக்களிப்பதற்குத் தயாராவதற்காகப் 17 வயதில்கூட நீங்கள் வாக்காளராகப் பதிவுசெய்துகொள்ளலாம்.

அஞ்சல் அலுவலகங்கள், Australian Electoral Commission அலுவலகங்கள் மற்றும் Australian Electoral Commission இணையத்தளத்தில் தேர்தல் ஆட்சேர்ப்புப் படிவங்கள் கிடைக்கின்றன.

மத்திய, மாநில, பிரதேச தேர்தல்களுக்கும் அத்துடன் அநேகமான உள்ளூர் அரசாங்க தேர்தல்களுக்கான பட்டியலில் சேர்வதற்கு ஒரு படிவத்தை மட்டுமே பூர்த்திசெய்யவேண்டும்.

உங்கள் முகவரியை மாற்றும்போதெல்லாம், நீங்கள் கட்டாயம் ஒரு புதிய ஆட்சேர்ப்புப் படிவத்தைப் பூர்த்தியாக்க வேண்டும்.

மேலும் தகவல்களுக்காக, 13 2326 இல் Australian Electoral Commission ஐ அழையுங்கள் அல்லது வருகை தாருங்கள் www.aec.gov.au